கமலை ஞானப்பிரகாசர்

தந்தி வனப் புராணம்

யாதும் ஊரே யாவரும் கேளிர்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

பதிப்பு

டாக்டர் தா. வே. வீராசாமி

கமலை ஞானப்பிரகாசர்

இயற்றிய

தந்திவனப் புராணம்

பதிப்பாசிரியர்:

டாக்டர் தா. வே. வீராசாமி

எம். ஏ., பிஎச். டி.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

அடையாறு, சென்னை-600020

BIBLIOGRAPHICAL DATA

Title of the book	—	Tanti Vaṉap Purāṇam
Author	—	Kamalai Ñāṉappirakācar
Editor	—	Dr. V.Veerasami
Publication Number	—	37
Language	—	Tamil
Edition	—	First
Date of publication	—	July, 1981
Paper used	—	18Kg Sweeden Paper
Size of the book	—	21 × 14 Cms
Printing types used	—	10, 12, 14 points
Number of pages	—	8 + 116 + 230 = 354
Price	—	15/= (Rupees Fifteen,
Printers	—	Novel Art printers Madras-600014 Phone 82731
Binding	—	Paper Back
Artist	—	Eswari
Subject	—	Talapurāṇam

- இந்நூல் மதுரையில் 1981 சனவரியில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டை யொட்டி வெளிவருகிறது.

- தமிழக அரசு அச்சில்வராத தமிழ்ச் சுவடிகள் வெளியிடும் கொள்கைக்கு ஏற்ப டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூலகச் சுவடியின் துணை கொண்டு இந்நூல் இந்நிறுவனத்தின் நூலாக வெளிவருகிறது.

நூன்முகம்

டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்

இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

தமிழக அரசு ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டை ஒட்டி, அச்சில் வெளிவராத தமிழ்ச் சுவடிகளை எல்லாம் வெளியிட வேண்டும் என்ற கொள்கையை மேற்கொண்டு நற்பணி புரிந்து வருகிறது. அதன்படி டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூலகத்தில் கிடைத்த 'தந்திவனப் புராணம்' என்னும் இந்நூல் இந் நிறுவன வெளியீடாக வருகிறது. அதற்கு உறுதுணைபுரிந்த அந்த நூலகத்தார்க்கு நன்றி.

'தந்தி வனப் புராண'த்தை இயற்றியவர் கமலை ஞானப் பிரகாசர் எனும் சைவப் பெரியார் ஆவர். அவருடைய சீரும், சிறப்பும், சைவ உள்ளமும், பொதுமை நோக்கும் இந்நூலின் பாடல்களில் பொங்கித் ததும்புகின்றன. இப்பழந்தமிழ் நூலை வெளியிடுவதில் இந்நிறுவனம் பெருமையடைகிறது.

இப்புராணத்தின் சுவடியையும் படியையும் ஒப்புநோக்கிக் குறிப்புரையும் ஆய்வுரையும் எழுதியுள்ளவர் இந் நிறுவனத்தில் பணிபுரியும் டாக்டர் தா. வே. வீராசாமி ஆவர். இதுபோன்ற நூல்களை நிறுவனம் வெளியிட எங்கட்கு நன்முறையில் ஊக்கம் அளித்து வரும் நிறுவனத்தலைவர், கல்வி அமைச்சர் மாண்புமிகு செ. அரங்கநாயகம் அவர்கட்கு எங்கள் நன்றி என்றும் உரியது.

இந்நூலைச் சிறந்த முறையில் அச்சிட்ட நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ் உரிமையாளர், கவிஞர் நாரா. நாச்சியப்பன் அவர்கட்கு எங்கள் நன்றி.

அடையாறு,
சென்னை 20.

அன்புள்ள
ச. வே. சுப்பிரமணியன்

நன்றியுரை

டாக்டர் தா. வே. வீராசாமி
இணைப் பேராசிரியர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

தமிழில் நூற்றுக்கணக்கான தலபுராணங்கள் 'கோயிற் புராணம்' தொடங்கி வெளிவந்துள்ளன. திருவானைக்காவைப் பற்றிக் கமலை ஞானப்பிரகாசர் இயற்றிய 'தந்திவனப் புராணம்' இதுவரை வெளிவரவில்லை. சென்னை, மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூலகத்தின் சுவடியை (274) நன்கு பயன்படுத்தி இதனைப் பதிப்பிக்க முடிந்தது. இதற்கு உறுதுணை செய்த அந்நூலகத்திற்கு என்றும் நன்றி உரியது. நூலகத்தைச் சார்ந்த திரு. மு. கோ. இராமன், எஸ். சாய்ராம், வித்துவான் எஸ். பாலசாரநாதன், கே. எம். நடராசன் ஆகியோர் நற்றுணை செய்தனர்.

திருச்சி சென்று திருவானைக்காக் கோவில் முழுதும் காணத் திரு நா. இராசகோபாலன், பேராசிரியர் டாக்டர் திருமேனி, கோவில் அலுவலர்கள் எல்லாவகையிலும் துணைபுரிந்தனர். இத்துடன் பற்பல நூலகத்தாரும், தஞ்சை சரசுவதி மகால், பாண்டிச்சேரி பிரஞ்சு நூலகம், சென்னை மறைமலையடிகள் நூலகம் ஆகிய நூலகத்தாரும் துணை செய்தனர். கோவையில் தவத்திரு சாந்தலிங்க இராமசாமிஅடிகள் இப்புராணம் பற்றி அறியத்துணை செய்தார். டாக்டர் க. காந்தி, ஈரோடு இராசு, மு. அருணாசலம், மாயவரம் இராமலிங்கம் எம். ஏ., மாண்புமிகு நீதிபதி செங்கோட்டுவேலன் ஆகியோர் பற்பல செய்திகள் கூறினர்.

திருவானைக்கா மலர்களைப் பேராசிரியர்களாம் டாக்டர் ம. ரா. போ. குருசாமி, டாக்டர் ந. சஞ்சீவி ஆகியோர் தக்க சமயத்தில் உதவினார்கள். நூற்றுக்கணக்கான தலபுராணங்களைச் செவ்விய முறையில் பாதுகாத்து, வேண்டும் வண்ணம் பயன்படுத்த மறைமலையடிகள் நூலகர் முத்துக் குமாரசாமி துணைபுரிந்தார்.

எங்கள் இயக்குநர் டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் அவர்கள் இந்நூலைப் பதிப்பித்து ஆய்வுரை எழுத இடைவிடா ஊக்கம் அளித்தார். எங்கள் நிறுவனத்தலைவர் மாண்புமிகு கல்வி அமைச்சர் செ. அரங்கநாயகம் அவர்கள் சுவடிகளைப் பதிப்பிக்கக் கொள்கை வகுத்து இப்பணிபுரிய வாய்ப்பளித்தார்.

அனைவர்க்கும் என் உளம் கனிந்த நன்றி.

அடையாறு,
சென்னை 20
6.7. 1981

தா. வே. வீராசாமி

துன்பம் இன்றித்
துயர்இன்றி என்றும்நீர்
இன்பம் வேண்டில்
இராப்பகல் ஏத்துமின்
என்பொன் ஈசன்
இறைவன்என்று உள்குவோர்க்கு
அன்பன் ஆயிடும்
ஆனைக்கா அண்ணலே

அப்பர்

முன்னுரை

புராணம்—வரலாறு

'இந்திய இலக்கியத்தில் புராணம் என்பது பழங்காலக் கதையைத் தன் வடிவாகக் கொண்டு வளர்ந்த இலக்கிய வகையாகும் கடவுளர்கள் செயலும் திறனும் வெளிப்பட இப்புராணங்கள் வழியமைத்தன. அன்றாட வாழ்வில் ஒழுக்க உணர்வைத் தூண்டவும் வாழ்வுக்கெனவொரு குறிக்கோளை அமைத்துக் கொள்ளவும் புராணம் வழிகாட்டியது. பெரும்பான்மை மக்களுடன் நாளும் நாளும் கலந்து வளரப் புராணங்களை வளர்த்தனர். இந்தியச் சமய உணர்வுப் போக்கின் ஆழ்ந்த ஆற்றலுள்ள அறிகுறியாகப் பிருந்தாவனம் மாறியது. கண்ணனின் இன்ப விளையாட்டுக்கள் பல்வேறு வகையில் வளர்ந்து புராணங்களுக்கு வழி வகுத்திருக்கும் என அரவிந்தர் தம் கீதைக் கட்டுரையில் கூறுகிறார்.'[1]

வெளிநாட்டினர் புராணங்களைப் பொய்ம்மை எனக் கூறினர். நம்மவரினும் சிலர் புராணம் என்பது வெறும் கட்டுக்கதை என்றும் உருவகக்கதை என்றும் உரைப்பர். யோக நிலையோடு இவற்றைத் தொடர்பு படுத்துவோரும் உளர். ஆயினும் பெரும்பான்மை மக்கள் அறிவு விளக்கம் பெறப் புராணங்கள் உதவி வந்தன. பல்லாயிரம் ஆண்டுகட்கு முன் வாழ்ந்த மக்களின் பொது வாழ்வையும் அவர்கள் கொண்ட உணர்வின் அடிப்படையையும் காட்டின.

---

1. வெற்றியின் இருமுகம். புராணத்தில் புராணம், டா. வே. வீராசாமி, பக். 16.

வாயு புராணக் கருத்துப்படி 'எது தொன்று தொட்டு இன்று வரை பரவியிருக்கிறதோ அதுவே புராணம்' ஆகும். நான்கு வேதங்களில் ஒன்றான அதர்வண வேதகாலத்தில் புராணம் சிறந்ததாகப் போற்றப் பெற்றது. வடமொழி இலக்கியங்கள் பல வற்றிலும் புராணம் பயன்படுத்தப் பெற்றுளது. சாணக்கியர் தம் பொருள் நூலில் அரசர் கற்க வேண்டிய கல்வியில் புராணம் ஒரு கூறு என்பார்.

உலகத் தோற்றம், ஒழுக்கம், மனுவந்தரம், முனி மரபு, அரச மரபு ஆகியவை புராணத்தின் ஐவகை இலக்கணமாக அமரசிம்மர் எனும் நிகண்டாசிரியர் கூறுவர். வேறு சிலர் ஸ்திதி, ரக்ஷணம், சமூஸ்தை, ஏது, ஆசிரமம் ஆகியவற்றையும் உடன் சேர்ப்பர். இவையாவும் அமைந்த நூல் எவையும் இல்லை. இவற்றின் சில கூறுகளே புராணங்களில் அமைந்துள்ளன.

புத்தர் காலத்திற்கு முன்னர் வழங்கி வந்தவற்றை முற் காலப் புராணம் எனவும் அவர் காலத்திற்குப் பின்னர் வழங்கிய வற்றைப் பிற்காலப் புராணம் எனவும் பகுத்துள்ளனர். எல்லாப் புராணங்களின் வடிவமும் செய்யுளே. தமிழில் காண்பனவற்றில் பெரும்பான்மைக்கு இது ஏற்கும். வினாவிடை அமைப்பும் உரையாடலும், தனிப்பட்ட கருத்தும் இடையிடைந்து புராண அழகை மிகுவிக்கின்றன. புராணங்களின் அமைப்பும் கூறும் முறையும் மாறுபட்டுள்ளன. எனினும் கதை அமைப்பும் நோக்கும் அவற்றின் பொதுத்தன்மையாகத் துலங்குகின்றன.

வடமொழியினர் புராணங்களைப் பதினெண் புராணங்களாகப் பகுத்து அவற்றின் ஆசிரியர் வேதவியாசர் என்பர். ஆயினும் புராணங்களைச் சிவபெருமான் நந்திக்குக் கூறத் தாம் கேட்ட அப் புராணங்களைச் சனத்குமார முனிவர்க்குக் கூற அவர் வியாசர்க்குக் கூறினர் என வாய்மொழி இலக்கியமாகப் புராணம் வளர்ந்த கதை புலப்படும். இதுபோன்றே வடிவவகை பற்றிய செய்தியும் வியப்பிற் குரியது. கிருதயுகத்தில் நூறு கோடிக் கிரந்த மாகப் பிரமனால் படைக்கப்பட்டன. திரேதாயுகத்தில் கோடிக் கிரந்தங்களால் 18 சங்கிதை அடங்கிய 18 வகையாக இருடிகளால் படைக்கப்பட்டன. துவாபரயுகத்தில் 408000 கிரந்தங்கள் அடங்கிய 18 புராணமாக வியாசரால் படைக்கப்பட்டன என்பர்.

மூன்று முதற் கடவுளர் பிரம்மா, திருமால், சிவன். அம் மூவர்க்கும் முறையே ஆறு ஆறு புராணமாகப் பிரிக்கும் முறையும்

காணப்படும். கடவுள் ஒருவர் எனினும் தொழிலால் மூவராயினர் என விட்டுணு புராணம் கூறும். மூவரும் ஒருவரே எனக் கூறும் பதுமபுராணம். இந்திரன், வருணன், கந்தன் என்ற தேவர்கள் நிலைமாறி முக்கடவுளராக மாறினர் எனவும் குறிப்பர்.

முக்கடவுளர்க் கேற்ப முக்குணத் தன்மைக் கூந்த வண்ணம் புராணங்களைப் பகுப்பர். சத்துவ குணத்திற்கு உரியனவாக விட்டுணு, நாரதீயம், பாகவதம், கருடம், பதுமம், வராகம் ஆகிய திருமாலினைப் பற்றிய புராணங்களை ஏற்றிக் கூறுவர். தாமச குணத்திற்குரியனவாக மச்சம், கூர்மம், இலிங்கம், சிவம், கந்தம், அக்கினி ஆகிய சிவனுக்குரிய புராணங்களைக் கூறுவர். இராசச குணத்திற் குரியனவாகப் பிரமம், பிரமாண்டம், பிரமன வைவர்த்தம், மார்க்கண்டம், பிவிசம், வாமனம் என்பனவற்றைக் கூறுவர். இப்பிரிவு எல்லோரும் ஒப்புமு வகையில் அமையவில்லை. பெரும்பாலான புராணங்கள் திருமால் தோற்றத்தைக் கூறும். அக்கினி புராணத்தை நீக்கிவிட்டு வாயுபுராணத்தை மிகப் பழம் புராணமாகக் கொள்வர். புராணங்கள் தோன்றிய காலத்தை ஆறாம் நூற்றாண்டிலிருந்து பதினாறாம் நூற்றாண்டு வரை கொண்டு செல்வர்.

பதினெண் புராணத்தில் பத்துப் புராணங்கள் சிவனைக் குறித்தவை என்பர். அவர் கருத்துப்படி சிவம், பவிசம், மார்க்கண்டம், இலிங்கம், வராகம், கந்தம், மச்சம், கூர்மம், வாமனம், பிரமாண்டம் என்பன. இவற்றில் மொத்தம் 26800 கிரந்த முள்ளன. திருமாலைக் குறிப்பனவிட்டுணு, பாகவதம், நாரதீயம், கருடம் எனும் நான்கு. இவற்றில் 55000 கிரந்தங்களுள்ளன. பிரமனுக்குரியன பிரமம், பதுமம் என்பன. இவை 65000 கிரந்த முள்ளன. கதிரவனுக் குரிய பிரம வைவர்த்தம் 12000 கிரந்தமும் அக்கினிக் குரிய ஆக்கினேயம 8000 கிரந்தமும கொண்ட புராணமாகும். இவை பலர் வரலாற்றையும் கூறுவன.

பதினெண் புராணங்கள்

1. பிரம புராணம்: வசுக்கள் மனுக்கள் முதலியோர் செய்தி, கதிரவன் உற்பத்தி, கௌதமி சிறப்பு ஆகியவை பற்றிச் சிறப்பாகக் கூறும்.

2. பதும புராணம்: மிகப் பெரியது. இதிகாசத் தொடர்பான கதைகள், மாதப் பெருமை, வேதாந்த விளக்கம் முதலியவை உள.

3. விட்டுணு புராணம்: கண்ணன் லீலையை விளக்கும். யம கீதை, பிதுர்கீதை உள. இந்நூலுக்கென ஏழு உரைகள் தோன்றின.

4. பாகவதம்: இதில் விட்டுணு பாகவதம், கண்ணன் லீலை, கோபிகள் அன்பு, வேதாந்தம் பற்றிக் கூறும். மற்றொரு பிரிவான தேவி பாகவதத்தில் கன்மம், ஆசாரம், தேவி பெருமை, காயத்திரி பற்றி அறியலாம்.

5. சிவபுராணம்: சிவநாமச் சிறப்பு, ஐந்தெழுத்து, சிவயோகம், சிவபக்த சரிதம், காசிச் சிறப்பு, சரப அவதாரம் பற்றிக் கூறும்.

6. பவிசம்: கலிகாலத்தில் கிருத்துவம் இசுலாம் போன்றவை தோன்றல், பல மொழிகளின் வளர்ச்சி, மாற்று மதத்தார் இந்தியாவை ஆளல், மாந்தரியல்பு வாழ்வு பற்றிக் கூறும்.

7. நாரதீயம்: பதினெண் புராணச் சுருக்கம். விரதம், இசைக் கலை, ருக்மாங்கதன் கதை கூறும்.

8. மார்க்கண்டேயம்: தேவி பெருமை, அறம், யோகம், சகுனம் பற்றி விளக்கும்.

9. ஆக்கினேயம்: இராமாயணச் சிறப்பு, மருந்து, விலங்கு, செடி கொடி மருத்துவம், நிகண்டு, காவிய நாடக இலக்கணம், ஆலயம் சிற்பம் இவற்றின் அமைப்பு, உடல் நாடிக் கணக்கு மூச்சுக் கணக்குக் கூறும்.

10. பிரம வைவர்த்தம்: இராதை பிறப்பு வளர்ப்பு, கனவுப் பலன் பற்றிக் கூறும்.

11. இலிங்கம்: சிவன் லிங்கமாகவுள்ள காரணம், திருமுழுக்கின் பயன், முப்பொருளுண்மை உயிர், சிவதீக்கை பற்றி மொழியும்.

12. வராகம்: பத்து அவதாரம், அகத்திய கீதை, உருத்திரகீதை, சிவன் கோவிலில் விலக்குதற்குரிய குற்றம், மரம் வளர்ப்புப் பற்றிக் குறிப்பிடும்.

13. காந்தம்: கந்தனின் திருவிளையாடலைக் கூறும்.

14. வாமனம்: சிவகதையும் மெய்ப்பொருளும் உரைக்கும் சிறிய புராணம்.

15. கூர்மம்: வியாசகீதை, ஈசுவரகீதை, தேவிநாமச் சிறப்புப் பற்றி விளக்கும்.

16. மச்சம்: பிதிர்லோகம், சிரார்த்தம், மந்திரம் பற்றிக் கூறும்.

17. கருடம்: இறந்த பின் உயிர் யமலோகத்திற்கு எப்படிப் போகிறது என்பதை விளக்கும்.

18. வாயவியம்: சிலர் இதற்கு மாறாகப் பிரமாண்டத்தைக் கூறுவர்.

இப்புராணங்களின் பல பகுதிகள் வடமொழிக் கவிவாணர்களாம் காளிதாசர், பவபூதி போன்றவர்கட்கும் எழுச்சி யூட்டின. தத்தம் நூல்களில் ஏற்குமிடந்தோறும் இப்புராணப் பகுதியை எடுத்தாண்டு தம் இலக்கியத்திற்குச் சிறப்புத் தேடியுள்ளனர்.

புராணவளர்ச்சியில் உபபுராணங்கள் பதினெட்டாகப் பகுப்பர். அவற்றில் பாதியை வியாசர் பெயரிலேயே அடக்கி மற்றவற்றை இயற்றிய முனிவர்களின் பெயரில் வழங்குவர். புராணம் வாய்மொழி இலக்கியமாக வளர்ந்து வந்ததை இங்கும் காணமுடிகிறது.

1. சனத்குமார புராணம்: தோற்றம், தலபுராணம், வேதாந்தம் பற்றிக் கூறும்.

2. நரசிங்க புராணம்: நரசிங்க வடிவம் சில பிராயச்சித்தம் பற்றி மொழியும்.

3. காந்தம்: கந்தன் கூறியது என்பர். இதிலுள்ள ஏழு காண்டங்களில் காசி காண்டம், பிரமோத்திரக் காண்டம் என்பன தமிழிலுள்ளன.

4. சிவதரும புராணம்: சிவன் பெருமை, விரதம், முப்பொருள் பற்றி விளக்கும்.

5. நந்தி புராணம்: சிவபக்தி பற்றிக் கூறும்.

6. துர்வாச புராணம்: தேவி பெருமை, பூசை, துறவறம் பற்றி விளக்கும்.

7. நாரத புராணம்: பக்தி ஒழுக்கம் பற்றி விரிக்கும்.

8. கபில புராணம்: திருமால் அவதாரம், சாங்கியம், யோகம் பற்றிக் கூறும்.

9. மாளவ புராணம்: வருணதருமம், அரசதருமம், நகர் அமைப்புப் பற்றி விரித்துரைக்கும்.

10. ஔசநச புராணம்: நீதிமுறை, அரசமுறை பற்றிக் கூறும்.

11. பிரமாண்ட புராணம்: மகாபுராணத்தில் கூறியதே இங்கும் காணப் பெறும்.

12. காளி புராணம்: காளியின் திருவிளையாடலை விளக்கும்.

13. வருண புராணம்: வருண உலகு, பதினான்கு லோகம், நீரின் தன்மை பற்றி உரைக்கும்.

14. மகேசுவர புராணம்: மகேசுவரனின் தோற்றம் பெருமை கூறும்.

15. சாம்ப புராணம்: கண்ணன் மகன் சாம்பன் கதிரவனை வணங்கித் தொழுநோய் தீர்ந்த கதை யாகும்.

16. சௌர புராணம்: கதிரவன் பற்றிய புராணமிது.

17. பராசர புராணம்: பராசரர் கூறிய அறங்களைக் கொண்டது.

18. மாரீச புராணம்: மாரீசர் கூறிய அறமும் ஞான நெறியும் உடையது.

ஜான் டௌசன் என்பவர் இவற்றில் காணும் காந்தம், பிரமாண்டம், மாரீசம் ஆகியவற்றை நீக்கிவிட்டு ஆதித்யம், பாகவதம், வாசிஷ்டம் ஆகியவற்றைச் சேர்ப்பார். முன்னர்க் கண்ட பதினெண் புராணங்களுக்குத் துணையாக இவற்றைக் கொள்வர். இவற்றில் சில இன்னும் வெளிவரவில்லை.

இவற்றிற்கும் மேல் பதினெண் அதிபுராணங்கள் உள்ளன.

பார்க்கவ புராணம், முத்கலபுராணம், விநாயக சரிதம், ஆதிக புராணம், மகாபாகவதம், தேவி சரிதம், கர்க்க புராணம், கல்கி புராணம், கிருஷ்ணாவதாரக்கதை, வாசிஷ்டம், பசுபதி, பிரகத் தருமம், பிருகத் காரதீயம், பீஷ்யோத்திரம், பிரகத்வாமனம், பிருகத் மாதசயம், சிவோத்திரதருமம், கண்டிலட்சுமி பிரகத் தருமம், பராநந்தம் என்பன.

இவற்றின் எண்ணிக்கை பதினெட்டுக்கும் மேல் உள்ளன. ஒரு புராணத்தை விட்டு வேறொன்றைச் சேர்ப்பதும் ஒன்றை ஒன்றில் அடக்குவதும் இவ்வாறு எண்ணிக்கை உண்டாவதையும் அதனால்

புராணங்கள் வளர்ந்த வளர்ச்சியையும் அவற்றைப் பதினெட்டு என்ற எண்ணிக்கைக்குள் அடக்க வேண்டும் என எண்ணிய எண்ணத்தையும் அறிய முடிகிறது.

இப்புராணங்களில் உலகப் படைப்பு என்பது தனிஇடம் பெறுகிறது. பிரமன் தாமரையில் வீற்றிருப்பதும் திருமால் அரவணையில் அறிதுயில் கொள்வதையும் விளக்கும். வேதம் படைத்த பிரம்மா முனிவர்களைப் படைத்தான். எனினும் தன் நோக்கு நிறைவேறாதது கண்டு தானே ஆண்டிவடிவில் மனுவாகவும்பெண் வடிவில் சாதருபையாகவும்மாறிப் படைப்புத் தொழிலை நடத்துகிறான். புராணங்களின் கருத்துப்படி உலகங்கள் சுழல்கின்றன. நான்கு யுகங்கள் மாறிமாறி வருகின்றன. மனிதரில் மீமனிதன் தோன்றல் வேண்டும். அவன் நாரண வடிவில் இருப்பான். இத்தகைய புராணங்கள் மத்துவர் போன்ற பேருரையாளர்கள் அறிவுச் செல்வங் காண வழிவகுத்தன.

புராணம் என்பதற்குப் பழமை என்ற பொருள் (கோயில் புராணம்) காட்டிப் பின் பழங்கதை என ஆகுபெயராக அமைகிறது. வடமொழி இலக்கிய வளர்ச்சியில் அறுபத்து நாலு கலைகளுள் ஒன்றாக உள்ளது. வியாசரால் இயற்றப்பெற்றது சருக்கம், பிரதி சருக்கம், வமிசம், மன்வந்தரம், வமிசானு சரிதம் பற்றிக் கூறும் பழைய நூல்களாக விளங்கும் என்பதை மச்சபுராணத்தால் அறிகிறோம் (மச்ச. நைமிசா. 37). பிற்காலத்தில் கோயிலில் புராணம் வாசிப்பதற்காக விடப்பட்ட மானியத்திற்கும் இப்பெயர் வழங்கக் காண்கிறோம்.

இறையனார் களவியல் முதல் நூற்பாவுரையில் நக்கீரர் இடைச் சங்கமிருந்த புலவர்களைக் கூறிய பின் அவர்களாற் பாடப்பட்டனவற்றை வரிசைப் படுத்தும்போது 'கலியும் குருகும் வெண்டாளியும் வியாழமாலை அகவலும் என இத்தொடக்கத்தன என்ப' என உரைத்துப் பின் அவர்க்கு நூல் அகத்தியமும் தொல்காப்பியமும், மாபுராணமும் இசை நுணுக்கமும், பூத புராணமும் என இவை என முடிப்பார். இவர் கருத்துப்படி இரண்டாம் தமிழ்ச்சங்கம் வெண்தேர்ச்செழியன் முதலாக முடத்திருமாறன் ஈறாக இருந்த காலத்துக் கபாடபுரத்தில் தமிழாராய்ந்த நிலையிலேயே மாபுராணம், பூத புராணம் போன்றவை தோன்றின. இவற்றின் பொதுமை நிலையையும்

இணைத்துள்ள அமைப்பையும் காணும்போது இவை இலக்கண நூல்களாக இருக்கலாம் எனக் கருதுவர். இவற்றுடன் இசை நுணுக்கம் போன்றவையும் கலந்துள்ளமையால் இவற்றின் உண்மைத்தன்மை தெளிவாக விளங்கவில்லை. சங்கம் பற்றிய வரலாறும் மிகத் தொன்மையென நிறுவும் வரை இவை பற்றிய ஒரு முடிவுக்கு நம்மால் வர இயலாது. புராணம் என்ற சொல்லி னைப்பு உள்ளது கொண்டு எவ்வித முடிவிற்கும் வர இயல வில்லை.

சிலப்பதிகாரத்தில் நாடுகாண் காதையில் கவுந்தி முன்னர்த் தோன்றிய சாரணர் அருகதேவனின் பெருமையைப் பலபடக் கூறும் போது,

'பொருளன் புனிதன் புராணன் புலவன்' (சிலப்பு. 10:179)

என்பர். இதில் புராணன் என்பது பழமையானவன் என்ற பொருளிலேயே கையாளப் பெற்றுள்ளது. ஊர்காண் காதை யிலும் கவுந்தி வாயிலாக இராமன் கதையைச் சுருக்கக் கூறிய இளங்கோவடிகள் (சிலப்பு 14:49) நெடுமொழியன்றோ எனக் கூறும்போது இராமாயணம் போன்ற கதைகள்தொன்றுபடவருஉந் தொன்மையுடைய நெடுமொழியாகப் புராணத்தைக் குறிப்பதை உணர்கிறோம்.

மணிமேகலையில் மணிமேகலா தெய்வம் உலகப் பெண்டிர் வடிவந்தாங்கி மணியறைப்பீடிகை வலங்கொண்டு புத்ததேவனை வணங்கும்போது,

'புலவன் தீர்த்தன் புண்ணியன் புராணன்' (மணி 5. 98)

எனத் தொடங்குவார். இங்கும் புராணன் என்பது பழமை யானவன் என்ற பொருளிலேயே சீத்தலைச் சாத்தனாரால் கையாளப்பெற்றுள்ளது. சமயக்கணக்கர் தந்திறங்கேட்ட காதையில்,

காதல் கொண்டு கடல்வணன் புராணம்
ஓதினன் (மணி 27:98 - 99)

என வைணவ வாதம் வெளிப்படும். இங்குப் புராணம் என்ற சொல் நூலைக் குறிக்காவிடினும் பழமைப் பண்பைக் குறிக் கிறது.

எட்டாம் நூற்றாண்டைச் சார்ந்த சாந்திபுராணம் என்பதைப் பதினாறாம் தீர்த்தங்கரராம் சாந்தி நாதர் புராணமாக இருத்தல் கூடும் என்பர். புறத்திரட்டில் காணும் சில பாடல்கள் தவிர வேறு பாடல்கள் கிடைக்கவில்லை. 9ஆம் நூற்றாண்டில் புராண சாகரம் என்ற நூல் பற்றிக் கேள்விப்படினும் விளக்கமுறும் வகை யில் செய்திகள் கிடைக்கவில்லை.

தேவாரப் பாடல்களில் சம்பந்தர் அப்பர் ஆகியோர் புராணன் (1569ச) புராணர் (பூம்புகலூர். அப்) (14.6ச) புராணனார் (15.6ச) (காளத்தி. அப்) எனவும் திருமூலர் தம் திருமந்திரத்தில் ஆதி புராணன் எனவே (55) இறைவனின் பழம் பெருமையைச் சுட்டு வர். மணிவாசகர் சிவபுராணம் என்ற பகுதியைத் திருவாசகத் தில் பாடியுள்ளார். இங்குப் புராணம் என்பது பழைமையின் சிறப்பைச் சுட்டுவதாகக் கொள்ளலாம்.

யாப்பருங்கலம் ஒழிபியலில் சித்திரக்கவிமாலை பற்றிய நூற்பா வாயிலாக 'விளம்பனம்' பற்றிய செய்திகளைக் காணும் போது,

ஆரியம் தமிழொடு நேரிதன் அடக்கிய
உலகின் தோற்றமும் ஊழி யிறுதியும்
வகைசால் தொண்ணூற் றறுவர தியற்கையும்
வேத நாவின் வேதியர் ஒழுக்கமும்
ஆதி காலத் தரசர் செய்கையும்
அவ்வவ் நாட்டார் அறியும் வகையில்
ஆடியும் பாடியும் அறிவரக் கிளத்தல்

என அறிகிறோம். இவ்வியல்பைக் காணும்போது விளம்பனம் என்பது 'கூறப்படுவது' என்றும் அதன் உட்பொருள் உலகத் தோற்றம், ஊழி இறுதி, 96 பேர் இயற்கை வேதியர் ஒழுக்கம், பழங்கால அரசர் செய்கை ஆகியவற்றை எடுத்துரைக்கும் என லாம்.

வச்சணந்தி மாலை ஆசிரியர் கருத்துப்படி குலவரவு காரிகை யாப்பில் புராணமே யாம். புராண வரலாற்றைக் காணும்போது இக் கருத்து தெரியும் பின்பற்றப்பெறாத நிலையிலேயே உள்ளது. பெரும்பாலான புராணங்கள் விருத்தப்பாவல் பாடப் பட்டுள்ளன.

பிற்காலத்தவர் காப்பியத்தைப் புராணமாய்க் கருதும் மரபு சிதம்பரப்பாட்டியல், பிரபந்த மரபியல் வாயிலாகத் தோன்றியதை அறிய முடிகிறது. நாற் பொருளில் அறமும் வீடுமே புராணங்களின் அடிப்படையாகும்.

பஞ்ச புராணம் ஓதுதல் என்ற வழக்கு, சைவப் பெருமக்களிடம் காணப் பெறுகிறது. கோயிலில் திருமறை ஓதும்போது தேவாரம் அடங்கன் முறையிலிருந்து ஒரு பாடல், திருவாசகப் பாடல் ஒன்று, திருவிசைப்பா ஒன்று, திருப்பல்லாண்டு ஒன்று, பெரிய புராணப் பாடல் ஒன்று என ஐந்தும் இப்பெயர்பெறும். எனினும் இம்மரபு பழம்பாடல் என்ற கருத்தில் சைவ சமயத்தாரிடம் மதிப்பிற்குரியனவாக வழங்கி வருகின்றது. புராணம் என்று இன்று கருதும் எண்ணத்தை அது கொண்டமையவில்லை.

தமிழில் எண்ணற்ற புராணங்கள் தோன்றியுள்ளன.

வடமொழிப் புராணங்கள் முழுமையாக மொழிபெயர்க்கப் பட்டவை. இவ்வகையில் கூர்மம், இலிங்கம், மச்சம், பாகவதம் போன்றவை அடங்கும். வேறு சிலவற்றை உரைநடையிலும் தந்துள்ளனர். முழுமையாகச் சிலவற்றை மொழிபெயர்க்காமல் சில பகுதிகளை மட்டும் செய்யுள், உரைநடை வடிவில் மொழி பெயர்த்துத் தந்துள்ளனர்.

காவிய அமைப்பும் புராணமும் கலக்க ஒரு குறிப்பிட்ட தெய்வத்தை மட்டும் குறிக்கும் புராணங்கள் கண்ணன், கந்தன், விநாயகன் ஆகியோர் மீது எழுந்துள்ளன.

உபதேச காண்டம், பிரமோத்திர காண்டம், காசி காண்டம் போன்றவை வடமொழியிலிருந்து ஒரு சில பகுதிகளாக வந்திருத்தல் கூடும்.

அடியார் பெருமையைக் கூறும் நூல்களும் புராணமாக உள்ளன. பெரிய புராணம் போன்ற புராணம் தனியடியார்களையும் தொகையடியார்களையும் சேர்த்துப்பாடும். திருவாதவூர் அடிகள் புராணம் போன்றவை தனி அடியார் புகழ் பாடுவன. வைணவத்தில் அரிசமய தீபம், குருபரம்பரைப் பிரபாவம் போன்றவை இவ்வகையைச் சார்ந்த தனிப் படைப்புகளாம். இந் நூற்றாண்டில் பல புராணங்கள் அடியார் பெருமையைப் பாடியதுடன் தேசிய விடுதலை இயக்கத் தாக்கத்தால் பண்டிதை அசலாம்பிகை அம்மையார் திலகர் புராணம், காந்தி புராணம் போன்றவையும் எழுந்துள்ளன.

சாதிப் பெருமையை வெளிப்படுத்தும் வகையில் இடைக் காலத்தில் செங்குந்தர் புராணம், விசுவகர்மர் புராணம், குலாலர் புராணம போன்றவை தோன்றின. உயர் வருணயக்கள் போலத் தாங்களும் உயர்ந்தவர்கள் என்ற கருத்தை வெளிப்படுத்தும் வாயில்களாக இவை விளங்கின.

தலபுராணத் தோற்றம்

பதினாறாம் நூற்றாண்டு என்பது தமிழிலக்கிய வரலாற்றில் புராண நூற்றாண்டு எனக் கூறினால அது மிகை கூற்றன்று. ஆயிரக்கணக்கான பாடல்களைப் பாடி இலக்கியச் செல்வம் பொங்கிப் பெருகும் வகையில் புராணங்கள் அமைந்துள்ளன. சைவம் வைணவம் ஆகிய இரண்டும புராண இலக்கியப் படைப் பிற்கு நல்வளம் நல்கினும் சைவ சமயமே முன்னிற்கின்றது. இவற்றில் தலபுராணமாக அது முன்னளித்தது 26 எனத் காணும் போது புராணங்களுக்கும் சைவசமயத்திற்குமுள்ள தொடர்பு நன்கு புலனாகும். இந்நூற்றாண்டு இந்நெறியில் தூண்டிய ஆற்றல் இதனை ஒட்டி வந்த நூற்றாண்டுகளிலும் வெளிப்படக் காண முடிகிறது.

தமிழ் மன்னர்கள் தளர்ந்திருந்த காலத்தில் சைவ வைணவ அருட்பாசுரங்கள் எழுந்தன. அடியவர்கள் நாடெங்குமுள்ள ஊர்கள் பலவற்றிற்கும சென்று அந்த அந்த ஊரின் சிறப்பையும், கோவில் சிறப்பையும், கோவிலில் வீற்றிருக்கும இறைவன் சிறப் பையும் பாடி அவ்வாறு வணங்குவதால் பெறும் பயனையும் மனத் தில் பதியும் வகையில் எடுத்துரைத்தனர். சைனர் பிடிப்பி லிருந்து தமிழகம் மாறவே சைவ வைணவ எழுச்சி பொங்கியது. சோழர், பாண்டியர் மீட்சியால் நாடெங்கும் புதிய பல கோவில்கள் எழவும், வழிபாடு பெருகவும் தகுந்த மாற்றம் விளைந்தது. இவ்வழி பாட்டில் அந்த அந்த ஊரின் சிறப்பு தனித்த முறையில் எடுத்துரைக்கப்பட்டது. இடையே முகம்மதியர் படையெடுப்பும் மேனாட்டார் வரவும் பழமைக்குப் பெரும் பாதிப்பாக மாறின. நிலையற்ற வாழ்வின் இடையே நிலையான உயர்ந்த எண்ணங் கள் தாம் வாழும் ஊர்களைப் பற்றி உருவாகும் வகையில் தல புராணங்கள் பாடப்பெற்றன. கல்லென்றும் மண்ணென்றும் இடித்தொதுக்கப் பெற்றவற்றைத்தெய்வ ஆற்றல்மிக்க நிலமாகவும் நீராகவும் வானவர்கள் வந்து வந்து வாழும் வழி பெற்ற தலமாக

வும் எண்ணி அவ்வூரின் மீதும் மக்கள் மீதும் எல்லையற்ற பற்றுக் கொள்ளும் வகையில் இலக்கியங்கள் எழத் தொடங்கின. மாற்றாராட்சியில் தன்னம்பிக்கையற்று வாடிய சிற்றூர் மக்கள் வாழ்வில் இறையுணர்வுடன் கலந்த தன்னம்பிக்கையூட்டும் மாமருந்தாக இவை ஒருவகையில் பயன்பட்டிருக்க வேண்டும்.

இடைக்காலத்தில் தோன்றிய பழமொழி கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம். இதன் பொருள் அக்கால மக்கள் வாழ்வில் கோயில் பெற்றுள்ள உயர் மதிப்பை நன்கு வெளிப்படுத்தும். சமணர்கள் ஆற்றல் குறைந்து சைவ வைணவப் பெருமக்கள் ஊர்களெங்கும் சென்று தம் பாடல்களாலும் அருட்செயல்களாலும் பக்தி இயக்கத்தைப் பெருக்கியபோது கோயிலின் மதிப்பு மக்களிடையே உயர்ந்தது. பாழடைந்த கோயில்களைப் புதுப்பித்தனர். புதிய பல கோயில்களைக் கட்டினர். புதிய வாழ்வின் மறுமலர்ச்சியைக் கோயில்களின் பங்கு கொண்டு மேலும் வலிமை பெறச் செய்தனர். சோழர்களும் பின்னர் வந்த விசயநகரப் பேரரசும் இத்துறையில் ஆர்வம் காட்டியதால் ஊரும் அதன் கோயிலும் தனிமதிப்புப் பெறலாயின. மதத்தின் செல்வாக்குக் கேற்ப வடமொழியின் தாக்கமும் மிகுந்தது. கோயிலாசாரியரும் பிறரும் வடமொழியில் ஊர்க்கதைகளைப் புராணமாக்கினர்.

பொதுவாகத் தேவர்களின் தலைவனாம் இந்திரனும் படைப்புக் கடவுளாம் நான்முகனும் மற்ற தேவர்களும் தம் குறையும் பழியும் தீரத் தத்தம் ஊரில் வந்து நீரில்மூழ்கி இறைவனை வணங்கிப் பயன் பெற்றதாகப் பாடினர். முனிவர்கள் அரசர்கள் ஆகியோரையும் கொண்டு புனைந்த கதைகளும் இணைந்தன. இச் செய்திகளை வடமொழிப்புராணங்களில் இணைத்து அங்குள்ள சிறப்பால் அது மேலும் சிறப்புடையது என்ற கருத்தைப் பரப்பினர். வேற்று மதத்தினராம் முகமதியர்கள் தென்னகத்தின் மீது படையெடுத்து வந்தபோது இங்குள்ள கோயில்களில் பலவற்றை இடித்தனர். சிலைகளைச் சிதைத்தனர். அதன் எதிர் விளைவாகச் சிற்றூரிலுள்ள கோயிலும் கூடப் பெருஞ்சிறப்பு வாய்ந்ததாகக் கொள்ளும் வகையில் எண்ணத்தை வளர்க்க இத் தலபுராணங்கள் உதவின. மன்னர் ஆட்சியை விடக் கடவுள் ஆட்சியில் கருத்துச் செலுத்த வகை செய்தன.

காசி கைலாயம் போன்ற புண்ணியத்தலங்கட்குச் சென்று பெறும் பலனைத் தம்மூரிலேயே உள்ள கோயிலை வணங்கினால் பெற இயலும் என்ற தன்னம்பிக்கையை ஊட்டினார்.

இத்தல புராணங்களில் முழுமையான வரலாறு முழுதும் கிடைத்தற்குரிய வாய்ப்பு இல்லை. எனினும் சிற்சில வரலாற்றுப் பொறிகள் கிடைத்தற்கு வாய்ப்புளது. இந்நூல்களில் அந்தவூர்க் கோயில் அமைப்பு, வழிபாட்டு முறை, வழங்கிய பல்வேறு பெயர்கள் வெளிப்படுகின்றன. உருக்கமான பாடல்களால் இறைவன் போற்றப் பெறுவதால் அவ்வூர் மக்கள் அவற்றை அறிந்து ஓரளவு இலக்கியச் சுவை உள்ளவராக விளங்குகின்றனர்.

வழிபாட்டுணர்வு மக்களிடையே வளரவும் சிற்பம், இசை, நாட்டியம், நாடகம் போன்ற கலைகள் சிற்றூர்களில் பரவவும் பலவகை இலக்கியம் பக்திச் சுவையுடன் வெளிப்படவும் தல புராணங்கள் துணைபுரிந்தன. தாம் வாழும் நிலம் பற்றிய உயர்ந்த எண்ணம் ஏற்படவும் தம்மால் இயன்ற உதவியைப் பிற உயிரினங்கட்குச் செய்யவும் செய்யும் பணி இறைப் பணியாக இருப்பின் எவ்வகையிலும் உய்தி கிடைக்கும் என்ற உறுதியைப் பெறவும் ஆற்றல் நல்கின. தமிழுக்கும் இறைவனுக்குமுள்ள தொடர்பையும் காட்ட அவர்கள் தவறவில்லை. தனிமனித வழிபாட்டுப் பிடியிலிருந்து இறைவழிபாட்டுணர்வுக்கு இடமளித்தது. அதனை மையமாகக் கொண்டு வாழ்வை மாற்ற நினைத்த எந்த ஆற்றலையும் அரசாக இருந்தாலும் அதனையும் கண்டு அஞ்சா உறுதி கொள்ளவும் வலிமை தந்தன. தமிழிலக்கியத்தில் குறிப்பிட்ட ஒரு பகுதியை இத்தல புராணங்கள் பெற்று விளங்குகின்றன என்பதில் ஐயமில்லை.

கமலை ஞானப்பிரகாசர்

பதினாறாம் நூற்றாண்டில் பெருஞ்சிறப்பு வாய்ந்த தமிழ்ப் புலவர்களில் ஒருவராக வாழ்ந்தவர் கமலை ஞானப்பிரகாசர் ஆவர். இவர் திருக்கயிலாயப் பரம்பரையில் வந்தவர் எனப் போற்றுவர். திருக்கயிலாயத்தில் சிவபெருமான் சனகர் முதல் நான்கு மாணவர்க்கு அறம் முதல் உறுதிப்பொருள் நான்கையும் கூற அவ்வுபதேசம் மெய்கண்டார்க்கும் அவர் மாணவர் சகலாகம பண்டிதராம் அருணந்தி சிவாசாரியார்க்கும் வழி வழி வந்ததாகவும் அப்பரம்பரை கயிலாயப் பரம்பரை எனவும் கூறப் பெறும்.

அந்நிலையிலிருந்து சைவ சந்தான ஆசாரியர் நால்வரும் அவர்கள் படைத்த சித்தாந்த சாத்திரங்களும் சைவ உலகின் சிறப்பாகும். உமாபதிக்குப்பின் வந்த அருள் நமச்சிவாயர் வழியே

காழிக் கங்கை மெய்கண்டார்க்குப் பின் வழியில் சிலர் செல்ல அவ் வழியே கமலை ஞானப்பிரகாசர் வந்தனர். இவர் வழி வந்தது தருமபுர ஆதீனம்.

திருவாரூர்ச் செட்டித்தெரு சிதம்பரநாத ஞானப்பிரகாசரின் மகனாகவும்* மாணாக்கராகவும் வளர்ந்து வந்தவர் கமலைஞானப் பிரகாசர். இல்லறம் பூண்டு இனிதே வாழ்ந்தார். இவருடைய பெயரடையாக விளங்கும் கமலை என்பது திருவாரூர்க்குரிய பெயர்களுள் ஒன்று. இலக்கண இலக்கியங்களையும் சமய சாத்தி ரங்களையும் நன்கு கற்றுத் தெளிந்த இவர் பல மாணவர்க்குப் பாடம் சொல்லி வந்தார். இவர்கள் பல நூல்கள் இயற்றினர். சைவ மதம் தழைந்தோங்கப் பல ஆதீனப் பரம்பரைக்கு வித்திட் டனர். இவ்வாறு இவ்வாசிரியர் தாம் மட்டும் நூல்களை எழுதா மல் தம் வழி வந்த மாணவர்களைச் சைவம் பரவ நூல்கள் இயற் றச் செய்ததுடன் சைவ சமயம் ஒரு நிறுவனமாக இயங்கிப் பெருக வும் வித்தாக இருந்தார். இது இவர்க்கென அமைந்த தனிச் சிறப்பு.

இவர் தேசிகர், பட்டாரகர் எனவும் வழங்கப் பெறுவர். வெள்ளியம்பலவாணத் தம்பிரானால் இவர் செட்டித் தெரு பழுதை கட்டி ஞானப் பிரகாச பண்டாரம் எனக் குறிப்பிடப் பெறு கிறார். இவர் தம் முன்னோர் மரபிற்கேற்ப வெள்ளுடை அணிந்து வந்தார். இறைவன் அருள் கூடப்பெற்ற இவர் தம் முப்பதாம் வயதில் பதிஞானம் கைவரப் பெற்றார். பின்னர் முறையாகத் திருக் கயிலாய பரம்பரைத் தொடர்பும் பெற்றார்.

சைவர்கள் ஆசாரியத் தன்மை பெறாத காலம் அது. எனினும் சைவர் தம் நாலாம் நிலை நீக்குதற்கெனச் சமய எழுச்சி பெற்று நிறுவனங்கள் அமைத்து அதன் வாயிலாகக் கூட்டு முயற்சிகள் எழுந்தன. அதன் விளைவுகள் பலவற்றை இவர் காலத்தில் காணமுடிகிறது. விசயநகரப் பேரரசின் துணையால் பொருட் பேறு கிட்டியது. மேலும் இவர் பல அற்புதங்கள் செய்து பொது மக்கள்பால் பெருமதிப்புப் பெற்றார் என்பர்.

ஒரு முறை, திருவாரூர் தியாகேசர் எழுந்தருளி வந்த தண்டு ஒடிய உடனே இவர் தண்டிசையும் வகை அருள் வேண்டி விழா வழக்கம்போல் நடைபெறச் செய்தார். மறைக்காட்டு அந்தண னின் தொழுநோய் நீங்கிட,

---

* இவர் குடும்பப் பரம்பரைப் பெயர் சிதம்பரநாதன் என அறி கிறோம்.

வேத வனமறையோன் மெய்யுறு குட்டமதின்
வாதனையை நீக்கி மகிழுறவே—ஏதமிலாச்
செய்ய சடையானே பெருமானே ஏவர்க்கும்
ஐயமிலா திப்போ தருள்

எனப் பாடி நோய்நீக்கம் செய்தார் என்பர். மதுரையில் ஐய பட்டருக்குக் கண்ணளித்தார். காளப்பேரில் சமணரை அடக்க மழை பெய்வித்தார் காசியில் பாம்பு தீண்டிய மகனுக்கு உயிர் தந்து மக்கட் குறை நீங்க மழை பெய்வித்தார். மாணவர்களுக்கு அறிவூட்டும் வகையில் தாமே 'அத்துவித சாரம்' போன்ற நூல் செய்து அவர்கட்கு ஐயம் திரிபகல அறிவொளி காட்டினார். பின் னாளில் தருமபுர மடமமைத்துக் குருஞான சம்பந்தராய் விளங்கி யவர் இவரிடம் மாணவராய் வந்தபோது தியாகேசர் கனவில் இவர்க்குணர்த்தி உபதேசம் செய்ய அருளியதாகக் கூறுவர். பின் அவர் வந்தபோது அவரைச் சோதித்துப்பின் வியந்து 'ஞான சம்பந்தர்' எனத் தீட்சாநாமம் சூட்டி உபதேசம் செய்தருளினார்.

உலக நாத பண்டிதர்* என்பவர் தூண்ட இவர் 'மழபாடிப் புராணம்' 'தந்திவனப் புராணம்', 'சிவபூசை அகவல்', 'சாதி நூல்' ஆகியவற்றைப் பாடி அருளினார். பல மாணவர்க்குச் சைவத்தின் பெருமையைக் கூறிச் சிவஞானத்தைப் பரப்பிவந்த இவர் ஐப்பசி, தேய்பிறைச் சஷ்டியன்று முக்தி அடைந்தார். திருவாரூரில் சிதம்பரநாதன் கொல்லையில் இவருடைய சமாதி உள்ளது என்பர்.

விசயநகர அரசின் பிரதிநிதியான கிருஷ்ண மகாராயரின் கல் வெட்டாலும் (கி. பி. 1561) மழபாடிப் புராணச் சிறப்புப் பாயிரத் தாலும் (கி. பி 1566) இவர் காலம் பதினாறாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தொடங்குகிறது எனக் கொள்ளலாம்.

டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களின் குறிப்பு பின்வரு மாறு:

''இந்த நூல் உலகநாத முனிவர் வேண்டுகோளால் கமலை ஞானப்பிரகாசருடைய குமாரரால் செய்யப்பட்டதென்று மேற்படி

* 'உலகநீதி' என்ற நீதி நூல் இயற்றியவர் இப்பண்டிதர்என்ற கருத்துடையவர் டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள்.

நூல் பாயிரத்துள்ள செய்யுள்களாலும் கமலை ஞானப்பிரகாசர் செய்ததாக நாகர கண்டத்துப் பாயிரத்தாலும் தெரிகின்றது (திருவிருத்தம் 57)

நாகரகண்டத்துள்ள (திருவாரூர்ப் புராணம்) பாயிரம் 21 ஆவது செய்யுளாகிய,

இருந்தமிழ்ப் புலவராய் வானிபவனம் மழவை என்னும்
திருந்துசீர்த் தலபுராணத் தெள்ளமு தளித்த செல்வப்
பெரும்புகழ்க் கமலை ஞானப் பிரகாச னெனும்பேர் பெற்ற
அருங்கலைத் திரையறாத வருட்கடற் கன்பு செய்வாம்

என்பதினால் இவர் இபவனத்திற்கும் (திருவானைக்கா) மழவைக் கும் (திருமழபாடி) புராணம் செய்திருக்கின்றார் என்று தெரிகிறது.

இவர் மீது தருமை ஞானசம்பந்தர் பாடியது:

வெண்பா

நற்பாஞ்சேர் ஆரூரின் ஞானப்ர காசவள்ளல்
தற்பரனோர் ஞானவட்டந் தந்தானே எப்பொழுதும்
காரார் மறலியயன் கண்ணனுக்கு மஞ்சேனே
யாராலும் என்னசெய்ய லாம்

'காட்டிருந்தாலும்' என்ற ஒரு கலித்துறையும் செய்யப்பட்டுள்ளது. இவற்றால் தருமை ஞானசம்பந்த தேசிகர் இவருடைய சிஷ்ய ரென்று ஏற்படுகின்றது.

திருவாவடுதுறை ஏட்டுப் பிரதி ஒன்றில் பின்வருமாறுள்ளது:

திருவாரூரிற் கைலாய பரம்பரையாய் வந்திருந்து ஞானவுப தேசம் திவாவில் தக்ஷிணாமூர்த்தி யண்டையில் பிரத்யக்ஷமாய் உபதேச அனுக்ரகம் பெற்றவர் மகன் திருஞான சம்பந்த பண்டாரம்.

இவர் சங்கற்ப நிராகரணத் திற்கு ஒருரை செய்திருக்கின்றனர். கமலை ஞானப்பிரகாசர் என்றும் வழங்கப்படுவார். திகந்த குரு வென்றும், ஆயிரம் பிரபந்தம் செய்தவரென்றும், சோழ மண்டல சதக முடையாரிவரைக் கூறுவர் (பாட்டு 24). இவர் மீது (1) "ஆய் வார் பதி பசு" (2) "கவுணியர் மார்க்கம்" (3) "ஆரார்பலைகக்கிறு" எனும் மூன்று கட்டளைக் கலித்துறைப் பாடல்கள் வழங்குகின்றன. இப்பாடல்களைப் பாடியவர் பெயர் தெரியவில்லை.

சிவபுராணாதி தோத்திர மஞ்சரியில் 334ஆம் பக்கத்தில் இவர் துதிகள் உள்ளன.''

கமலை ஞானப்பிரகாசர்—செங்கமலப் பொற்பாதர்

'கற்பார் மகிழத் தந்திவனக் கடவுள், புராணக் கதை எனத் தொடங்கும் பாடலின் (9) மூன்றாம் வரியினை டாக்டர் சாமிநாதையர் நூலகத்தில் கிடைத்த ஒரு படியில்,

'தென்கமலை
ஞானப் பிரகாசன் தந்த
பொற்பார் ஞானதேசிகனாம்
புகழ்செங்கமலப் பொற்பாதன்,

என உள்ளது. இதனை இவ்வாறே ஆராயும் திரு. மு. அருணா சலம் (1) அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

'இதனுடைய பொருள் ஞானப்பிரகாசனுடைய புதல்வன் அல்லது (மாணாக்கன்) பொற்பார் ஞானதேசிகன் என்று பொருளாகும். இப்படியொரு மாணாக்கர் இருந்ததாக வரலாற்றில் காணப்படவில்லை. தவிர இங்கே சொல்லப்பட்டபடி கமலை ஞானப்பிரகாசரே 'செங்கமலப் பொற்பாதன்' என்று சொல்லப் படுகிறார். இதனாலும் உலகநாதர் தொடர்பாலும் முன்காட்டிய தொடர்புகளாலும், ஞானப்பிரகாசரே இந்நூலாசிரியர் (தந்தி வனப்புராணம்) என்பது தெளிவு. இந்தக் கருத்துக் கிசைய 'பிரகாசனா மந்த' என்ற பாடம் அமைக்கப் பெற்றுள்ளது.

இவ்வாசிரியர் தம் இலக்கிய வரலாற்றில்குறித்தபடி. 'விரும்புறு நைமிச வனத்து முனிவர்' எனும் நூற்பயன் கூறும் பாடலைச் சருக்கந் தோறும்[2] கமலை ஞானப்பிரகாசர் குறிப்பிடவில்லை. டாக்டர் ஐயர் நூலகத்திலுள்ள காகிதப்படியில் ஐந்து முறை மட்டுமே எழுதப் பெற்றுள்ளது.)

இவர் குடும்பப் பெயர் சிதம்பரநாதன். தீட்சா நாமம் ஞானப் பிரகாசன். இவர் செய்த இருபுராணங்களிலும் காணும் செங்கமலப் பொற்பாதர் என்பதே இவர் இயற் பெயராக இருக்கலாம்.

---

1. தமிழிலக்கிய வரலாறு; 16 நூற்றாண்டு-பாகம் 1, மு. அருணாசலம், காந்தி வித்தியாலயம், திருச்சிற்றம்பலம் 1977, பக். 202-203 (அடிக்குறிப்பு).

2. முன்னூல், பக். 204.

'சங்கர விலாசம்'[1] என்ற நூலாசிரியர் சிதம்பரநாத கவி கடவுள் வாழ்த்துப் பகுதியில் சத்திய ஞானியார் பற்றிக் குறிப்பர். இவர் திருவாரூரில் வாழ்ந்த கமலை ஞானப்பிரகாசர் ஆவர். சிதம்பரநாத மாசிலாமணி கமலை ஞானப்பிரகாச தேசிகர் எனப் பெயர்பெற்றுத் தருமபுரச் சைவாதீனத் தலைமை ஞானாசிரியராக விளங்கிய ஸ்ரீ குரு ஞான சம்பந்த தேசிக சுவாமிகளுக்கு ஞானோபதேசம் செய்த பரமாசாரியர் என்பர்.

இவர் காலத்தை அறிதற்கென விசய நகர அரசர் சதாசிவ தேவ மகாராயர் காலக் கல்வெட்டுத் துணை புரிகிறது. இராயரின் தஞ்சைப் பிரதிநிதி கிருஷ்ணம ராசையன் கட்டளைப்படி சகம் 148?-இல் திருவாரூர் ஞானப்பிரகாச பண்டாரத்தைப் பரதேசி முத்திரையும் கணக்கெழுத்தும் அடைத்துக் கொள்ளும்படி சர்வ மானியம் அளித்ததைக் கல்வெட்டால் அறிகிறோம்.[2] இதன்படி இவர் காலம் கி. பி. 1561 என அறியலாம். இவரியற்றிய திருமழுவாடிப் புராணத்தால் கி. பி. 1566-இல் இதனைச் செய்ததாக அறிகிறோம்.[3]

'சத்தியஞான பண்டாரம் பிள்ளைத் தமிழ்'[4] என்ற நூலால் கமலை ஞானப் பிரகாச தேசிகர்க்குச் சத்திய ஞானி, சத்திய ஞானப் பண்டாரம என்ற பெயர்கள் வழங்கி வந்தன என அறிகிறோம். இவர் காலத்தில் நிரம்ப அழகிய தேசிகர் வாழ்ந்தார் என்பர்.

கமலை ஞானப்பிரகாச தேசிகர்பால் ஞானோபதேசம் பெற்று ஸ்ரீ குருஞான சம்பந்தர் 'பண்டாரக் கலித்துறை' எனும் 'ஞானப்பிரகாச மாலை' பாடியுள்ளார். ஞானக் கருவூலமாகத் தம் ஞான குருவையே எண்ணினார். இதில் கமலை ஞானப் பிரகாசரின் ஞானப் பெருநிலையை நன்குணருமாறு செய்துள்ளார்.

---

1. சங்கரவிலாசம், சிதம்பரநாதகவி, T. P. பழனியப்ப பிள்ளை பதிப்பு, திருவேங்கடேசுவரன் கீழ்க்கலை ஆராய்ச்சிக் கழகம் திருப்பதி, 1950.
2. சோழநாட்டுச் சிக்கல் நவநீதப் பெருமாள் கர்ப்பக் கிருகத்தி லுள்ள கல்வெட்டுக (104/1922) காட்டுகிறது.
3. திருமழுவாடிப் புராணம், கமலை ஞானப்பிரகாச தேசிகர், ஸ்ரீ வித்யா சமதாதினி முத்திராசாலை, தஞ்சை, கீலக ஆண்டு, 1908 பக 9.
4. இந்நூல் தஞ்சைச் சரசுவதி மகால் நூல் நிலையத்திலுள்ளது.

பிறவி நீக்கம், ஞானம் பெற இது நல்ல தருணம், முப்பொருள் களின் இயல்பாகிய சைவசித்தாந்தத்தை ஞானப்பிரகாசரது திரு மடத்திலுள்ள பல்லியும் சொல்லுதல், 'ஞானப்பிரகாசனே என் ஆண்டவன்' என்பன போன்ற கருத்துக்களை இந்நூல் நன்கு எடுத்துரைக்கும். இந்நூலில் 30 பாடல்கள் உள்ளன.[1] (இவ் ஆதீன வெளியீடு 626—இல் ஞானப்பிரகாச மாலையில் 63 பாடல்கள் உள்ளன (1971). ஸ்ரீ குருஞான சம்பந்தர் வரலாறும் அருள் நூல் களும், தருமையாதீன வெளியீடு 592, 1968)

கமலை ஞானப் பிரகாசரின் அற்புதச்செயல்கள்

இவருடைய வரலாற்றை எடுத்துரைப்போர் இவர் பல அற்பு தச் செயல்கள் செய்த கதைகளைக் கூறுவர். அச்செயல்களாவன:

1. ஒருநாள் இரவு கமலை ஞானப்பிரகாசர் கனவில் தியாகேச தோன்றிச் சித்திசுவரம் வந்து வழிபட்டால் எல்லாம் கிடைக் கும் என்றார்.
2. திருவிழாவின்போது தியாகேசர் எழுந்தருளிய தண்டு முரிய உடனே அது கூடுமாறு 'அண்டமுழுதும்' என்ற வெண்பாப் பாடினார்.
3. அந்தணன் ஒருவனின் தொழுநோய் நீக்க 'வேதவன மறை யோன்' என்ற வெண்பாப் பாடினார்.
4. மதுரையில் ஐயப்பட்டருக்குக் கண்ணொளி நல்கினார்.
5. கானப்பேரில் சமணரை அடக்க மழை பெய்வித்தார்.
6. காசியில் பாம்பு தீண்டிய சிறுவனை உயிர்பெற எழுப்பினார்.
7. மக்களின் வேண்டுதலுக்கேற்ப மழை பெய்வித்தார்.

மாசிலாமணி தேசிகரின் ஞான குரு

தஞ்சை மன்னர் தருமபுர ஆதீனத்தார் தொழில் பற்றிக் கேட்டபோது மாசிலாமணி தேசிகர் விடையாகக் கீழ்க்காணும் பாவைக் கூறினாராம்.[2]

---

1. ஸ்ரீ குருஞான சம்பந்தர் வரலாறும் அருள் நூல்களும், தருமையாதீன வெளியீடு 592, தருமபுரம், 1968
2. தனிப் பாடல்திரட்டு மூலமும் உரையும், II கா. சுப்பிரமணியப் பிள்ளை, (பதிப்பு) இரத்தின நாயகர் ஸன்ஸ், சென்னை 1939, பக். 60-61.

ஆய்வார் பதிபசு பாசத்தின் உண்மையை ஆய்ந்தறிந்து
காய்வர் பிரபஞ்ச வாழ்க்கை எல்லாங்கல்வி கேள்வியல்லல்
ஓய்வார் சிவானந்த வாரியுள்ளே ஒன்றி ரண்டுமறத்
தோய்வார் கமலையுஞ் ஞானப்ர காசனமெய்த் தொண்டர்களே

தம் ஞானாசிரியர் மீது பாடிய இருபாடல்கள்

கனக்கும் பொதிக்கும் எருதுக்கும் தன்னிச்சை கண்டதுண்டோ
எனக்கும் உடற்கும் எனதிச்சை யோஇணங்கார் புரத்தைச்
சினக்கும கமலையின் ஞானப்ர காச சிதம்பரஇன்
முனக்கிச்சை எப்படி அப்படி ஆக உரைத்தருளே

எல்லாம் உனது செயலென்று அறிந்தும் எனதுளத்தில்
பொல்லாத சங்கற்ப மேன்வரு மோபுரம் மூன்றெரிக்க
வல்லாய் கமலையின் ஞானப்ர காச வரதஇது
சொலலாய் கரண மயக்கம் அன்றோஎன் தொழிலல்லவே

இப்பாடல்களால் தன் ஞானாசிரியரை மாசிலாமணித் தேசிகர் உயர்வாகப் போற்றியமையும், அவரிடம் மாணவனாகத் தேசிகர் பெற்ற ஞானமும் இனிது விளங்கும்.

'ஞானப்பிரகாச மான்மியம்' என்ற தருமை சிதம்பரநாத முனிவரால் இயற்றப்பெற்ற நூல் கமலை ஞானப்பிரகாசர் பற்றிய செய்திகள் கூறும். இவரது சீடர்கள் பலர் தருமை ஆதீனததின் தலைவராம் ஞானசம்பந்தரும் இவர் சீடராவர். இவரைப் புகழ்ந்து 'திருவொற்றியூர்ப் புராணம்', 'சேதுபுராணம்', 'ஆன்மலிங்கமாலை' ஆகிய நூல்கள் பாடியுள்ளன. இவரது சீடர்கள் இவர் மேல் பாடிய நூல்பல. அவற்றுள் குறிப்பிடத் தக்கவை 'பண்டாரக் கலித்துறையாலை', 'சத்தியஞானி பிள்ளைத்தமிழ்' என்பன.[1] குமரகுருபரர் இவரை

'வண்டமிழ்க் கமலைப் பெரும்பதி
புரக்கும பேரருட்குரிசில், நான்மறை நவின்ற நற்பொரு
ளிவையென மோனவாசகத்தான் முப்பொருள் நவிற்றுபு
நன்னலம புரியும் ஞானப்பிரகாசன்[2],

எனப் போற்றுகிறார்.

---

1. தமிழ்ப் புலவர்கள வரலாறு (பதினாறாம் நூற்றாண்டு) S. சோமசுந்தர தேசிகர், பி. என். பிரஸ், சென்னை, 1939, பக். 9?-122.

2. குமரகுருபர சுவாமிகள் பிரபந்தங்கள், பண்டார மும்மணிக் கோவை, உ. வே. சாமிநாதையர் பதிப்பு, சென்னை, 1939. பக். 431-432.

நூல்கள்

கமலை ஞானப்பிரகாசர் சிறு சாத்திர நூல்கள் செய்துள்ளார்.

'சைவானுட்டான அகவல்' என்ற நூலில் சைவர்கள் சைவாகமத்தில் கூறியபடி செய்யும் செயல்களை முறைபாகச் செய்தற்குதவும் வகையில் செய்த நூல் ஆகும். ஆசிரியரே சைவர்கட்கு தீட்சை, பூசை முதலியன புரிவித்தமையால் இதனை நன்கு அமைத்துள்ளார் என்பர். இவ்வகவல் 11. அடி கொண்டது. 'நியமம் புரிவோர் நீடு வாழ்வார்' என்று நூற்பயனையும் இந்நூல் எடுத்துரைக்கும்.

'புட்ப விதி'[1] என்ற நூலில் பூக்களை முறையறிந்து பெற்றுப் பூசித்தல் பற்றிக் கமலை ஞானப்பிரகாசர் கூறுகிறார். பெரிய புராணத்தில் 'எறிபத்த நாயனார் புராணம்', 'முருகநாயனார் புராணம்' என்பவற்றில் புட்பவிதிகள் சில கூறப்பெற்றுள்ளன. எனினும் முழுமை பெற்ற முறையாகக் கூறும் நூல் இதுவே. இந் நூலில் ஒரு வெண்பாவும் 54 விருத்தங்களும் உள்ளன. நால்வகைப் பூக்கள், துளவம், வில்வம் என்பவை எடுக்கலாகாத நாட்கள், பூசைக்கு ஆகா மலர்கள், காலத்திற்கேற்ற பூக்கள், சாத்தும் முறை, பாவந் தீர்க்கும் மலர்கள், நந்தவனம் வைக்க நரகம் தீரும் பயன், மலரிடும் முறை, மாவிளக்கிடும் முறை ஆகியவற்றை ஆசிரியர் எளிமையாகக் கூறியுள்ளார்.

மலரெடுத்துப் பூசை செய்வது பற்றித் தந்திவனப் புராணத்தில் அம்மை பூசை செய்வதை விரிவாகக் கூறத் தொடங்கிப்

'பொருப்பில் மாது புட்பவஞ்சலி புரிந்து' (200)

எனவும்

'பாத்திர முறநிரைத்த பங்கய முதலாயுள்ள
பூத்திரள் இருகை யேந்திப் பூசனை புரிந்து மன்னும்
நேத்திர மாகுஞ் செவ்வி நீலவுற்பலங்க ளாலே
சாத்திர விதிவ ழாமற் சாற்றினள் சயில மங்கை (201)

எனவும் காட்டுவார்.

---

1. புட்பவிதி கமலை ஸ்ரீ ஞானப்பிரகாச பட்டாரகர், தருமையாதீன வெளியீடு எண் 638, தருமபுரம், 1972 (புட்பவிதியும் புட்பபலனும் என்ற நூல் 1906-இல் சென்னையில் பதிப்பிக்கப் பட்டுளது. இதில் புட்பவிதி என்பது இவ்வாசிரியர் நூல்).

இறுதியில் காணும் சிலந்தி மூடிய சருக்கத்தின் தொடக்கமே பூவெடுத்து இறைவனை வணங்கும் செயலில் நேர்ந்த முரண் அடிப்படையில் அமைகிறது. இச்சருக்கத்தில் மலர்கவர்ந்த சாபத்தில் புட்பவந்தன் யானையாகிச் செய்யும் பூசனை இங்கு நினைவு கூரத்தக்கது.

'அத்துவாக் கட்டளை' என்னும் சிறு உரைநடை நூல் மந்திரம் முதல் கலை வரையுள்ள ஆறத்துவாக்கள் பற்றி விரிவாகக் கூறும். இக்காலத்தில் வளர்ந்துள்ள தத்துவம், மொழி இவற்றை அறிய இது உதவும்.

'அத்துவித சாரம்' என்பது இவ்வாசிரியர் பாடிய சாத்திர நூல். காப்புச்செய்யுளாக வெண்பா ஒன்றும் விருத்தப் பாக்கள் அறுபதும் உள்ளன. பொதுவாக விநாயகரைப் பாடுமிவர் தென்முகக் கடவுளைப் பாடியுள்ளார். வினா விடையில் அமைந்துள்ளது இந் நூல். ஞானம் தரும் உலகத்தில் பரசிவம் ஒன்றே பொருள் என்ற கருத்தை அரிய முறையில் கூறும்.

தந்திவனப் புராணத்தில் அம்மை இறைவனிடம் ஞான உபதேசம் பெறும் நெறிமுறையையும் ஞான உபதேசச் சருக்கத்தில் காணும் கருத்துக்களையும் கொண்டு இக்கருத்துக்களை நன்குணர முடியும்.

திருவாரூர்த் 'தியாகராசர் கழிநெடில்' எனப் பத்துப் பாடல்கள் உள்ளன. இப்பாடல்களில் இறைவனின் சின்னங்கள், திருவபிடேகம், திருவிழா, சிங்காதனம், மூவர் தேவாரம் ஆகியவை பற்றிக் கூறியுள்ளார்.

'சாதி நூல்' என்ற நூலை இவ்வாசிரியர் வடநூல்களை ஒட்டி எழுதியுள்ளார். மொத்தம் 104 பாடல்கள் உள்ளன. சுத்த சாதி பற்றிக் கூறிப்பின் நூல் முழுதும் தாழ்ந்த சங்கம சாதிகளைப் பற்றியே கூறியுள்ளார். வேதியர் முதல் 8 சாதிகளைக் கூறியுள்ளார். இந்நூல் இயற்றுமாறு வேண்டியவர் உலகநாதன். அக்காலத்தில் சாதவிட்டுச் சாதி கலக்கும்போது அதன் விளைவாகப் பிறக்கும் குழந்தைகளுக்குரிய பெயர் வகையாக இந் நூலினைக் காணமுடிகிறது. அக்காலத்தில் சாதிப்பிடிப்பும் அதன் கட்டமைப்பும் இதற்கு வழி கோலியிருத்தல் கூடும்.

'பூமாலை', 'ஆயிரப் பிரபந்தம்', 'சிவானந்த போதம்' என்னும் நூல்கள் இவர் எழுதினார் என்பர். இவை பற்றிய தெளிவான செய்திகள் கிடைக்கவில்லை.

திருவாரூர்ப்பள்ளு[1] இவரியற்றியதாகக் கூறுவர். இந்நூலில் சில பழம் பாடல்கள் உள்ளன. இப்பள்ளேசல் பாடல்களை ஞானப்பிரகாசர் செய்திருக்கவும் முடியாது என்றுரைப்பர்.[2] இப்பள்ளு நூலில் உள்ள 72 பாடல்களைக் காணும்போது அவற்றைத் 'தந்திவனப் புராணம்', 'திருமழுவாடிப் புராணம்' ஆகியவற்றுடன் ஒப்பிடும்போதும் அந்நூலைக் கமலை ஞானப்பிரகாசர் எழுதியிருக்க முடியாது என்ற கருத்து உறுதிப்படுகிறது.

'சிவபூசை அகவல்' என்ற நூல் இயற்றியுள்ளார். இந்நூல் 444 அடிகள் கொண்டது. தந்திவனப் புராணத்தைப் பாடுமாறு உலகநாதன் (உலகநாயகன்) கேட்டுக் கொண்டதற் கிணங்க இதனையும் பாடியுள்ளார்.

சிவபூசை செய்யும் முறையை விரிவாகக் கூறிச் செல்கிறார். முதலில் விநாயகர் காப்பும் சூரிய பூசை பற்றிய சிறு பகுதியும் அமைந்துள்ளன. சுத்தி புரிந்து தண்டி முதலியோரை வழிபட்டுச் சூரிய தியானம் செய்து அபிடேகம் முதலிய செய்து ஆசமனார்க்கியம் கொடுத்துப் பூசை புரிவதை முதலில் குறிப்பிட்டுள்ளார்.

பின், சுத்திவகைகள் பல கூறிச் சிவாசன பூசையைத் தியானத்துடன் செய்து பல பூசைகளையும் உரைத்துச் செபம் குருபீட பூசை, அக்கினி காரியம் போன்றவற்றை முறையாக எடுத்துரைக்கிறார். ஆகமத்தில் உள்ளபடி இதனை அமைத்துள்ளார் என்பர் அறிஞர்.[3]

'பிராசாத மாலை'[4] என்ற நூல் பிராசாத நெறியை மிகத் தெளிவாக உரைக்கிறது. காப்புச் செய்யுளுடன் 12செய்யுட்களைக் கொண்டது.

---

1. திருவாரூர்ப்பள்ளு, கமலை ஞானப்பிரகாசர், சோமசுந்தர தேசிகர் பதிப்பு, பி. என். பிரஸ், சென்னை (ஆண்டு முதலிய குறிப்பில்லை).
2 தமிழிலக்கிய வரலாறு 16. நூற்றாண்டு பாகம் 2. மு அருணாசலம். காந்தி வித்தியாலயம், திருச்சிற்றம்பலம், 1975, பக் 284.
3. சிவபூசை அகவல், ஸ்ரீ ஞானப்பிரகாச பட்டாரகர், (சுவர்ண காளீச்சுரன் பதிப்பு). C. K. சுப்பிரமணிய முதலியார் உரை. 1936 பக். x.
4. பிராசாத தரன்மணிகள், தருமை யாதீன வெளியீடு 640, தருமபுரம், 1972.

சைவம் கூறும் பிரசாத யோகம் என்பது மேதை முதல் உன்மனைவரை 16 உறுப்புகளைக் கொண்டது. 'பிரசாத அகவல்' 'பிரசாத தீபம்' போன்ற முன்னர்த் தோன்றிய நூல்கள் விரிவானவை. இந்நூல் சிறிய நூல். பிராசாத கலைகளின் பெயரும் முறையும் கூறிக் கலைகளின் மாத்திரை அளவுரைக்கும், கலைகளின் தானம், அளவு, வடிவு, அதிதேவர், தத்துவம் நிற்கும் முறை, நிறம் பற்றி நுணுக்கமாகக் கூறும். இது யோகநெறியினர்க்கே நன்கு விளங்கும் என்பர்.

காஞ்சி—சரவண தேசிகர் இயற்றிய ஒரு பாவுண்மை யுபதேச மூலமும் காஞ்சி—சிதம்பர முனிவர் அருளிய விருத்தியுரையும் என்ற நூலில்[1] சிவானந்த போதத்தின் பல அடிகள் குறிக்கப் பெற்றுள்ளன. இதன் உண்மை மேலும் ஆராயத் தக்கது. இந்நூலையும் கேட்டுணர்ந்த சிவானந்த முனிவர் என்பவர் 'சிவானந்த போத சாரம்' என்ற நூலை எழுதியுள்ளார் என அறிகிறோம்.[2] அதில் சிவானந்த போதத்தில் காணும் சில அடிகள் அங்ஙனமே உள்ளன. இவற்றால் கமலை ஞானப்பிரகாசரின் நூலை வழிவழி வந்தவர்கள் பயின்று பயன்படுத்தியமை விளங்கும்.

ஒருபாவுண்மை யுபதேசவுரையில் பொறையினைப் பூதமும் இருள் கெட, புணர்ந்த வல்லிருள், கேவல வல்லிருள், அற்புத வருளால், அருந்தும் என்னும் பாடற் பகுதிகளைக் காண முடிகிறது.

சிவானந்தபோத சார முன்னுரையில் ஞானப்பிரகாசர் இயற்றிய நூல்களைக்கூறும்போது புராண சாரமாகத் திருவானைக்காப்புராணசாரம் (முன்னுரை. பக்கம் 5) என ப. அ. முத்துத்தாண்டவராயன் குறித்துள்ளார். அத்துடன் 'ஞானப் பள்ளு', 'திருவண்ணாமலை ஒருதுறைக் கோவை, தியாகராயர் திருவிளையாடல் (வடமொழி) பற்றியும் குறிப்பிடுவர்.

---

1 இந்நூல் சென்னை ஆதிகலாநிதி அச்சுக் கூடத்தில் ஸர்வதாரி ஆண்டில் பதிப்பிக்கப்பட்டது. இந்நூலுக்கு சிதம்பர முனிவர் உரை சென்னை ஸ்ரீ நிகேதன முத்திரா சாலையில் 1902 இல் பதிப்பிக்கப்பட்டது.

2. சிவானந்த போத சாரம், சிவானந்த முனிவர். இம்பீரியல் அச்சுக் கூடம், சென்னை, 1931

திருமழுவாடிப் புராணம்[1] தேவாரப் பாடல் பெற்றது. மழுவை, மழுவாடி எனும் இத்தலம். இத்தல புராணத்தைக் கமலை ஞானப்பிரகாசர் இவ்வூருக்கு வந்தபோது பாடினார். மார்க்கண்டேயர்க்காகச் சிவன் மழுவைத் தாங்கித் திருநடம் செய்ததால் திருமழுவாடி எனப் பெயர் பெற்றுள்ளது. தேவர்கள், முனிவர்கள், பீமன் போன்ற இதிகாசவீரர் காவிரி ஆகியோர் இங்கு வழிபட்டு வணங்கியதாக இப்புராணம் கூறும். வாழ்த்தும் பாயிரம் தவிர எட்டுச் சருக்கமுள்ள இந்நூலின் 610 பாடல்களில் 571 செய்யுள்கள் உள்ளன. (581 என்பர் இதனைப் பார்வையிட்ட தஞ்சை உலகநாத பிள்ளை[2]).

மாசிலா வயிரத் தூணர் மழுவையம் புராணந் தன்னை
ஆசில் செந்தமி ழினாலே அணிபெற வகுத்த மைத்தான்
பேசரும் புகழ்சேர் ஞானப் பிரகாசன் கமலை வாழும்
தேசிகன் அறிஞர் போற்றும் செங்கம லப்பொற் பாதன்
(திருமழுவாடி 36)

என்ற பாடலால். இதனைத் தந்திவனப் புராணத்தில் 'கற்பார் மகிழ' (9) என்ற பாடலுடன் ஒப்பிட்டுக் காணலாம்.

புராணத்தை உலகநாதன் இயம்பவேண்டியதால் 'உரைத்தனன் விருத்தப்பாவால்' (திருமழுவாடி 33) என்பார். தந்திவனப் புராணத்திலும் உலகநாதர் வேண்ட யானு ரைத்தனன் விருத்தப்பாவால்' (8) என அதே தொடரில் மொழிந்துள்ளார்.

இப்புராணத்தில் உருவகக் கூறுகள் மிகுந்துள்ளன. தலச் சருக்கத்தை மிக விரிவாகக் கூறிப்பின் மழுவாடிச் சருக்கத்தின் மார்க்கண்டன் கதையைத் தொடங்கிக் கயிலைவளம் விளம்புகிறார் (திருமழுவாடி, மழுவாடி., 23) இதே நிலையில் தந்திவனப் புராணத்திலும்,

'வளர்ந்திடுங் கயிலை வெற்பின் வளஞ்சில விளம்பலுற்றாம்'
(123)

எனக் கூறுகிறார். இவ்விரண்டு பாடல்களிலுள்ள சொற்கள், தொடர்கள், பொருட்போக்கு யாவும் ஒன்று போலமைந்து ஒரு

1. திருமழுவாடிப் புராணம், கமலை ஞானப்பிரகாச தேசிகர், ஸ்ரீ வித்தியா விநோதினி முத்திராசாலை, தஞ்சை, 1908 (கலகை).
2. முன்னூல் பக். 3.

ஆசிரியரின் தனித் தன்மையைப் புலப்படுத்துகின்றன. கடைசி வரியில் திருமழுவாடிப் புராணத்தில் 'செய்வாம்' என்ற சொல் தவிர மற்றவை எல்லாம் அச்சொற்களே வந்துள்ளமை வியப்பூட்டும்.

திருமழுவாடிப் புராணத்தில் சிவனைப் போற்றிப்பாடும் பாடல்கள் இரண்டாக அமைந்துள்ளன (மழுவாடிச் சருக்கம் 55, 56;). (69, 70;) இதே போன்று, தந்திவனப் புராணத்திலும் போற்றிப் பாடல்கள் இரண்டாகவே அமையக் காண்கிறோம் (206, 207; 240, 241;).

ஒரு சருக்கம் முடிந்து மறு சருக்கம் தொடங்கும்போது முன்னர்க் கூறிய கதையை முதலிரண்டடிகளில் 'சொன்னோம்' என்று கூறி இனி வரப்போகும் கதையை உரைப்போம் எனத் தொடங்குகிறார். இந்நெறியை இவ்விரு புராணங்களிலும் காண்கிறோம்.

காவிரியின் வளத்தைத் தந்திவனப் புராணத்தில் ஆரமணிந்த சருக்கத்தில விரிவாகக் கூறுவது போல் திருமழுவாடிப் புராணத்தில் நாட்டுச் சிறப்பைக் கூறும்போது மிகுதியான பாடல்களில் எடுத்துரைக்கின்றார்.

கரியமாலவன் சருக்கம் தந்திவனப் புராணத்தில் திருமால் சிவனை வணங்கியதைக் காட்டியது போன்றே இங்கும் தேவாதிச் சருக்கம் திருமாலுக்குச் சிவனருள் புரிந்ததைக் கூறும்.

இப்புராணத்தில் வசிட்டச் சருக்கத்தில் வசிட்டனும் வியாதனும் மோதிய நிலையைக் காட்டுபவர் தந்திவனப் புராணத்தில் பின்னிரக்கஞ் செய்த சருக்கத்தில் வசிட்டனுடன் கௌசிகன் மோதிய செய்தியைக் கூறியுள்ளார்.

இவ்விரு புராணங்களிலும் அகத்தியச் சருக்கம் என்ற தலைப்பிலேயே தனித்தனிச் சருக்கங்கள் உள்ளன. தென்திசை உயர அதனால் அஞ்சிய தேவர்கள் முதலியோர் வேண்டுதற்கிணங்கி அகத்தியனை ஆனைக்கா அனுப்பி ஆற்றல் பெறச் செய்து பொதிகைக்கனுப்பிய கதையைத் தந்திவனப் புராணத்தில் சுருங்கிய அளவில் காண்கிறோம் இங்குள்ள சருக்கம் பெரிது. இது உருப்பசி கதையை முதலில் கூறும். நெய்தல் நில வருணனையை இணைக்கும். அகத்தியன் பிறப்பும் அவன் கதிரவன் கூற்றிற்

கேற்பச் சிவனருளால் விந்தந்தைத் தாழ்த்துவதும் கூறுகிறார். இவ்வாறு இருபுராணங்களையும் ஒப்பிடும் போது இருபுராணங் களையும் பாடிய ஆசிரியர் ஒருவர் எனவும் அவருடைய ஆற்றல் நூல்களைப் படைப்பதில் சிறந்து விளங்குவதையும் உணர முடிகிறது.

தமிழிலக்கிய வரலாறு-16 நூற்றாண்டு பாகம் 1-இல் திரு மு. அருணாசலம் அவர்கள் கமலை ஞானப்பிரகாசர் வரலாற்றைக் குறித்து எழுதும் போது[1] 'இவர் புராணங்கள் செய்தது இரண்டு என்பது தெளிவு ஆனால் இப்போது கிடைத்து அச்சாகி உள்ள புராணம் மழபாடி ஒன்றே. இவர்பாடிய திருவானைக்காப் புராணம் அச்சாகவுமில்லை; இருப்பதாகவும் தெரியவில்லை, எனக் குறிப் பிட்டுள்ளார்.

பின்னர் இதை ஒட்டிச் சில குறிப்புகளை இதே நூலில் மறு படியும் எழுதியுள்ளார்.[2]

---

1. தமிழ் இலக்கிய வரலாறு-பதினாறாம் நூற்றாண்டு, முதற் பாகம், மு. அருணாசலம், காந்தி வித்தியாலயம், திருச் சிற்றம்பலம், 197?, பக். 143.
2. முன் நூல், பக். 435.

கமலை ஞானப்பிரகாசரின் மாணாக்கர்

கமலை ஞானப் பிரகாசர் 1525—75
தந்திவனப்புராணம், மழுவாடிப் புராணம், சிவபூசை அகவல்

- **நிரம்ப அழகிய தேசிகர்**, துழாவூர் ஆதீனம், 1550—75
  சேதுபுராணம், பரங்கிரிப் புராணம், சித்தியார், திருவருட்பயன் உரைகள்
  - **அளகைச் சம்பந்த முனிவர்**, 1575—1600, திருவாரூர்ப்புராணம்
  - **ஞானக்கூத்தர்**, 1575—1660, செம்பேசபுராணம்
- **ஆன்மலிங்கமாலை ஆசிரியர்**, 1550—75, ஆன்மலிங்கமாலை
- **திருவொற்றியூர் ஞானப்பிரகாசர்**, 1550—75
  ஒற்றியூர்ப்புராணம், சித்தியார் பரபக்கவுரை, சங்கற்ப நிராகரண உரை
  - **திருவொற்றியூர் தத்துவப் பிரகாசர்**, 1575—1660, சித்தியார் பரபக்க உரை
- **மாசிலாமணிச் சம்பந்தர்**, உத்தர கோச மங்கைப்புராணம்
- **குருஞானசம்பந்தர்**, தருமபுர ஆதீன முதல்வர், 1550—75, சிவபோகசாரம்
  - **ஆனந்தபரவசர் சச்சிதானந்த தேசிகர்**, 1575—1600
  - **மருதூர் ஆபதுத்தாரணர்**, 1575—1600, பூகோளவிலாசம்

(தமிழ் இலக்கிய வரலாறு — பதினான்காம் நூற்றாண்டு பரம்பரை விளக்க அட்டவணை எண் 8-இல் உள்ளபடி மு. அருணாசலம், காந்தி வித்தியாலயம், திருச்சிற்றம்பலம், 1969)

உலகநாத வள்ளல்

தமிழ்ப் புலவர்கள் தம்மை ஆதரித்த வள்ளல்களிடம் என்றும் தம் நன்றியை உரியவகையில் செலுத்தத் தவறியதில்லை. கம்பரைப் போன்றவர்கள் தம் நூலின் பல இடங்களில் வள்ளல் பெயரை 'நாயகக் கல்'லாகப் பதித்துள்ளனர். அந்நெறியில் வளர்ந்த கமலை ஞானப்பிரகாசரும் இப்புராணம் இயற்றுதற்கு உதவிய வள்ளலை மறவாது போற்றுகிறார்.

அவனியோர் போற்றும் அந்த அருஞ்சபை தன்னில் மிக்க
தவமுனி உலக நாதன் தக்கஇப் புராணம் தன்னை
எவரும்என் தமிழ்நூ லாக இசைத்திட வேண்டும் என்ன
உவமையில் தமிழால் யானும் உரைத்தனன் விருத்தப்பாவால்

(8)

எனக் கூறும்போது வள்ளலின் தவமேன்மையைக் குறித்தும் இப் புராணத்தை மக்கள் எண்ணும்படியாக நூலினைத் தமிழில் உரைக்க வேண்டும் என அவர் கொண்ட தமிழார்வத்தையும் நன்கு வெளிப்படுத்தியுள்ளார். பண்டையோர் குறிப்புப்படி இவ் வள்ளலே 'உலக நீதி' என்ற நூலை இயற்றியவர் ஆவர். எனினும் இப்புராணத்தில் அகச்சான்று எதுவும் கிடைக்கவில்லை.

சிவபெருமானின் சிறப்பைக் கூறுமிடங்களில் தம்மை ஆதரித்த வள்ளல் பெயரால் சுட்டுகிறார்.

'உன் இடர் வினை தவிர்ப்போம் என்றனன் உலகநாதன், (117)

இவ்வாறு நூலில் வள்ளல் பெருமையை ஆங்காங்கே இறைவன் பெயருடன் ஒத்தியையுமாறு கூறிச் செல்கிறார்.

நூலின் இறுதியிலும் மறவாமல்,

'பாசம் துறந்திடும் உலகநாதன் துலையின் மெய்ப் புகழே வாழி!'

என வாழ்த்துகிறார். நூலின் தொடக்கமாம் பாயிரத்திலும் நூலின் இடையிலும் முடிவிலும் வள்ளல் உலகநாதர் பெருமையை வாழ்த்துவதில் தனிக் கருத்துள்ளவர் என்பதை அறிய முடிகிறது.

திருவானைக்கா

திருவானைக்கா சோழநாட்டிலுள்ள சிவன் கோவில். இதனருகில் வைணவர்களால் கோயில் எனப் போற்றப்பெறும்

திருவரங்கம் அரை மைல் தொலைவில் உள்ளது. ஐந்து பூதங்களுள் ஒன்றான நீர்க்குரிய தலம் திருவானைக்கா. காவிரி கொள்ளிடம் ஆகிய இரு ஆறுகளுக்கும் இடைப்பட்ட இடைக்குறையில் அமைந்துள்ளது. இக்கோவிலின் இறைவன் உள்ள இடம ஆறுகளின் நிலமட்டத்திற்குக் கீழே இருப்பதால் எப்போதும் நீர் கசிந்த வண்ணமுள்ளது. வெள்ளப்பெருக்கு ஏற்படும்போது இங்கும நீர் பெருகிக் கொண்டே இருக்கும்.

மிகப் பழங்காலத்தில் இப்பகுதியில் வெண்ணாவல் மரக்காடு இருந்தது. இங்குத் தவம் செய்த முனிவர் ஒருவர் தன் முன்னர் வீழ்ந்த வெண்ணாவற் கனியைத் தான் உண்ணாமல் கைலாயம் சென்று சிவபெருமானுக்கு அதைப் படைத்தார். இறைவன் உண்டுமிழ்ந்த கொட்டையைத் தான் உண்டார். அது அவர் உடலில் முளைத்துத் தலை வழியே வளர்ந்து மரமாயிற்று. பின்னர் இறைவன் கட்டளைப்படி இவ்விடத்திற்கே வந்து தவம் பூண்டார். இம்முனிவரே சம்புமுனி ஆவர். இம்முனிவர் விருப்பிற்கிணங்க இறைவன் இம்மரத்தடியில் வீற்றிருப்பதால் சம்புலிங்கம என அழைப்பர்.

இத்தலத்திற்குரிய மரமாக நாவல்மரம் அமைந்தது. இவ்விலிங்கத்தை வழிபட்ட யானையும் சிலந்தியும் சம்புலிங்கத்தை வழிபட்டன. யானை நீரும் மலரும் இட்டு வழிபட இறைவன் மேல் சருகுதிரா வண்ணம் மேற்கட்டியாக வலை பின்னிச் சிலந்தி வழிபட்டது. யானை சிலந்தி வலையை அறுக்க அதுகண்டு கோபித்த சிலந்தி துதிக்கை வழியே புகுந்து கடித்து யானையைக் கொன்று தானும மாய்ந்தது. இறைவனருளால் யானை சிவப்பேறு பெறவும், சிலந்தி கோச்செங்கட் சோழனாகப் பிறந்து இறைவர்க்கு எழுபது மாடங்கள் எழுப்பியது.

இக்கதையில் கயிலாயத்துக் கணங்களாம் புட்பதந்தன், மாலியவான் என்பவரிடையே சிவப்பணி புரிவதில் பொறாமை கொண்டு சாபமிட்டுக்கொள்ள அவர்கள் யானையும் சிலந்தியுமாகப் பிறந்தனர் எனக் கூறுவது முண்டு.

வெள்ளையானை பூசித்ததால் ஆனைக்கா ஆயிற்று இத்தலம். திருநீற்று மதில் எழுந்தது. இதனை இத்தல இறைவனே சித்தர் வடிவில் வந்து கட்டியதாகக் கூறுவர். இச் செய்தியைப் பிற்காலத்தில் வந்த கச்சியப்பரின் திருவானைக்காப் புராணத்தில்

'திருநீற்றுத் திருமதிற் படல'த்தில் விரிவாகக் காண முடிகிறது. ஆயின் அத்தலைய தனிப்பகுதி இப்புராணத்தில் காணப் பெற வில்லை.

இக் கோவிலைச் சுற்றி ஐந்து திருச்சுற்றுமதில்கள் உள்ளன. அவைகள் அடுத்தடுத்துக் கட்டப்பெற்றவை. இக்கோயிலில் பல மண்டபங்களும், குளங்களும், சிறுசிறு கோயில்களும் உள்ளன. ஏழு கோபுரங்கள் உள்ளன. அழகிய வெண்கலத்தால் அமைந்த வாயிற் காவலர் சிலைகள் உள்ளன.[1]

வெள்ளை நாவல் மரத்தின் அடியில் இறைவன் திருவுருவம் அமைந்திருப்பதால் வடமொழியில் நாவலுக்கு அமைந்த பெயர் வெளிப்பட 'ஜம்புகேசுவரம்' என்ற பெயர் ஏற்பட்டது. ச(ஜ)ம்பு முனிவர் தொழுது வரம் பெற்றதால் இப்பெயர்பெற்றது எனவும் கொள்வர்.

இத்தலத்திலுள்ள கோயிலைக் கோச்செங்கட் சோழனே கட்டினான் என்பதைச் சேக்கிழார்,

> ஆனைக் காவில்தாம்முன்னம் அருள்பெற் றதனை அறிந்தங்கு
> மானைத் தரித்த திருக்கரத்தார்மகிழுங் கோயில் செய்கின்றார்
> ஞானச் சார்வாம் வெண்ணாவல் உடனேகூட நலஞ்சிறகப்
> பானற் களத்துத் தம்பெருமான் அமரும் கோயில் பணி
> சமைத்தார்[2]

எனக் குறிக்கிறார். இச் சோழனின் காலத்தைச் சில ஆய்வாளர் கி. பி. 450-500 என வரையறுப்பர்.

கோச் செங்கணான் பற்றிப் பற்பல செய்திகள் பல இடங்களில் வழங்கி வருகின்றன. சிலப்பதிகாரக் கோவலனின் முற் பிறப்பைத் தமிழகத்திற்கு அப்பால் கலிங்க நாட்டிற்குக் கொண்டு சென்றது போன்றே கோச் செங்கணான முற் பிறவியில் பிறந்த இடம் கோதாவரிக் கரையில் இருந்தது எனக் கன்னட நூல் ஒன்று கூறும்.[3]

சங்க காலத்திற்குப் பின்னர்த் தமிழகத்தில் பல்லவர் ஆட்சி நடைபெற்ற போது தேவார முதலவர்கள் நாடெங்கும் சென்று சைவ நெறியைப் பரப்பி வந்தனர்.

---

1. திருவானைக்காத் திருப்பணி மலர், தி. மு. நாராயணசாமி பிள்ளை குழு, 1965.
2. பெரியபுராணம், கோச்செங்கட் சோழர் புராணம், 13.
3. சைவப் புண்ணியக் கண்கள, G. M. முத்துசாமி பிள்ளை, சைவசித்தாந்த மகா சமாஜம், சென்னை, 1976, பக்.150.

கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டிற்குப் பின்னர் வந்த சோழர் ஆட்சியில் தேவாரப் பாடல்பெற்ற கோயில்களெல்லாம் கற்றளிகளாக மாறின. மன்னர் வழியில் அவர்தம் குடிமக்கள் பலரும் ஒழுகிச் சைவந் தழைக்க வழி செய்தனர். அதன் பின்னர்ப் பாண்டியரும், போசளரும், விசயநகர மன்னர்களும், அவர்கள் ஆட்சியின் கீழ் வந்த மதுரை நாயக்கர்களும் கோயில் திருப்பணிகளில் ஈடுபட்டனர். இதனால் பழம்பெருங் கோயில்களைப் போன்றே பல கோயில்களும் புகழ்பெற்றன. பெருங்கோயில்களில் பல சுற்று மதில்கள் எழுந்தன. திருவானைக்காவின் கோச்செங்கணான் எடுத்த கோவில்களுள் இக்கோவிலுமொன்று.

மேலும் உமையம்மை பூசித்த தலங்களுள் இதுவும் ஒன்றாம். அதனை நினைவூட்டும் வகையில் இன்றும் அம்மன் கோவில் பூசகர் பெண்ணுடை தரித்தே உச்சிக்காலப் பூசையை இவ் விறைவர்க்குச் செய்கிறார். பங்குனிமாதம் சித்திரை நட்சத்திரத்தன்று நடைபெறும் பிரம்மோற்சவத்தில் சோமாஸ்கந்தர் அம்மன் வேடமும் அம்மை இறைவன் வேடமும் பூண்டு ஐந்து வீதிகளிலும் வலம் வரும் வழக்கம் நடைபெற்று வருகிறது.

இறைவனே முன்னின்று கட்டிய திருநீறிட்டான் மதில் இத்தலத்தின் பெருமையை வெளிப்படுத்துவதாக உள்ளது.

சோழமன்னன் ஆரம் காவிரியில் வீழ அது மறுபடியும் மஞ்சன நீர் எடுத்த குடத்தில் வந்து இறைவனுக்கு அணியாக அமைந்த செய்தி இத்தலச் சிறப்புகளில் ஒன்றாகும். இதனைச் சோழன் மனைவி அணிந்த ஆரம் எனவும் குறிப்பர்.

இத்தல இறைவன் : சம்புநாதர்
இறைவி : அகிலாண்டநாயகி
(அகிலாண்டேஸ்வரி எனச் சிவஸ்தல குறிப்புகள் கூறும்)
தீர்த்தம் : காவிரி
மரம் : வெண்ணாவல்

திருவானைக்காவிற்குரிய ஏழு இடங்கள் 1.

1. திருவானைக்கா. 2. திருச்செந்துறை 3. திருப்பராய்த்துறை
4. திருப்பைஞ்ஞீலி 5. திருப்பாச்சிலாச்சிராமம் 6. திருவீதிகுடி
7. திருவாலந்துறை

---

1. தலங்கள் பற்றிய குறிப்புக்கள் தல அகராதி (2பகுதிகள்) அச்சிடப் பெறாதவை டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூலகம், சென்னை.

இத்தலம் பற்றிய தேவாரப் பதிகங்கள் தவிர வேறு தலங்கள் பற்றிய பதிகங்களில் காணப்பெறும்.

குறிப்புகள்

சிலந்திக் கதை:

தேவார எண்

1397 சிலந்தியு மானைக் காவிற்றிருநிழற் பந்தர் செய்து-
(குறுக்கை. அப்பர்)

2996 திருவானைக் காவிலோர் சிலந்திக்கந்நாள்-
(குடந்தைக் கீழ்க்கோட்டம்-அப்பர்)

ஆரம்பூண்ட கதை

5978 செம்பொன்னினாரம் பூணாவணிந்தவன் காண்-
(திருப்புத்தூர்-அப்பர்)

அம்மை நிலை

7848 ஆனைக்காவிலங்கினை (ஆரூர் நிலாய அம்மானை
(பொது-அப்பர்)

ஆனைக்காவினைச் சுட்டல்

4641 ஆச்சிராமன்ன கருமானைக்காவும்-
(நாகைக்காரோணம் அப்பர்)

6490 தென்னானைக்காவுஞ்சிராப்பள்ளியும்-(அதிகை-அப்பர்)

7217 ஐயாறு மாருரு மானைக்காவும் (ஆலங்காடு-அப்பர்)

8116 ஆரூர் மூலட்டான மானைக்காகவும்-(பொது-அப்பர்)

8135 கோலக்கா வானைக்கா. -(பொது அப்பர்)

ஆனைக்கா இறைவன் எனச் சிறப்பித்தல்

4955 தென்னானைக்காவான் கண்டீர்-(ஆரூர்-அப்பர்)

5154 என்னானைத் தென்னானைக்காவான் றன்னை-
(தலையாலங்காடு-அப்பர்)

8236 ஆனைக்காவிலரனே பரனே யண்ணாமலையானே-
(பொது-ஆரூரர்)

இவற்றைக் காணும்போது அப்பர் பெருமான் திருவானைக் காவின் மேல் கொண்ட அளவற்ற அன்பு புலப்படும். சிலந்தி கதையைச் சுட்டுகிறார். அச்சிலந்தி கோச்செங்கணானாகி இறைவர்க்குக் கோவில் பல கட்டியதால் அக்கோவில்களில் உழவாரப் பணி செய்த அப்பர் இவ்வானைக்காவினைப் பன் முறை பாடியுள்ளார் எனலாம்.

திருமரம்

தமிழகத்திலுள்ள கோயில்களுக்கெனக் குறிப்பிட்ட ஒருமரம் இணைக்கப்பெற்றுச் சிறப்புடன் விளங்கி வருகிறது பழங் காலத்தில் 'மன்ற'த்தில் மக்கள் கூடித் தம் சமுதாய நிகழ்ச்சிகள் பற்றிப் பேசி முடிவு செய்த நிலையை இங்கு எண்ணிப்பார்த்தால் இதன் வளர்நிலை ஓரளவு புலப்படும்.

தில்லைக்கோயில் தில்லைவனம் எனவும் மதுரைக்கோயில் கடம்பவனம் எனவும் அழைக்கப் பெறுகின்றன. காடாக இருந்த இடமே பின்னர்க் கோயிலாக மாறிய வளர்ச்சிநிலையை இது காட்டும். குறிப்பிட்ட மரம் அக்காட்டின் பெயரினை நிலை நாட்டும் வகையில் அமைந்து பின் கோயில்மரம் எனக் கொண் டாடும் பெருமைபெற்றது. இது தமிழகத்தில் காணும் மரபு என்பதில் ஐயமில்லை.

திருவானைக்கா எனும் இத்தலத்திற்கு நாவல் மரம் கோயில் திருமரமாக அமைந்துள்ளது. கோயில் மரம் பேணப்பெறாத நிலையில் கொடிமரம் தோன்றியிருக்கும். இக்கோயில் சில குலத்தினர் போற்றும் சிறப்புடைய உரிமை பெற்றிருத்தலை இன்றும் காணலாம்.

உலகிலுள்ள பல பழங்குடி மக்கள் தங்கள் இனச் சின்னமாக மரத்தைக் கொண்டிருந்தனர். மரம் மரபுச்சின்னமாக இருந்த நிலையைப் பாண்டியர்க்கு வேம்பும், சேரர்க்குப் பனையும், சோழர்க்கு ஆத்தியும் குலச் செல்வமாக விளங்கியதால் அறியலாம். காவல்மரம் அரசர் தம் பெருமைக்கு நிலைக்களமாகப் பேணிய தைச் சங்ககாலச் செய்திகள் வெளியிடும்.

இத்தகைய சிறப்புடை மரபினைக் கொண்ட திருமரங்கள் கோயிலின் பெருமையை வளர்க்க உதவின. இத்தல நாவல் வெண்ணாவல் என்பது குறிப்பிடத் தக்கது (இத்தலத்தில் வந்து

பூசித்த யானையும் வெள்ளை நிற முடையது). நீர் வடிவில் இறைவனைக் கண்ட இத்தலத்தில் அமைந்த திருமரம் மருத்துவ முறைப்படி மனித உடம்பில் நீர்ப்பொருளாக விளங்கும் குருதி யையும் வெண்ணீரையும் பெருக்கும் பண்பு வாய்ந்தது. இப் பழத்தை உண்டால் உடம்பின் வெப்பம் தணிந்து குளிர்ச்சி பெருகும் என்பதும் இதன் விதை நீரிழிவு நோயை நீக்கும் என்பதும் மருத்துவ உண்மை.

தந்தி வனம் —சொல்லாட்சி

'தந்தி' என்பது யானையையும் 'வனம்' என்பது காவினையும் குறிக்கும். இவை வடமொழிச் சொற்கள். நாட்டிலே 'திருவானைக்கா' என வழங்கி வரும் நிலையை எண்ணிப் பார்த்தும் கமலை ஞானப்பிரகாசர் தம் நூலைத் தமிழில் செய் தாலும் பெயரை அக்காலச் சூழலுக்கேற்ப வடமொழிப் பெயரா லேயே சுட்டியுள்ளார்.

நூலின் தொடக்கத்தில் 'தந்திவனப் புராணத்தின் தக்க வட மொழி திருத்தித் தமிழாற் கூற' (1)* என இருமொழி உணர்வும் வெளிப்பட நூலின் பெயரைக் கூறியே அதனை நிலை நாட்ட முயல்கிறார். பாயிர இறுதியிலும் 'செந்தமிழால் வகுத்து மேன்மை தந்திவனப் புராணத்தைச் சாற்றல் செய்வாம்' (10) என உரைக் கிறார். செம்புநாதன் அருளால் எல்லா வினையும் நீங்கி உலகில் மிகு புகழும்,குன்றாவாழ்வும்,பெரும் பொருளும், மேலான நிலையும் பெற்று வாழுவதற்குக் காரணமாக அமைவது இத் 'தந்திவனப் புராணம்' (43) எனவும் விளம்புகிறார்.

'தந்தி' என்ற பெயர் மேலும் பரவுதற்கு ஏற்ப யானை இறைவனைப் பூசித்ததைக் குறிக்கிறார்.

> 'தந்தி பூசைத் தலைப்படும் எல்லை தன்னில்' (536)
> 'தாக்கியே அக்கணத்துத் தந்தியை வதைத்த தன்றே' (540)
> 'தந்தியும் சிலந்திதானும் துஞ்சல் கண்டு' (543)
> 'உயர்வுபெறு தந்தி' (546)

என யானையைத் தந்தி எனக் குறித்ததுடன் சோழன் செங்கணான் திருவானைக்காவில் தென்புறம் யானை புகாதவாறு வாயில் கட்டியதை,

---

*இந்நூலிலுள்ள செய்யுள் எண்ணைக் குறிக்கும்.

'தருச்சாலுமிவ் வனத்துப் பெருமானுக்குத்
தந்தி புகா வாயில் தென்பால் சமைத்ததன்பின்' (556)

எனவும் குறிக்கிறார். இவ்வாறு ஆசிரியர் தந்தி என்ற சொல்லைப் பெய்து அதன் ஆட்சியையும் நிறுவுகிறார். இப்படி யானையின் பெயரையும் 'தந்தி' என்ற சொல்லால் குறித்து ஆனைக்கா என்பதைத் 'தந்தி வனம்' எனவும் குறித்துள்ளமை பிற்காலத்தில் தமிழகத்தின் ஊர்ப் பெயர், இறைவன் பெயர், நூற்பெயர் ஆகியவை வடமொழி வண்ணம் கொண்ட ஆட்சியைக் காட்டுகிறது.

கோயில் தெய்வங்கள்

திருவானைக்கா அண்ணல் மேற்கு நோக்கியும், அகிலாண்ட அம்மை கோயில் கிழக்கு நோக்கியும் உள்ளன. இரு கோயில்களுக்குமுரிய பரிவார தேவதைகள் தனித்தனியே உள்ளன. உட்பிரகாரப் பரிவாரத் தெய்வங்களாக அமைந்தவை ஆனைமுகன், ஆறுமுகன், கலியாணசுந்தரர், திருமகள், நடராசர், தட்சிணாமூர்த்தி, சண்டேசர், சூரியன், சந்திரன், நவக்கிரகம் ஆகும். வெளிப் பிரகாரத்தில் உற்சவத் திருமேனிகளும் நடராசரும் ஆகும்.

நாட்காலப் பூசை

கோவிலில் நாள்தோறும் நான்கு காலப் பூசைகள் நடைபெறுகின்றன. அம்மைக்குப் பதினாறு வகை உபசார பூசை நடைபெறும். அபிடேகம், ஆராதனை, தேவாரம் ஓதல் போன்றவை ஒவ்வொரு காலப் பூசையிலும் தவறாது நடைபெறும் (அம்மை சிவபெருமானுக்குச் செய்த பூசையை ஞானவுபதேசச் சருக்கத்தில் விரிவாகக் காணலாம்). அம்மை பூசை செய்த வரலாற்றை ஒட்டி நண்பகலில் இறைவன் கோயிலில அம்மன் கோவில் சிவாச்சாரியார் அம்மைபோல் பெண்ணுடை தரித்து யானை முதலியன புடைசூழச் சென்று இறைவனுக்கு அபிடேகம் செய்து ஆராதனை முடிப்பார். அம்மையே வந்து வழிபாடு செய்வதாகக் கருதும் நம்பிக்கையின் வெளிப்பாடு இது.

விழாக்கள்

ஒவ்வொரு திங்களின் முதல் நாளன்று அத்திங்களுக்குரிய பழம் படைத்து இறைவனை வணங்குவர். செம்புமுனி நாவற்கனி படைத்த நெறியின் தொடர்ச்சியாக இதனைச் சொல்ல முடிகிறது.

பிரமன் துதித்து பிரமோற்சவம் இங்கு நடைபெற்று வருகிறது. இதன் தோற்ற வரலாற்றை ஆதி பிரமோற்சவச் சருக்கத்தில் விரிவாகக் காணலாம். இவ்விழாத் தொடர்ந்து நாற்பது நாட்கள் நடைபெறும்.

முதல் நாள்	மண் எடுத்தல்
5நாள்	ஆனைமுகன், அறுமுகன்
3நாள்	நால்வர்
3நாள்	கலியாணசுந்தரர்
6நாள்	சந்திரசேகரர்
10 நாள்	சோமஸ்கந்தர்
3நாள்	பல்லக்கு
3 நாள்	மௌன விழா
3 நாள்	சண்டிகேசர்
1 நாள்	பஞ்சபிரகாரம்
1 நாள்	விடையாற்றி
1 நாள்	மண்டலாபிடேகம்

ஆக நாற்பது நாட்கள் இத்திருவிழா நடைபெறும். இதுவே இக்கோயிலின் முதல் திருவிழாவாக அமைந்திருத்தல் கூடும். மாசி மிருகசீடத்தில் கொடியேற்றப் பங்குனி ரேவதியில் தேரோட்டம் நடைபெறும். ரோகிணியில் தீர்த்தமும், இம் மாதச் சித்திரை நட்சத்திரத்தில் ஐந்து பிரகாரமும் சுற்றி வருதலும் நடக்கும். திருநீறிட்டான் மதிலைச் சுற்றிவரும் இவ்விழா சிறப்பிற்குரியது. அன்று இறைவனுக்கு இறைவி வேடமும், இறைவிக்கு இறைவன் வேடமும் இட்டு ஐந்து வீதிகளிலும் உலாவரச் செய்வர். இவ்விழாத் தொடங்குமுன் ஊர்த் தெய்வமாம் பிடாரிக்கு ஐந்து நாள் விழா நடைபெறும். இவ்வழக்கம் பெரும்பாலும் எல்லாக் கோயில்களிலும் காணப்படும் வழக்கம். ஊர்ப் பொதுமக்கள் வணங்கி வந்த சிறு தெய்வ வணக்கமும் அதற்குப் பிற்காலத்தில் எழுந்த பெருந் தெய்வ வணக்கமும் ஒன்றோடு ஒன்று இணைந்து நடைமுறையில் செயல்பட்ட போக்கினை இது புலப்படுத்தும்.

வைகாசியில் பத்துநாட்கள் வசந்தமண்டபத்தில் வசந்தவிழா நடைபெறும்.

ஆவணி மூலத்தில் பிட்டுக்கு மண்சுமந்த கதைக்குரிய விழாவைக் கொண்டாடுவர்.

புரட்டாசியில் வரும் நவராத்திரி விழா அம்மனுக்குரியதாக அமைப்பர். விஜயநகரப் பேரரசின் பின் இவ்விழாச் சிறந்திருக்கும் என்பர்.

ஐப்பசியில் முருகன் சூரனை வென்ற விழா எடுப்பர்.

கார்த்திகையில் ஒவ்வொரு திங்கட்கிழமையிலும் சங்கு அபிடேகமும் கார்த்திகைச் சிறப்பு நாளன்று விளக்கு வைக்கும் திருவிழாவும் நடைபெறும்.

மார்கழித் திருவாதிரை நாளன்று இரண்டாம் பிரகாரத்திலுள்ள நடராசர் அறுபத்து மூவருடன் உலாவரும் திருவிழாக் கொண்டாடுவர்.

தை மாதத் திருவிழாவின் இறுதி நாளில் இராம தீர்த்தத்தில் தெப்பவிழா நடக்கும்.

கோச்செங்கட் சோழ விழாவை மாசித்திங்களில் கொண்டாடுவர். இத்திங்கள் இக்கோயில் எடுத்தவனை மறவாமல் விழா எடுக்கிறது.

நூல் வரலாறு

தந்திவனப்புராணத்தைக் கமலை ஞானப்பிரகாசர் வடமொழியிலுள்ள புராணத்திலிருந்து எடுத்துத் தமிழில் கூறுவதாக நூலின் தொடக்கத்திலுள்ள விநாயகர் வணக்கத்திலேயே அறிய முடிகிறது. 'தந்திவனப் புராணத்தின் தக்க வடமொழி திருத்தித் தமிழாற் கூற' என்பதாலும்,

'ஆரண நூல் தரு முனிவர் கேட்கச்சூதன்
அருள்பாத்ம புராணத்தி னடைவு நோக்கி' (7)

என்பதால் எந்தப் புராணத்திலிருந்து இதனை எடுத்துள்ளார் என்ற செய்தியை அறிவதாலும் இப்புராணம் பாத்ம புராணத்தின் மொழியை மாற்றித் தமிழிற் கூறிய செய்தி தெரிகிறது. மேலும் இந்நூலில் பதினான்கு சருக்கங்களும் மொத்தம் 570 விருத்தப் பாக்களும் அமைந்துள்ள செய்தியும் அறிகிறோம்.

புராண நெறிப்படியே கயிலையில் சிவபெருமான் உமையம்மைக்குக் கூறிய தலமாம் திருவானைக்காவின் பெருமையைக் கூறுகிறார் சூதமுனிவர். அவர் நைமிசவன முனிவர்க்குச் சொல்லும் போதே இச்செய்தியை இறைவன் நந்திக்கும், நந்தி, சனற்

குமாரனுக்கும், அவன் வியாசருக்கும் கூற வியாசர் சூதருக்கு மொழிந்த வரலாறும் காணும்போது பன்னெடுங் காலமாக இது செவிவழிச் செய்தியாக வந்த புராணம் எனக் கருதுமாறு உள்ளது, ஆயினும் புராண மரபு, இத்தகைய பழமை நெறிக் கோலத்தை நல்கும் பாங்கினை மற்ற புராணங்களின் அமைப்பைக் கொண்டு நன்கு அறியலாம்.

தமிழ் நாட்டுத் தலங்கள் பற்றி இடைக்காலத்தில் தோன்றிய இத்தல புராண இலக்கியங்கள் இறைவன், இறைவனின் கணங்கள், சீடர்கள், இதிகாச புராணப் படைப்பாளர்கள் பற்றி வெளிப்படும் கேள்விச் செல்வமாகக் காட்டுவதில் தனிப் பெருமை அடைகின்றன.

சிவபெருமான்

தந்திவனப் புராணம் திருவானைக்காவில் வீற்றிருக்கும் சிவபிரானை முழுமுதற் பொருளாகக் கொண்டு வணங்குகிறது. நூலின் தொடக்கத்தில் புராண மரபுப்படி விநாயகர் வணக்கம் கூறும்போது சிவபிரானுக்குரிய ஆதிப்பெருஞ்செல்வன் என்ற பெயரை மறவாமல் கூறி அவர் மகனான கணபதி எனக் குறிப்பார்.(1). 'ஆதிப்பெருஞ் செல்வன்' என்ற பெயர் இத்தல இறைவனுக்குரியது என்பதை நன்கு அறியும் வகையில் 'அகிலாண்டவல்லி பாகம் பிறிந்திடா துறையும் ஆதிப்பெருஞ் செல்வன்' (81) என இத்தல இறைவியுடன் இணைத்தே இப் புராண ஆசிரியர் உரைக்கிறார். மேலும் இப்பெயர்க்குரிய காரணத் தைப் புராணத்தின் இறுதியில் கூறியுள்ளார்.

"செங்கணான் தேடு செல்வம் அவை அனைத்தும் எங்கோன் செம்புநாதனுக்கே என்றே செலுத்தி இயல்பதனாலே எங்கோன் ஆதிப்பெருஞ் செல்வன் என்னும் நாமம் நயந்தனன்" (565) எனக் கூறும்போது சோழ நாட்டுத் தலத்திலுள்ள இறைவன் சோழமன்னனாம் செங்கணான் திரட்டிய செல்வமனைத்தும் அளித்ததால் ஆதிப்பெருஞ் செல்வமாக விளங்குவது புலனாம். இவ்வாறு இறைவன் பெருமை சோழநாட்டாலும் சோழனாலும் நன்கு வெளிப்படும் வகையில் இப்பெயர் நிலைபெற்றுள்ளது.

இங்கு இறைவனின் அருட்குறியாக அமைந்த இலிங்கத்திற்கு அமுதலிங்கம் எனப் பெயருளது. பிரமனின் கருத்திற்கேற்ப அம்மை திரட்டிய நீரிலிருந்து அமைந்த லிங்கம் ஆதலால் இதனை

அமுதீசர் (195) என அழைத்தனர். மேலும் 'செழுநீர்த்திரள்' என்று செழுந்தமிழில் பெயர் பெற்றனன் இறைவன். அம்மையின் கைவண்ணத்தால் அமுதலிங்கம் (அமிர்தலிங்கம்) என்ற பெயரே இந்நூலில் பல இடங்களில் சுட்டப் பெறுகிறது. தலத்து இறைவனாக உள்ள சிவபிரானின் இலிங்கவடிவம் அம்மையின் அருந்தவப் பயன் அனைத்தும் கையுற வந்தது எனக் கண்டவர் களித்தனர்.

இத்தல இறைவன், சோழன் வேண்டியபடி அவன் மனைவி காவிரியில் இழந்த ஆரத்தை அபிடேகப் புனல் மொண்டபோது அப்பொற் குடத்தின் வழியாகப் புகுந்து அபிடேகஞ் செய்யும் போது நீருடன் வந்து சிவனுக்கு அணியாக அமைந்ததால் 'ஆரம் பூண்டவன்' (476) என்ற பெயர் அமைந்தது.

இராமன் கும்பகன்னனைக் கொன்ற வீரகத்தி தீர அங்கதனை அனுப்பி எடுத்துவந்த நீல இலிங்கத்தை வைத்து வணங்கினான். கரியவனாம் இராமனின் பாவத்தைத் தீர்த்த தலைவனாகச் (ஐயனாக) சிவன் விளங்குவதால் 'கரியமாலயன்' (346) என்ற பெயரும் பெற்றுள்ளான்.

சம்புமுனிச் சருக்கத்தில் பிரமன் சிவபெருமானை வணங்கிய செய்தியைக் குறிப்பிடும்போது 'சங்கர நாதன் தன்னைச் சதுமுகன் வணங்கி' (119) எனக் குறிப்பிடும் இப்புராணம். இப் பெயர் இன்றும் நிலவி வருகிறது. இவ்விறைவன் அமைந்துள்ள கோயிலைப் பழைய செப்புதாதர் கோயில் எனவும் வழங்கி வருகின்றனர்.

செங்கட் சோழன் முன்னர்ச் சிலந்தியாய் வாழ்ந்தான் அவனிழைத்த பந்தரை யானை அழித்தது. அச்செயல் மறுபடியும் நேரா வகையில் தான் கட்டிய கோயிலில் தந்தி (யானை) புகா வாயிலைத் தென்பால் அமைத்துச் சாலகத்தின் வாயிலாகத் தரிசித்து மகிழ வழி செய்தான். அதனால் இத்தல இறைவற்கு 'திருச்சாலகத் தொளிரும் பெருமான்' (556) என்ற பெயர் அமைந்தது.

இராக்கதரைக் கொல்லும் வேள்வியைப் பராசரன் செய்யும் போது எல்லா இராக்கதர்களும் அந்த வேள்வியில் வீழ்ந்தனர். அதுபோல நிருதியின் மூர்த்தியும் ஈர்க்கப் பெற்றது. அதனைத் தடுக்க நிருதி சிவனிடம் வேண்ட அவன் வேண்டுதலுக்கு இரங்கி

அசரீரியாய் வேள்விப் பிணத்தைப் பராசரனிடம் பிச்சையாகக் கேட்டு, நிருதி ஊர்தியைப் பெற்றுக் காத்தனன். இவ்வாறு முதலில் பராசரன் இராக்கதரைக் கொல்லும் வேள்விக்கு முன்னர் இசைந்திருந்தும் நிருதி தொழ அவனுக்கும் இராக்கதர்களுக்கும் பின்னிரக்கம் செய்ததால் 'பின்னிரக்கம் செயும் பெருமான்' என்ற பெயர் (512) சிறந்து நின்றது.

ஆதிபிரம்ம உற்சவத்தில் மாசிவிழாவில் சிவன் எழுந்தருளும் போது 'அழகன்' என்றும், 'அழகுக்கு ஆரும் நிகரொவ்வான்' என்றும் 'முன்பினும் பின்னழகன்' என்றும் போற்றினர் (367)

இத்தலத்தில் செம்புமுனி வணங்கி இறைவற்கு நிழலாக அமைந்தார். அவர் வேண்டுதற்கேற்ப இவ்விறைவன் பெயர் செம்புநாதர் என நூலின் தொடக்க முதல் போற்றப் பெறுகிறது (2, 38, 4[illegible], 8[illegible], 87, 101).

இவ்வாறு இத்தல இறைவனுக்கு அமைந்த சிறப்புப்பெயர்கள் வடிவம், அழகு, செயல், அமைந்த நிலை, பிற உயிர்களின் வேண்டுதல், பிற தெய்வங்களோடு கொண்ட தொடர்பு ஆகிய வற்றின் அடிப்படையில் அமைந்தன.

இத்தல இறைவன் உமை, சூரியன், சந்திரன், அக்கினி, இந்திரன், பிரமன், திருமால் ஆகிய தெய்வங்களும் அகத்தியன், செம்புமுனி, பராசரன் போன்ற முனிவர்களும், யானை போன்ற பேருயிர்களும் சிலந்தி போன்ற சிற்றுயிர்களும் வழிபட்டு உய்தி பெற்றிட அருள் புரிந்தான்.

சிலந்தி கோயில் பன்னூலுக்கு இரங்கிப் பொன்மகுடம் சூட்டு கின்ற புனிதன் ஆவன். செம்புமுனி போன்றவர்கள் அளித்த கனியை மறாதுண்டான். உமையம்மையின் விருப்பிற்கேற்ப அவள் சென்று தவம் புரியும் இடத்தைக் கூறி, அங்குச் சென்று அவள் தவம் புரிந்தபோது, அவளுக்கு இரங்கி வெளிப்பட்டு உண்மை ஞானத்தை உபதேசித்தான். வெளிபட்டவுடன் அருள் நேயம் ததும்ப 'அருந்தவத்தா லுற மெலிந்தனை நீ' (214) என்றே முதலில் உசாவினார். உலக நடைமுறையில் நீண்ட நாள் பிரிந்திருந்தவர்கள் முதன் முதலில் கண்டவுடன் 'என்ன, இளைத்து விட்டாய்' எனக் கேட்பர். இந்நெறியில் சிவன் திருவானைக்காவில் தவம் புரிந்த அம்மையைப் பார்த்துக் கேட்கும் மொழிகள் நெஞ்சைக் கனிவிக்க வல்லன.

சிவன் உமையின் விருப்பிற்கேற்ப ஞானத்தை உபதேசம் செய்தது சிவஞானம் பெறுதற்கு நல்வழியாக அமைகிறது. பதி பசு பாசம் எனும் முப்பொருள் விதிமுறை அடைவில் விளக்கியபின் அவற்றிற்குள்ள தொடர்பு காணப்பெறுகிறது. 'வான்பதம் பெறும் பாங்கிற்கு இது உதவும். மக்கள் இஞ்ஞானத்தை நன்குணரும் வகையில் காந்தம் (222) இந்திரஜாலம் (223) கதிரொளி (231) போன்றவை உவமையாகப் பயன்படுகின்றன.

விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் எனும் மூவகைப் பசுக்களைக் காட்டி மலம் பற்றிய அறிவு பெற வழிசெய்கிறது. மலபாகம், சத்திநிபாதம் பற்றி விளக்கம் கிடைக்கிறது. இறைவனுடன் கலந்து பேரின்பம் பெறுதல், ஆன்மா பாசத்தை விட்டு இறையென விளங்கல் ஆகியவை விளக்கப் பெறுகின்றன.

இவையெல்லாம் அறிவுலகத்திற்குச் சிவஞானத்தைத் தெளிவாக உரைக்க உதவும். இப்பகுதிகள் முழுமையாக அறிவூட்டும் முயற்சியிலே நிலைத்துள்ளன.

இவ்வாறு அறிவு விளக்கம் பெற வேண்டிய கருத்துக்களை முறையாகக் கூறிய இறைவன் செம்புமுனியின் விருப்பிற்கேற்ப' இத்தல இறைவன் பெயர் செம்புநாதனாகவும் முனிவன் ஆடிய தடம் செம்பு தீர்த்தமாகவும் பெயர்பெற அருளீந்தான். பிரமன் வேண்டுதற்கேற்ப அவனாடிய தடமும் பிரமபுட்கரணி எனப் பெயர் பெறுமாறு அருளினான்.*

ஞானமும் அருளும் தெய்வத்திற்கும் முனிவர்க்கும் அருளிய இறைவன் பொதுமக்களும் நலம்பெற, பிரமனின் விருப்பிற்கிணங்கத் திருவிழாவில் உலா வருகிறான். விநாயகனும் முருகனும் தண்டியும் சூழ அம்பிகையுடன் அண்டநாயகன் எழுந்தருளினான். அவ்வாறு வரும்போது வாள், பொற்குஞ்சம், பொற்கெண்டி, பொன்னடைப்பை போன்றவற்றை எடுத்து வந்தனர். கட்டியக்காரர் பொற்பிரம்பு நீட்டி வந்த கூட்டத்தை விலக்கியும் பலவாறு துதித்து 'அரகரா என்று நின்றே அன்பர்கள் போற்றி'

---

*இந்திரன் வேண்டுதலுக்கேற்ப அவனை வீரகத்தியிலிருந்து நீக்கி அவன் ஆடிய தடத்திற்கு இந்திர தீர்த்தம் என்ற பெயரும் அருளினான் (370).
அகத்தியன் வேண்டுதலுக்கேற்ப அவன் ஆடிய தீர்த்தம் அகத்திய தீர்த்தமாகவும் அதிலாடியவர் வினை அகலவும் அருள் புரிந்தான் (391).

செய்யுமாறு (277) இறைவன் விழா நடைபெற அருள் செய்தான். பூதவாகனத்தில் அண்ணல் வர அன்னவாகனத்தில் அம்மை வந்தாள். விடைமேல் இருவரும் பவனி வந்தனர். பூம்பந்தரிலும், நாகவாகனத்திலும் முத்துப் பந்தரிலும் தேரிலும் உலாவந்து அருள் புரிந்தான்.

இறைவன் அகத்தியனைத் தனக்கு ஒப்பாக மதித்துத் தென்றிசை செல்லுமாறு கூறினான். அதற்குக் காரணம் மெய்ப் பதம் விரும்பும் அன்பும் மெய்ம்மையும் ஆகும். அன்புதான் இறைவன் என்பதை மற்றவர்க்கு இறைவன் அறிவுறுத்துவதற்கு அகத்தியனும் சான்றாகிறான் (380). இறைவன் கட்டளையைக் குறுமுனி தன் இயலாமை நோக்கி ஐயுறுவதையும், அதனைப் போக்க இறைவன் வழிகாட்டலும் அடியார்பால் சிவன் கொண்ட பற்றை நன்குணர்த்தும். தன்னைப் பணிந்தவர்க்கு உலகத்தையே நிலைநாட்டும் ஆற்றலை அளிக்கிறான் இறைவன் என்பதை அகத்தியர் கதை வாயிலாக அறிய முடிகிறது. பழம் புராணத்தில் அகத்தியர் தென்னகம் வந்தது மட்டுமே இருக்கும். ஆயின் இப்புராணத்தால் இத்தல இறைவனே அவ்வாற்றலை நல்கியவன் என்பதைக் காணமுடியும்.

சோழ அரசன் நாகர் மகளை மணந்தபோது அவன் தன் மகளுக்களித்த மணி ஆரத்தைக் கண்டு அதிசயித்தான். அடுத்த கணம் அவ்வியப்பிற்குரிய அரிய பொருள் திருவானைக்காவிலுள்ள அமுதேசனுக்கு ஆம் (447) என மனத்தில் கருதும் அளவுக்கு அக்கால அரசர் தம் நினைவில் ஆனைக்கா அண்ணலை மறவாதிருந்தனர் என்பதை உணர்த்தும். இக்கருத்து கோச் செங்கணான் திரட்டிய செல்வம் அனைத்தும இவ்விறைவற்கே அளித்ததாலும் அதனால் 'ஆதிப்பெருஞ் செல்வர்' (565) என இவ் விறைவன் பெயர் பெற்றதாலும் மேலும் வலியுறும்.

பெரியயாகம் செய்து தன் தந்தைக் கிழைத்த தீமையை நீக்கக் கருதும் பராசரன் போன்ற முனிவர்களும் தம் கருமம் முற்றுப்பெற இவ்விறைவனின் ஆணைபெற்றே தம் யாகத்தைத் தொடங்கினார். அவ்வாறு துன்பமுற்றவர் துன்பத்தைத் துடைக்க அருள் புரியும் ஆனைக்கா அண்ணல் அதன் விளைவாக மற்றவர் துன்புற்று வருந்தும்போது அவ்வண்ணல் அருளை நாடினால் அத்துன்பத்தைத் துடைக்கப் பின்னிரக்கம் செய்யும் நிலையையும் காணமுடிகிறது காரணம் காரியம் என்ற இரண்டையும்

கண்டு காரணத்தின் விளைவு காரியமாய் இருப்பினும் தன்னருளால் காரியத்தின் பயனை நீக்கும் நிலையில் இறைவன் அருள் விரியும் புதுமையைப் பின்னிரக்கம் செய்த சருக்கத்தில் காண முடிகிறது. இங்கு இறைவன் வினைமுடிவு என்ற நிலையிலிருந்து இரக்கம் என்ற உயர்நிலையில் வெளிப்படுகிறான்.

சிலந்தி போன்ற சிற்றுயிர்களும் தன்பால் அன்பு செய்யின் அவற்றை உயர்நிலை எய்துவிக்கும் அருளைச் சிலந்தி மூடின சருக்கத்தில் காணலாம். மாலியவான், புட்பவந்தன் ஆகியோர் தத்தமக்குச் சாபம் தரவும் இறைவன் அவர்களின் சாபம் நீங்க ஆனைக்காச் சிலந்தியாகவும் வெள்ளானையாகவும் வடிவெடுத்து வாழும்போது சிவபூசை செய்யும் முறையில் வேறுபடும் நிலை ஏற்பட்டு ஒருவரை ஒருவர் மாய்த்துக் கொள்கின்றனர். நற்செயல் புரிவதிலும் முரண் ஏற்படுகிறது. சிற்றுயிர், பேருயிர் என்ற வேறுபாடின்றிச் செய்யும் செயல் பற்றிய நோக்கில் வேறுபாடு ஏற்படுகிறது. சிலந்தி வலைபின்னும் பார்வையிலும், யானை பூசை செய்யும் பார்வையிலும் சிவபூசை என்னும் பொது நன்மை மாறுபட்ட நிலையில் முரண் விளைகிறது. பொதுவாக இது முரண் பட்டிருப்பினும் இறைவன் அருளில் முரண் மாறுகிறது யானையாக வணங்கியவன் இத்தலத்தின் பெயரே தன் பெயராக வேண்டும் எனவும், தான் சிவபதம் அடைய வேண்டும் எனவும் வேண்டியபோது இறைவன் அவ்வாறே அருளுகிறான். சிலந்திக்கும் தலைமை பெறத் தனது கரம் தலைமேல் வைத்துச் சிவன் வாழ்த்த (54) அதுவும் சிலந்திப் பிறவி நீங்கி மன்னவனாகிச் சிவன் பணி வேண்ட அவற்கு அவ்வாறே அருளினான்.

இப்புராணத்தில் இறைவன் புகழ் அகத்தியர், அடியார், இந்திரன், உமை, நிருதி, பிரமன், வானவர் ஆகியோர் துதிக்கும் துதிப்பாடல்களால் மிகச் சிறந்த முறையில் வெளிப்படுகிறது யானை செய்யும் பூசையும், உமை செய்யும் பூசையும் மண்ணுலக மக்கள் இறைவனை எவ்வழியில் பூசிக்க வேண்டும் என்று உணர்த்துவதுபோல் இருநிலைகளில் உணர்த்தப் படுகிறது. இங்ஙனம் சிவன், வடிவம், பெருமை, அருட்டிறம செயல் காட்டும் நிலை, சிவபூசையின் சிறப்பு ஆகியன நன்கு புலப்படுகின்றன.

அகிலாண்ட அம்மை

இத்தல இறைவி அகிலாண்ட நாயகி எனப் போற்றப் படுகிறாள். இப்பதியிலுள்ள இறைவனை வணங்கியவர்கள் பற்றி இப்புராணம் குறிப்பிடும்போது 'சீர் கொண்ட இமையவல்லி' என இவ்வம்மைக்கே முதலிடம் கொடுத்துள்ளது. அம்மையைத் துதிக்கும்போது மார்பிலணிந்த மணிவடமும், கருணை முகமும், கருணை விழியும், துடி மருங்கும், பொற்றோடணிந்த காதும், கருங்குழலும் அடியவர்முன் தோன்றும் (3) எனக் கூறும் போது அம்மையின் வடிவழகு சுட்டப் பெறுகிறது.

ஆடல் பாடலில் வல்ல மாதர் முன்பினும் அதிகமான அழகு பெற வேண்டி அகிலாண்ட வல்லியின் அடியிணைத் தொழுதனர் (76). இறைவன் அம்மையைத் தன் இடப்பாகத்தில் கொண்ட செய்தி பல விடங்களில் எடுத்துரைக்கப் பெறும். பிரமன் தவம் புரிந்து சிவனைப் பலவாறு துதித்திறைஞ்சும்போது அவனுக்குக் காட்சி அளிக்க விடையின் மீது வரும்போது உமையுடனே அவன் வந்து அருள் புரிகிறான் எனக் காணும்போது (116) அம்மையும் அப்பனும் இணைபிரியா நிலை வெளிப்படும். கந்தன், ஐங்கரன் ஆகிய இருவரைத் தந்த மயிலாகப் (132) போற்றப் படுகிறாள் அகிலாண்டநாயகி.

இத்தகைய சிறப்புடைய அம்மை ஐயனிடம் ஞானஉபதேசம் பெறுதல் அறிவுக்குப் பெருவிருந்தளிக்கும் சருக்கமாகும். கைலையில் இந்திரர் முதலியவர்க்குக் காட்சி அளித்த காலத்தில் அம்மை சிவனை வணங்கிப் பேரன்பு பொங்கப் பலவகையாகப் போற்றி (155-157) ஞானம் பற்றி அருள வேண்டினாள். அம்மை ஐயன் உரையாடல் இச்சருக்கத்தில் மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. இறைவன் அம்மையை மெய்ஞ்ஞானம் பெறும் பொருட்டுப் பிரமனும் செம்பு முனிவனும் தவஞ்செய்யும் இடத்திற்குச் (திருவானைக்காவுக்கு) செலுமாறு கூறினான். அப்போது அம்மை கைலையைக் காட்டிலும் அது சிறப்புடைய தலமா எனக் கேட்டதால் திருவானைக்காவின் சிறப்பு இறைவன் வாயால் அறிய முடிகிறது. இவ்வாறு இத்தலத்தின் பெருமையை உணர அம்மையின் கேள்வியே காரணமாக அமைகிறது.

அம்மையின் தவநிலை பலவகையில் விரித்துப் பேசப் பெறுகிறது. பிரமனால் அம்மை இவ்விடத்தில் 'கற்புடை அனங்கே'

(175) எனப் போற்றப் பெறுகிறாள். இங்கு அம்மை தன் கூந்தலை வேணியாகக் கட்டி வற்கலை ஆடை புனைந்தாள். தீயிலும் மழையிலும் பனியிலும் தவம் புரிந்தாள். இந்நிலையில் அம்மை புரிந்த முப்பத்திரண்டறம் போற்றப் பெறும் (183). அப்போது அம்மை சிவபூசை செய்ய எண்ணிப்பிரமன் கருத்திற்கேற்ப நீரைக் கொண்டு அமுதலிங்கம் திரட்டினாள்.*

---

*நீரே உலகின் தொடக்கம்

தமிழிலக்கியத்தில் ஐந்து பூதங்கள் பற்றிய கருத்து தொல்காப்பியர் காலம் முதல் வளர்ந்து வந்துள்ளது என்பர். ஆயினும் அவை பற்றிய கருத்து திடுமென முழுவடிவில தோன்றியிருத்தல் இயலாது. எதனை உலகத் தோற்றத்தின் முதற் பூதமாய்க் கொண்டார்கள் என்பதைத் தெளிவாக அறிய முடியவில்லை. மாணிக்கவாசகர் தம் போற்றித் திருவகவலில்,

பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் திகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி

என ஐந்து பூதங்களின் வளர்நிலையைச் சுட்டும் நெறியில் கூறிச் செல்வதைக காண்கிறோம். இதனடிப்படையில் எல்லாப் பொருள்களில் தோற்றத்திற்கு அடிப்படை வெளி (வான்) என்ற கருத்து விளங்குகிறது. இதன் விரிவையே 'வானாகி மண்ணாகி' என்ற திருவாசகப் பாடலிலும் காணலாம். இவை மெய்ப்பொருள் விளக்கம் பெற்றுக் கருத்துக்கள் வளர்ந்த நிலையில் தோன்றிய நிலை எனக் கொள்ளலாம். இதன் முதல் வரிசையை நோக்கின் மண்ணே தோற்றத்தின் முதல் என்ற கருத்துத் தோன்றியிருத்தற்கு இது அறகுறி எனக் கொள்ள இடமுண்டு.

ஊழிக் காலம் பற்றிப் பல கதைகள் புராண உலகில் வழங்குவதைக் கொண்டும் ஊழிக் காலத்தில் தோணி புரம் மிதந்த கதைகளைக் கொண்டும் வேணியில் நீரைத் தரித்தபிரான் எனச் சிவனைத் துதித்தல் கொண்டும் நீர் என்ற பூதம் முதற் பூதமாக மக்கள் கருதியிருத்தல் கூடும்.

ரிக் வேதத் தொடக்கத்தல் 'அப: ஏவ சசர்ஜ ஆதௌ' எனக் கூறுவதால் (பிரமன்) முதலில் நீரையே படைத்தான் என்ற கருத்து வெளிபபடும்.

தாலெஸ் (Thales) என்ற அறிஞர் கருத்துப்படி எல்லாப் பொருள்களும நீரால் உண்டாயின.[1]

இவற்றைக் காணும்போது நீரால் அமுதலிங்கம் படைத்தது அப்பூதத்தின் முதன்மையைச் சுட்டுவது போலும் எனக் கொள்ளலாம்.

---

1. A History of Western Philosophy, Betrand Russell, Simon and Schustery, New york, 1965 p. 24.

இது தலத்திறைவன் வடிவின் பெருமையைக் குறிப்பதாக அமைகிறது. இவ்விறைவனுக்கு நிழலாகச் செம்புமுனியை நிற்க வேண்டினாள் அம்மை. இந்நிலையில் தலம் இறைவன், தல மரம் என்பவை அமைய அகிலாண்ட நாயகியே காரணமாக உள்ளாள்.

இறைவனை அம்மை பூசைசெய்த பாங்கு மற்ற மாந்தர்க்கு எடுத்துக்காட்டாக அமையும்வண்ணம்இச்சருக்கத்தில்அம்மையின் செயல்கள் விளக்கமாக அமைந்துள்ளன. கனியமுது படைத்த செய்தி மறவாமல் கூறப்பெறுகிறது (203). அஞ்செழுத்து ஓதித் துதித்த பகுதி முன்னர்த்துதித்த நிலையோடு ஒப்பிடற்குரியது (156-157; 207-208). முன்னதில் இறைவனின் புறக்கோலமே போற்றப் பெறும். அடிமுடி திருமுகம் ஆகியவற்றின் சிறப்பைக் கூறிய அம்மை இங்கு இறைவனின் மனம், வாக்கு, காயம் ஆகிய வற்றால் அளவிடற்கரிய நிலையைக் கூறிப் போகமும் வீடும் நல்கும் அருளைப் போற்றுகிறாள். இரு வேறுபட்ட துதி நிலை ஞானம் பெறுதற்குரிய சூழலை வெளிப்படுத்துவது போன்றமைந் துள்ளது.

அப்போது வெளிப்பட்ட இறைவனிடம் உமையவள் பெற்ற வரம் திருவானைக்காத் தலத்திற்கும், தலத்திலுறை இறைவற்கும் எல்லையற்ற பெருமையை விளக்குவதாய் உள்ளது. இந் நிலையில் அம்மை இறைவனிடமிருந்து பசு, பதி, பாசம் பற்றி விரி வான ஞானம் பெறுகிறாள். ஆன்மா பாசத்தை விட்டு இறை யென விளங்கும் நிலையை அறிகிறாள். இது உலக மக்கள் ஞானம் பெறுதற்கு அம்மை கண்ட வழியாக அமைகிறது.

இறைவனைத் தியானம் செய்த அம்மை அவ்வுருவாக அமைந்தருளுமாறு பிரமன் வேண்டிட அகிலநாயகி அவ்வுருவ மாகவே திருவானைக்காவில் வீற்றிருக்கின்றாள் (247).

இத்தகைய சிறப்புப்பெற்ற அம்மையை இறைவனுடன் ‘அன்னியமற விளங்கும்’ நிலையை உணர்ந்து பராசரன் போன்ற முனிவர்களும் வணங்கிப் போற்றினர் (497). இவ்வம்மை வடிவைத் துதித்த தாயுமானவரும்,

‘அட்டசித்தி நல் அன்பருக்கு அருள
விருதுகட்டிய பொன் அன்னமே
அண்டகோடி புகழ்காவை வாழும்
அகிலாண்ட நாயகி என் அம்மையே’!

எனப் போற்றுகிறார்.

அம்மையே அமுதலிங்கத்தை வழிபட்டதால் இன்றும் இக் கோவில் அர்ச்சகர் உச்சிக்காலப் பூசையின்போது பெண் வேடத்தில் அம்மையாகவே அமைந்து இறைவனைப் பூசிக்கும் மரபுள்ளது மேலும் பங்குனிமாதம் சித்திரை நாளில் சிறப்பாக நடைபெறும் 'பஞ்சப் பிராகார' உத்சவத்தில் இறைவன் பெண் வேடத்துடனும் இறைவி ஆண்வேடத்துடனும் உலாவரும் மரபும் உள்ளது. இத்தகைய சிறப்புடைய அம்மையை இந்நூலின் இறுதிப் பாடல்,

'அகிலாண்ட அம்மை வாழி' என வாழ்த்தும்.

இருவகைப் பூசை நெறிகள்

திருவானைக்கா என்ற இத்தலப் பெயர்க்கேற்ப யானையும் சிலந்தியும் இறைவனைப் பூசித்த செய்தியை யாவரும் அறிவர். இறை வணக்கம் தொடக்க கால மக்களிடை எவ்வாறு அமைந் திருந்தது என்பதை யானை இறைவனுக்குச் செய்த பூசையில் காண்கிறோம். பின்னர்ச் சிறுகோயிலாக இறைவன் தலங்களில் கட்டத் தொடங்கிப் பல மாடங்களாக வகுத்தமைத்த நிலையைச் சிலந்தி வலை பின்னிப் பின் கோச்செங்கணானாகப் பிறந்து இறைவற்கு ஆனைபுகா மாடம் கட்டிய செய்தியைக் காணும் போது, வழிபாட்டு முறைகள் தோன்றி அதற்கேற்பக் கோயில் அமைப்புகள் வளர்ந்த நிலையில் பூசை விதிகள் பெருகி அதற்கேற்பச் சடங்குகள் எழுந்த காலத்தைக் காண்கிறோம். இவ்வகை வழிபாட்டாளர்கள் ஒவ்வொரு பிரிவினரையும் மாறாகக் கருதித் தம் வழிபாட்டு நெறியிலே தொடர்ந்து சென்றதைத் திருத்தொண்டர் புராணத்தில் காணும் கண்ணப்பரின் அன்பு நெறிப்பட்ட பூசனையிலும், சிவகோசரி யாரின் ஆகம நெறிப்பட்ட பூசனையிலும் அமைந்த வேறு பாட்டால் அறிதல் கூடும்.[1] அத்தகைய இரு எண்ணங்களின் தோற்றங்களையும், வளர்ச்சி நிலையையும், அவை மாறுபட்டு எதிரிட்ட போக்கினையும் உணர்த்தும் வகையில் யானை சிலந்தி பூசித்த கதை விளங்குகின்றது.

---

1. திருத்தொண்டர்புராணம் II கண்ணப்பநாயனார் புராணம், சேக்கிழார்-C. K. சுப்பிரமணிய முதலியார் உரை, கோவை தமிழ்ச் சங்கம், கோயமபுத்தூர், 1968, பக். 944-1015.

இப்புராணத்தில் அம்மை இறைவனைப் பூசைசெய்த வரலாறு விரிவாக ஞானவுபதேசச் சருக்கத்தில் பலவகையாக வெளிப்படுகிறது. அதுபோன்ற அம்மை இறைவனைப் போற்றித் துதிக்கும் பாடல்களும் பண்டைய நாயன்மார் நெறியின் தொடர்ச்சியாக வளர்வதைக் காணலாம். இவ்வாறே இராமன் இறைவனைத் துதித்தல், யானை இறைவனை வணங்குதல் ஆகியவை இறைவணக்க நெறிக்கு உரமூட்டுவனவாக அமைந்துள்ளன.

முப்பொருளுண்மை, மும்மலங்கள், அவத்தைகள், முத்தி பற்றிய தீர்த்த மகிமை பற்றியும் ஏற்ற அளவு எடுத்துரைக்கும் இந்நூல். ஐம்பூதங்களில் நீர் வடிவமாயிலங்கும் இலிங்கமாகக் கொண்டு இதனை வணங்கி வரும் நெறி பல அடியவர்களாலும் இவ்வாசிரியராலும் போற்றப் படுகிறது.

தலப் பெருமை

மனிதன் பாவம் செய்கின்றான். அப்பாவங்களிலிருந்து விடுதலை பெறுவது எங்ஙனம் எனக் கருதும் மனிதனின் வாழ்க்கையில் பாவ நீக்கம் பற்றிய வழிகளை நாடச் செய்கிறது. பாவம், புண்ணியம் பற்றிய ஞானம் பெற வேண்டும். அந்த ஞானத்தை இறைவனே அருள வேண்டும். அத்தகைய ஞானத்தின் விளை நிலமாக அமைந்து 'ஞானபூமி' என்ற பெயரும் படைத்தது திருவானைக்கா எனக் கமலை ஞானப்பிரகாசர் எடுத்துரைப்பார்.

நாற்பொருள் சேருமிடமாக இத்தலம் விளங்குகிறது. புண்ணியத் தலங்கள் எனப் போற்றப்பெறுவன பல இருப்பினும் இதுவே தலையாய தலமாம். இதனை நெஞ்சால் நினைக்க எல்லாப் பாவமும் நீங்கும் என எண்ணத்தின் ஆற்றலை வற்புறுத்துவர் (87). இத்தலம் நோக்கி ஏழடி நடப்பின் எழு பிறப்பும் நீங்கும் என்பர் (90).

காமம் முதலிய அறுபகையில் வீழ்ந்தவரும் இப்பதி அடைந்து இறைவனருள் பெறின் அப்பாவங்கள் காலைக் கதிரோன் முன்னர்ப் பனிபோல் அழியும் என நன்னம்பிக்கை ஊட்டுகிறார். இத்தலத்தினை எண்ணினால் பெறும் நன்மையைக் கூறியவர் ஓரிரவு தங்கினாலே கணநாதராம் பேறு பெறும் நிலையை எடுத்துரைக்கிறார். இங்கிருந்து செய்யும் அறச்செயல்க

ளெல்லாம் இறைவர்க்குச் செய்யும் செயல்களாகும் என்று மேலும் உயர்த்தி உரைக்கிறார். சுருக்கமாக இங்குச் செய்யும் 'தொழிலனைத்தும் சிவபூசை' என்கிறார். செய்ந்நன்றி கொன்றார்க்கு உய்வில்லை என்ற பழங் கருத்தினை மறுப்பதுபோல் 'பிறர் செய்நன்றி மறந்திடு தீங்கும்...ஞானபூமி சிறந்திடும் அமிர்தலிங்கம் தெரிசிக்கத் தீரும், என உறுதி கூறும். அத்துடன் மஞ்சநீராட்டு, அருச்சனை புரிதல், திருப்பணி செய்தல் போன்றவை செய்யின் அவர் பெறும் பேற்றைக் கூறுதல் அரிதுஎன்கிறார் ஆசிரியர் (103). சிறு பணியும் பெரும் பயனளிக்கும் ஆற்றல் இத்தலத்திற் குண்டெனக்கூறி இங்குள்ள ஈனப் பிறவிகளும் ஞானிகளாகப் பிறப்பர் என வலியுறுத்துகிறார்.

காட்டிலுள்ள பெருமர நிழலினைப் பயன்படுத்தாமல் வெயிலுக் கொதுங்கச் சிறு செடி தேடுவோர் போல இத்தலம் விட்டு வேறு தலம் நாடுவோர் அறிவிலி என்று கூறும்போது (111) ஆனைக்கா என்ற சோலைக்கு ஏற்பக் காவின் பயனும் செடியின சிறுமையையும் கொண்டே தலப்பெருமையை எடுத்துக் கொண்ட பொருளுக்கேற்ப உணர்த்துகிறார்.

நகர் வளம்

காவிரிக்குத் தென்பால் திருவானைக்கா வுள்ளதாக இப் புராணம் குறிக்கும் (59). இந்நூல் தோன்றிய காலத்தில் கொள்ளிடம் என்று இன்று வழங்கப்பெறும் ஆறே காவிரி என வழங்கப் பெற்றிருக்கலாம் என அறிகிறோம்.

சங்க காலம் தொட்டு நிலத்தைப் பூமகளாகப் போற்றிவரும் உருவகம், இவ்வாசிரியர் பின்பற்றும் நெறியாகவும், இப்பதி நிலமகள் நெற்றியிலிட்ட திலகமாகவும் வளரும். மருத நில வளத்தைக் காணும் கவிஞர் கண்களில் நெய்தல் நிலப்பார்வை படரும். ஆனைக்காவின் வளம் என்பதற் கேற்பச் சோலையின் அழகையே பெரிதும் போற்றியுள்ளார். சோலையிலுள்ள தளிர், கொடி, தென்னை மரம், காந்தள் மலர், கமுகு மரம் போன்றவை மகளிரின் அழகைக் காட்டும் என்பார். இளைஞர் விளையாட்டில் ஈடுபடுவதும், பறவைகள் மகளிர் செயலுக்குத் தோற்பதும் மக்கள் பெருமையைக் கூறும்.

சோலைகளில் கிடக்கும் மணிகள் ஒளிவீசுவதால் என்றும் ஆனைக்காவில் பகலே விளங்கும். கனிச்சாறு ஒழுக நறுமணம்

கமழும் இந்நகர மகளிர் தெய்வமகளிர்போல விளங்குவர். அம்மையினடி வணங்கி மகளிர் ஆடல் பாடல் அழகு ஆகிய வற்றை வளர்ப்பர்.

நகரெங்கும் அன்னசாலைகள்! பூந்தடங்கள் மக்களின் ஆடு மிடங்கள் இவ்விவ்ய இடங்களின் நடுவே புராணம் விரித்துரைப் பார் சூழ்ந்திருப்பதைக் காட்டும்போது (79) தல புராண எழுச்சிக் குரிய சூழல் தோன்றியதைக் காண்கிறோம். இத்தகைய நகரி லுள்ள இறைவனை அடைவோர் செல்வத்திற் குறையார் எனப் பயன் கூறும்போது நகர்வளத்தின் அடிப்படை ஆனைக்கா அண்ணலின் அருள் என்றும் நம்பும் ஆசிரியர் மனம் நன்குபுலப்படு கின்றது (81).

தீவினை நீக்கம்

பாவம் செய்தவர் தத்தம் பாவங்களிலிருந்து தப்ப முனை கின்றனர். அன்பு நெறியினர் தமக்கு அரிய பொருள் கிடைப்பின் அதனை இறைவனுக்குப் படைக்க நினைக்கின்றனர். உண்மை எது எனத் தேடி அறிவை உணர்ந்து இடிபத்தைத் துய்க்க இறைவன் அருளை அடியவர்கள் விரும்புகின்றனர். இம் மூவகை நிலையில் அமையும் மூன்று கதைகளையும் முப்புரியாக இணைத்துச் 'சம்புமுனிச் சருக்கம்', 'ஞானவுபதேசச் சருக்கம்'• 'ஆதி பிரம உற்சவச் சருக்கம்' எனத் தந்துள்ளார் ஆசிரியர், முதலில் படைப்புக்கடவுளாம் பிரமன் அழகெல்லாம் திரட்டிப் படைத்த திலோத்தமையைப் புணர்ந்ததின் பாவத்தைப் போக்கத் திருவானைக்காவை அடைகின்றான். தந்தை மகளைப் புணர்ந்த பெரும் பாவம்போல் தாயைப் புணர்ந்த மகன் பாவத் தைத் திருவிளையாடற் புராணம் குறிக்கும். படைப்புக் கடவுளா யினும் தான் செய்த பாவத்தைத் துய்த்தே தீரவேண்டும். அதி லிருந்து மீட்சி பெற வேண்டுமெனின் ஞானபூமியை அடைந்து இறையருள் பெற வேண்டும் என்ற கருத்தை வெளியிடும் வகையில் இக்கதை எழுகிறது. எனினும் ஆசிரியர் இக்கதையின் நிகழ்ச்சியை விரிக்காமல் மிகச் சுருங்கிய அளவில் செம்புமுனிச் சருக்கத்தின் முதலிலே வைத்துப் பாவ நீக்கத்தில் பிரமன் எடுத்த திருவிழாவின் பகுதியை விரிவாகக் காட்டுகிறார். தலத்தின் பெருமையை மேலும் பெருக்கும் வகையில் திருவிழாச் செய்தி அமைக்கப்பெற்றுள்ளது. இன்றும் திருவிழாவிற்காகக் கூடும் மக்களின் மனத்திலே இறை நம்பிக்கையை வளர்க்க முடியும்

என்ற முயற்சியே வளர்ந்தோங்க வழி செய்கிறது. இத்தகைய எண்ணங்களின் வளர்ச்சியே உலா இலக்கியங்கள் பல்கிப் பெருக வழி செய்தது.

பிரமன் பட்ட பாட்டை ஒரே பாடலில் மனத்தில் தைக்கும் வகையில் ஆசிரியர் உரைக்கிறார்.

அந்தவல் வினையி னாலே ஆண்மையும் அறிவும் நீங்கித்
தந்திடும் படைப்ப னைத்துந் தலைதடு மாறி மிக்கச்
சிந்தையா குலமு மெய்திச் செல்வியுந் தளர்ந்து நின்றான்
முந்தவே முகுந்த னுந்தி முண்டகந் தனிலு தித்தோன்
(115)

இதில் பிரமன் தவம்செய்ய ஞானபூமி சென்ற செய்தியுடன் நிறுத்திப் பின் வேறு கதையை ஆசிரியர் தொடங்குகின்றார்.

நாவற்கனி

தவம் புரிகின்ற செம்புமுனி முன்னர் வெண்ணாவற்கனி வீழ அதனை இறைவனுக்களிக்கிறார். இச்செய்தி அதியமான் ஔவைக்கு அருங்கனி அளித்தது போன்ற கதைக்கருவைக் காண முடிகிறது. ஔவை—அதியன் கதைக்கு எதிர்நிலையில் மணிமேகலையில் காயசண்டிகை கதை உள்ளது. வித்தியாதரப் பெண்ணான காயசண்டிகை தன் கணவன் காஞ்சனனுடன் மலை வளங்காணப் பொதியிலை அடுத்தனர். அங்கு விருச்சிகன் என்னும் முனிவன் பட்டினி நோன்பு நோற்று வந்தான். ஒரு முறை உண்டால் பன்னிரண்டு ஆண்டளவு பசியை ஒழிக்கும் நாவற்கனியை உண்டு அவன் தவம் செய்ய இருந்தான். அத்தகைய கனியைக் காய சண்டிகை காலாற் சிதைத்து விருச்சிகன் சாபத்தால் பன்னிரண்டாண்டளவும் யானைத் தீ என்னும் பெரும் பசி நோயால் வருந்தினள்*. இக்கதையில் நாவற் கனியால் விளைந்த தீமையைக் காண முடிகிறது.

ஆயின் இப்புராணம் நாவல் கனியைச் செம்புமுனி இறைவற்குத தர அவன் உண்டுமிழ்ந்த விதை முனிவன் உண்ண அவர் உடலிலே முளைத்த மரமே ஆனைக்காவில் அண்ணல் அமரும் இடமாயிற்று என அறியும்போது நாவற்கனி புராணக்கதையில் பெறும் வளர்ச்சியை நன்கறிகிறோம்.

நாவற்கனி ஏந்தி முனிவன் கயிலை சென்றபோது கயிலை வளமை காணப் பெறுகிறது. இறைவன் முனிவனை ஞான

1. மணிமேகலை, உலக அறவி புக்க காதை, 21—48.

பூமிக்குச் செல்லுமாறு கூறியபின் நாவல் மரமுளைத்த உடலுடன் நடந்து செல்லும் முனிவனை உலக உயிரினங்கள் கண்டு வியப்பதை வியப்புச்சுவை வெளிப்படக் கூறுகிறார்.

"சென்றிடு முனியைக் கண்டு செய்திடும் படைப்பினுள்ளுந்
தொன்றுதொட் டுள்ள தாகுந் தோற்றநால் வகை யிடத்தும்
ஒன்றிடத்(து)ஒன்றுண் டாகாஉண்டாய இதுதான் என்கொல்
என்றுளத் (து) ததிச யத்தான்"

நான்முகன் முனிவன் வரலாறு அறிந்து இறைவனைக் காண்பது உறுதி என மறுபடியும் உணர்ந்து மகிழ்ந்தான். இருவரும் தவம் செய்யத் தொடங்கினர் என ஆசிரியர் ஐந்தாம் சருக்கத்தை முடிக்கிறார். பிரமன், செம்புமுனி ஆகிய இருவர் தவம் எப் பயனை எப்படி நல்கும் என்ற 'எதிர்பார்க்கும் உணர்'வை இச் சருக்கம் எழுப்புகிறது.

முக்கூடல்

தலப்பெருமை மட்டுமே காட்டிவந்த ஆசிரியர் தல இறைவன் பெருமையை உணர்த்த ஞான உபதேசச் சருக்கத்தை அமைத்துள்ளார். சென்ற சருக்கத்தில் காட்டிய கயிலைக் காட்சி மறுபடியும் தொடர்கிறது. அம்மை இறைவனைப் போற்றும் பாடலுடன் இருவர் உரையாடல் தொடங்குகிறது. தனக்கு ஞான உபதேசம் செய்ய உமை இறைவனை வேண்டுகிறாள். ஞானம் பற்றி உரையாடும்போது வளைந்த கண்ணாடி (160) போன்ற உவமை நலம் பெறுகிறது. ஞானம் கேட்க அம்மையும் ஆனைக் காவை அடையும் போது இறைவன் காட்சிக்கு மூவர் கூடும் 'முக் கூடல்' தவமியற்றும் தனிவினையாக அமைகிறது.

அம்மை பூசை

அம்மை கயிலையை விட்டுப் பிரியும்போதும் ஆனைக் காவின் சிறப்பைச் சிவன் வாயிலாக உணரலாம் (167). அம்மை இங்கு வந்ததால் கயிலை நினைவை மறவாமல் ஆசிரியர் காட்டு கிறார் (177). அம்மையின் தவமுயற்சியை மிக விரிவாகக் கூறிப் பின் பிரமன் கருத்துரைக்கேற்பப் பிரமபுட்கரணி நீரை இலிங்க மாக அமைத்தாள். நீர் வடிவாக இலிங்கம் அமைந்ததை ஆசிரியர் புராணக் கற்பனையின் அடிப்படையில்,

"அருமேனி தனிலோர் பாகம் அம்பிகை பயின்றாள் என்றே
திருமேனி முழுதுங் கங்கை சென்றுறக் கவர்தல் போலும்'(192)

எனப் புதிய காரணம் ஒன்றை எடுத்துரைக்கிறார். இறைவனுக்கு நிழலாகச் செம்பு முனியின் நாவல்மரம் அமைகிறது. இந் நிலையில் அம்மை புரியும் பூசனைகளை மிக விளக்கமாக ஆசிரியர் கூறுகிறார். திருஞான சம்பந்தர் அமணரை வெல்லும் வகையில் ஞானப்பால் தருதற்கு என அம்மை பல பொருள்களால் இறைவனுக்குத் திருமஞ்சன மாட்டுவதாகக் காரணம் காட்டு கிறார் (199). இவ்வாறு புராணக் கதைகளையும் அடியார் வரலாற்றையும் ஆங்காங்கே இணைத்துக் காட்டுவது இப்புராணம் பயில்வோருக்குச் சைவ அறிவூட்ட ஆசிரியர் முயலும் முயற்சி நன்கு புலப்படுகிறது.

சாத்திர விதிப்படி அம்மை பூசை செய்கிறாள் என்பதை ஆசிரியர் பல பாடல்களில் விரித்துக் கூறியுள்ளார். 'செழுங் கொழுங்கனிப் பேரமுதளித்தனள்' (202) என்று குறிப்பிட்டுள்ள மரபு இன்றும் அக்கோயிலில் நடைபெற்று வருகிறது. இப் பூசையின் அடிப்படை அன்பு என்பதை மறவாமல் சுட்டுகிறார். அஞ்செழுத்துச் செபித்தல், துதித்தல் போன்ற அம்மையின் பூசை வினைகளை எடுத்துரைக்கும்போது நாவற்கனி வாயிலாக வளருமிப் புராணத்தின் அடிப்படை உணர்வை வெளிப்படுத்தும் வகையில்,

> 'இனியே னுமெழுந் தருளென் னுயிராங்
> கனியே யெனநின் றுகனிந் தயர்வாள் (208)

எனக் காட்டி இறைவனையே 'உயிராங் கனியே!' என்று அம்மை அன்புடன் அழைக்கும் முறையைக் காட்டுகிறார்.

காட்சி அளித்த இறைவனுக்கு அம்மை பற்பல உபசாரங்கள் செய்கிறாள். பிரிந்திருந்த உமையை இறைவன் 'மெலிந்தனை நீ' என முதலில் கேட்கும் மொழி அன்பின் அடிப்படையில் எழும் உயிர்ச்சொல்லாக உள்ளது.

தலம், இறைவன் எனுமிரு நிலையிலிருந்து ஒன்பது குளம் எனும் தீர்த்தப் பெருமையையும் அம்மை வாயிலாக எடுத்துரைக் கிறார் ஆசிரியர். இவ்வகையில் தீர்த்தப் பெருமை சுருங்கிய அளவில் சுட்டப்பெற்றதைப் பின்னர் நவதீர்த்தச் சருக்கத்தில் விரிவாகக் கூறுகிறார்.

ஞான உபதேசம்

அம்மைக்கு இறைவன் ஞானவுபதேசம் செய்யும் பாங்கு சைவ சித்தாந்தத் தெளிவை நல்குகிறது. பதி உண்மை, தன்னிடமுள்ள சக்தியால் உலகனைத்தும் நடத்துவித்தும் விகாரமடையா நிலை, ஆன்மாக்களில் மூன்று வகை, மலம், மலபாகம், குரவன் அருள் பெற்றுப் பொருளையும் தன்னையும் காணல், இறுதியில் பேரின்பம் பெறல் ஆகியவற்றை எளிதில் உணருமாறு செல்கிறது. இத்தகைய அறிவுச் செல்வத்தை இத்தகைய புராணங்கள் பெரும்பாலும் இறைவன் கூற்றாகவே அமைப்பது வழக்கம். சிற்சில சமயங்களில் முனிவர்கள் தேவர்கள் வாயிலாகவும் அமைப்பர். ஞான நிலையை ஒட்டி அன்பு நிலையில் பணிபுரிந்த செம்பு முனிவற்கு இறைவன் அருள் புரிகிறான். செம்பு தீர்த்தம், செம்பு நாதன் என்ற பெயர் வழக்கம் நிகழ்தற்கு இங்கு வழி கிடைக்கிறது

பிரமன் விழா

அம்மைக்கு இறைவன் இரங்கிய வேளையே தனக்கும் ஏற்ற வேளையாக எண்ணிப் பிரமன் மனமுருகிப் போற்றிப் பிரம உற்சவம் நடத்துதற்கு வரம் கேட்கிறான். இவ்விழாவின் விளக்கமாகவே ஆதி பிரம உற்சவச் சருக்கம் அமைந்திருக்கிறது.

விழாத் தொடங்குவது எப்போது? நடத்துவது எத்தனை நாள்? விழாவின் முதலில் என்ன செய்வது? என்பன போன்ற கேள்விகளுக்குத் தக்க விடையாக இச்சருக்கம் அமைந்துள்ளது. முளைவிட அமைத்தது முதல் கொடியேற்றந் தொடங்கி விழாவைச் செம்மையாக நடத்தியதை விழாவிற்குரிய பெருமை விளங்க எடுத்துரைக்கிறார். தொடக்கமே இறைவன் புகழ் முளைக்கும் கருத்தைக் கொண்டதாக அமைகிறது (248). உள்ளூரில் மட்டும் விளங்கி நிற்கும் புகழ் பல இடங்களிலும் பரவி மக்கள் அத்தலத்தில் வந்து கூட வேண்டும் என்ற கொள்கை வெளிப்படும் வகையில் இச்சருக்கம் விரிந்துள்ளது.

விழாவின் குறிப்பிடத்தக்க முதற் செயல்களாக அன்ன தானமும் சொர்ண தானமும் அமைகின்றன. வாழ்க்கையின் அடிப்படையாக உணவும் பொருளும் அமைவன. அவற்றை உயிர்களுக்கு இறைவன் பேரால் நல்கத் திருவிழாக்களை அமைக்கின்றனர்.

விழாத் தொடங்கியதும் நகரினை அணி செய்யும் பாங்கினையே முதலில் கூறுகின்றார். தனித் தனி வீடுகளின் கோலத்தைக் கூறி நெடுந் தெருக்களைக் கடலாகக் காட்டுகிறார் (253). சோலைகளைக் கடலாகக் காட்டும் கற்பனையின் மறு வடிவையே (16) இங்கும் காண்கின்றோம். விழாக் காணவந்த மகளிர் பற்றிக் கூறும்போது எவ்வகையிலும் பாலுணர்வு வெளிப்படாமல், பக்திச் சுவை கெடாமல், நாகரிகப் பண்பு கெடாமல் கூறிச் செல்லும் பாங்கு கமலை ஞானப்பிரகாசரின் தனிச் சிறப்பாகும் என்பதில் ஐயமில்லை.

திருவிழாக்களில் பல வகையான தெய்வங்கள் எழுதிய கொடிகள் பறந்தன. அங்குப் பறந்த கொடிகளின் பல்வேறு உருவங்களுக்கேற்ப ஆசிரியரின் கற்பனை வளர்ந்து புதுப் பொருள் நல்குகிறது. அன்னக் கொடியைக் காணும்போது, முன்னர்ச் சிவபிரானின் முடியைக் காண முயன்று தோற்று மறுபடியும் அதனைக் காணும் பிரமனின் மறுமுயற்சியாக (263) எடுத்துக் காட்டுகிறார் ஆசிரியர். பிரம உற்சவத்தின் நோக்கிற்கு இது புது விளக்கம் நல்குகிறது.

திருவிழாவில் சூரியவட்டம், சந்திரவட்டம், வெண்குடைகள் சவரிகள், பீலிகள், பல வகைப் பந்தங்கள் சூழ்ந்து புறப்பட்ட காட்சிக்குத் தனித்தனி விளக்கம் தருவது தனிச்சிறப்பாகும். வேதம் ஓதல், இறைவனைத் துதித்தல், பண்பாடல், முழவிசை ஆகியவற்றுடன் நடனம் ஆடும் கலைமணத்தையும் இணைத்துக் காட்டும்போது விழாவின் சிறப்பு மேலும் பெருகுகிறது.

இறைவனின் திருவுலாவைச் சின்னம் வாயிலாகக் காட்டிக் கட்டியக்காரனின் வரவு கூறி விழாவில் திரண்ட மக்களை வகுத்துரைக்கும்போது எல்லா நிலை மக்களும் உயர்வு தாழ்வின்றி இவ்விழாவில் கலந்து கொண்ட பொதுநோக்குப் புலப்படுகிறது. பல்வகை வாகனங்களில் முருகன், விநாயகன், அம்மை, பெருமான் ஆகியோர் அமர்ந்து விளங்கிய காட்சியில் உருவக நயம் நன்கு விளங்கும். முத்தின் பந்தரைப் பற்றிக் கூறும்போது சிலந்தி தன் நூலால் இழைக்கும் பந்தர் போலும் (290) என இத் தலத்தோடு தொடர்புள்ள செய்தியையே நினைவூட்டுகிறார். அத்துடன் தேர்மீது பிரமன் ஏத்திய நிலை கண்டு திரிபுரம் எரித்த போது உலகமாம் தேரில் அவன் தேரோட்டியாய் அமைந்த நிலையோடு இணைக்கிறார், இவ்வாறு ஆசிரியர் தான் எடுத்த

பொருளையும் கூறிவரும் பொருளையும் மறவாமல் கற்பனைக் கருத்துக்களை இணைத்த வண்ணம் இப்புராணத்தைப் படைக்கிறார்.

உலா வரும் போது காண்போர் உள்ளத்தையும் எழும் கருத்தையும் சுவைபடக் கூறுகிறார்.

உருகுவார் தொழுவார் வீழ்வார் ஓடுவார் மீள்வார் இன்பம்
பெருகுவார் துதிப்பார் சூழ்வார் பேரழ(கு) அனைத்தும் கண்ணால்
பருகுவார் களிப்பார் என்ன பாக்கியம் செய்தோம் என்பார்
முருகுவார் மலரி றைப்பார் மொய்த்தனர் இருமருங்கும் (297)

என்ற பாடலே இதனை நன்கு காட்டும்.

இத்திருவிழாவில் ரோகிணி நாளன்று பிரமன் பரமனை அபிடேகம் செய்தான். ஆதலால் இப்பங்குனி விழாவில் பெறும் தீர்த்தத்தில் மூழ்கின் பிறவிக்கடல் மூழ்கார் (302) எனக் குறிக்கிறார். இவ்வாறு எப்போது பிரம உற்சவம் எங்ஙனம் நடைபெற்றது எனக் கூறுவதுடன் இவ்விழாவில் பங்கு பெறின் அடையும் பயனையும் எளிதில் எடுத்துரைக்கிறார்.

நிலவளம்

காட்டிலுள்ள கொடிகளையும் கொன்றை மரங்களையும் திரிகின்ற வேங்கைகளையும் ஊர்கின்ற பாம்புகளையும் கண்டவுடன் கமலையார்க்குச் சிவன் நினைவே வருகின்றது (12). வனத்தில் பூத்த மலர்களையும், பூக்களிலிருந்து ஒழுகுகின்ற தேனினையும் இணைத்துப் பார்க்கும்போது வனத்திலுள்ள மரங்கள் தவஞ் செய்வது போலத் தோன்றும் (13). காய்ந்து உதிர்ந்து கிடக்கும் மலர்கள் அன்று சிவன் மேல் மன்மதன் எய்து பயனற்று, வீழ்ந்த மலரம்புகள் போலக் காட்சி அளிக்கும் (18).

விழவறா வீதி நாட்டினிடத்தோ இயற்கை, வேறு வகையில் தன் அழகை வெளிப்படுத்துகிறது. வேரில் பழுத்த பலாவிலிருந்து செழுந்தேன் பாய்கிறது. காவிரி வெள்ளத்தால் வளம் பெற்றுக் கரும்பு வளர்ந்து முதிர்கிறது. வயல்களில் முழவுகள் அதிர்ந்து கொடைவளம் குறிக்கும் ஆறுகளின் இடங்கள் தோறும் பறவைகள் வாழ்கின்றன. குளங்களில் அன்னங்கள் தங்குகின்றன. அக்குளங்களில் நீலோற்பல மலர்கள் மலரும். வாவிகள் வற்றாத வகையில் புதுமழைத் துளிகள் பெய்த வண்ணம் உள்ளது.

மேலும், கமுகஞ் சோலையைக் காணும்போது அதன் காட்சி பல மணிகள் நிறைந்த கடல்போலத் தோன்றும். சோலையி லுள்ள மாந்தளிரும், கொடிகளும், இளநீரும், காந்தளும், கமுகும் ஒரு காரிகைபோலத் தோற்றமளிக்கும். மலர்கள் பூத்து நிற்பது மகளிர் தம் புன்னகைபோல் விளங்கும். பெண்கள் அசோகமரம் மலரை வேண்டிக் காலால் உதைக்கின்றனர். மா, பலா, வாழை, மாதுளைபோன்ற பலகனிகளிலிருந்து தேனாறு ஒழுகும். வில்வம், ஆல், அரசு போன்றவை சில சடங்குகட்குப் பயன்படுமாறு புராண முடிவில் காண்கிறோம் மா, வில்வம், இலுப்பை, புன்னை, பலா போன்ற மரங்கள் தீர்த்தக்கரை மரங்களாகத் திகழ்கின்றன

மலை வளம்

மலைவளம் இப்புராணத்தில் மிக அருகியே காணப்பெறுகிறது. வேனிற் காலத்தில் மலையில் பருவத் தென்றல் சந்தனக் காடு களில் உலவி மலையருவியில் குளித்துக் குளிர்ச்சியைப் பெறுவ தாக ஆசிரியர் கற்பனை செய்கிறார். நூலின் தலைவனுக்கேற்ப இம்மலை கைலையாக விளக்கப் பெறும். இறைவனைத் தலையால் தேவர் வணங்க அவர் தம் மணிமுடியிலிருந்து உதிர்ந்த பொற் பொடி அம்மலைக்குரிய செம்பொன் மலை என்ற பெயர்க்கு மேலும் சிறப்புச் செய்யும். மலையில் இறைவன் ஆலயம், மகர வாயில் தோரணம், மண்டபம் ஆகியவை இடம் பெறுவதால் மலை வளத்தில் இறை நலமே இணைகிறது.

பொதியமலை பற்றிக் குறிப்பிடும்போது 'ஏரணி பொதிய வெற்பு' (381) என்றும் குளிப் பூஞ்சோலைப் பூவை சேர்மலைய வெற்பு (395) என்றும் ஆசிரியர் குறிப்பிடுவது தவிர வேறு சிறப் பாக இம் மலையின் புகழ் காணப் பெறவில்லை.

சம்புவனத்தின் வடக்கே உள்ள ஒரு வெண்குன்று பற்றிய குறிப்புளது (519). வெள்ளானை ஆனைக்காவில் பூசை முடித்துச் சென்று தங்குமிடமாக இது விளங்குகிறது (528). வேறு மலைகள் பற்றிய குறிப்பிடத்தக்க செய்திகள் இல்லை.

தீர்த்தம்

ஒரூரின் கண்ணுள்ள நீரின் பெருமையைத் தீர்த்தம் எனப் போற்றி மகிழ்ந்தனர் அக்கால மக்கள். கங்கை மிகச் சிறந்தது

என்று பரதகண்ட மெங்குமுள்ள மக்கள் அதில் சென்று ஆட விரும்பினர். அக்கருத்தின் ஒளியென ஒவ்வொரு பகுதி மக்களும் தத்தம் நிலத்தில் பாயும் ஆற்றையும், தேங்கிய குளத்தையும் தோண்டிய கிணற்றையும் கங்கை போன்று புனிதமாகக் கருதினர். ஆர்வம் மிகுதி பற்றிக் கங்கையிலும் புனிதமானது எனப் போற்றினர்.

ஒரு சில பகுதிகளில் ஒன்றுக்கு மேற்பட்ட தீர்த்தங்களையும் போற்றினர். இராமேசுவரத்திலுள்ள தீர்த்த எண்ணிக்கை மிகப் பல. அவை யெல்லாம் பிற்காலத்தில் எழுந்த வளர்ச்சி நிலை. திருவானைக்காவில் ஒன்பது தீர்த்தங்களின் சிறப்புப் பேசப் பெறுகிறது. நவதீர்த்தச் சருக்கம் இதன் தனிச்சிறப்பை எடுத் துரைக்கவே எழுதப் பட்டது.

பிரம தீர்த்தத்தின் பெருமை முதலில் பேசப் பெறுகிறது (398-402). பிரமன் கொண்ட பொருந்தாக் காமத்தாலுண்டான துன்பத்தையே போக்கியது. சோலைகள் சூழ்ந்துள்ள அழகு படைத்தது. செந்தமிழ்ச் செய்யுள்போல இனிமையும் சிவனடியார் உள்ளம்போல் தெளிவுமுடைய நீருடையது. இதிலாடின் கல்வி, ஞானம், தவம், உரிமையில்லாப் புணர்ச்சியால் வரும் தீங்கு ஒழிதல் போன்ற நலம் பெறுவர்.

சூரியன் மயனால் அடைந்த குறையைத் தீர்ந்து முன்னிலும் ஒளி பெற்ற தீர்த்தம் சூரிய தீர்த்தம்; பிணிபோக்கி ஒளியூட்டும். இராமன் கும்பகன்னனைக் கொன்ற பெரும்பாவம் நீக்கி அறிவு தந்துய்ப்பது இராமதீர்த்தம். உரோகிணிபால் காட்டிய தனி அன்பால் சந்திரன் சாபம் பெற்றுத் தேய்நிலை உற்றபோது திருவானைக்காவில் உள்ள ஒரு தீர்த்தத்தில் மூழ்கி உய்ந்தான். அச்சந்திர தீர்த்தத்தில் மூழ்குவோர் பிணி நீங்கி நினைத்த பயன் பெறுவர் (411). புட்பவந்தன் யானையாகி இத்தீர்த்தத்தில் மூழ்கி இறைவனை வழிபட்டான் (520). செம்பு தீர்த்தம் என்பது செம்பு முனியால் பெயர் பெற்றது. இதனைக் கண்ணில் கண்டாலும் தலையில் தெளித்துக் கொண்டாலும் வினைகள் நீங்கும். இது 'மெய்ப்புனல்' என்று போற்றுவர் (416).

அகத்தியர் இவ்வுலகைச் சமதலமாக்க வலிமைபெற ஆடிய தீர்த்தம் மக்கட்கு அறிவும் நீண்ட வாழ்வும் அளிக்கும் எனப்

போற்றினர் (418). இராமன் கும்பனைக் கொன்ற தீவினை அகலத் தீர்த்தமாடியதுபோல இந்திரனும் விருத்திரனைக் கொன்ற பாவத்திலிருந்து விடுதலை பெற்றான். அத்தீர்த்தம் இந்திரதீர்த்தமாகும். அத்தீர்த்தமாடியவரின் தீவினை நீங்கி இமையவர் பதம் எய்துவர் (420). பிரமன் போன்று காமத்தால் தீவினை புரிந்த அக்கினி தன் குறை தீர்ந்த தீர்த்தம் அக்கினி தீர்த்தம். அது மக்களின் செய்யத்தகா வினை செய்யின் அக் குறை தீர்ந்து ஒளி பெறச் செய்யும் (424). சீர் மெய்த் திருத்தம் எல்லாத் தீர்த்தமும் ஒரு வடிவான தென்பர்.

தீர்த்தங்கள் தீவினை நீக்கவும் நீண்ட வாழ்வைத் தரவும் கல்வி, ஞானம், பேரின்பம் ஆகியவை அளிக்கும் எனவும் நம்பினர். வானுறு தெய்வங்களும் முனிவர்களும் வந்து மூழ்கிப் பெற்ற நற்பயன்களை மண்ணில் வாழும் மனிதர்களும் பெற இயலும் என எண்ணினர்.

இத்தகைய தீர்த்தங்களின் மூழ்கும் முறையை விரிவாக இந் நூல் கூறும் (427-443). இதன் விரிவும் அமைந்த நிலையும் இச் சருக்கம் நன்குகூறும். அத்தீர்த்தத்திற்குரிய மரம், முனி, தெய்வம், நீராடிச் செய்யும் தானம் ஆகியவற்றைக் காணும் போது நவ தீர்த்தம் மக்கள் பால் எத்தகைய நம்பிக்கை ஊட்டியிருந்தது என்பதை நன்கு காட்டும்.

காவிரி

தமிழ்நாட்டின் புண்ணிய நதியாகப் போற்றப் பெறுவது காவிரி ஆறாகும். இதனைப் பொன்னி என்றும் போற்றுகின்றனர். இத்தகைய காவிரி சூழ்ந்த ஞானபூமியாகத் திருவானைக்காவைக் கமலையார் போற்றுகின்றார். முத்தும் மணியும் கொழிக்கின்ற ஆறு. இது ஆனைக்காவிற்கு வடபால் செல்கிறது. இதனைத் தீர்த்தம் எனப் பெருமக்கள் போற்றுகின்றனர் (42). இது கங்கை போன்றது (178). மேலும் நினைப்பின் ஆகாச கங்கை போலப் பொற்புற விளங்குகிறது (58). இதில் வந்து குளித்து வணங்குவோர் தம் குறையும் பிறப்பும் மாறும் (100) எனக் கூறும்போது இதன் மேன்மையும் ஆற்றலும் நன்கு புலப்படும். திருவானைக்காவில் பல தீர்த்தங்களிருப்பினும் அவற்றில் பெருகும் குளிர்ந்த நீர் காவிரியின் நீர் என்ற நம்பிக்கையும் நிலவியது. அகத்தியர் போன்ற பெரு முனிவர்கள் இதிலாடி வரம் பெற்றனர் எனில் மற்றவர் செயல் பற்றிக் குறித்தல் வேண்டா.

நவதீர்த்தங்கள் பற்றி விரிவாகக் கூறிய ஆசிரியர் தாம் எடுத்துக்கொண்ட பொருளாம் தீர்த்தப்பெருமைக்கு ஏற்ப அச் சருக்கத்தை ஒட்டியே ஆரம் பூண்ட சருக்கத்தை அமைத்து அதில் காவிரியின் பெருமையை உரைத்துள்ளார். இவ்வமைப்பு முறை எண்ணி மகிழ்தற்குரியது. பொன்னியைத் 'திருந்து நீர்' (474) என்று போற்றுதல் இவ்வாசிரியர் உளத்தை நன்கு புலப் படுத்தும்.

காவிரியில் புது நீராடல் என்பது அக்காலம் முதல் இக்காலம் வரை நிகழ்ந்து வரும் மகிழ்ச்சிக்குரிய விழாவாகும். பரிபாடலில் வையையின் புதுவரவும் மக்களின் மன மகிழ்ச்சியும் இன்ப விளை யாட்டும் இங்கு எண்ணுதற்குரியன. காவிரி நீராடும்பயன் மாசு தவிர்தல் என்பதுடன் அதனைக் கண் குளிரக் கண்டவுடன் காமம் முதல வல்வினைகள் பலவும் நீங்குவதை எடுத்துரைக் கிறார் ஆசிரியர். காவிரியாம் தீர்த்தத்தைத் தென்னகத்திலுள்ள எல்லாத் தீர்த்தங்களும் வணங்கும் பெருமையைக் கூறும் போது அதன் நிலை தன்னிகரற்றுப் புலப்படுகிறது.

காவிரியில் அந்தணர்களும் மற்ற உயிரினங்களும் ஆடுவதைக் கூறி முத்துடைச் சிப்பிகள் நெருங்கி இருக்கும் வனத்தை எடுத் துரைக்கிறார் ஆசிரியர் ஆடுதல் அன்றித் தலையில் தெளித்துக் கொண்டாலே சோழ நாட்டில் நன்னெறி தழைத்தற்கு வழி ஏற்படு கிறது எனின் (451) பொன்னியின் ஆற்றலை எவ்வாறு கூற இயலும்? அணி நயம் செழிக்கும் பாடல்களில் காவிரி வளத்தை ஆசிரியர் எடுத்துரைக்கிறார் (451-457). அன்னம் போன்ற பறவைகள், குரங்குகள் மேதிகள் போன்ற விலங்குகள் காவிரியின் கரைகளில் தங்கிய நிலையை விரித்துரைக்கிறார். காவிரி, இயல் பாகவே அந்தணரின் அன்றாட ஒழுக்க நெறிகள் தவறாமலிருக்க நீரையும் பல்வகைப் பூக்களையும் அளிக்கும் செயலைப் போற்று கிறார்.

காவிரியின் தோற்றம் கவிஞர்க்கு அரசு வீற்றிருக்கும் திருவோலக்கம் போன்றும் (458), நல்லழகு படைத்த நங்கை போன்றும் (459) காட்டிக் கல்வியும் ஒழுக்கமும் காவிரியால் விளையும் விளைச்சலைப் போற்றுகிறார் கமலையார். பராசரன் போன்றவர் யாகம் செய்யுமுன் இதிலாடிய நிலையைக் குறிப்பர் (49-).

பாரதத்திலுள்ள புண்ணிய ஆறுகள் பல. அவற்றில் சிறந்த வையாகப் போற்றப்படுவன வடக்கே ஓடும் யமுனையும்

கங்கையும் ஆகும். வினைகள் நீங்க யமுனையில் ஏழு நாள் மூழ்கவும் கங்கையில் மூன்று நாள் முழுகவும் வேண்டும் எனில் காவிரியை அடைந்த அக்கணமே அவ்வினைகள் நீங்கும் என்பர். அதில் எவ்வகை ஐயத்திற்கும் இடமில்லை எனக் குறிக்கும் வகையில் 'வல்வினை எல்லாம் தொலைத்தல் திண்ணமே' (463) என உறுதியாக உரைப்பர்.

இத்தகைய சிறப்புடைய காவிரியின் கரையிலமைந்த புண்ணிய ஊர்களைக் கொடுமுடி முதல் சிதம்பரம் வரை கூறிக் கங்கை முதலிய ஆறுகளும் தத்தம் பாவங்களைப் போக்க இதில் வந்தாடும் பெற்றிமையைக் கூறுவர் கமலையார் (467). இவ்வாறு காவிரி வளம் விளங்கும். மேலும் காவிரி தன்னிடம் வந்தாடியவர் தீவினையை நீக்கியது போன்றே இறைவனுக்குரிய பொருள் தன்னிடம் வந்து சேரின் அதனை இறைவனிடமே சேர்க்கும் திறனும் கொண்டிருத்தலை ஆரம் பூண்ட சருக்கம் வாயிலாக எடுத்தியம்புகிறார் ஆசிரியர். இதுவே காவிரியின் தனிச் சிறப்பை உலகுக் குணர்த்துவதாக அமைகிறது.

விலங்குகள்

சின்னஞ் சிறு எலி முதல் மிகப்பெரிய விலங்காகிய யானை வரை பல்வகைப்பட்ட விலங்குகளைத் தந்திவனப் புராணம் எடுத்தியம்புகிறது. சிலந்திக்கு அரசு அளிக்கும் செய்தி பற்றிக் கூறும் போது வேதாரணியத்தில் விளக்கின் சுடரைத் தூண்டிவிட்ட எலியின் செயலுக்காக அதனையும் முடிசூட்டிய அருள் நிகழ்ச்சியைக் காட்டுகிறார் (568).

சோலைகளில் மந்திக் குரங்குகள் மரங்களை நாடிச் செல்வதையும் (453) செங்கனியெனக் கருதிச் செங்கதிரோனைப் பறிக்கக் குரங்குகள் (72) அறியாமையால் முயல்வதையும் உரைக்கிறார்.

கழுதை, பன்றி, நாய் போன்றவை இழிந்த விலங்குகளாக இவ்வாசிரியர் காலத்தில் கருதியதை நாம் உணர முடிகிறது. எனினும் இத்தகைய இழிந்த விலங்காயினும் திருவானைக்காவில் வந்து பிறப்பது பெரிதும் நன்று (110) எனப் போற்றுகிறார்.

தொடக்கத்தில் சிங்கம் யானை ஆகிய விலங்குகள் பகையற்று உறவு கொண்டதைக் (17) காட்டும் ஆசிரியர் சிலந்தி முடின சருக்கத்தில் சின்னஞ்சிறு சிலந்தியுடன் பெரிய யானை பகை கொண்டு மாயும் 'அன்பு முர'ணைக் காட்டுகிறார்.

பண்டை அகப் பாடல்களில் மான் தனக்கு நீரூட்ட நினைக்கும் அன்புக்காட்சியை நினைவூட்டும் நிலையில் 'புனல் பற்றுமோ' எனப் பெருகும் அன்புடன் அயல் பெயர்ந்து செல்லும் (15) காட்சியை ஆசிரியர் தீட்டுகிறார்.

இவ்வாறு விலங்குகள் என்பன இப்புராணத்தில் அன்பு நெறியில் நடக்கும் உயர்ந்த நிலையில் விளங்கும் உயிரினங்களாக உலவுகின்றன. இவற்றின் உள்ளத்திலும் இறைக்குப் பூசை செய்ய வேண்டுமென்று யானை வாயிலாகவும், இறைவன் திருவுருவத்தின் மீது சருகு முதலானவை வீழாது காக்கும் சிறப்பே இப்புராணத்திற்குரிய அடிப்படை அன்பு நெறி என உணர்த்தும். மனித நிலையிலிருந்து விலங்குயிர்களும் இறை நெறியில் இணைந்து உய்தல் கூடும் என்ற கருத்தோட்டம் பரவிய கால வளர்ச்சியை இது காட்டும்.

பறவைகள்

பறவைகளின் தலைவனாகக் கருதப்பெறும் கருடனைப் பற்றிப் பாடும் இப்புராண ஆசிரியர் அது பாம்புடன் கொண்ட பகை நீங்கி உறவு கொண்ட பாங்கினைக் (17) கூறுகிறார். மக்களால் இழிந்த பறவையாக அக்காலத்தில் கருதப்பெற்ற காகமும் இத்தலத்தில் பிறப்பின் பெரிது நன்று என அது போற்றப் பெற்றது (110). அங்கு அது கவ்விச் சென்ற அன்னம் நூறு அந்தணர்க்கு அறுசுவையோடு அளித்த அன்னம் போன்று நற் பயனை அளிக்கும் (106) என்ற நம்பிக்கையை நல்கியது.

கிளிகள் சொன்னதைச் சொல்லும் என்ற நிலையிலிருந்து இப்புராணத்தில் உயர் நிலைக்குக் கொண்டு சென்று தபோ வனத்தில் சிறுவர் ஓதும் வேத நூல்களில் பிழை இருப்பின் அவற் றைத் திருத்தும் ஆசிரிய நிலையில் அமர்த்தப் பெறுகிறது (16). செஞ்சொல் ஒப்புமை காண மகளிர் கிளியுடன் உரைபயில் கின்றனர் (67). அப்பணியில் அக்கிளிகளுடன் இணைந்து துணை புரியும் பூவைகள் காவிய ராகம் பாடிக் களிக்கும் (52).

மயில்கள் முனிவர் வாழ்க்கையில் தொண்டு செய்ய விரும்பி அவர்கள் நடந்து செல்லும் பாதையில் முள் குத்தாமலிருக்கத் தம் பீலிகளைப் பரப்பியதையும் (19) மகளிர் நடைபயிலச் சென்ற தையும் (66) காட்டுகிறார். முருகன் வாகனமாகிய மயிலும் சுரமகளிர் தம் குழற் கூட்டும் அகிற் புகையை முகிலெனக் கருதி

ஆடும் (130) எனக் கூறும்போது மயிலின் இயல்பான செயல் நிலையை அகிர்புகை யூட்டும் ஆக்கப் பின்னணிக்குக் கொண்டு செல்கிறார் ஆசிரியர்.

இத்தகைய பறவைகளை உயர்நிலையிலேயே மனிதக் கூறுகள் விளங்கக் கண்ட ஆசிரியர் செம்புமுனி உடலில் நாவல் மரம் முளைத்து அவர் தென் திசை நோக்கி வந்தபோது பறவைகள் அதைக் கண்டு ஐயுற்று வியப்பெய்திய நிலையைக் கூறுகிறார்.

பழம் தரும் மரம் எனில் அவ்வடிவில் கை கால் இரா. மனிதர் எனில் அவ்வுடம்பில் கிளை, மலர், கனி இரா. இத்தகைய புதுமை வடிவில் என்ன மாயை உள்ளது. மருண்ட பறவைகள் நாளும் அம் முனிவனை அணுகாமலும் அகலாமலும் இருந்த நிலையைக் கூறுவது (143) வியப்பிற்குரிய செய்தியாகும். இதற்கு மாறாக இவ்வுலக இயற்கைச் சூழலில் இரைநாடி இனத்துடன் கூடி இரைச்சலிட்டுக் காவிரியின் இரு கரையிலும் இசைந்திருப்பதைக் காட்டுகிறார் (454). இது உண்மை உலகின் உயிர்த் துடிப்பு. பொதுவாக இப்புராணத்தில் பறவைகள் மிகக் குறைவாகவே காணப் பெறுகின்றன. அவற்றின் இயல்பு நிலையை விட மனித உயர்நிலைக்கு உயர்த்தப்பட்ட போக்கே வெளிப்படுகிறது. பகையற்று அன்புற்று உலக இயற்கை யல்லாததை வியந்து அதனை அகலாது அணுகாது உண்மை காணும் அறிவு நிலையில் விளங்குவதை இப்புராணம் உணர்த்துகிறது.

தெய்வங்கள்

சிவன் முழுமுதற் பொருளாகவும் அம்மை அவனை அடுத்த நிலையிலும் இப்புராணத்தில் வணங்கப் பெறும். தேவர்கள் முதலிய விண்ணுலகத்தோர் இப்புராணத்தில் ஆங்காங்கே தல புராண அழகுக்கும் அளவுக்கும் ஏற்ப ஆசிரியர் படைத்துள்ளார்.

விநாயகன் · முருகன்

சிவபெருமானின் மக்களாகிய பிள்ளையாரும் முருகனும் பற்றிய வணக்கம் நூலின்தொடக்கத்திலேயே உள்ளது. அதனைக் 'கணபதியைத் தொழுதல் செய்வாம்' (1) எனவும் ஆறுமுகக் கடவுளை யாம் அன்புகூர்வாம் (4) எனவும் காணலாம். உமை

இவர்கள் இருவரையும் பயந்ததையும் அறியலாம் (132). பிரம உற்சவத்தில் ஐங்கரனாம் விநாயகனும் முருகவேளும் முன்புறும் செய்தியை இப்புராணம் கூறும் (271). பொற்குடையின்கீழ்ப் பெருச்சாளி மீதில் முன்னவனும் (282). கோலமார் மயிலின் மீதில் குமரவேளாம் பின்னவனும் (283) அமைந்த காட்சியைக் குறிஞ்சியும் நெய்தலும் மணக்க ஆசிரியர் போற்றுகிறார்.

நந்தி

கயிலை மலையில் அயன் மால் மற்றுமுள்ள தேவர் ஆகியோர் இறைவன் அடியினைப் போற்ற நெருங்கி வரும்போது அத் திரளைப் பிரம்பினால் தடுத்து நிறுத்தும் நந்தியின் பெருமை போற்றப் பெறும் (135). இறைவன் ஏறுதற்கு வாகனமாகவும் நந்தி பயன்படுவதைப் பல இடங்களில் காணலாம். மரகத மணியின் சுதிரைப் பசும்புல்லென மயங்கிக் கவ்வ நினைப்ப தாகக் கவிஞர் அணிபெற (124) நந்தி பெருமையைச் சுட்டுகிறார். மாணிக்கமலை வெள்ளிமலை மீது தோன்றுதல்போலத் திருவிழாவில் நந்தியாம் விடையின் மீது ஐயன் பவனி வருவதை இப்புராணம் சிறப்பாகக் கூறுகிறது.

இருவர் பெருமை

இறைவனைக் கயிலையில் துதித்தற்குச் சிவகணங்கள் பலர் இருந்தனர். அவர்களில் இருவராம் புட்பயந்தன், மாலியவான். மலர் பறிக்க வனம் சென்று ஒருவர் மலரை மற்றவர் கவர அதனால் சாபம் கொடுத்து ஞானபூமியாம் திருவானைக்காவில் யானையாகவும் சிலந்தியாகவும் பிறந்து பூசை செய்து உய்ந்த கதை தனிச்சிறப்புடையது.

பெரிய புராணத்திலும் ஆலாலசுந்தரர் மலர் வனத்தில் இரு மகளிரைக் கண்டு மனம்மாறிய செயலால் உலகில் பிறக்க வேண்டி நேர்ந்ததைக் கூறுவார் சேக்கிழார். இங்ஙனம் கயிலையில் கதையின் தொடக்கத்தை நிகழ்ந்ததாகக் கூறுவது புராணமரபு என்பதை இங்கும் காண முடிகிறது.

யானையின் செயலால் இவ்வூருக்கே ஆனைக்கா என ஆனதையும் அதனை வடமொழித்தொடரில் 'தந்திவனம்' என அமைத்து இப்புராணத்தின் பெயராக அமைத்ததற்கும் இக்கணநாதர்களே காரணமாகின்றனர்.

திருமால்

கயிலை சென்று சிவனை வணங்கும் தெய்வங்களுள் திருமால் ஒருவராக இப்புராணம் கூறுகிறது. திருமால் நிலமகளைத் தன் கொம்பில் ஏந்திய செய்தியை உரைக்கிறார் (127). கரியமால் பற்றிய செய்தியே ஒரு சருக்கமாக இப்புராணத்தில் காணப் பெறுகிறது. கும்பகன்னனைக் கொன்ற தீவினை தீர அங்கதனை அனுப்பிச் சாளக்கிராம நெடுங்கிரியிலிருந்து கொண்டுவந்த இலிங்கத்தை இராமனாம் கரியமால் பூசை செய்து உய்கிறார்.

மேலும் வீடணன் கனவில் தோன்றித் திருவானைக்காவின் சிறப்பை விரிவாகக் கூறிப் பின் நவதீர்த்த நலமும் கூறி,

தங்குதறகுஇத் தலம்போல் தலமும் ஒன்றிலைத் தெய்வம்
பொங்குஅருள் செம்புநாதன் போலவும் இல்லை என்போல்
அங்குஅவன் தனக்கும்இல்லை அன்பனும் ஆத லாலே
இங்குஅவன் தன்னைப் போற்றற்கு இருந்தனன் யானும்

என இத்தல இறைவனுக்குத் தன்னன்புத்திறம் காட்டுகிறார். இதனால் வீடணனையும் செம்புநாதர் பெருமையைத் திருமால் உணருமாறு செய்கிறார். இவர் சிவன் பால் பெற்ற அருளை நிலை நாட்டும் வண்ணம் இராம தீர்த்தம் உரிய பெயர் பெற்றுள்ளதைக் கூறும், இப்புராணம். நாடறிந்த கதையான இராமாயணத் தலைவன் பெற்ற வெற்றியிலும் தீவினை உண்டு. அதனைப் போக்கும் திறம் இத்தலத்திற்குள்ளது என்பதை ஆசிரியர் புலப் படுத்துகிறார்.

பிரமன்

படைப்புக் கடவுளாம் பிரமன் தம் திறம் வெளிப்பட அழகெலாம் ஒருருவம் அமையத் திலோத்தமை என்பாளைப் படைத்து அவள் மீது காமுற்ற தீவினையை இத்தலத்தில் தவம் புரிந்து தீர்த்துக்கொள்கிறார். செய்புமுனி, உமை ஆகியவர் தவம் புரிய வந்தபோது அவர்களை வரவேற்கிறார். உமை தவம் புரியவும் அமுதலிங்கம் படைக்கவும் தம் கருத்தைக் கூறுகிறார். பிரம தீர்த்தம் பெயர் விளங்கவும் பிரம உற்சவம் நடைபெறவும் இறவனருள் பெறுகிறார். இங்ஙனம் படைப்புக்கடவுள் சிவனருளை நாடித் தீவினை நீங்கி உய்வதை இப்புராணம் கூறும்.

இந்திரன்

தேவர்க்கு அரசனாம் இந்திரன், விருத்திரன் என்ற வீரனைக் கொன்ற வீரகத்தி போகத் திருவானைக்காவில் தவம் செய்கிறான். சுரபதி என இவன் போற்றப் பெறுகிறான். தன் சேனை விருத்திரன் சேனையோடு போரிட இயலாதபோது தனது வலிமைவாய்ந்த ஆயுதமாம் வச்சிரத்தை ஏவிக் கொன்றான் எங்கு செலினும் அவ்வீரகத்தி இந்திரனை விடவில்லை. நூறு யாகம் செய்த (356) அமரர் தலைவன் தன் குருவின் மொழிப்படி திருவானைக்கா வந்து வணங்கினான். வீரகத்தி நீங்கிடவும் தானாடிய தடம் இந்திர தீர்த்தமாகவும் இறைவனிடம் வேண்டினான். இந்திரன் ஆயிரம் கண்ணுடையவன் (368) வெள்ளானைக் கடவுள் (364) புரந்தரன் என இப்புராணத்தில் குறிக்கப் பெறுகிறான். தேவர் தலைவனாயினும் இத்தல இறைவனை வணங்கிய பின்னரே இன்னல் தீர்கிறான்.

சூரியன்

தேவதச்சனாம் மயன் புதல்வியர் உடம்பில் சூரியனின் கதிர்கள் பட்டுத் துன்புறுத்தின. அது கண்டு பொறாத மயன் சூரியன் கதிர்களைத் தன் சாணை கொண்டு கடைந்தான். கதிர் மழுங்கிய சூரியன் திருவானைக்கா வந்து வணங்கித் தன் கிரணங்களில் சுடர் பெற்றான். தன் குளம் என ஒன்றை உண்டாக்கினான். இவனுக்கு ஏழு குதிரை பூட்டிய தேர் இருந்தது 404) என்பர்.

சந்திரன்

சந்திரன் காசிபன் சாபத்தால் ஒளி மழுங்கினான். இவன் தன் 27 மனைவியருள் உரோகிணிபால் மிகுந்த அன்பு பூண்டதால் வாடிய மங்கையர் சாபத்தால் மெலிந்தான். இதனால் செம்புநாதனிடம் வந்து வணங்கித் தவம் செய்ததால் குறை தவிர்ந்தான்.

அக்கினி

வருணனின் மனைவியை அக்கினி நயந்தான் அதனால் வருணன் சாபமிட அக்கினி ஒளி குறைந்தான். அக்குறை தவிர ஆனைக்கா வந்து தவம் புரிந்து சுடர் பெற்றான். அவன் ஆடிய தீர்த்தம் அக்கினி தீர்த்தமாகும்.

முனிவர்கள்

தேவர்களின் குருவாக வியாழ பகவான் இந்திரனுக்குத் துன்பம் வரும்போது நல்வழி காட்டுகிறார் (355). கயிலையில்

நாரதர் வீணையேந்தி இறைவன் புகழைப் பாடலாகப் பாடு கிறார் (135).

நிருதி

எட்டுத் திசையில் தென்மேற்கிற்குரிய பாலன் தன் ஊர்தி யாக ஆலனையைப் பராசரன் யாகத்திலிருந்து காப்பாற்ற ஆனைக்கா அண்ணல் அருளை நாடியவன்.

சித்திரகுப்தன்

உயிர்களின் வினைகளைத் தொகுத்து எழுதி வைப்பவர் (85).

மன்மதன்

இவன் சிவன் மீது அம்பெய்து தன் ஆற்றலைக் காட்ட நினைத்துச் சிவனின் நெற்றிக் கண்ணால் எரியுண்டான் (182).

தெய்வமகளிர்

தேவமகளிரில் திலோத்தமையின் அழகு பெரிதும் போற்றப் பெறுகிறது. 'திருந்திய அழகனைத்தும் திரட்டியே' பிரமன் படைத்தான் (114) என்பார் இப்புராண ஆசிரியர். அவ்வாறு படைத்தவனே திலோத்தமை மீது ஆசை கொண்டு அணை கிறான்.

தேவமங்கையரில் அரம்பையர் கயிலாயத்தில் இறைவன் முன் ஆலத்தி ஏந்துகின்றனர் (135); துந்துபிகள் ஆர்ப்ப ஆடுகின்றனர். (136) இவ்வாறு தெய்வமகளிர் சிலர் தீவினை செய்ய வழி வகுப்பதுடன் நல்வினை புரிந்து உய்யவும் முடிகிறது.

உமையம்மையின் சேடியரோ அவளைப் பிரியாது மண்ணுல கிலும் தொடர்ந்து வந்து அவளுக்குக் கொன்றை மாலையைக் காட்டி ஆற்றுகின்றனர். அவள் பூசைக்கு வேண்டிய பொருள் களைச் சேர்த்து உதவுகின்றனர் (179).

கங்கை போன்ற தெய்வநதிப் பெண்கள் நற்கதி நாடி ஆனைக்கா வந்து தவம்புரிந்து இப்பதியைச் சூழ்ந்துள்ள தடாகமாகி வினை தீர்க்க உதவுகின்றனர் (331).

இத்தகையவரின் தேவர் கூட்டம் துயில் துறந்திருப்பினும் (132) தம் தீவினை கழியக் கயிலை இறைவனைத்தொழுது இனிது இறைஞ்சுவதுடன் ஆனைக்காவில் திருவிழா நடக்கும்போது நெருக்கமாக வந்து வணங்குவதை (275) ஆசிரியர் சுட்டுகிறார்.

முனிவர்

முனிவர்களில் விசுவாமித்திரர், வசிட்டன், சத்தி, பராசரன் காசிபன் போன்றவர்கள் இத்தலத்தின் பெருமையை விளக்கும் வகையில் கூறப் பெறுகின்றனர்.

தந்திவனப் புராணத்தைத் தொடங்கும்போதே 'புந்தி வனப்புறு முனிவர்' (1) எனக் கமலை ஞானப்பிரகாசர் முனிவர் தம் பெருமையைப் போற்றத் தொடங்குகிறார். இவர்களையே 'புலன் மாமுனிவர்' (7) எனவும் போற்றுகிறார். நைமிச வன முனிவர் பற்றிய பெருமையே முதற் சருக்கம் முழுவதும் நிரம்பி உள்ளது. அவர் தம் மேனி அழகு, ஆடை புனைந்தும் மேன்மை நாளும் செய்கின்ற கடமை ஆகியவற்றை விரிவாகக் காணலாம். அம்முனிவர் தம் செஞ்சடையும் வெண்முடியும் புலவர் தம் கற்பனையில் செந்தழலாகவும் பாரதியாகவும் வெளிப்படும் (24, 25). பரானந்த நிலையில் செல்வதையும் (23) பரகதி நினைக்கும் எண்ணத்தில் அவர்கள் பல செயல் (2) புரிவதையும் குறிக்கிறார் ஆசிரியர். தீர்க்கச் சத்திரம் போன்ற பல வேள்விகள் செய்தனர். தம்மிடம் வரும் சூதமுனி போன்ற பலரையும் வர வேற்றுச் சிறந்த செய்திகளைக் கேட்டு உயர் பொருளை (39) உணர்ந்தனர் (39). இதனால் இவர்கள் குபேரனின் செல்வத்தையோ இந்திர வாழ்வையோ மதிக்கவில்லை (29).

இத்தகைய முனிவர்களில் இப்புராணம் கூறியவர் சூதர் என்பவராவர். இவரைத் தவத்தில் மிக்கவராகவும், எண்ணம் செயல் யாவும் சிவனிடத்து உரிமை பூண்டவராகவும், மாமுனியாகவும் அறிமுகப் படுத்தப் பெறுகிறார் (32). இவர் நைமிச வன முனிவர்களிடம் வந்து அவர்கள் குழுவினை அடைந்து பெறும் நன்மையே பெரிதெனப் போற்றும்பாங்கு (34) அம் முனிவர்கள் கேட்டவுடன் இப்புராணத்தைக் கூறும் திறனும், அப்போது வியாச முனிவரைத் துதித்து நூல் வரலாற்று முறை தவறாமல் உரைக்கும் சிறப்பும் போற்றுதற்குரியது (37-39). இத்தகைய முனிவர் கூறிய புராணத்தைக் கேட்பின் வல்வினை நீங்கி, புகழும், பெருவாழ்வும், பெரும்பொருளும், பரகதியும் விளையும் என நம்புகிறார் (43). இதுவே இப்புராணத்தின் முதலாசிரியர்க்கு இந்நூலாசிரியர் செய்யும் வணக்கமாகும்.

இத்தலத்திலுள்ள இறைவன் பெயர் செம்புநாதன் எனப்படும். இதற்குக் காரணமாயிருந்தவர் செம்புமுனி. இவர் பெருமையைக் காட்டும் வகையில் செம்புமுனிச் சருக்கம் ஒன்றுள்ளது. வெண்ணாவற் கனியை இறைவனிடம் முனி தர இறைவன்

உண்டுமிழ்ந்த விதையைத் தானுண்டு தன் உடலில் நாவல் மரம் வளர அத்துடன் ஞானபூமி வந்து நான்முகன், உமை ஆகிய வருடன் தவம் புரிந்து இறைவன் தம் முன் வெளிப்பட்டபோது அத்தல இறைவன்பெயரும் தீர்த்தப்பெயரும் செம்பு எனக் கொண்ட பேரியோராவர். இவரால் நாவல்மரம்வந்த வகையும் இறைவன் தீர்த்தம்பெற்ற பெயரும் புலப்படும்.

அகத்திய முனி தென்பால் வந்து பொதிகையில் தங்கி உலகினைச் சமதலமாக நிலைநாட்டிய கதையை யாவரும் அறிவர். ஆயினும் அவர் அத்தகைய பேராற்றலைப் பெறுதற்குக் காரணம் திருவானைக்காவிலுறை இறைவனை வணங்கியதால் பெற்ற பேறு ஆகும். சிவன் வெள்ளிமலையில் வீற்றிருந்தபோது தென்பால் ஓங்கி வடபால் தாழ்ந்த நிலைக்கு ஆசிரியர் கமலை யார், அகத்தியர் தமிழுக்கு இலக்கணம் செய்ததை எண்ணி, செஞ்சொல் இலக்கணம் தெளிந்திடாதார் கூறிய கவிதை என்னக் குவலயம் பிறழ்ந்த’தாக உவமை கூறுகிறார் (374).

உலகம் நிலைபெற இறைவன் தன்னை ஒப்ப ஒருவர் மலயத்தில் இருத்தல் வேண்டும் என அகத்தியரை ஏவினான் எனில் அகத்தியர் பெருமை அளவிடற்கரியது எனலாம். இறைவனே ஏவினாலும் அகத்தியர் அடக்கம் அதனை ஏற்கத் தயங்கியது. அதற்கு மாறாக இறைவனே அகத்தியரை ஞான பூமியில் வைகிச் செல்லுமாறு அருள் செய்தான் எனில் முனிவர் பெருமையும் முனிவர் உலகினைச் சமதலமாக்க ஆற்றல் தரும் ஆனைக்காவின் பெருமையும் வெளிப்படும்.

அகத்தியர் இத்தலத்தில் சென்று வெண்ணாவல், பொன்னித் தீர்த்தம், இறைவி, இறைவன் ஆகிய எல்லாம் கண்டு பெற்ற பயனைக் காட்டும்போது அகத்தியர் சிறப்பு இத்தலத்தின் ஆற்றல் சிறப்பாக அமைகிறது. அதுமட்டுமன்றி அகத்தியர் ஆடிய தீர்த்தம் அவர் பெயரிலேயே அமைகிறது. முனிவராடிய தீர்த்தங்கள் அப்பெயரிலேயே அமையும்போது அவர்தம் நினைவு இத்தலத்தில் என்றும் நிலை பெற்று விடுகிறது இவ்வாறு தமிழ் முனியின் பெருமையைக் கூறும்போது இத்தலத்தின் ஆற்றலும் அத்துடன் கலப்பதைக் காட்டுகிறார் ஆசிரியர்.

நவதீர்த்தங்களுக்குரிய ஒன்பது முனிவர்களைக் குறிக்கும் போது சூரிய தீர்த்தத்திற்குப் பிருகுவும், செம்பு தீர்த்தத்திற்கு வசிட்டரும், அகத்திய தீர்த்தத்திற்கு அகத்தியரும், இந்திர

தீர்த்தத்திற்கு மந்திர முனிவரும், அக்கினி தீர்த்தத்திற்கு அத்திரியும், சீர்மெய்த்தீர்த்தத்திற்குக் கார்க்கிய'ரும் அமை கின்றனர். (இம் முனிவர் குழாத்துள்ளே பிரமனும், இராமனும் சந்திரனும் அமைந்துள்ளது இத்தலத்தில் வந்து தவம் புரிந்ததால் அவர்களும் முனிவர் நிலை பெற்றனர் போலும்.)

இத்தகைய சிறப்பு வாய்ந்த முனிவர்கள் குழாம் சூதமா முனிவன் இப்புராணத்தைக் கூறக் கேட்டபோது அவர்கட்குக் கண்ணீர் பொழிந்தது; மெய்ப் புளகம் செய்தது. இத்தகைய புராணம் கேட்க 'அரும் தவம் யாது புரிந்தோம்' என்ற எண்ணம் எழுந்தது. திருவானைக்கா இருந்த திசை நோக்கி அதிசயம் கொண்டு வணங்க முடிந்தது. இங்ஙனம் முனிவர்கள் செயலால் ஆனைக்காவின் பெருமையை உணர்த்துகிறார் ஆசிரியர்.

அரசர்

இராமன், இராவணன், கும்பகன்னன், வீடணன், அங்கதன், போன்று புராணத் தலைமகனாம் அரிச்சந்திரன் கதை சற்று விளக்கமாக இங்குக் கூறப்பெறுகிறது.

சோழ மன்னனுடன் உறவு கொண்ட நாக மன்னனும் சோழரில் தில்லையை ஆண்ட சுபதேவன் அவன் மனைவி கமலவதி அவர்கட்கு இறைவனருளால் மகனாய்ப் பிறந்த கோச் செங்கணான் அவன் புரிந்த சிவத்தொண்டு அரசர்தம் பெருமை யைப் புலப்படுத்தும்.

நால்வர்

சீர்காழியில் பிறந்த திருஞானசம்பந்தர் அம்மையின் ஞானப் பால் உண்டு 'திருஞானம்' பெற்றமையைக் கமலையார் மறவாமல் போற்றுகிறார். அத்துடன் சமணர் சூழ்ச்சியால் கல்லில் கட்டிக் கடலில் எறியப்படினும் சிவாயநம எனும் திருப்பெயரின் துணைகொண்டு கல்லையே தெப்பமாக்கிக் கடலைக் கடந்த திருநாவுக்கரசர் சிறப்பைப் புகழ்கிறார். இறைவனைத் தோழனாகக் கொண்டு பரவையிடம் தூது அனுப்புதற்குத் தன் முத்தமிழ் ஆற்றலைப் பயன்படுத்திய நம்பி ஆரூராம் சுந்தரர் உயர்வை எடுத்துரைக்கிறார். திருவாசகம் எனும சொல்லார் அமுதத்தை உலகினர் உய்யுமாறு அளித்த பெருமையைச் சீரோடு செப்பு கிறார் (5). இவ்வாறு நால்வர் புகழைக் கமலையார் நெஞ்சாரப் போற்றுகிறார்.

நால்வரில் சம்பந்தர் சமணருடன் அனல்வாதம் புனல்வாதம் செய்து அவர்களைக் கழுவேறச் செய்து சைவத்தை நிலை நாட்டிப் புகழோடு சிவிகை ஏறும் சிறப்புப் பெற்ற செய்தியையும் ஆசிரியர் குறிப்பிடுகிறார் (199).

நால்வர்க்கும் ஈசன் தமிழுரைத்தான் என்ற குறிப்பும் இப் புராணத்தில் உளது (501).

தமிழ்

தமிழ்மொழிபால் அளவுகடந்த பற்றுடையவர் கமலை ஞானப்பிரகாசர். தந்திவனப் புராணத்தில் பல இடங்களில் தமிழின் சிறப்பைக் கூறிச் செல்கிறார். அதனை முத்தமிழாகக் கண்டு மகிழ்கிறார். தமிழுக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பு பற்றியும் அடியவர்கள், அகத்தியர் போன்ற முனிவர்கள் கொண்ட அன்பு பற்றியும், இப்புராணத்தைத் தமிழில் பாடும் நோக்குப் பற்றியும் தெளிவாகக் கூறுகிறார்.

இறைவன் பெருமையைப் பேசும்போது 'நால்வர்க்கு இயலுடன் தமிழ் உரைத்த ஈசன், (501) எனப் போற்றுகிறார் கல்லாலின் கீழிருந்தபோது நால்வர்க்குத் தமிழ் வேதம் அருளினார் என்பவரும் உளர். சைவ அடியார் நால்வர்க்கு இயற்றமிழுடன் எல்லாம் உரைத்த இறைவன் எனவும் கொள்வர் ஏனெனில் இப்புராணத்தின் தொடக்கத்திலேயே நம்பி ஆரூரர் பெருமையை விரிக்கும்போது இறைவனைப் பரவையிடம் தூதனுப்பிய அருஞ் செயலைக் கருதி 'ஏழிசை முத்தமிழதனால் ஏவல் கொண்டோன்' (5) எனக் குறிப்பிடுகிறார்.

'சொற்றமிழால் பாடு' என ஏவிய இறைவனை முத்தமிழால் ஏவல் கொண்டதாகக் கூறுவது ஏற்புடைத்து.

அகத்தியர்க்கும் தமிழுக்கும் உள்ள பிணைப்பை நினை வூட்டும் வகையில்

'தமிழ்ப் பொதிகைக் குறுமுனிவன்' (2)

எனவும்

'கோவை சேர் தமிழ் விரிக்கும் குறு முனி' (395)

எனவும் போற்றிப் புகழ்கிறார்.

இப்புராண நிகழ் களமாக விளங்கும் விழவறா வீதி நாட்டை 'விரும்பு முத்தமிழ் சேர் நா'டாகக் (46) கண்டு மகிழ்கிறார். மேலும்

இங்குத் தமிழ்ப் புலவர் போற்றப்பெறும் நிலையை ம வாமல்,
'தமிழ்க் களிப்பன வாகன வாடையே' (56) என எடுத்துரைக்கிறார். தமிழின் தனிச் சிறப்பைக் குறிப்பிடும் போது

'தொனி தரு தமிழ்' (375)

எனவும் கூறித் தமிழ்ச் செய்யுளின் இனிமையைப் பிரமதீர்த்த நீருக்கு உவமையாகக் கூறுகிறார். அங்குத் தமிழில் காணும் செஞ்சொல்லையும் அதனால் அமைக்கப் பெறும் செய்யுளையும் அதனிடையே அமைந்து கிடக்கும்இனிமையையும் சுட்டுகிறார் (400),

இத்தகைய இனிமையும் அழகும் இறைமையும் பெற்ற தமிழால் தந்திவனப் புராணத்தைப் பாடுவதால் இறைவற்கும் ஏற்றது ஆம் என்ற கருத்தை,

'புராணத்தின் முறைமைதனைச் செந்தமிழால்
மொழிதலாலே...புனிதற்காமே' (6)

எனவும்

'உவமையில் தமிழால் யானும் உரைத்தனன்'

எனவும்

'செந்தமிழால் வகுத்து மேன்மைத் தந்திவனப்
புராணத்தைச் சாற்றல் செய்வாம்' (10)

எனவும் பாயிரவுரையாகப் பகர்ந்துள்ளார். இவற்றை யெல்லாம் காணும்போது கமலையாரின் தமிழ்ப்பற்றும், தமிழால் புராணம் செய்ய வேண்டும் என்ற ஆர்வமும் தெளிவாகத் தெளிகிறது.

நூல் அமை நெறி

தந்திவனத் தலபுராணம் பாடிய கமலை ஞானப்பிரகாசர் இப்புராணத்தைப் படிப்பதால் வல்வினை நீங்கிப் புகழும், குன்றா வாழ்வும், பெரும் பொருளும், பரகதியும் பெறுவர் என (43) இம்மையிலும் மறுமையிலும் பெறும் பயனை உணர்த்தி இதனைப் படித்தற்குரிய ஆர்வத்தைச் சமயநெறியில் வளர்த்து விடுகிறார் அதற்கேற்ப நூலின் அழகுபெறப் பல கலைநுணுக்கங்களைப் பின்பற்றுகிறார்.

சொல்வதை, வேண்டுமிடத்தில் சுருங்கிச் சொல்லும் அழகு வெளிப்படுமாறு 'கற்றூண் ஒன்றால் ஆழிதனைக் கடந்தவன்' (5) எனத் திருநாவுக்கரசர் வாழ்க்கையில் நடந்த அற்புதச் செயலை மிகவும் சுருக்கமாகக் கூறி அவர் பெருமையை வெளிப்படுத்துகிறார்

வேறு சில இடங்களைத் தாம் படைத்த கதையைச் சீரிய முறையில் கூறிச் செல்வதை இப்புராணத்தில் பல இடங்களில் காண முடியும் (32—40; 114—119).

சில இடங்களில் கேள்வி மட்டும் கேட்டு விடையை நாம் அறியுமாறு விட்டுவிடுகிறார் (96).

'தானம் ஏன்? தவம் ஏன்? மிக்க தருமம் ஏன் வேள்விதான் ஏன்' என அப்பாடல் முழுதுமே கேள்வியாக அமைந்து நாம் காணும் விடையில் தல மகிமை புலப்படுமாறு அமைத்துள்ளார்.

பெரிய புராண நெறியில் செல்லும் இவ்வாசிரியர் முன்னர் என்ன சொன்னார் என்றும் பின்னர் என்ன சொல்லப் போகிறார் என்றும் ஒவ்வொரு சருக்கத்தின் முதலில் கூறுகிறார். இது அவ்வச் சருக்கத்தைப் பயிலும்போது முன் பின்னுள்ள அமைப்பைப் புரிந்து கொள்வதற்கு எளிது. இக் கதை கேட்கும் மக்களுக்கும் தாம் கேட்டது எது இனிக் கேட்கப் போவது எது என்ற தெளிவு ஏற்பட உதவும்.

கதை கேட்கும்போது வேறு பல புராணக் கதைகளையும் கலந்து கூறுவதால் மக்களின் ஆர்வம் பெருகுவதற்கு வழி ஏற்படும். அதனால் சமலையார் இப்புராணத்தில் சம்பந்தர் சமணர் கதை (200), உபமன்னு முனிவனைச் சோதனை செய்யச் சிவன் இந்திரன் வடிவில் வந்த கதை (287), திரிபுரம் எரித்த கதை (291), அமுதம் கடைந்த கதை (392), மார்க்கண்டன் கதை (317), அரிச்சந்திரன் கதை (477—481) ஆகியவற்றை ஆங்காங்கே சுருங்கிய நிலையில் கூறியுள்ளார். கதையுள் கதையாக வீடணனுக்கு இராமன் செம்புநாதன் பெருமையை எடுத்துரைப்பதாக அமைத்துள்ளது (320). இதனால் சிவன் தலைமையை வைணவக் கடவுள் வாயால் புலப்படுத்துவதை அறிய முடிகிறது.

இத்தல இறைவனின் பெயர்களான அமுதீசர் (195), செம்புநாதன் (236) முன்பினும் பின்பழகன் (303), கரியமாலயன் (319), ஆரம் பூண்டவன் (475), பின்னிரக்கம் செயும் பெருமான் (512), திருச்சாலகத் தொளிரும் பெருமான் (556) என்பவற்றிற்குரிய காரணங்கள் புலப்படுமாறு கூறிச்செல்கிறார். இது போன்றே ஞான பூமி (83), ஆனைக்கா (546) போன்றவற்றிற்குரிய காரணங்களையும் உரைத்துள்ளார். இதனால் பெயரும் அவற்றிற்குரிய பொருளும் விளங்கும் வகையில் இப்புராணம் பொருளறிவு ஊட்ட முயல்கிறது எனலாம்.

அணி நயம்

சொற்பின் வருநிலை யணியைப் பயன்படுத்தும்போது 'துதிக்கை செய் துதிக்கை யானை' (548) எனத் தொழிற்பெயரையும், இயற்பெயரையும் இணைத்து யானையின் பக்தியைச் சுட்டுகிறார் ஆசிரியர். இதுபோன்றே நூல் என்ற சொல்லினைப் பல்பொருள் படப் பயன்படுத்தி,

'சின்னூலும் தெரியாத என்னூலும்
இவ்வனத்தில் சிலந்தி வாயில்
புன்னூலுக்கு இனிதிரங்கி'(6)

எனப் பாடியுள்ளார்.

சொற்பொருள் பின்வருநிலை அணி வெளிப்படும் வகையில் பெயரையும் (266), வினைமுற்றுக்களையும் (272, 273, 298), வினை எச்சங்களையும் (469) பயன்படுத்திப் புதிய உணர்வை ஆசிரியர் ஊட்டுகிறார்.

முரணணி

பாடல்களில் பெயர் முரண் தோன்றும் வகையில்,

'அடிமலர் என் முடிமிசை' (3)
'ஐந்துமுகக் கடவுள் அருள் ஆறுமுகக் கடவுளை' (4)
'அசோகமீது உதைத்து நாண்மலர் துயருற ஆடவர் சோகம் எய்துவர் (65)

எனவும், சொல்லிலே எதிர்மறை புலப்படும் வகையில்,

'இறந்தவர் இறவா இன்பம்' (329)
'தோன்றினன் தோற்றமில்லான்' (543)

எனவும் அமைத்து ஆசிரியர் பாடியுள்ளார். இத்தகைய சொல் முரணால் பொருளின்பம் புலப்படுகின்றது.

தற்குறிப் பேற்ற அணி

கவிஞர் தம் கற்பனைக் கண்கொண்டு காணும்போது ஒரு செயலுக்குக்குரிய காரணமாகத் தாம் விரும்பும் ஒன்றை ஏற்றிச் சொல்லும்போது செய்யுளின்பம் பெருகுகின்றது. இறைவன் திருவுலா வரும்போது மகளிர் கரம் கூப்பி வணங்குகின்றனர். கூப்பிய கரத்தில் கூம்பிய தாமரை மலரைக் கண்ட கவிஞர் அதற்குரிய காரணம் எது என எண்ணிப்பார்த்துச் சிவன் முடியிலுள்ள

திங்களைக் கண்டு தாமரை குவியும் செயலை (294) இச்செயல் மீது ஏற்றுகிறார். இதுபோன்றே துறவிகள் செல்லும் வழியில் மயில்கள் தம் பீலிகளைத் தூவி வழியிலினிமை சேர்ப்பதாக அவை பீலியுதிர்க்கும் செயலுக்கு ஆசிரியர் நல்நோக்கம் கற்பிப்பார். (19),

மேலும் பூரணகும்பம் வைத்ததற்கும் (256), அன்னம் அம்மையைத் தாங்குதற்கும் (285), அம்மை நீரால் இறைவன் மேனியைத் திரட்டியதற்கும் (193) தாம் விரும்பும் காரணங்களைக் கமலை ஞானப்பிரகாசர் ஏற்றி உரைப்பது பெரிதும் பொருத்தமாக உள்ளது.

மயக்க அணி

திருநகர் வளமையைக் கூறும்போது அந்நகரப் பெண்கள் மரங்களில் சாய்ந்தபோது அவர்களின் பல உறுப்புகளை அரும்பாகவும், மலராகவும், தளிராகவும் எண்ணி மயங்கி அவற்றை வண்டுகள் மொய்த்தன (63) என்பார் கமலை ஞானப்பிரகாசர் இதே கருத்தை ஆதிபிரம்ம உற்சவச் சருக்கத்திலும்,

'மங்கையர் மருவி எங்கும் அடர்வன அறுபதங்கள்' (259) எனக் கூறுகிறார்.

நிலவுலகில் மட்டுமன்றிக் கயிலை மலையிலும் இத்தகைய மயக்க நிலையைக் காட்டி மயக்க அணியின் அழகைப் புலப்படுத்துகிறார் ஆசிரியர். மரகத ஒளியைப் பசும்புல்லெனக் கருதிக் கவ்வும் சிவனின் காளை மயங்கும் செயலும் (124), அரமகளிர் கூந்தற்கிடும் அகிற்புகையை மேகமென மயங்கி முருகனின் மயில் ஆடும் செயலும் (130) செய்யுளின் அழகை மேலும் பெருக்குமாறு உள்ளன.

மடக்கணி

திருநாட்டுச் சருக்கத்தில் மடக்கணியைப் பரந்த அளவில் ஆசிரியர் பயன்படுத்தி யுள்ளார்.

> வயல்கள் எங்கு நடுமுழ வார்க்குமே
> மன்னு வீதி நடுமுழ வார்க்குமே

எனத் தொடங்கி அதுமுதல் எட்டுப் பாடல்களில் (50—57) தொடர்ந்து இவ்வணியைப் பயன்படுத்திப் பாடல்களைப் பயிலுதற்கு ஏற்ற நுண்ணறிவைப் பெற்றுப் பயில வழி வகுக்கிறார். இது போன்றே நூலின் பின்னர் அமைந்த ஆரம் பூண்ட சருக்கத்தில் பாடலின் தொடக்கத்திலேயே

அங்கமே குளிர்ந்திட ஆரணங் களாறு
அங்கமே வல்லவர் ஆட வெண்ணிறச்
சங்கமே தவழ்ந்திடத் தரள மாமணிச்
சங்கமே இருபுறம் தன்னில் துன்னுமால்

என எட்டுப் பாடல்களில் (450–457) தொடர்ந்து முன் சீர்களில் மடக்கமையைப் பாடுகிறார். இவ்வாறு அமைத்துப் பாடுவதைப் பொருளுணர்ந்து படிக்கும்போது சற்று கடினமாக இருப்பினும் இவற்றைப் பயின்றபின் மொழிவளம் பெறத் துணை செய்கிறது.

சிலேடை அணி

சில தொடர்களில் சிலேடை நயம் விளையுமாறு,

'அருந்தனம் மறைப்பவர் ஆடல் மாதரே' (47)

எனப் பாடியுள்ளார் கமலை ஞானப்பிரகாசர். இவ்வணி பாடல் முழுதும் அமையுமாறு செய்து ஆற்றிற்கும், அரசனுக்கும் (458), ஆற்றிற்கும் பெண்ணிற்கும் (459), சிவபெருமானுக்கும், வனத் திற்கும் (12) ஒற்றுமை நயம் காட்டுகிறார். எனினும் இத்தகைய அணி விளையாட்டுக்களைக் கமலையார் மிகுதியும் கையாள வில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

இல்பொருள் உவமை அணி

உயர்ந்த பொருள்கள் பலவாக இருத்தல் வேண்டும் எனக் கவிதையில் கற்பனை விரும்பும். அதனால் வானில் தெரியும் ஒரு மதியைக் கண்டு நிறைவுறாமல் மதி பல மகளிர் முகங் களாகவும் (254), ஒரு கதிர் ஒரு மதி என்பவற்றை மாற்றிப் பல கதிரவர்களும் மதிகளும் திருவிழாவில் எடுக்கும் சூரிய வட்டம் சந்திர வட்டமாகவும் (265), வெறும் மலைகளைக் கண்டு மனம் அமைதி காணாமல், அவற்றைப் புதிய மலைகளாக மாற்றியபின் மரகதக் கொடிபடர்ந்த மாணிக்க மலையை வெள்ளி மலை தாங்குமாறு செய்து அதனை அம்மை சிவனுடன் விடைமீது தோன்றும் காட்சியாகவும் உருவாக்குகிறார் கமலையார். இதனால் உலகில் இல்லாத இப்பொருள்கள் கற்பனையின் கையில் உருவம் பெறுவதை அருகிய நிலையில் தொடுத்துக் காட்டுகிறார்.

உருவக அணி

ஒரு பொருளை மற்றொரு பொருளாக உருவகம் செய்யும் போதும், ஒன்றன் செயல் வேறொரு செயலாக வடிவம் கொள்ளும் போதும் கவிதையின் அழகு பன்மடங்கு ஆற்றல் கொள்கிறது. மரபு வழியில் வருகின்ற உருவகங்கள் அத்தகைய ஆற்றலை ஊட்டுவதில்லை. (66, 406). ஆயினும் மரங்கள் தவம் செய்வதாகவும் (14), பாம்பு யோகம் புரிவதாகவும் (20), செஞ்சடைக் கற்றை தவத்தழலின் கொழுந்தாகவும் (24) காணும் போது அழகு கொழுந்து விடுகிறது. அதுபோன்றே சோலை கடலாகவும், பெண்ணாகவும் காட்சி அளிக்கிறது (61, 62).

இத்தகைய இன்பப் பெருக்கில் புராணக் கதைகளும் இத்தல புராண உருவகத்திற்குத் துணை புரிகின்றன. திருநீறிட்டான் மதில் நேமி மால்வரையாகவும் (71), மகர தோரணத்தில் நரசிங்க அவதாரத்தின் வடிவமும் (74), சோலையிலுள்ள கனி பறிக்கும் குரங்குகளின் செயலில் அனுமன் செயலையும் (72) காட்டும்போது புராணச் சூழலில் புது இன்பம் தோன்றுதற்கு வாய்ப்பு மிகுதி.

உவமை அணி

உவமைகளை எண்ணற்ற நிலையில் கமலை ஞானப்பிரகாசர் தம் புராணத்தில் பயன்படுத்தியுள்ளார். மரபு உவமைகள் ஆங்காங்கே தென்படினும் (64, 168) அவற்றால் தனிச்சிறப்பு எதுவும் வெளிப்படவில்லை.

இளம் பிறையையும் (185), அதன் வளர்நிலையையும் (491, 531) நன்கு பயன்படுத்தியுள்ளார்.

> 'செஞ்சொல் இலக்கணம் தெளிந்திடாதார் கூறிய
> கவிதை என்னக் குவலயம் பிறழ்ந்தது' (374)

என்று கூறும்போது இலக்கண அறிவும் கவிதையும் அவருள்ளத்தில் பெற்றிருந்த மதிப்பைக் காட்டுகிறது. மேலும் இந்நெறியில் சென்று பிரமபுட்கருணி நீருக்கு உவமை கூறும் போது,

> 'புயலுறும் ஈகையாளர் போன்றுதண் ணளிஉ டைத்தாய்
> அயலுறும் இரவ லார்போல் அதிலகு வாகிச் செஞ்சொல்
> வியலுறு தமிழின் செய்யுள் என்னவே இனிமை எய்திச்
> செயல் சிவ னிடத்தில் வைத்தோர் சிந்தைபோல் தெளியும்
> ஆமால், (400)

என்று பாடும்போது 'புவியினுக்கு அணிஆய' (கம்ப. ஆரணிய சூர்ப். 1) கோதாவரியைக் காட்டிய கம்பரின் கற்பனை எதிரொலிக்கக் கேட்கின்றோம். அத்துடன் தமிழின் செய்யுள் தரும் இனிமையையும் நுகர்கின்றோம்.

வள்ளன்மையை எதிர்மறை நிலையிலும் (409), உடன்பாட்டு நிலையிலும் (310), அடியார்களின் சஞ்சித வினை அகல்வதையும் (352), திருவானைக்காவில் தவம்புரிவோரின் சொல்லில் காணும் நடுநிலையையும் (395) உவமையாகப் பயன்படுத்தும்போது மனிதர்களிடையே காணும் அன்பு, அருள் ஆகிய இரண்டு பண்புகளையும் கண்டு ஆசிரியர் நன்கு பயன்படுத்தியுள்ளார் என்பது புலப்படுகிறது.

பொற்குடையின் கீழே, பெருச்சாளி மீது பிள்ளையார் உலா காட்சிக்குக் கவிஞர் காட்டும் உவமை சங்ககால உவமையின் வளர்ச்சியாக உள்ளது. அவ்வுவமை,

நுகரத் தேன் இறாலை வேண்டி நுடங்கிடா நெடுங்கிரிப்பொற்
சிகரத்தின் மீதில் ஏறும் சிந்துரம் போன்ற தன்றே (282)

என்று வெளிப்படும். பிள்ளையார், பொற்குடை, பெருச்சாளி வடிவம் காண யானை, தேனிறாலை எடுக்க மலைமீது ஏறும் காட்சியை மறக்கமுடியாத உவமையாகக் காட்டுகிறார் கமலையார்.

அகத்துறைத் தலைமக்கள் அஃறிணைப் பொருள்களின் உவமையாக அமைவது (257, 258) இப்புராணத்திற்குத் தனி அழகு ஊட்டுகிறது. இந்நூல் மனித உயிர்கள் அறிவு பெற்று இறைவனை வணங்க வேண்டும் என்று அறிவூட்டும். அதனால் இத்தலத்திற்கேற்ப இவ்வாசிரியர் மெய்ப்பொருள் துறையில் கையாளும் பல உண்மைகளையும் பொருள்களையும் உவமைகளாக ஆண்டுள்ளார்.

வளைந்த கண்ணாடி (160)
ஊசியும், காந்தமும் (222)
இந்திர சாலமும், மந்திரவாதியும் (223)
ஊழ்வினை (536)
ஞானபூரணம் (140)

என்பனவற்றைக் காணும்போது மெய்ப்பொருளறிவோடு உவமையும் பொருளும் நல்லறிவூட்டக் காண்கிறோம்.

இத்தல இறைவனாம் சிவபெருமானை உவமையாகக் காட்டுவதில் ஆசிரியர் தனி ஆர்வம் காட்டுகிறார். இத்தல மரமாகவுள்ள வெண்ணாவல் மரத்துக்குச் சிவபெருமான் உவமை ஆகிறார் (197). சிவன்புகழ்போல் முளைப்பாலிகை முளைக்கின்றது (248). மேலும் இப்புராணத்தில் வரும் சிலந்தி பந்தரிழைப்பதைச் சிவபெருமான் உலாவரும் முத்துப்பந்தருடன் ஒப்பிடத் (290) தல புராண நிகழ்ச்சியே உவமை ஆக மலர்கிறது.

பொதுவாக இவ்வாசிரியர் கையாண்ட உவமைகளைத் தொகுத்துக் காணும்போது மெய்ப்பொருள் அறிவூட்டுதற்கு உவமைகளைப் பெரிதும் கையாண்டுள்ளார் என அறிகிறோம். மேலும் சிவன், சிவனுடைய புகழ், போன்றவற்றையும் உவமையாக்கி உலகியல் பொருள்களாலும் இறை மணம் கமழுமாறு செய்கிறார் கமலையார்.

இந்நூலினகத்தே பல்வேறு அணிகள் பயன்பட்டு இருப்பினும் அவற்றுள் உவமை அணியே தலை சிறந்து நிற்கிறது.

நூற்பயன்

தலபுராணங்கள் மக்களிடையே நன்கு பரவவேண்டும் என்பதை நூலியற்றிய ஆசிரியர்முதல் மற்ற அடியார்கள் வரை பெரிதும் விரும்பினர். ஒவ்வொரு ஊரினைச் சார்ந்த மக்களும் தங்கள் தங்கள் ஊரின்மேல் ஒரு தல புராணம் இருந்தால் அது தங்கள் பெருமைக்கு மேலும் உயர்வு தரும் என நம்பினர். சில சமயம் ஊர்ப்பெருஞ் செல்வரே பெரும்புலவர்க்குப் பணம் கொடுத்துப் பாடச் சொல்வர். அல்லது ஊர் மக்கள் தங்களால் இயன்ற அளவு பணத்தைக் கூட்டாகத் திரட்டித் தலபுராணம் பாட முன் வரும் புலவர்க்குத் தருதலும் உண்டு. நூல் அரங்கேற்றும்போது புலவர்க்குப் பல வழியில் செல்வம் பெறச்செய்வதும் உண்டு. இத்தகைய உள்ளார்ந்த ஆர்வத்தை மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களின் வரலாற்றைக் காணும்போது நன்கறியலாம்.

ஒரு புராணம் இயற்றப்பெற்றபின் அது தொடர்ந்து அவ்வூர் மக்களும் மற்றவரும் கேட்டுப் பயன்பெறவேண்டும் என்ற நோக்கம் வெளிப்படையாகப் புலப்படுகிறது. நூல் மறைந்து போகாமல் இருக்க அதனை எடுத்துரைக்கின்றவர்கள் அரிய பொருள்களை நூலிலிருந்து விரித்துச் சொல்ல வேண்டும். மக்களும் அப்புராணஞ் சொல்வதைக் கேட்டு மகிழவேண்டும். இதனையே ஒவ்வொரு தல

புராண ஆசிரியரும், தலபுராணத்தைப் படைக்கக் காரணமா யிருந்தவரும் நம்பினர். அந்நம்பிக்கை இறையளவும் தவறாமல் நடைபெறுதற்கு இவ்வுலகப் பயன்களாகக் கூறியன மிகுந்தபுகழும் குன்றா வாழ்வும் பெருநிலையும் ஆகும். இம்மைப் பயன்கள் தவிர மறுமைக்கு தலைமூட்டும் பயனாக வல்வினைகள் அனைத்தும் நீங்கும். புராணம் கேட்டமக்கள் பரகதி பெறுவர் என உறுதிப் படும். இதனை விளக்கமாக எடுத்துக்காட்டியுள்ளார் ஆசிரியர்(43).

சமய நூல்களில் திருவானைக்கா

திருவானைக்காபற்றிப்பல அடியவர்கள் நூல்களாகவும் தனிப் பாடலாகவும் பாடியுள்ளனர். அவர்களில் ஐயடிகள் காடவர்கோன் தேவர்பாடிய மூவர், மாணிக்கவாசகர், கபில தேவர், சேக்கிழார் ஆகியோர் முற்காலத்தைச் சார்ந்தவர்கள். இடைக் காலத்தைச் சார்ந்தவர்களாகக் காளமேகம், அருணகிரியார், தாயுமானவர், கச்சியப்பர் ஆகியோரைக் கொள்ளலாம். பிற்பட்ட காலத்தைச் சார்ந்தவர்களாக மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, தண்டபாணி சுவாமிகள், மனோன்மணி அம்மையார், சுப்பையர், சிங்கார வடிவேல் வன்னிய முண்டார், வேலாயுத சுவாமிகள், அப்புலிங்கம்பிள்ளை ஆகியோரைக் கொள்ளலாம். இவர்கள் படைப்பைத் தவிர இத்தலத்தைச் சேர்ந்த பல நூல்கள் அச்சில் வெளி வராதிருக்கலாம். இதுவரை வெளிவராத இத்தந்தி வனப் புராணம் கமலை ஞானப்பிரகாசசுவாமிகளால் எழுதப்பெற்று இப்போது வெளிவருகிறது.

பல்லவர் சிற்றரசனாக விளங்கிய ஐயடிகள் காடவர் கோன் (கி.பி. 6 நூற்றாண்டு) தன் ஆட்சியைத் தன் மகனிடம் ஒப்படைத்துச் சிவத் தலங்கள்தோறும் சென்று க்ஷேத்திரத் திருவெண்பா பாடினார்.(1) வாழ்வின் நிலையாமையைக்கூறி உய்தல்வேண்டின் ஆனைக்கா அடை எனமொழிகின்றார் காடவர்கோன். அவர்பாடிய வெண்பா

> சூழீஇ யிருந்த சுற்றங்கள் குணங்கள் பாராட்ட
> வழீஇ யிருந்த அங்கங்கள் எல்லாம்-தழீஇயிருந்தும்

1. பெரியபுராணம், ஐயடிகள் காடவர் கோன் நாயனார் புராணம், சேக்கிழார், ஆறுமுக நாவலர் பதிப்பு, விபவ ஆண்டு, பக். 190

என்னானைக் காவா இதுதகா என்னாமுன்
தென்னானைக் காவடைநீ சென்று

என்பதாகும்.

மூவர் தேவாரம்

மூவர் முதலிகளில் திருஞானசம்பந்தர் தேவாரத்தில் 'மழையார்', 'வானைக்காவில்' 'மண்ணது வுண்ட' எனும் மூன்று பதிகங்கள் உள்ளன.[1]

தலைமகள் ஒருத்தி இறைவனை எண்ணி ஏங்குவதைப் பாடுவார் ஞானசம்பந்தர். அப்போது வெண்ணாவலில் மேவிய செய்தியையே தொடர்ந்து எடுத்துரைப்பார்.

இவ்விறைவனை அடியார் அடையின் துன்பமில்லை, விண்ணடைவர் வினைமாயும், என உறுதி செய்கிறார். மேலும் இறைவன் அமர்ந்த ஊர் ஆனைக்கா என இதன் பெருமை பேசுகிறார் செங்கட்சோழனுக்கும் கண்ணப்பருக்கும் அருள் செய்த பாங்கினைப் போற்றுகிறார். ஆனைக்கா அண்ணலென இறைவன் யானைக்கு அருள் புரிந்ததையும் சுட்டுவார்.

திருநாவுக்கரசர் தம்தேவாரத்தில் 'கோனைக்காவிக்குளிர்ந்த' 'எத்தாயர்' 'முன்னானைத்தோல்' எனும் மூன்று பதிகங்கள் பாடியுள்ளார்.[2] இவர்க்கு இத்தலத்திலும் மிகுந்த ஈடுபாடுண்டென அறிகிறோம்.

துன்பமின்றித் துயரின்றி யென்றுநீர்
இன்பம் வேண்டி லிராப்பக லேத்துமின்
என்பொ னீச னிறைவனென் றுள்குவார்க்
கன்ப னாயிடு மானைக்கா வண்ணலே

வாழ்வில் யாரும் உதவார்; எனவே மாயப்பிறப்புக்கடலில் சிக்கி இளையா வண்ணம் ஆனைக்கா இறைவன் கருணையைப்பெற வேண்டும் என அறிவுரை கூறுகிறார். இத்தலத்தில் நீர்வடிவாய் இருப்பதனைச் 'செழுநீர்த் திரளைச் சென்றாடினேனே' எனத் துதிப்பார். திருக்குறுக்கை வீரட்டப் பதிகத்தில் சிலந்தியாகப்

1. மூவர் தேவாரம்—தலமுறை, ஸ்ரீகுமரகுருபரன் சங்கம், ஸ்ரீவைகுண்டம், 1968 பக். 430-434.

2. மூவர் தேவாரம்—தலமுறை. ஸ்ரீகுமரகுருபரன் சங்கம், ஸ்ரீவைகுண்டம் 1968 பக் 434—441.

பந்தரிட்டுப் பின் கோச்செங்கணானாகப் பிறப்பித்த செய்தியைக் கூறுகிறார் (ஆதியில் என்ற பதிகம்—3ஆம் பாடல்)

நம்பியாரூரர் 'மறைகளாயின' என ஒரு திருப்பதிகம் பாடியுள்ளார். இதில் உறையூர்ச்சோழன் ஆரத்தைத் திருமஞ்சனக்குடம் வாயிலாகச் சூடிய செய்தியைத்

'தாரமாகிய பொன்னித் தண்டுறை பாடிவிழுத்தும்
நீரினின் றடிபோற்றி நின்மலர் கொள்ளெனவாங்கே
ஆரங்கொண் டவெம்மானைக் காவுடையா தியைநாளும்
ஈரமுள் ளவர்நா ளுமெம்மையுமா ளுடையாரே

எனப் பாடித் துதிப்பார்.[1] இவ்விறைவனைச் சேர்ந்தவர் எம்மையும் ஆளுடையார் எனத் தம் அடியார்க்கடியராகும் தன்மையை நிலைநாட்டுவார்.

திருவாசகம் பாடிய மாணிக்கவாசகர் தம் திருவம்மானையில்

முன்னானை மூவர்க்கு முற்றுமாய் முற்றுக்கும்
பின்னானைப் பிஞ்ஞகனைப் பேணு பெருந்துறையின்
மன்னானை வானவனை மாதியலும் பாதியனைத்
தென்னானைக் காவானைத் தென்பாண்டி நாட்டானை
என்னானை யென்னப்பன் என்பார்கட் கின்னமுதை
அன்னானை யம்மனை பாடுதுங்காண் அம்மானாய் (19)[2]

என இறைவன் தன்மைகளைக் கூறி அவனிருக்கும் திருத்தலங்களில் ஆனைக்கா ஒன்று எனும் சிறப்பையும் கூறுகிறார்.

பரண தேவநாயனார் தம் திருவந்தாதியில் ''திரு ஆனைக்கா ஆடுவதும் மேல் என்பு பூண்பதுவும் ஆனைக்கா வான்றன் அமைவு'' எனப் போற்றுகிறார்.[3]

சேக்கிழார் தாம் பாடிய பெரியபுராணத்தில் அப்பர் திருவானைக்காவின் மருங்கு சென்றணைந்தார். (திருநாவுக். 301) எனக் கூறி மேலும் 'சிலந்திக் கருளும் கழல் வணங்கிச் செஞ்சொல் மாலை பலபாடி' யதையும் (திருநாவுக் 302) குறிப்பார். திருஞான

1. இவ்வாரம் மன்னன் ஆரம் என்பர் சிலர். இப்புராணத்தில் அரசன்தேவி அணிந்த ஆரம் விழ்ந்தது என உள்ளது. (12 சருக்கம் காண்க).
2. திருவாசகம் விளக்கவுரை மாணிக்கவாசகர், உரை, இராமநாத பிள்ளை தி.தெ.சை.சி நூ. கழக வெளியீடு,சென்னை,பக். 258
3. பதினோராம் திருமுறை சிவபெருமான் திருவந்தாதி 6 பரண தேவ நாயனார், கி. வா. ஜகந்நாதன் குறிப்புரை—திருப்பனந்தாள் காசிமட வெளியீடு, 1950.

சம்பந்தர் இத்தலம் சென்று யானைபணிந்ததையும் கோச்செங் கணான் செய்த அடிமையையும் பாடியுள்ளார் (திருஞான. 345).

தம் புராணத்தில் ஒரு பகுதியாகக் கோச் செங்கட் சோழ நாயனார் புராணத்தைப் பதினெட்டுப் பாடல்களில் பாடியுள்ளார் சேக்கிழார். அதில் வெண்ணாவலின் கீழிருந்த சிவனை வெள் ளானை வணங்கியதால் திருவானைக்கா என்ற பெயர் வந்த காரணத்தைக் குறிப்பிடுகிறார். (கோச்செங்கட். 3) சிலந்தி வலையை யானை அழித்ததும் அதன் கோபத்தால் துதிக்கையில் புகுந்து சிலந்தி கடிக்க யானை இறந்த கதையையும் குறிப்பார். பின்னர்ச் சிலந்திசிவனருளால் சுபதேவன் கமலவதியின்மகனாய்ப் பிறந்து சிவலாயங்கள் பல எடுக்கும்போது மறவாமல் ஆனைக்கா வில் கோயில் அமைத்ததையும் (செய்யுள் 13) குறிப்பிடுவார். இதனால் சேக்கிழார்காலம்வரை திருவானைக்கா பெற்ற சிறப்பை உணரலாம்.

'வசைபாட காளமேகம்' என்று 14ஆம் நூற்றாண்டில் புகழ் பெற்ற புலவர் 'திருவானைக்கா உலா' (1) என்ற நூலினைப் பாடி யுள்ளார். இறைவன் பெருமையைப் பல அணிகளின் அழகு விளங்கப் புகழ்ந்துள்ளார். இவ்வானைக்காவிலுள்ளவிநாயகனைப் போற்றும் வகையில்

ஏரானைக் காவிலுறை என்னானைக் கன்றளித்த
போரானைக் கன்றுதனைப் போற்றினால் வாராத
புத்திவரும் பத்திவரும் புத்திரவுற் பத்திவரும்
சத்திவரும் சித்திவரும் தான்

எனத் தனிப்பாடலை எழுதியுள்ளார்.

சைவ வைணவப் பூசல்களை நகைச்சுவைபடச்
'சீரங்கத் தாரும் திருவானைக் காவாரும்
போரங்க மாகப் பொருவதேன்?'

என்ற கேள்வியைக் கேட்டு அதன் விடையாக,

ஓரங்கள்
வேண்டாம் இதெல்லாம் விகற்பம் தெரியாதோ
ஆண்டானும் தாதனு மானால்

என்று கூறித்தம் அகக்கருத்தைப் புலப்படுத்துவார். சிவபெருமான் நஞ்சுண்ட செயலைக் குறித்து இவ்வாறே,

---

1. திருவானைக்காவுலா, காளமேகப் புலவர், சென்னை 1890.

"மஞ்சுதனைச் சூழும் மதிலானைக் காவாரே
நஞ்சுதனைத் தின்றதன் முன்னாள்?"

என்ற கேள்வி கேட்பதுபோல் முடிக்குமுன்

"கல்லால் அடித்ததற்கோ காலால் உதைத்ததற்கோ
வில்லால் அடித்ததற்கோ வெட்கினீர் சொல்வீரால்"

என்றும் கற்பனை நெஞ்சு கேட்பதாக அமைந்துள்ளார். இவரை ஒட்டி ஆனைக்காவில் காதலி ஒருத்தி இருந்ததாகக் கூறுவர். இத்தலம் பற்றி இவர் பாடிய உலா சிறப்புள்ள நூல்.

சிவத் தியான முற்றோர் சிலந்தி நூல்செய்
திருக்கா வணத்தே யிருப்பா ரருள்கூர்
திருச்சா லகச் சோதி

எனவும் காணலாம்.

ஆனைக்காவும் அருணகிரியும்

திருவானைக்கா பற்றி அருணகிரி நாதர் பாடியுள்ள திருப்புகழில் பல செய்திகள் இவ்வூரைப் பற்றிக் கிடைக்கின்றன.

'அஞ்சனவேல் விழி' (495)[1] என்ற பாடலின் இறுதியில் சம்புத் தடாகத்தின் தென்புறத்தில் சுந்தரமாறன் மதில் உள்ள செய்தியை அறிகிறோம். இம்மதில் பதின்மூன்றாம் நூற்றாண்டில் கட்டப் பட்டது. திருநீறிட்டான் மதிலையும் (508) குறிக்கிறார் அருண கிரியார்.

சிலந்தியின் கதையையும் அது கட்டிய கோயிலில் திருச் சாலகச் சோதியாய் ஈசன் இருப்பதையும் 'உரைக் காரிகைப்பால்' (500) என்ற திருப்புகழில் குறிப்பிடுகிறார். இத்தலத்திலுள்ள அகிலாண்ட நாயகியை 'நாதவடி வியகிலம் புரந்தவள்' (504,507) எனப் புகழ்கிறார். பிரமனும் இந்திரனும் தமது தலைவன் எனத் திருவானைக்காவில் சம்புநாதரை வணங்கிய கதைகளைக் குறிப் பிடுகிறார் (504).

இவ்வூரில் இசை பரவியிருந்ததையும் (496) ஏழிசைப் பயனை இவ்வூர் இறைவன் நுகர்ந்ததையும் (499) பலபடப்பாடுகிறார். இத்தலத்திற்கே உரிய வெண்ணாவலைப் பல இடங்களில் (499, 501) புகழ்கிறார். இத்தலத்திற்குரிய பெயர்களாகக் காவை (497,

---

1. இவ் வெண்கள் முருகவேள் பன்னிரு திருமுறையில் காண்பன உரையாசிரியர் வ. அ. செங்கல்வராயபிள்ளை. (பஞ்ச பூத ஸ்தலங்கள் திருப்புகழ்—தொகுதி -3, மீனாட்சி கல்யாண சுந்தரம் 2, வடக்குக் கோபாலபுரம், இரண்டாம் தெரு, சென்னை-6 1953)

98) கஜாரண்யம் (495) கரிவனம் (504, 507) சம்புபதி (506) திருவானைக்கா (496, 502, 503, 505, 508) எனக்குறிக்கிறார். இதனால் திருவானைக்காவின் சிறப்புகள் அருணகிரி நாதரை எங்ஙனம் கவர்ந்திருந்தது என்பதை நன்கு அறிய முடிகிறது. மேலும், கும்பகோணமொடு[2] என்ற திருப்புகழில் செம்புகேசுரம் எனக்காணலாம்.

பிரமன் இந்திரன் முதலிய தேவர்களும் இங்கு வந்து வணங்கியதை,

'கமலனும் ஆகண்ட லாதி அண்டரும்
எமது பிரானென்று தாள் வணங்கிய
கரிவனம் வாழ் சம்பு நாதர்'

எனக் குறிப்பர்.

சிவபெருமான் சித்தர் வேடம் தாங்கித் திருநீறிட்டான் மதில் கட்டிய செய்தியைப் போற்றி,

'ஆழித் தேர்மறு கிற்பயில் மெய்த் திரு
நீறிட் டான்மதில் சுற்றிய பொற்றிரு
ஆனைக் காவினில் அப்பர்'

எனப் புகழ்வார். இங்ஙனம் இத்தலம் பற்றி வழங்கிய பழம் பெருஞ் செய்திகளை மறவாமல் தம் பாடல்களில் கூறியுள்ளார் அருணகிரியார். இத்தலநாயகியின் பெருமையையும் இவர் பாட மறக்கவில்லை.

திருச்சிராப்பள்ளியிலுள்ள இறைவனாம் தாயுமானவர் பெயரைப் பெற்று அங்கு நாயக்கர் காலத்தில் அரசுப் பணிபூண்ட தாயுமானவர் இத்தலத்திலுள்ள அகிலாண்ட நாயகியைப் போற்றிய 'வட்டமிட்டோணர்' என்ற பாடலைப் பாடியுள்ளார். இதில் அம்மை அடியாருக்குப் பலவகையில் உதவி

பார காவிய கவித்வ நான்மறை
பாராயணஞ்செய்மதி யூகமும் அட்ட சித்தியும்

அருளும் ஆற்றைப் புலப்படுத்துகிறார்.

18 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கச்சியப்பர் இத்தலத்தின் பெருமை விளங்கத் திருவானைக்காப் புராணம் பாடியுள்ளார். இப் புராணம் சற்றுக் கடினமானது. திருவாவடு துறையில் குமாரசாமித் தம்பிரான் போன்றவர்களுக்குப் பாடஞ் சொல்லுமாறுஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை

1. பொதுப்பாடல்கள் தொகுதி 5இல் 1304ஆம் பாடல் (1952).

அவர்கள் பாடஞ் சொல்லுமாறு அருளியதையும் அது கடினமான நூலாக இருந்ததால் நாளொன்றுக்கு 50 பாடல்களுக்கு மேல் நடைபெறவில்லை என்பதையும் அறிகிறோம்.†

19ஆம் நூற்றாண்டில் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் (1815-1876) பிள்ளைத்தமிழ், கலம்பகம், கோவை மாலை அந்தாதி போன்ற எண்ணற்ற நூல்களை எழுதியுள்ளார். சிதம்பரம் பிள்ளை என்பவரின் வேண்டுகோளுக் கிணங்கி அகிலாண்ட நாயகி மாலை'‡ என்ற நூலைப் பாடினார். 100 விருத்தங்கள் கொண்ட இந்நூல் பல செய்திகளையும் சுவையையும் கொண்டது. துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் திருவண்ணாமலையை வலம் வரும் போது சோண சைல மாலை பாடியது போலப் பிள்ளையவர்களும் ஆனைக்காசென்று வணங்கி வருவதற்குள் இதனைப் பாடி முடித்தார். காளமேகம் போலே இவரும் அகிலாண்ட நாயகி மாலையில்,

எடுப்பது பிச்சை யேந்துவ தோடாங்
 கியக்குவ தொற்றையே றரைக்கண்
உடுப்பது புன்னோன் மற்றிவர் மனையா
 யுற்றநீ யுயிர்வயிற் றழலாய்
அடுப்பது தவிர வூட்டுத லாதி
 யறமெலாம் வளர்ப்பை யீ தழகே
கடுப்பது தவிர்ந்த மதிற்றிரு வானைக்
 காவகி லாண்டநா யகியே

எனப் பாடியுள்ளார். ஆங்காங்கே இவ்வூர் பற்றிய புராணச் செய்திகளை சிறந்த முறையில் கூறியுள்ளார்.

எட்டுப் பிள்ளைத் தமிழ் நூல்கள் இயற்றிய பிள்ளையவர்கள் 'அகிலாண்டம்மை பிள்ளைத்தமி'ழை* முதன்முதலாகப் பாடினார் இப்பாடல்கள் தொடக்க காலத்தில் பாடப் பெற்றவை எனினும் பெரும் புலவர்களான மழவை மகாலிங்கையர், காஞ்சிபுரம் சபாபதி முதலியார் போன்றவர்களால் போற்றப் பெற்றன.

---

† மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம் II பக். 83-84 டாக்டர் உ. வே. சாமிநாதையர்.

† திருவானைக்கா அகிலாண்ட நாயகிமாலை, மீனாட்சிசுந்தரம் பிள்ளை, டாக்டர் உ. வே. சா. நூல்நிலையம் சென்னை, 1961.

* திருவானைக்கா அகிலாண்டம்மை பிள்ளைத்தமிழ், மீனாட்சிசுந்தரம் பிள்ளை, திருச்சிபுரம், நந்தன ஆண்டு

இவ்வம்மைமேல் பிள்ளையவர்கள் பாடிய அந்தாதி நூல் இதுவரை கிடைக்கவில்லை.

இந்நூற்றாண்டில் 50000 பாடல்களுக்கு மேல் பாடிய தண்டபாணி சுவாமிகள் (19நூ) இத்தலம் பற்றிய பதிகங்கள் (36)யமக அந்தாதி (1 2) வண்ணப்பாமாலை (101), திருப்புகழ் (ஆகிய 9) செய்யுள்களைப் பாடியுள்ளார்.[1] இத்தலத்தின் சிறப்பையும் இறைவன், ஆனைமுகன், அறுமுகன் ஆகியோர் சிறப்பையும் பாடி அருள் வேண்டுவார்.

மனோன்மணி எனும் அம்மையார் (19-20நூ) திருவானைக்கா அகிலாண்ட நாயகி அந்தாதி பாடியுள்ளார். இப் பாடல்களில் அபிராமி பட்டர் பாடிய அபிராமி அந்தாதி போல உள்ளது என்பர். அம்மையைப் பணியின் பல்வகை நலன்களைப் பெற இயலும் என மனோன்மணி பாடியுள்ளார்.

கூத்தூர் சுப்பையர் என்பவர் (20நூ) திருவானைக்கா பதிற்றுப்பத்தந்தாதி பாடியுள்ளார். இவர் நூலில் சிலந்தி பற்றிய கதையினையே பல இடங்களில் கூறியுள்ளார் (பா. 4; 5, 97, 98). இறுதியில் ஒன்பது தீர்த்தப் பெருமையைக் கூறுகிறார்.

மற்றொரு பதிற்றுப் பத்தந்தாதியும் உறையூர் பெரியசாமி பிள்ளை (20நூ) திருவானைக்கா என்பதற்கேற்ப,

வாரணத் துரியான் மேனி மறைதரப் போர்த்தா மென்றோ
வாரண முகப்பி ரானை வழங்கினா மென்றோ வன்றி
வாரண வடிவை முன்னர் மருவினா மென்றோ வித்த
வாரணக் காவின் வாழ்க்கை மகிழ்ந்தனை வள்ளால் நீயே(70)

என்று அழகுறச் செய்யுளை அமைத்துள்ளார்.

'திருவானைக்கா மும்மணிக் கோவை' என்ற 31 பாடல்களுள்ள (நூலைக் காங்கயம் அஷ்டாவதனம் வெ. க்ஷோசல நாயுடு எனபவர் 20நூ) இயற்றினார்.[†] இவரியற்றிய பாடல்களில் அகத்தியர் செப்பு முனிவர் பற்றிய கதையும் கோச்செங்கணான் கதையும் காண்கிறோம். தந்திக்கா (15) என இவ்வூரைக் குறிப்பிடுவார், (தந்திவனப் புராணம் என இப்புராணப் பெயர் பெற்றுள்ளதையும் ஒப்பிடலாம்.)

---

1 திருவானைக்கா பதிகங்கள், யமகவந்தாதி, வண்ணப் பாமாலை, திருப்புகழ், தண்டபாணி சுவாமிகள் சென்னை, சருவதாரி ஆண்டு

† திருவானைக்கா மும்மணிக் கோவை, வெ. க்ஷோசல நாயுடு, ஈரோடு, கீலக ஆண்டு.

திரு எவ்வளூர் இராமசாமி செட்டியார் என்பவர் (20நூ) திருவானைக்கா அமுதலிங்கேசர் பதிகமும், பதுமபந்தங்களும் இயற்றியுள்ளார்.‡ பதுமபந்தங்கள் என்பன பொருள் அறிவதற்குக் கடினமாக உள்ளவை ஆகும்.

சிங்கார வடிவேல் வண்ணியமுண்டார் என்பவர் (20நூ) இத்தலத்தின்மேல் திருவானைக்கா அந்தாதியும், அகிலாண்ட நாயகி பதிகமும் பாடியுள்ளார். சிவப்பற்று மிகுதியை இவர் நூலினிடையேகூறிச்செல்வார். திருவானைக்காஎன்றபெயரைத் தோற்கா (தோல்-யானை) (அத்தி-யானை)அத்திக்கா, கரிக்கா (கரி-யானை) என எடுத்துரைப்பார்.

ஆதிசங்கரர் இத்தலத்திற்கு வந்ததாகவும் உக்கிரமாக இருந்த அன்னையின் வேகத்தைத்தணிக்க அவளுக்கெதிரே விநாயகரை அமைத்தும் அம்மை காதில் இரு காதணிகளைச் சாத்தினார் எனவும் கூறுவர். 'ஸ்ரீ மாத்ருகா புஷ்பமாலா துதி' என்பதைச் சங்கரர் இயற்றினார். அதில் சிலந்தி யானை கதையும் சிவனருளும் போற்றப் பெறும் எனவும் உரைப்பர். அந்நெறியை ஒட்டி அகிலாண்ட நாயகி மீது அன்பு கொண்ட வேலாயுத சுவாமிகள் (20நூ) (1) அகிலாண்ட நாயகி பதிகம் (2) திருவானைக்கா அகிலாண்ட நாயகி பிரார்த்தனைப் பதிகம் (3) அகிலாண்ட நாயகி நேரிசை வெண்பா எனும் மூன்று நூல்களைப்பாடித் துதித்தார்.

இத்தல அன்னையைத் துதித்தது போன்றே இங்குள்ள முருகனையும் துதிக்க அப்புலிங்கம் (கலைவாணன்) என்பவர் (20நூ) 'சாவை முருகன் பிள்ளைத் தமிழ்த் தமிழ்' என்ற நூலை இயற்றினார். இவர் இவ்வூரின் தல புராணக் கதைக்கு ஏற்பத் திருநாவற்காடு என்னும் பெயரிட்டழைப்பார். இக்கால நிலைமைக்கு ஏற்பப் பல புதிய சூழல்களையும் மனத்தில் கொண்டு இவர் பாடியுள்ளார்.

சொர்ணம்மாள் அறக்கட்டளைச் சொற்பொழிவுகளாகச் சென்னைப் பல்கலைக்கழகத்தில் தி.மு. நாராயணசாமிப் பிள்ளை அவர்கள் 'திருவானைக்காக் கோயில் பற்றி 1974-ஆம் ஆண்டு நிகழ்த்திய ஆய்வுரை இத்தலம் பற்றிப் பற்பல செய்திகளை அறியத் துணை நிற்கிறது.*

---

‡ திருவானைக்கா அமுதலிங்கேசர் பதிகமும் பதுமபந்தங்களும், இராமசாமி செட்டியார், கும்பகோணம், ஜய ஆண்டு: தமிழாய்வு பொதுப்பதிப்பாசிரியர் ந. சஞ்சீவி

* சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை. 1976 பக். 6+74

இதுவரை அச்சில்வராத நூல்கள் அகிலாண்டவல்லி ஆசிரிய விருத்தம், திருப்பணிமாலை, சில தனிப்பாடல்கள். (இவை சென்னை, டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூலகத்தில் உள்ளன.) அருட்கவி சாதுராம் சுவாமிகள் இத்தலம் பற்றி 78 திருப்புகழ் போன்ற பாடல்களைப் (1957-63) பாடியுள்ளார்.*

கல்வெட்டுகளில் திருவானைக்கா

திருவானைக்காவிலுள்ள கோவில் எப்போது கட்டப்பெற்றது என்பது தெரியவில்லை. இப்போதுள்ள கோவிலின் தொன்மை அமைப்பு கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் கோப்பெருஞ்சோழனால் அமைக்கப்பட்டது என்று பழஞ் செய்திகளால் நம்பலாம். அவன் காலத்திற்குப் பின்னர்ப் பெருங் கோபுரங்கள், மதில்கள், சிறுசிறு கோவில்கள் ஆகியவை எழுந்தன. ஆயின் இக்கோவில் என்ற அமைப்பு ஏற்படுதற்கு முன் வெண்ணாவல் மரத்தின் கீழ் அமைந்த சுயம்புலிங்கமும் நீர்ஊற்றும் வழிபடுஇடமாக விளங்கின. இதனையே நாம் புராணங்களில் காண்கிறோம்; இயற்கை நிலையை அப்புராணங்கள் கூறாமல் தொல்பழங்கதைகளைக் கடவுள் மாந்தருடன் இணைத்துக் கூறும்.

சோழன் கோச்செங்கணானின் காலம் பற்றிப் பல கருத்துக்கள் நிலவி வருகின்றன. சங்க காலம் என வரையறுப்பர் க. வெள்ளைவாரணனார்,[1] ந.மு. வேங்கடசாமி நாட்டார்[2] கா. அப்பாதுரை[3] துடிசைக்கிழார் சிதம்பரனார் போன்றவர்கள் செங்கணான் காலம் கி.மு. 50 முதல் கி.பி. 25 வரை என்பர்.[4] எவ்வாறு கொண்டாலும் கி. பி. இரண்டாம் நூற்றாண்டு அவன் காலம் என முடிவு செய்யலாம். எனவே இக்கோவில் கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் கட்டப்பெற்று வளர்ந்து வருகிறது எனலாம்.

திருவானைக்கா பற்றிய செய்திகளைத் திருப்பாற்றுறையிலுள்ள கல்வெட்டு (கி.பி. 961) கூறும். அதன்படி ஆனைக்காவில் முதல் பிரகாரத்துடன் அமைந்த கற்றளி இருந்தது. திருவானைக்

---

* இச்செய்தியையும் பாடலையும் அளித்தவர் திரு. மு. கோ. இராமன் அவர்கள்

1. பன்னிரு திருமுறை வரலாறு, க. வெள்ளைவாரணன், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் 1969 பக். 983
2. களவழி நாற்பது, பொய்கையார் ந.மு. வேங்கடசாமி நாட்டார் உரை, தி. தெ. சை. சி. நூ. கழகம், சென்னை 1924 பக். 6
3. தென்னாட்டுப் போர்க்களங்கள் கி. கா. அப்பாதுரை, பாரி நிலையம், சென்னை 19 1 பக். 112
4. சோழர் வரலாறு அ. சிதம்பரனார் தி. தெ. சை. சி. நூ. கழக வெளியீடு, சென்னை, 1972 பக். 138-139.

காவிலுள்ள கல்வெட்டு (கி.பி. 937) கோவில் சிறப்பைக் குறிப்பிடும் இக்கோவிலில் இதுவரை கிடைத்துள்ள கல்வெட்டுகள் 146 ஆகும். இவற்றால் பல செய்திகளை அறிய முடிகிறது. அவை பின் வருமாறு:

முதல் குலோத்துங்கன் காலத்தில் அம்மைக்கும் இடப தேவர்க்கும் திருமஞ்சனம் திருவமுது படையல் செய்வதற்கு நிவந்தம் ஏற்பட்டது. (கி.பி. 1117) மூன்றாம் குலோத்துங்கன் கல்வெட்டுகள் 12 உள்ளன. அரசியல் பற்றிய கல்வெட்டுகள் சோழப்பேரரசுடன் மாறுபாடு கொண்ட சிற்றரசர்கள் அரசர் ஆற்றலால் அடங்கிய அவர்கள் ஆனைக்கா அண்ணல் முன் சோழப் பேரரசுக்கு ஒரு தீங்கும் செய்யாது நற்பணி செய்வதாக உறுதி கூறினர் என அறிவிக்கும். மேலும் இங்கு எண்ணாயிரவர் திருமடம் இருந்ததும் அதில் சைவத்துறவிகள் தங்கியதும் மடத்திற்கு வரிவிலக்குப் பெற்ற நிலநிவந்தம் அளித்ததும் பற்றிக் கூறும்.

மூன்றாம் இராசராசன் காலக் கல்வெட்டுகள் 24 உள்ளன. நல்ல தமிழில் சில கல்வெட்டுகள் அமைந்துள்ளன.

“அருந்தமிழர் கிளைவாழ
பொருவில்மனு நெறிவாழ
பொன் மகுடம் கவித்தருளி
வெண்கோபக் கருங்கலிப் பகைவீட
நாகடிப்படர் செங்கோலும் கொடிப்புலியும்
திகிரி வரை வரம்பளக்க
எண்டிசா முகத்துஎண்கரிக்கு
எடுத்ததனிக் கூடமென
அண்ட கூட முறநிமிர்ந்து
முழுமதிக்குடை நின்று அழகெறிப்ப
நடுவு நின்று குடிகாத்து
நன் றாற்றும் திறம்புணர்ந்து

எனவரும் தொடர்கள் சோழன் மெய்க்கீர்த்தியின் செவ்விய நடையைப் புலப்படுத்தும்.

மேலும் இவன் காலக் கல்வெட்டுகள் இக்கோவிலுக்குப் பதினெட்டுக் காவலரை நியமித்தல், ஓடத்தொழில் புரிவோர் தம் வாழ்வுக்களைக்கை வெளியிடுதல், கோவிலுக்களித்த நிலக் கொடை போன்றவற்றை வெளிப்படுத்தும். இவன் காலப் புதுக் கோட்டைக் கல்வெட்டு (கி.பி. 1240) ஆனைக்கா அகிலாண்ட

நாயகி திருமடம் இருந்ததையும் அதன் தலைவராக விசுவேசுவர ஜீயர் இருந்ததையும் கூறும். இவர் கோலகி மடத்தின் கிளையை வீரராமநாதன் கல்வெட்டு (கி.பி. 1269) வாயிலாக அகிலாண்ட நாயகி மடம் அம்மன்கோவிலுக்கு முன்னர் அமைந்திருத்தல் கூடும் என்ற செய்தியைக் கூறும் மூன்றாம் இராசேந்திர சோழன் காலக் கல்வெட்டுகள் 36 வேலி நிலத்தின் வரிப்பணத்தைக் கோவிலுக்கு அளித்தல் போன்ற செய்திகளை உரைக்கும்.

போசள மன்னர்களில் வீரசோமேஸ்வரவர்மனின் பதின் மூன்றுகல்வெட்டுகள் இங்குள்ளன. இவன் தியாகவினோதீஸ்வரர். கோவில் எழுப்பியது, சண்டேசுரருக்குத் திருவாசி அளித்தது எழுநிலைக் கோபுரம் கட்டத் தொடங்கியது போன்ற செய்திகள் கூறும்.

மாறவர்ம சுந்தர பாண்டியன் காலக் கல்வெட்டுகள்(கி பி 1240) இறைவன் இறைவிக்கென அமைந்த நகைவிவரம், சந்திக்காலப் பூசை ஏற்பாடு, புரட்டாசி அவிட்ட நாளில் தன் பிறந்த நாளை ஒட்டித் திருவிழா ஏற்பாடு பற்றி விபரம் கூறும். காஷ்மீர நாட்டு சௌபான குலத்தினனான ஜாவலதேவனின் மனைவியான ஜாவலதேவி இக்கோவில் குழுவினர் ஒருவர் விற்ற நிலத்தை வாங்கி மீண்டும் இறைவனுக்கே அளித்த செய்தி 1254 ஆண்டுக் கல்வெட்டால் அறிகிறோம்.

சில கல்வெட்டுகளால் மாசித்திருவிழா நடைபெறுதல் வெள்ளச் சேதத்தைச் செம்மை செய்தல் போன்ற செய்திகளை அறிகிறோம். (கி.பி. 1261)

முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் அம்மைக்கும் இறைவனுக்கும் பொன்னெற்றிப் பட்டம் சாத்துதல், சேரநாட்டை வென்ற நாளின் வெற்றிக்காக இறைவனுக்கு நிவந்தம் அமைத்தல் போன்ற செய்திகளைக கல்வெட்டுகள் கூறும்.

விசயநகர அரச பரம்பரையைச் சேர்ந்த பிரபுட தேவ மகாராசர் (கி.பி. 1406-1423) கல்வெட்டுக்களால் கோயில் விபூதி காணிக்கை ஒன்றைத் தவிர மற்றெல்லா வரியும் வழிபாட்டிற்காக அவ்வக்கோயிலுக்கே அளிக்கப்பட்டதை அறிகிறோம்.

கிருஷ்ண தேவராயரின் கல்வெட்டு (கி.பி. 1510) இக்கோயி லிறைவர்க்கு நாள்வழிபாட்டிற்கு நிலநிவந்தமிட்டதும் பிரம்மோத் வச இரண்டாம் நாளன்று மன்னரின் நன்மைக்காக மண்டகப்படி

ஏற்படுத்தி வடுவூரில் நிலம் விட்டதும் உரைக்கும். விஜயநகர காலத்தில் இரு கோபுரங்கள் கட்டப் பெற்றன.

மதுரை நாயக்கர் காலக்கல்வெட்டுகள் ஏகவீரம்மாள் மடமிருந்ததைக் கூறுவதால் காளி வழிபாடு இருந்ததை அறியலாம். பாசுபத கிரகஸ்தர் பீடத்தலைவராக அமர்ந்த செய்தி தெரிகிறது. (கி.பி. 1586) மற்றொரு கல்வெட்டால் (கி.பி. 1595) வேதபாட சாலை பற்றியும் அதற்குக் கிடைத்த கொடை பற்றியும் அறியலாம்.

பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் மதுரை நாடக சாலை ஆசிரியரான வெங்கடேசுவர ஐயர் என்பவர் சம்புதீர்த்தப் படிக்கட்டுகள் கட்டியதை அறிகிறோம். மன்னர்களன்றி மற்ற மக்களும் இக்கோவில் நலத்தில் கொண்ட ஆர்வம் இதனால் புலப்படும்.

சதாசிவ தீட்சதர் காலக்கல்வெட்டுகள் 32 உள்ளன. இக்கோவிலில் உற்சவமண்டபம் சங்கராலயத்தின் சிலபகுதிகள் ஆகியவற்றை இவர் கட்டினார்.

இக்கோவிலின் ஐந்தாம் பிரகார மதில் திருநீறிட்டான் மதிலாகும். இதனைச் சிவபெருமானே முன்னின்று கட்டியதாக ஒரு நம்பிக்கை. கூலியாகத் திருநீறே தந்ததாகக் கூறுவர். இதனைச் சுற்றிவரின் நன்மை விளையும் என்பது பலருடைய நம்பிக்கை இது கிழக்கு மேற்காக 2500 அடி நீளமும் தென்வடலாக 1600 அடி அகலமும் 30அடி உயரமும் 6அடி கனமும் கொண்ட பெருஞ்சுவர் ஆகும். வடபுற வாயில் மீன் அடையாளம் இருப்பதால் சிலர் இதனைப் பாண்டியர் கட்டியிருக்கலாம் எனக் கருதுவர்.

இவை தவிரச் சென்ற நூற்றாண்டிலும் இந்த நூற்றாண்டிலும் புதிய மண்டபங்களைக் கானாடுகாத்தான் நகரத்து மக்கள் கட்டியுள்ளனர்.

கோயில் கல்வெட்டுச் செய்திகள்

திருவானைக்காவில் 130க்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் உள்ளன. அவற்றிலிருந்து பல செய்திகளை அறிய முடிகிறது. கோயிலைச் சுற்றி நந்தவனம் அமைத்துக் காவலிடல், கோவிலுள் மண்டபம் அமைத்தல், கோயிலைச் சுற்றியும் உள்ளேயும் தளமமைத்தல், திருச்சுற்றில் வாயில் கட்டுதல், குளத்திற்குப் படி இடுதல், எழுநிலை மாடம் எழுப்புதல் போன்ற பல திருப்பணிகள் செய்துள்ளனர்.

இறைவனுடைய திருவுருவங்கள் செய்தளித்து வழிபடத் தானம் அளித்தனர். அத்திருமேனிகளுக்குப் பலவகை அணிகள் நல்கினர். வெண்கலத்தாலமைந்த வாயிற் காவலர், வலம்புரி விநாயகர், முருகன் ஆகிய சிலைகள் பிற்காலத்தில் கொடையாக அளிக்கப் பெற்றன. இறைவன் உலா வருதற்குரிய வாகனங்கள் செய்தளித்தனர். இறைவன் திருமுன் விளக்கெரிக்க நிலம் முதலியவற்றை அளித்தனர். திருமேனியில் அணிய உயர்ந்த அணிகள் ஆடைகளை அளித்த போது புலியுகிர்ப் பூம்பட்டு சேந்திலாணிப் பட்டன், ஆரியன், தேவாங்கு ஆகியவை நல்கினர்

கோவிலை ஒட்டி இறையன்பு வளரக் கோமடம் முதலியவை கட்டினர். மாகேசுரர்க்கு உணவு இடப் பொருள்களை ஈந்தனர்

திருவிழாவில் குறிப்பிட்ட நாளை வழிபாட்டிற்கென அமைத்தனர். அரசர்கள் தாம் பிறந்த நாளில் சிறப்புப் பூசனை செய்ய ஏற்பாடு செய்தனர். விழாச் செலவைக் கோயில் குருக்கள் ஏற்கும் போது சண்டேசுவரர் பெயரில் ஏற்றனர்.

கோயிலில் குறிப்பிட்ட வேளைகளில் பூசை செய்ய மக்கள் நிலமும் பணமும் அளித்தனர். சிலர் நிலத்தை விலைக்கு வாங்கிப் பின் அதனைக் கோயிலுக்கு விட்டனர். ஊரார் நன்செய் புன்செய் ஆகியவற்றை விடுதலும் உண்டு. கோயில் நிலத்துக்கு வரி இல்லை. அதற்குரிய வரிகளுக்கு உள்வரி வாங்கி வழிபாடு நடத்தினர். மீன் பிடிப்போரின் தலைவர் போன்றவர்கள் ஓராண்டு வருமானத்தை இறையவன் வழிபாட்டுக்கு ஈந்தனர். அரசன் உறவினர் அளித்த நிலத்தை அரசன் வரியிலி தேவதானமாக ஆணையிட்டான். கோயில் பணத்தை வாங்கிக் கொண்டு அதற்கு வட்டிக்குரிய பொருளைப் படையலாக இட்டனர். குற்றத்திற்குரிய தண்டனைப் பொருளையும் கோயிலுக்கு அளித்தனர்.

மடம் கட்டக் கோயில் நிலம் விற்றதையும், காவிரி உடைப்பைப் பழுது பார்க்கவும், இறைவன் மீது பாடிய பாடல்களைக் கிரந்த எழுத்தில் பொறித்ததையும், வெற்றித்தூண் நாட்டியதையும் கல்வெட்டுச் செய்தியால் அறிகிறோம்.[1]

1. நடுவண் அரசுத் தொல் பொருள் ஆய்வுத்துறை 1905, 1908, 1936-37, 1937-38 ஆண்டுகளில் படிஎடுக்கப்பட்டவற்றிலிருந்து தொகுத்த செய்திகள்)

செப்புப் பட்டய ஓவியம்

விஜயரகுநாதத் தொண்டைமான் காலத்து (சக. 1613) எண் 7 பட்டயத்தில் செம்புநாதர் அகிலாண்டநாயகியின் உருவம் வரையப்பெற்றுள்ளது.[1] விஜயரங்கசொக்கநாதர் (நாயனய்யவாரு) (சக 1630) எண். 8. பட்டயத்தின் மேற்பகுதியில் சூரியன் சந்திரனை முறையே இடப்பக்கத்திலும் வலப்பக்கத்திலும் பொறித்துள்ளனர். இடப்பகுதியில் மரத்தின் கீழ் ஒரு இலிங்கம் உள்ளது. அதனை யானையும், சிலந்தியும் துதிக்கின்றன. வலப் பகுதியில் அம்மை நின்ற வண்ணம் உள்ளாள். மரத்தின் அடியில் ஒரு முனிவர் தவம் செய்கிறார். இலிங்கத்தின் கீழ், ஒன்பது பகுதியாகப் பிரிக்கப் பெற்ற சதுரம் உள்ளது. (இது இக்கோவிலில் உள்ள ஒன்பது தீர்த்தத்தையும் சாலகத்தையும் குறிக்கும்.) இவ் விலிங்கம் செம்புநாதர் எனவும், அம்மை அகிலாண்டேசுவரி எனவும், மரம் சம்புமரம். (தல விருட்சம்) எனவும் இங்குச் சிலந்தி யானை புசித்த கதையை யானையும் சிலந்தியும் குறிக்கும் எனவும் மரத்தினடியில் உள்ள முனிவர் சம்புமுனி எனவும் குறிப்பர்.[2]

இவ்வாறு செப்புப் பட்டயங்களில் காணப் பெறும் ஓவியங் களில் திருவானைக்காவின் கதைக் குறிப்பும், தெய்வங்களும் தீர்த்தங்களும், தலமரமும், முனிவரும் குறிப்பிடப் பெறும் பெருமை தெரிகிறது.

வடமொழியில் திருவானைக்காப் புராணம்

வடமொழியில் திருவானைக்கா பற்றிய புராணம் உள்ளது. அதிலுள்ள இருபத்தாறு அத்தியாயங்களில் பல செய்திகள் உள்ளன. அவை பின்வருமாறு:

1. தீர்க்கசத்திரம் எனும் யாகத்திற்கு வந்த முனிவர்கள் சௌனகர் வாயிலாக மேலான தீர்த்தம், தலம் பற்றிச் சூத முனியைக் கேட்டல்.
2. உமை, நந்தியின் பொருட்டுச் சிவபெருமான் கூறிய தலத்தைச் சூதமுனி மற்றவர்க்குக் கூறுதல்.

---

1. Copper Plate Inscrip ions belonging to the Sri Sankara-charya of the Kamakoti—Pitha, T. A. Gopinatha Rao: The Law Printing House. Madras 1916, p 89.
2. முன்னூல் பக். 99—100.

3. உமை, நந்தியின் பொருட்டு ஞானபூமியாம் திருவானைக் காவின் பெருமை கூறுதல்.
4. ஒன்பது தீர்த்தங்களின் பெருமை கூறுதல்.
5. சிவன் கூறிய நீராட்டு விதியும் தானத்திற்குரிய பொருள் களையும் மந்திரங்களையும் கூறுதல்.
6. உமைக்குச் சிவன் வேதாந்த ஞானத்தைச் சுருக்கமாகக் கூறுதல்.
7. சம்பு முனிவர் பெற்ற தவப்பேறும் தவம் செய்ய உமை இத் தலத்திற்கு வருவதும் கூறுதல்.
8. உமை நீரினை இலிங்கமாகச் செய்து பூசித்தல்.
9. பிரமனுக்கும் உமைக்கும் சிவன் பல வரங்கள் அளித்தல்.
10. இராமன் கும்பகர்ணனை வதைத்த பாவத்தைப் போக்கு தற்கு இங்கு இலிங்கம் அமைத்தல்.
11. இராமன் சிவனைத் துதித்தல்.
12. விசுவாமித்திரர் அரக்கனை வதம் செய்ய ஒரு வேள்வியைத் தொடங்கி அவர் வேண்டுதலால் அவனைக் கொல்லாமல் விடுகிறார்.
13. வீடணன் பொருட்டு அரங்கநாதர் கனவில் வந்து சிவபக்தி யையும் திருவானைக்கா பெருமையையும் கூறுதல்.
14. அரங்கநாதர், காவிரி, சோழநாடு, சிவன், திருமால் ஆகி யோர் சிறப்பும் இவர்கள் தலங்களின் சிறப்பும் கூறுதல்.
15. சிவபெருமானால் ஏவப்பெற்ற அகத்தியர் இத்தலத்திற்கு வந்து தல இறைவனையும் இறைவியையும் வணங்கி மலையம் செல்லுதல்.
16. இந்திரன் இங்கு வந்து தவம் புரிந்து இத்தல இறைவன் அருளால் விருத்திரன் வதத்தால் உண்டான பாவத்தைப் போக்குதல்.
17. வெள்ளானை இறைவனைப் பூசித்தல்.
18. யானையும் சிலந்தியும் இறைவனை வணங்கி இறுதியில் இறைவன் அருளைப் பெறுதல்.
19. யானைக்கும் சிலந்திக்கும் இவ்வகைப் பிறப்புண்டானதற்குக் குரிய சாபத்தைச் சூதர் அறிவித்தல்.

20. சிவன் நந்திக்குக் கூறிய பிரம்சேரின் சிறப்பைச் சூதர் கூறுதல்
21. திரேதாயுகத்தில் பிரம்மேசர் எனும் சங்கரரைத் தவத்தால் கௌதமர் வணங்கி அவரருளால் அகலிகையை மனைவியாகப் பெறுதல்.
22. இராவணனால் துன்புறுத்தப்பட்ட குபேரன் இங்குத் தவம் செய்து இராசராசேசுவர் என்ற இலிங்கத்தை அமைத்தல்.
23. சோணாட்ச சோழன் சிவனருளால் கண்டகீசிலையால் உண்டான விமானத்தைக் கொண்டு வருதல்.
24. சோழன் முதலான அரசர்கள் ஆலயத்தின் சுற்றுமண்டபங்கள் முதலியவற்றைக் கட்டுதல். விபூதி மதிலைச் சிவனே முன்னின்று கட்டுதல்.
25. சோணாட்ச அரசனால் பூசைக்காக அமர்த்தப் பெற்றவர்கள் சிவனால் காவிரி வெள்ளத்தில் மூழ்குதல்.
26. ஐந்து மதில்களின் பெருமை, தல இறைவன், இறைவியின் பெருமை, பிரம்மோத்சவம் ஆகியவை பற்றிக் கூறுதல்.

தந்திவனப் புராணமும் திருவானைக்காப் புராணமும் ஒப்பீடு

திருவானைக்காவைப் பற்றித் தந்திவனப்புராணம் தோன்றியதுபோல 18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கச்சியப்பரும் ஒரு புராணம் இயற்றியுள்ளார். பொதுமக்களுக்கு இவர் நூல் தெரிந்தது போன்று தந்திவனப்புராணம் தெரியவில்லை. அதனால் அச்சாகி வெளிவரவும் இல்லை. இவற்றை ஒப்பிடுவதால் புராண வளர்ச்சி பற்றி ஓரளவு அறியஇயலும்.

'திருவானைக்காப் புராணத்தைக் கச்சியப்ப முனிவர் இயற்றியுள்ளார்.'[1] திருத்தணிகையில் பிறந்த இவர் சைவ வேளாள மரபினர். திருவாவடுதுறை மடத்தை அடைந்து வேலப்பதேசிகரிடம் திட்சை பெற்றார். சிவஞான சுவாமிகளிடம் தமிழ்க்கலை பயின்றார். இவர் முதன் முதலியற்றிய நூல் 'திருவானைக்காப் புராணம்' தம் மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்கத் 'திருத்

1. திருவானைக்காப்புராணம், கச்சியப்பமுனிவர், M.V. இராமாநுஜாசாரியர் பதிப்பு, ஸ்ரீவாணிவிலாஸ் பிரஸ், ஸ்ரீரங்கம் (ஆண்டு தெரியவில்லை)

தணிகைப் புராணத்தை இயற்றினார். இவர் கி. பி. 1890இல் (சாலி. 1712) மறைந்தார்.

இவர் இயற்றிய நூல்கள் மொத்தம் 12.

'பூவாளூர்ப்புராணம்', 'பேரூர்ப்புராணம்', 'விநாயக புராணம்' 'காஞ்சிப்புராணம்', (இரண்டாம் காண்டம்) போன்றவை இவரியற்றிய மற்ற புராணங்களாகும்.

திருவானைக்காப் புராணக் கடவுள் வாழ்த்துப் பகுதியில் மொத்தம் இருபது பாடல்கள் உள்ளன. தந்திவனப் புராணத்தில் காண்பதைவிட இதில் வாழ்த்துப் பாடல்கள் மிகுதி. நிஷ்களசிவம், நிஷ்களசக்தியை முதலில் பாடிப் பின்னர்த் தல இறைவன் இறைவியைப் பாடுகிறார் கச்சியப்பர். நால்வர் வணக்கத்தைக் கமலை ஞானப்பிரகாசர் ஒருபாடலில் (5)[1] பாடக்கச்சியப்பர் நான்கு தனித் தனிப்பாடல்களில் பாடியுள்ளார். மேலும் அறுபத்து மூவர், சேக்கிழார், நமச்சிவாயதேசிகர் ஆகியோர் வணக்கம் கூறியுள்ளார்.

அவையடக்கத்தில் இரு புலவர்களும் தம் புராணத்தின் தன்மையைக் குறித்துக் கூறும்போது

சிலந்தி வாயில், புன் னூலுக்கு இனிதிரங்கிப்
பொன்மகுடம் சூட்டுகின்ற புனிதற்கு ஆமே (தந்தி. 6)

சிலம்பி வாயின்
ஆய சிறு நூற்கோயி லிடத்தும் இனிது அமர்தலினால்
ஆன்றோர் செய்யும்
பாயபெரும் புகழ் கேட்கும் அவர் செவியில் எனதுரையும்
படரும் அன்றே (திருவானைக்கா அவை 2)[2]

திணை நிலை

தந்திவனப் புராணத்தின் தொடக்கத்தில் கமலை ஞானப் பிரகாசர் நைமிசாரணியச் சருக்கம் அமைத்துத் தவத்தோர் சிறப்பும் அதற்குரிய சூழலையும் எடுத்துக் கொண்ட நூலின் அமைப்புக்கேற்ப நூல் தொடக்கத்தைப் பாடுகிறார்.

ஆயின், கச்சியப்பரோ திருநாட்டுச் சிறப்பு எனச் சோழ நாட்டின் சிறப்பையே முதலில் பாடத் தொடங்கி 'நானிலத் தைந்திணைப் பற்பல வளம் பாடுவதுடன் 'திணைமயக்கமும் பாடி விரிவாக 123 பாடல்களில் அமைத்துள்ளார்.

1. தந்திவனப் புராணத்தின் செய்யுளின் தொடர் எண்ணைக் குறிக்கும்.
2. திருவானைக்காப் புராணத்தின் சருக்கப் பெயரையும் சருக்கப்பாடல் எண்ணையும் குறிக்கும்.

நூல்நிலை

அவை அடக்கத்திலேயே கமலை ஞானப்பிரகாசர் தாம் நூற் செய்த முறைமையைத் தெளிவாகக் கூறும்போது நைமிசவன முனிவர் கேட்கச் சூதன் அருள் பாத்ம புராணத்தின் அடைவு நோக்கிப் பதினான்கு சருக்கத்தில் ஐந்நூற்றெழுபது விருத்தத்தில் தந்திவனப் புராணத்தைப் பாடியதாகக் (தந்தி. 10) கூறுகிறார்.

ஆனால் அவற்றை யெல்லாம் விட்டுக் கச்சியப்பர் தம் புராணத்தின் இடைப் பகுதியில் புராண வரலாற்றுப் படல இறுதிப் பாடலில் 'பொத்தனுக்கு மிதுபாத்ம மெனப் புகலும் புராணத்தின் மத்தியினுள்ளது நுமக்கு வரன்முறையே யுரைக்கின்றாம் வைத்தமதி யொடுகேண்மி னெனச் சூத மாதவத்தோன் பத்தியிற்றன் குரவனடி பணிந்துளத்திற் பகர்கிற்பான்' எனக் குறிப்பிடுகிறார்.

தலச்சிறப்பு

இதனை அடுத்துச் சிவபெருமானே இந்த ஞான தலத்தின் சிறப்பைக் கூறுவதாகக் கச்சியப்பர் ஸ்தலவிசேஷப் படலம் பாடியுள்ளார். ஆனால்,

கமலை ஞானப்பிரகாசர் தலமகிமைச் சருக்கத்தில் தம் கூறாகவே பாடியுள்ளார். கமலையார் படைப்பில் எளிமையும் இனிமையும் இப்பகுதியில் விளங்குகிறது எனில் கச்சியப்பர் படைப்பில் நாடக நயமும் கலைக் கட்டமைப்பும் தனித்து விளங்குகின்றன.

ஞான உபதேசச் சருக்கத்தில் உமை சிவனிடம் ஞானமருளக் கேட்ட போது தவஞ்செய்ய ஞான பூமிக்கு ஏகுமாறு இறைவன் கூறினான். அப்போது அதன் பெருமையை அம்மை மறுத்த போதும் அதன் உண்மை நிலையை இறைவன் வாயிலாகவே வெளிப்படுமாறு அமைத்துள்ளார் கமலையார். கச்சியப்பர் காட்டியது போல் நீண்ட நெடும் கூற்றமைப்பாக இல்லாமல் இச் சருக்கம் இயல்பான உரையாடலாகச் சிறப்புடன் அமைந்துள்ளது.

தீர்த்தச் சிறப்பு

தந்திவனப் புராணத்தில் பதினொன்றாம் சருக்கத்தில் நவதீர்த்தச் சிறப்பு ஆசிரியர் கூற்றில் வெளிப்படுகிறது.

ஆனால் நூலின் தொடக்கத்திலேயே கச்சியப்பர் படைப்பில் சிவன் கூற்றாகத் தீர்த்தப் பெருமை அமைந்துள்ளது. முதலில்

தனித்தனித் தீர்த்தப் பெருமையைக் கமலையார் கூறத் தீர்த்தங்களின் பெருமையைப் பொதுவாகவே முதலில் கூறிப் பின் தனித் தனியாக அவ்வத் தீர்த்தப் பெருமை கூறுகிறார் கச்சியப்பர்.

ஒன்பது தீர்த்தங்களை விவரிக்கும் போது அவற்றின் அருகிலுள்ள மரம், தெய்வம், முனி, கணநாதர், தானமாக நல்கும் பொருள் பற்றிக் கமலையாரும் கச்சியப்பரும் கூறுவர் தீர்த்தங்களின் பெயர் வைப்பு முறை இரு நூல்களிலும் மாறியுள்ளன. தீர்த்தம் பற்றிய முன்கதையை மிகச் சுருக்கமாகக் கூறுகிறார் கமலையார். சில செய்திகள் முன்னரே அவர் கூறியிருப்பதால் அத்தகைய சுருக்கப் போக்கு பொருந்துவதாக உள்ளது. ஆயின் கச்சியப்பர் தீர்த்தங்களின் கதை பற்றிய சுருக்கத்தை முதலில் சொல்லி விடுவதால் பின்னர் அவற்றை விரிவாகக் கூறும் போது படிப்போர் மனத்தை நன்கு பற்றுவதில்லை.

மரங்கள், முனிவர்கள், கணநாதர், கொடைப் பொருள்கள் இவற்றில் சிற்சில வேறுபாடுகள் காணப்படுகின்றன. முதனூலை ஒப்பிட்டுப் பார்ப்பின் இவ்வுண்மை மேலும் விளக்கம் பெற வாய்ப்புளது. கச்சியப்பர், கொடை ஏற்பார் குறித்தும், நீராடிய பின் பெறும் பயன் குறித்தும், ஆடுதற்குரிய மந்திரங்கள் பற்றியும் விளக்கமாகக் கூறிச் செல்கிறார். இவை பிற்கால வளர்ச்சி நிலையின் விளைவு எனலாம். மேலும் இத்தகைய தீர்த்தங்கள் இருக்கும் போது உயிர்கள் இவற்றிலாடித் தம் வினைகளைப் போக்கி நற்பயன் பெறாத காரணத்தை அம்மை வாயிலாகக் கேட்கச் செய்து சிவன் கூறும் விடையில் தெளிவு படுத்த முயல்கிறார் கச்சியப்பர். இது தந்திவனப் புராணத்தில் காணாத சிறப்பு ஆகும்.

இறைவன் சிறப்பு

மூர்த்தி விசேஷப் படலம் என அமுதலிங்கேசரின் பெருமையைக் கச்சியப்பர் விரிவாகப் பாடுகின்றார்.

ஞான தலத்தின் அமுதலிங்கத்தை நனிகாண
வான மனத்தோடு ஏழடி மண்ணிட் டனர் ஆயின்
போன பவத்துள் ஏழனுள் ஈட்டும் புரையெல்லாம்
தானம் அளைந்த வார்குழல் நங்காய் நலிவெய்தும்

(மூர்த்தி விசேஷப் படலம் 21)

எனும் பாடலைத் தந்திவனப் புராணத்தில் தலமகிமைச் சருக்கத்தில் காணும் பாடலோடு ஒப்பிடலாம்.

வேழம்ஆ தரித்து இறைஞ்சு மெய்ஞ்ஞான பூமிக்கேக
ஏழடி நடப்பார் ஆகில் எழுவகைப் பிறப்பு நீங்கும்
(தந்தி. 90)

நைமிசவனச் சிறப்பு

நைமிச வனத்தைப் பற்றிக் கமலையார் கூறும்போது

இயங்கிள மானுமவ் இகல்கொள் வேங்கையும்
இயங்கெழு சிங்கமும் இகுத்த வேழமும்
புயங்கமும் கலுழனும் பொருந்தி ஒன்றியே
உயங்கவே பகையற உறவு கூறுமால் (தந்தி. 17)

என்று உயிரினங்கள் பகையற்று இருந்ததைக் கூறக் கச்சியப்பர்

மடங்கல் வாரண மான்புலி மாறற
இடங்கள் தோறும் இருப்பன
(திருவானைக்கா. நைமிசப் படலம் 5)

எனக் குறிக்கிறார்.

இதுபோன்றே கிளிகள் சிறுவர் ஓதும் வேதநூற்பிழை திருத்துவதைக் காட்டுகிறார் கமலையார். (தந்தி. 16.) இக்கருத்துப்படக் கச்சியப்பரும் பாடியுள்ளார். (திருவானைக்கா, நைமிசப் படலம் 12) நைமிசவன முனிவர்களின் பண்பு செயல் பற்றித் தந்திவனப் புராணம் விரித்துக் கூறும். ஆயின் திருவானைக்காப் புராணம் சூதமுனிவரின் தனித் தன்மைகளையும் சிறப்புகளையும் விரித்துரைக்கும். (திருவானைக்கா. நைமிசப் படலம். 19, 23)

புதியன புகுதல்

புராண வரலாற்றுப் படலம், கௌதமப் படலம், குபேரன் வழிபடு படலம், திருநீற்றுத் திருமதிற் படலம், அமுதலிங்கேசரருண் முறை செய்த படலம் என்பன தந்திவனப் புராணத்தில் இல்லாதவை ஸ்தலம், தீர்த்தம், ஸ்நானவிதி, மூர்த்தி பற்றி விரிவாகவும் நூலின் தொடக்கத்திலும் கச்சியப்பர் அமைத்துள்ளார். நவதீர்த்தங்கள் பற்றிக் கமலையார் தந்திவனப் புராணத்தின் பிற்பகுதியிலேயே அமைத்துள்ளார். தலம், தீர்த்தம், மூர்த்தி என்ற மூன்றின் வரிசை நோக்கிக் கச்சியப்பர் தீர்த்தச் சிறப்பை முற்பட அமைத்துள்ளார் எனலாம்.

செம்புமுனிச் சருக்கத்தில் கமலையார் கயிலை மலையின் சிறப்பைக் கூறுகிறார் (தந்தி. 123-132) ஆயின் அதற்கு முன்னரே புராண வரலாற்றுப் படலத்திலே (1-15) கச்சியப்பர் கயிலையின் சிறப்பைக் கூறுகிறார்.

இறைவன் துதிப் பாடல்கள் மிகக் குறைவாகப் பாடுவது கமலையார் செயலாக இருக்கக் கச்சியப்பர் துதிப்பாடல்கள் மிகுதியாகத் தொடர்ந்து அமைத்துள்ளார். (புராண வரலாற்றுப் படலம் 35-42) அகிலாண்ட அம்மையை முடிமுதல் அடிவரை பிரமன் துதிப்பதுளது (திரு-அகிலாண்ட. 26-62).

அணிநயம்

கமலை ஞானப்பிரகாசர் திருநாட்டுச் சருக்கத்தை மிகச் சுருக்கமாகவே பாடியுள்ளார். நாட்டின் பெயரையும் விழாவறா வீதி நாடென்று உரைப்பார். சோழ நாட்டின் ஒரு பகுதியாம் அதனை அடுத்தடுத்துக் கூறிப் பயில்வோர் நெஞ்சில் நிலை நாட்டுவார் (44-46) இச் சருக்கத்தில் மடக்கணியை ஆசிரியர் பேரளவில் பயன்படுத்தியுள்ளார். ஆனால் கச்சியப்பரோ இதில் பெரிதும் கருத்துச் செலுத்தவில்லை.

மதிலும் மகளிரும்

திருநகர வளமை கூறும் போது சுருங்கிய நெறியில் இயற்கை அழகைப் பாடுகிறார் கமலையார். கச்சியப்பரோ இதில் பல படத்தும் திறனைக் காட்டுகிறார். ஊரினைச் சுற்றியுள்ள திரு நீறிட்டான் மதிலை, நேமிமால் வரையைப் போலும் (தந்தி. 71) எனக் கூறுகிறார். கச்சியப்பரோ மதிலின் நொச்சி, இஞ்சி, சூழல், பெருமை ஆகியவற்றைப் பல பாடல்களில் பாடுகிறார் (திரு நகரச் சிறப்பு. 35-40).

மேலும் பரத்தையர் சேரி பற்றிக் கச்சியப்பர் பாடக் கமலையார் அது பற்றிப் பாடாத நிலை எண்ணி மகிழ்தற்குரியது. பிற் காலச் சமுதாய நிலைக்கு ஏற்பக் கச்சியப்பர் இத்தகைய பாடல்களைப் பாடினார் எனலாம்.

செம்புமுனிச் சிறப்பு

செம்புமுனி வரலாற்றைத் தனிச் சருக்கமாகத் தத்திவனப் புராணம் கூறும். செம்பு முனிவன் கதை தொடங்கு முன் நான் முகன் அங்கு வந்து தவம் புரிதற்குரிய கதையைக் கூறுகிறார். அதன் பின் வெண்ணாவற் கனியுடன் செம்பு முனி கயிலை சென்று நாவல் மரமுளைத்த உடலுடன் திரும்பி வந்து நான் முகனிடம் செய்தி கூறித் தவம் புரிந்த வரலாற்றைக் கமலையார் எடுத்துரைக்கிறார்.

கச்சியப்பர் நாவல் மரம் பற்றிய செய்தியைக் கேட்டு உமை வினவும கேள்வியின் அடிப்படையில் செம்புமுனி தவம் புரி படலத்

தைத் தொடங்குகிறார். சிவன் கூற்றாக இது அமைகிறது. நாவல் மரம் கேள்விக் களனாக அமைவதால் பல மரங்களின் பெயர்கள் இச்சருக்கத்தின் தொடக்கத்தில் அமைந்துள்ளன. நான்முகன் கதை இடையே வராமல் வெண்ணாவற் கனி வீழ்வது முதல் நிகழ்ச்சியாக அமைந்துள்ளது. கயிலைக்கு அவர் வந்தளித்த செய்தி ஒரே பாடலில் தெரிகிறது. நாவல் மரம் முளைத்த நிகழ்ச்சியைக் கச்சியப்பர் கற்பனை பெருகப் பாடுகிறார்.

கயிலையிலிருந்து திருவானைக்காவுக்குச் செம்பு முனி திரும்பி வரும் நிகழ்ச்சியை இருபுலவர்களும் உளமாரப் பாடி மகிழ்கின்றனர். இதனிடையில் அம்மை கேள்விக்கு விடை இறைவன் நல்க, இடையே நந்தியும் கேட்பதாக அமைக்கிறார் கச்சியப்பர். இது ஒரு புது முறையாகும். இதுவும் தந்திவனப் புராணத்தில் இல்லை. அம்மை இவ்வனத்தில் சென்று தவம்புரிதற்குரிய முற்காரணத்தைக் கச்சியப்பர் சுட்டுகிறார்.

தந்திவனப் புராணத்தில் ஞான உபதேசச் சருக்கத்தில் அம்மை அப்பன் உரையாடல் பகுதியில் காணும் செய்திகளைக் கச்சியப்பர் சம்புமுனி தவம்புரி படலத்தின் இறுதியிலேயே அமைத்துள்ளார். இவ்வமைப்பு முறை செவ்விதாக இணையவில்லை.

அகிலாண்ட நாயகியாக ஆகு முன்னர் இமையத்திலிருந்து உமை புறப்பட்ட காட்சிகளும் ஆனைக்கா அடைந்தபின் நிகழ்ந்த நிகழ்ச்சிகளும் கச்சியப்பர் நூலில் விளக்கமாக உள்ளன. தந்திவனப் புராணத்திலோ அம்மையின் பிரிவு அகப் பொருள் பிரிவாகப் படும்படி பாடியுள்ளார் கமலையார் (179).

தந்திவனப் புராணத்தில் அம்மை இறைவனைப் பூசித்த நிலை எளிமையும் அன்புப் பெருகக் காணும் போது திருவானைக் காப்புராணத்தில் பூசைக்கான பொருள்களைக் கொண்டு வரும் சிறப்பே பெரும்பாலான பாடல்களில் காணப்பெறும்.

ஒரு சருக்கத்தில் நிகழ்ச்சி முழுவதையும் கமலையார் கூறுகிறார். ஆயின் கச்சியப்பரோ அம்மையை வணங்கி இறைவன் தோன்றும் வரை ஒரு படலமாகவும், வரங்கொள்வது மற்றொரு படலமாகவும் ஞான உபதேசம் மற்றொரு படலமாகவும் விரிய அமைக்கின்றார்.

திருவிழா நடத்தல்

ஆதிபிரம உற்சவச் சருக்கம் என்பதில் கமலையார், பிரமன் இறைவனிடம் வரம் பெற்றுத் திருவிழா நடத்திய பாங்கினை இயற்கை எழில் பெருகப் பாடியுள்ளார். கச்சியப்பர், பிரமன் பெற்ற வரத்தையும் விழா நாளையும் வரங்கொள் படல இறுதியில் சுருங்கக் கூறிப்பின் திருவிழாப் படலத்தைத் தனியே பாடியுள்ளார்.

உபதேச நிலை

ஞானோபதேசப் படலத்தின் உமை, நந்தி, சம்பு முனி ஆகியோர் மட்டும் கேட்கச் சிவன் ஞானஉபதேசம் புரிந்ததாகக் காணலாம். ஆயின் தந்திவனப்புராணத்தில் அம்மைக்கு மட்டுமே இறைவன் உபதேசம் புரிந்ததாக உள்ளது. முதலில் இறைவி கேட்கப்பின் இறைவனே பலகேள்விகளைத் தொகுத்துக் கூறி விடையளிக்கும் முறை கச்சியப்பர் காட்டும் நெறி. (திருவானைக்கா ஞானோப-8), கமலையாரோ மெல்லென ஒன்றன்பின் ஒன்றாகப் பசு, பதி, பாசம் ஆகியவற்றை உபதேசம் செய்யும் நெறியைக் காட்டுகிறார்.

இந்திர சாலம் கண்டோர் எவரையும் மயக்கம் செய்து
மந்திரவாதி தன்னை மயக்குறா வாறு போலத்
தந்திரமான பாசஞ் செகத்தினை மயக்கம் செய்து
முந்துறத் தனைஇ யற்று முதல்வனை மயக்கு றாதே
(தந்தி. 223)

எனக் கமலையார் குறிப்பிடுவதைக் கச்சியப்பர்

பரவும் இந்திர ஞாலம்பண் ணுநரை என் செய்யும்
குரவ மாலையாம் எமக்கது தொடாதுவான் மயக்கம்
(திருவானைக்- ஞானோப-22)

எனக்கூறுகிறார். இவ்வாறு பல இடங்களில் இருவரும் ஒன்றுபட்டுச் செல்வதைக் காணலாம்.

விழாச்சிறப்பு

பிரமன் சிவனிடம் வரம்பெற்றதைத் தனியே பிரமஉற்சவச் சருக்கத்தின் தொடக்கத்தில் கூறும் கமலையார் திருவிழாவில் கொடியேற்றிய செயலைமட்டும் குறிப்பிடுகிறார். பின்னர் வந்த கச்சியப்பர் தம் காலத்திற்கேற்பக் கோயில் வளர்ச்சி பெற்ற நிலையையும் குறிப்பிட்ட கால நிலைகளையும்

சுழி வானவர்கள் தொழும் சோமாக் கந்த ரெதிரே எழுந்தருள
பழிதீர்ந் துலகமுழு துய்யும் படிவார் கொடியில் பசுவுயர்த்தான்

எனத்திருவிழாப் படலத்தில் (7) கூறுகிறார். எந்த நாளில் எவ் வகையில் பிரமஉற்சவம் நடைபெற்றது என விளக்கமாக முதல் நாளிலிருந்து கடைசி நாள்வரை நடைபெறும் விழாவை ஒன்றன் பின் ஒன்றாக எடுத்துரைக்கிறார். தேரோட்டம் பற்றிய விளக்கமே தந்தி வனப் புராணத்தில் தனிச் சிறப்புடைய இலக்கியச் செல்வ மாக அமைகிறது. உவமை உருவக அணிகள் செவ்விய முறையில் இப்பகுதியில் விளங்குகின்றன.

திருமால் வழிபட்ட நிலை

கரியமாலயன் சருக்கம் என்று கமலையார் குறிப்பிட்ட பகுதியை நீலவிண்டு வீச்சுரப் படலம் என அமைக்கிறார் கச்சியப்பர். வட மொழி தென்மொழி என்ற பாகுபாட்டினால் இவ்வாறு இவர் அமைத்ததாகக் கூற இயலவில்லை. ஏனெனில் கமலையார் பிரம உற்சவம் எனக் குறிப்பிட்டதைக் கச்சியப்பர் திருவிழா எனத் தமிழ்த் தொடரில் அமைத்துள்ளார். அதனால் பிற்காலத்தில் இவ் வழக்குப் பெருகியதன் விளைவாக இப்பெயர் பயன்பட்டிருக்கும் என எண்ண இடமுளது.

இராவணன் கும்பகன்னன் ஆகியோரைப் பிரமகத்தி விடாது தொடர்ந்த செய்தியைக் கமலையார் மட்டும் குறிப்பிட இராமா யண முன்கதையைக் கச்சியப்பர் விளக்கும்நெறி இப்புராணத்தின் அமைப்பிற்கு மிகையாகப்படுகிறது.

சிவலிங்கம் தாபிக்க இராமனே நினைத்ததாகக் கமலையார் எழுதிட முனிவர்கள் இராமனுக்கு அக்கருத்தை ஊட்டியதாகக் கச்சியப்பர் கூறுகிறார். மேலும் அவர் அங்கதன் கொணர்ந்த இலிங்கத்தை நிலைபெறச்செய்து கோயில் கட்டியதை நன்குரைக் கிறார்.

அங்கதன் சென்று இலிங்கம் தேடிக் கொணர்ந்த நிகழ்ச்சியை நன்கு அமைக்கிறார் கமலையார். கச்சியப்பரோ இராமன் சிவனைத் துதிக்கும் 26 பாடல்களை அமைத்துள்ளார். (நீலவிண்டு 20-45). செயல் நிலைக்கு முன்னது இடமளிக்கப் பின்னது துதி நிலைக்கு முதன்மை அளிக்கிறது.

தந்திவனப் புராணத்தில் இச்செய்தி தவிர வீடணன் அயோத்தியிலிருந்து இராமன் பூசித்துவந்த கடவுளைத் தந்ததும், அவன் திருவரங்கத்தில் வைத்துப் பூசித்தபின் எடுக்க இயலாமல்

துன்புற்றதையும், அக்கடவுள் ஞானபூமியின் பெருமையை வீடணன் உணருமாறு செய்ததையும் அவன் ஆண்டு தோறும் இங்கு வந்து கரியமாலயனைப்பூசித்த செய்தியையும் காணலாம். இது திருவரங்கத்தில் அரங்கன் வீற்றிருக்கும் செய்தியை ஒட்டி விளக்க வந்த கதையாக உள்ளது. (திருவரங்கத்திலுள்ள சந்திர தீர்த்தமும் திருவானைக்காவுக்குரிய தீர்த்தம் என்பர்.) இக்கதையைத் திருமால் வழிபடு படலமாக இப்படலத்திற்கு ஒன்று அடுத்து அமைத்துள்ளார் கச்சியப்பர். இவ்வாறு அமைப்பு முறை பின்னர் வரும் புராணத்தில் மாறுபடுகிறது. ஆயினும் அதனால் குறிப்பிடத்தக்க பயன் விளையவில்லை.

பின்னிரங்கும் நிலை

கரியமாலயச் சருக்கத்தை ஒட்டி இந்திரச் சருக்கத்தைக் கமலையார் அமைந்திருக்கக் கச்சியப்பர் பராசரன் வழிபடு படலம் என்ற படலத்தை அமைத்துள்ளார். இச்செய்தி தந்திவனப் புராணத்தில் பின்னிரக்கஞ் செய்த சருக்கமாக அமைந்துள்ளது. இதில் கச்சியப்பர் விசுவாமித்திரன் என்ற பெயரை விச்சுவாமித்திரன் என்றே குறிப்பிடுகிறார். மகனை இழந்து வசிட்டன் புலம்பலைக் கமலையார் உருக்கமாகக் கூறக் கச்சியப்பர் அதனை வெறும் செய்தி போல் எவ்வித உணர்வும் வெளிப்படுத்தாமல் எடுத்துரைக்கிறார். வசிட்டன் மனக் கவலை நீங்கப் பராசரன் பிறந்த செய்தியை

ஐயிரு மதியும் முற்ற அகட்டுறு கருவின் நீங்கி
வையகம் இடரும் நீங்க வானகம் மகிழ்ச்சி துன்ன
வெய்யவல் லரக்கர் தேய மிக்கநெய்த் தோரின் மாரி
பெய்யவந் துதித்தது என்ப பிறங்குஎழில் குழவி மாதோ

(திருவானை: பராசரன்:15)

என இயற்கை இறந்த நெறியில் கற்பனை அழகு பெறக் கச்சியப்பர் பாடுகின்றார். மேலும் இவர் பாடிய புராணத்தில் பராசரன் சென்று திருவானைக்காவை வணங்கிய பகுதியில் கோயில் பற்றிய விளக்கம் நன்கமைந்துள்ளது. இது கச்சியப்பர் காலத்தில் கோயில் வளர்ச்சி பெற்ற காரணம் எனலாம். இவர் நிருதியிட்ட ஓலத்தை உணர்வு பொங்கப் பாடியுள்ளார். பராசரன் யாகத்தில் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் நாடக உணர்வு படப் படைத்துள்ளார் கமலையார். அத்தகைய நிகழ்ச்சிகளை மேலோட்டமாகவே கச்சியப்பர் கூறுகிறார். இவர் சிவன் பின்னி

ரக்கம் செய்தான் என்பதைப் பச்சாதாபேசன் எனவும் உரைக்கிறார்.

ஆரம்பூணல்

ஆரம் பூண்ட சருக்கமாய்க் கமலை ஞானப்பிரகாசர் படைத்ததை ஹாரஞ் சாத்து படலமாய்க் கச்சியப்பர் தந்துள்ளார்.

சோழன் செய்த ஆட்சியின் சிறப்புப் பற்றிக் கூறும்போது கமலையார் புலியும் மானும் ஒருதுறையில் நீரருந்தும் செய்தியைக் குறிக்கிறார். (த. 445) கச்சியப்பர் பல பாடல்களில் சோழன் ஆட்சியில் இளவேனில் இனிய ஆட்சி செலுத்தியதைக் கூறுகிறார். இங்கு மன்னனுக்கு முதன்மை இன்றி இயற்கையே முதலிடம் பெறுகிறது. காவிரிநீர் இறைவனுக்கு ஆரம் அளித்த செய்தியின் சிறப்பைக் காட்ட இவ்வாறு அமைத்திருத்தல் கூடும்.

சோழனுக்கு நாக அரசன் தன் மகளையும் ஆரத்தையும் ஈசனாம் அளித்தான். அவ்வாரத்தைச் சோழன் அமுதேசனுக்கு அளிக்க எண்ணியபோது அம்மங்கை இசையவில்லை. இச்செய்தியைக் கச்சியப்பர் கூறாமல் மன்னன் மன விருப்பத்தை மட்டும் வெளிப்படுத்துகிறார். (திருவானை ஹாரம் 43).

சிவத்தலங்கள்

கமலையார் பொன்னியின் வளத்தை மிகச் சிறப்பாகப் பாடுகிறார் இப்படலத்தில் கச்சியப்பரோ இளவேனிலின் எழிலை எடுத்துரைக்கிறார். காவிரியைக் கூறும் போதே காவிரியின் இரு புறங்களிலுமுள்ள சிவத் தலங்களை வரிசைப்படுத்திக்கூறுகிறார். (த. 464-466). அவ்வாறன்றிக் கச்சியப்பர்திருவானைக்கோவிலின் திருமதில், கோபுரம் போன்றவற்றை அரசன் வணங்கியதை விரிவாகக் கூறுகிறார். இது கமலையார் காலத்தில் திருவானைக்காக் கோவிலின் அமைப்பு வளரா நிலையிலிருந்ததை உணர்த்தும்.

நீராட்டு

பொன்னியில் மங்கைமட்டுமே குளிக்கச் சென்றதாகக் கமலையார் கூறக் கச்சியப்பரோ, அவளுடன் அரசனும் சென்றதாக எழுதுகிறார். இவையெல்லாம் கதையின் பின் வளர்ச்சி நிலை எனலாம்.

இறைவன் சிறப்பு

ஆரம் பூண்ட நிகழ்ச்சியினைச் சிவனருட் செயலாகப் போற்றுகிறார் கமலையார். ஆயின் கச்சியப்பரோ அச்செயல்

விளக்கத்தைப் பல்வேறு வகையில் கூறுவதால் சோழன் புகழுக்கு முதலிடம் அமைகிறது.

கமலையார் புராணத்தில் ஆரம் பூண்டவன் என்ற பெயர் பெறும் இறைவன் சிறப்பே மேலோங்கி நிற்கிறது.

சிலந்தி யானைக் கதை

சிலந்தி மூடின சருக்கத்தில் கமலையார் யானையும் சிலந்தியுமாம் புட்பவந்தனும் மாலியவானும் வந்தமைந்த செய்தியைக் கூறுகிறார். பின் சிலந்தி கோச்செங்கணானாகிப் பலகோயில்கள் கட்டியதைக் கூறுகிறார்.

இதனைக் கச்சியப்பர் கஜாரண்யப் படலம் எனவும், கோச்செங்கணார் வழிபடு படலம் எனவும் இரு படலங்களில் விரித்துக் கூறுகிறார் இதில் பின்னர்க் கூறிய படலம் திருவானைக்காப் புராணத்திலேயே மிக விரிவாக, 236 பாடல்களில் அமைந்துள்ளது.

புட்பவந்தன், மாலியவான் கதை மிக எளிய அமைப்பில் தந்திவனப் புராணத்தில் உள்ளது. இங்கு அக்கதையைக் கச்சியப்பர் கூறாது கோச்செங்கணார் வழிபடுபட இறுதியில் கூறுகிறார்.

வெண்குன்றமும், வெள்ளையானையும் கச்சியப்பர் மொழியில் சுவேத வெற்பாகவும் (கஜா.1) சுவேத வெண் களிறாகவும் (கஜா.3) வெளிப்படும். யானை செய்யும் பூசை கமலையார் மொழியில் பூசை விதியோடு இயல்பாக அன்புருவென அமைகிறது. கச்சியப்பர் சிலந்தி தன் வலையில் கோயில் அமைத்ததை விரிவாகக் காட்டுகிறார். இதில் கற்பனை நயம் விளங்குகிறது.

சிலந்திகடித்து யானை இறக்கும் காட்சியை இருவரும் கூறும் அழகைக்கீழ் வரும் பாடல்களில் காணலாம்.

கொழுந்துதிக் கையில் லூதை குடைந்திட இடைந்து பாரின்
விழுந்திடும் மத்தகத்தை வெருவெடுத்து உதறும் மீள
எழுந்திடும் வால்சுழற்றும் இருசெவி நடுக்கும் கோட்டால்
அழுந்திட நிலத்தைக் குத்தி ஆர்பரித்து அலறும் அன்றே
(த. 538)

பதைத்திடும் திசைவெருண்டு பார்த்திடும் பாரின் மோதி
அதைத்திடத் துதிக்கை தன்னை அறைந்திடும் அறைந்து கால்கள்
உதைத்திடும் ஓடும் மீளும் உட்புகும்உ லூதை தன்னை
வதைத்திடும் வகைகாணாமல் மருளும்மெய் புரளும் அன்றே
(த. 539)

இடியெனப் பிளிறும்கையை எடுத்தெடுத்து எறியும் மண்ணின்
அடியுராய்ப் புழுதி பொங்க அலமரும் புரளும் பொங்கும்
படியினின்று எழுந்து சாலப் பன்முறை உயிர்க்கும் சாய்த்து
முடிநனி துளக்கும் வீழ்ந்து முடிந்தது தறுகண் வேழம்
(கஜா. 51)

யானையும் சிலந்தியும் இறந்த பின் சிவன் அருள் செய்யும் பகுதி சிறு சிறு உரையாடலாய்ப்புராண மாந்தர்கள் யாவரும் பங்கு பெறும் நாடகக் காட்சியாய் அழகுற அமைத்துத் தருகிறது தந்திவனப் புராணம். துதியும் சிவன் உரையுமே நீண்ட உரையாகத் திருவானைக்காப் புராணத்தில் அமைந்துள்ளது.

கோச்செங்கணான் பிறப்பும் பதினாறு வினைகளும்

சிவனருள் புரிந்ததும் சுபதேவன் கமலவதி மகனாகத் தில்லையில் சிலந்தி செங்கண்ணனாகப் பிறந்ததை ஒரே பாடலில் (த. 551) கமலையார் உரைக்கிறார்.

கச்சியப்பர் சிதம்பரத்தின் பெருமையை முதலில் விரிவாகக் கூறுகிறார். மேலும் பிள்ளைப் பேறு கருதிச் செய்யும் பதினாறு வினைகளை விரித்துரைக்கிறார்.

தீக்கைச் சிறப்பு, மகளிர் பூப்பு நாட்கள், மக்கள் புணரும் ஒழுக்கம், சீமந்தம், பிள்ளைப்பேறு, பிள்ளை வளர்ப்பு, பெயர் வைப்பு, காதுகுத்து, முப்புரி நூலணிதல், எண்வகைத் திருமணம், ஆடை, மணச்சடங்கு, நாட்கடன், முதலியவற்றை மிக விரிவாகக் கூறுவது திருவானைக்காப்புராண அமைப்பு (கோச்செங்கணார் 12-160). இது அக்கால மக்கள் வாழ்க்கையை நன்கு அறிதற்குரிய ஆவணம் எனலாம்.

அதன்பின் கருவுற்ற கமலவதியின் உடல் மாற்றங்களை விரிவாகக் கச்சியப்பர் கூறுகிறார். செங்கணான் பிறந்து வளர்ந்த போது 'பிள்ளைத் தமிழுக் குரிய பருவங்களைப் பத்துப் பாடல் களில் பாடியது சிறப்பிற்குரியது (கோச்செங்கணார். 183–191). கோச்செங்கணான் கனவில் சிவன் தோன்றிக் கெண்டகை மலையில் கெண்டகை ஆற்றில் கிடக்கும் விமானத்தைக் கொண்டு வருமாறு கூறியதையும் அவ்வாறு அங்குச் சென்று அதனை எடுத்து ஆற்றிலிட்டதையும் திருவானைக்காவிற்குத் திரும்பி வந்து பொன்னி ஆற்றில் அதை மீண்டும் எடுத்ததையும் காண்பது முந்தைய நூலில் இல்லாத புதுமை ஆகும், சியத்துவிசரை

அழைத்து வந்து பூசை செய்ய வேண்டியதையும் பதினெண் மடம் அமைத்ததையும் காணலாம்.

கோயில் கட்டி முடித்ததை முதலில் கூறினார் கச்சியப்பர். பின்னரே, கயிலையில் மாலியவான், புட்ப தந்தன் கதை நடந்த முன்கதையை இந்நிகழ்ச்சி நடத்தற்குரிய காரணமாக அமைத்துள்ளார். அதிலும் புராணமாந்தர் இருவரும் முரண்பட்டதைக் கமலையார் போன்று தெளிவாக உணர்வு பொங்கக் கூறவில்லை.

இந்திரன்—கௌதமன்

தந்திவனப் புராணத்தில் இந்திரச் சருக்கம் என்பது இந்திரன் விருத்திரனைக் கொன்ற பாவத்தைத் தீர்க்கத் திருவானைக்கா அண்ணலை வணங்கி உய்தி பெற்றதைச் சுருக்கமாகக் கூறும்.

ஆயின் இக்கதையை முற்றிலும் நீக்கிய திருவானைக்காப் புராணம் கௌதமப் படலம் என்ற பகுதியைக் கொண்டுளது. இதில் இந்திரன்—அகலிகை கதை கூறிக் கௌதமர் சாபத்தைக் கூறி அம்முனிவர் கொண்ட விரக வேதனையால் மன்மதன், சந்திரன், கடல், தென்றல், குயில் ஆகியவற்றைப் பழிப்பதைக் காட்டும். பின்னர்க்கௌதமர்வெண்ணாவலினறைவனை வணங்கி அதிலிருந்து தப்ப வழிகண்டமையைக் கூறும். இவை இரண்டுமே இந்திரனின் இருவேறுபட்ட செய்திகளைக் கூறுகின்றன. இவற்றின் முடிவாக இந்திரன் உய்தியும் கௌதமன் உய்தியும் என இருவேறுபட்ட முடிவுகளைக் காண முடிகிறது.

தனிக்குறிப்புகள்

மதக்காழ்ப்புப் பற்றிய பாடல்களைக் கச்சியப்பர் நூலில் காணலாம். (திருநாட்டுச்சிறப்பு. 105) இத்தகைய மனநிலையைக் கமலை ஞானப் பிரகாசரிடம் காண முடியவில்லை. பொதுமை உள்ளம் ஞானப்பிரகாசரின் தனிச்சிறப்பு எனலாம்.

கச்சியப்பர் இத்தலம் பற்றிய கதைகளை உவமை வாயிலாக நூலின் தொடக்கத்திலேயே அறிமுகம் செய்து விடுகிறார். குறிப்பாகப் பராசரமுனிவர் கதையைத் திருநகரச் சிறப்பிலேயே (9) கூறுகிறார். இவ்வாறு கமலையார் கூறுவது அரிது. இக்கதைகள் மக்களிடம் கமலையார்க்குப் பின்னர் நன்கு பரவியிருத்தல் கூடும்.

ஆசிரியர் முன்னிற்றல்

கமலை ஞானப்பிரகாசர் அருகிய இடங்களிலேயே தம்மை நூலகத்து வெளிப்படுத்துகிறார். சருக்கத்தின் முதலில்

எதனைக் கூறி முடித்தார் எனவும் எதனைக் கூறப் போகிறார் எனவும் கூறிச் சருக்கத்தைத் தொடங்குகிறார். ஆயின் கச்சியப்பரோ நூலினகத்துப் பலமுறை தம்மை வெளிப் படுத்து வதில் தயக்கம் காட்டவில்லை. (திருநாட்டுச்சிறப்பு 116, 123; திருநகரச் சிறப்பு 34, 48, 63, 12:)

வைப்புமுறை

கமலையார் நைமிசவனச் செய்தியை முன்னர்க் கூறிச் சூதமுனி வாய் மொழியாக மற்ற செய்திகளைத் தொடர்ந்து கூறு கிறார். அவ்வைப்பு முறையை மாற்றி நாடு, நகரத்தை முதலில் கூறி நைமிசப் படலத்தைப் பின்னர் வைத்துள்ளார் கச்சியப்பர். இவ்வாறு நூலில் பல இடங்களில் நூல்வைப்பு முறை மாறி நிற்கும் நிலையைக் கச்சியப்பரில் காணமுடியும்.

சான்றாகத் தந்திவனப் புராணத்தில் காணாதவற்றைக் கச்சியப்பர் 'குபேரன் வழிபடு படலம்', 'திருநீற்றுத் திருமதிற் படலம்', 'அமுத லிங்கேசர் அருள்முறை செய்த படலம்' என மூன்று படலங்களைப் புதிதாகப் பாடியுள்ளார். இவை கமலையார் காலத்தில் வழங்கப்படாமலிருந்திருக்கும். திருநீற்று மதிலும் பின்னர்த்தான் கட்டப்பட்டிருத்தல் கூடும்.

இவ்விரு புராணங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால் கீழ்க் காணும் முடிவுக்கு வர இயலும்.

தந்திவனப் புராணத்தில் காப்பியக்கதை அமைப்பு செவ்விய நிலையில் இயல்பாக உருவாகியுள்ளது.

சிவபெருமானாம் இறைவனின் பெருமையையும், பூசனை முறைகளையும் வெளிப்படுத்துவதில் கமலையார் தனித்து நிற்கிறார்.

தந்திவனப் புராணத்தில் காணும் கதைகளின் அளவும், சுவையும், நிலையும் கருதி அவற்றின் அமைப்பை வேண்டுமளவு சுருக்கியும் பெருக்கியும் கமலையார் அமைத்துள்ளார். இந்நிலை யின்றிப் பொதுச் செய்திகளையும் இணைப்பதில் கச்சியப்பர் ஆர்வம் காட்டியுள்ளார்.

தாம் எடுத்துக் கொண்ட பொருளை விட்டு வேறு எவற்றையும் முதன்மையாகக் கருதா வகையில் பாடியுள்ளார் கமலையார்.

தன் காலத்தில் சிறப்புற்றிருந்த செய்யுள் அணிவகைகளைத் தக்கவாறு அளவுடன் பயன்படுத்தியுள்ளது தந்திவனப்புராணம்.

எளிய இனிய செவ்விய புராண காப்பியம் என்ற நிலையில் கமலையார் செய்த தந்திவனப் புராணம் இலக்கிய அழகுடன் தனிச் சிறப்புப் பெற்று விளங்குவதை இவ்வொப்பீடு நிலை நாட்டும்.

வீ

திருமுறைகளில் திருவானைக்கா

ஞானசம்பந்தர்

சுறவக் கொடிகொண் டவனீ றதுவாய்
உறநெற் றிவிழித் தவெமுத் தமனே
விறல்மிக் ககரிக் கருள்செய் தவனே
அருமிக் கதுவென் னுமெனா யிழையே ●

செங்கட் பெயர்கொண் டவன்செம் பியர்கோன்
அங்கட் கருணை பெரிதா யவனே
வெங்கண் விடையா யெம் வெண்நா வலுளாய்
அங்கத் தயர்வா யினளா யிழையே ●

வானைக் காவில் வெண்மதி மல்கு புல்கு வார்சடைத்
தேனைக் காவில் இன்மொழி தேவி பாக மாயினன்
ஆனைக் காவில் அண்ணலை அபயமாக வாழ்பவர்
ஏனைக் காவல் வேண்டுவோர்க் கேதும் ஏதம் இல்லையே ●

வெய்யபாவங் கைவிட வேண்டுவீர்கள் ஆண்டசீர்
மைகொள்கண்டன் வெய்யதீ மாலையாடு காதலான்
கொய்யவிண்ட நாண்மலர்க் கொன்றைதுன்று சென்னிஎம்
ஐயன் மேவு பொய்கைசூழ் ஆனைக்காவு சேர்மினே ●

திருநாவுக்கரசர்

ஒழுகு மாடத்துள் ஒன்பது வாய்தலுங்
கழுக ரிப்பதன் முன்னங் கழலடி
தொழுது கைகளால் தூமலர் தூவிநின்று
அழும வர்க்கன்பன் ஆனைக்கா அண்ணலே ●

—திருக்குறுந்தொகை 7

எத்தாயர் எத்தந்தை எச்சுற் றத்தார்
எம்மாடு சும்மாடாம் ஏவர் நல்லார்
செத்தால்வந் துதவுவார் ஒருவ ரில்லை
சிறுவிறகால் தீ மூட்டிச் செல்லா நிற்பர்
சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித்
திருவானைக் காவுடைய செல்வா என்றன்
அத்தாவுன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லகண்டங் கொண்டடியேன் என்செய் கேனே.

—திருவானைக்கா திருத்தாண்டகம் 1

வஞ்ச மின்றி வணங்குமின் வைகலும்
வெஞ்சொ லின்றி விலகுமின் வீடுற
நைஞ்சு நைஞ்சுநின் றுள்குளிர் வார்க்கெலாம்
அஞ்ச லென்றிடும் ஆனைக்கா அண்ணலே

—திருக்குறுந்தொகை 5

நசையானை நால்வேதத் தப்பா லானை
நல்குரவும் தீப்பிணிநோய் காப்பான் தன்னை
இசையானை எண்ணிறந்த குணத்தான் தன்னை
இடைமருதும் ஈங்கோயும் நீங்கா தேற்றின்
மிசையானை விரிகடலும் மண்ணும் விண்ணும்
மிகுதியும் புனலெரிகாற் றாகி யெட்டுத்
திசையானைத் திருவானைக்காவு ளானைச்
செழுநீர்த் திரளைச் சென் றாடி னேனே

சுந்தரர்

தாரமாகிய பொன்னித் தண்டுறை யாடி விழுத்தும்
நீரினின்றடி போற்றி நின்மலா கொள்ளென ஆங்கே
ஆரங் கொண்டவெம் மானைக் காவுடை யாதியை நாளும்
ஈரமுள்ளவர் நாளும் எம்மையு மாளுடை யாரே

மாணிக்கவாசகர்

முன்னானை மூவர்க்கும் முற்றுமாய் முற்றுக்கும்
பின்னானைப் பிஞ்ஞகனைப் பேணு பெருந்துறையின்
மன்னானை வானவனை மாதியலும் பாதியனைத்
தென்னானைக் காவானைத் தென்பாண்டி நாட்டானை
என்னானை என்னப்பன் என்பார்கட் கின்னமுதை
அன்னானை அம்மானைப் பாடுதுங்காண் அம்மானாய்

—திரு அம்மானை 19

—8—

ஐயடிகள்காடவர்கோன் நாயனார்

குழீஇயிருந்த சுற்றங் குணங்கள்பா ராட்ட
வழீஇயிருந்த அங்கங்கள் எல்லாம்—இழீஇயிருந்தும்
என்னானைக் காவா இதுதா தென்னாமுன்
தென்னானைக் காவுடைநீ சென்று

—பதினோராந்திருமுறை

சேக்கிழார்

அப்பூங் கானில் வெண்ணாவ லதன்கீழ் முந்நா ளரிதேடும்
மெய்ப்பூங் கழலார் வெளிப்படலும் மிக்க தவத்தோர் வெள்ளானை
கைப்பூம் புனலும் முகந்தாட்டிக் கமழ்பூங் கொத்து மணிந் திறைஞ்சி
மைப்பூங் குவளைக்களத்தாரை நாளும் வழிபட் டொழுகுமால்

ஆன செயலால் திருவானைக் காஎன் றதற்குப் பெயராக
ஞான முடைய ஒரு சிலந்தி நம்பர் செம்பொன் திருமுடிமேல்
கானல் விரவுஞ் சருகுதிரா வண்ணங்கலந்த வாய் நூலால்
மேனற் றிருமேற் கட்டிஎன விரிந்து செறியப் புரிந்துளதால்

விண்ணவர் போற்றிசெய் ஆனைக்காவில்
வெண்ணாவல் மேவிய மெய்ப்பொருளை
நண்ணி யிறைஞ்சிமுன் வீழ்ந்தெழுந்து
நாற்கோட்டு நாகம் பணிந்ததுவும்
அண்ணல்கோச் செங்கண்ணான் அரசன்செய்த
அடிமையும் அஞ்சொற் றொடையில் வைத்து
பண்ணுறு செந்தமிழ் மாலையும் பாடிப்
பரவுநின் றேத்தினர் பான்மை யினால்

நூல்

தந்திவனப் புராணம்

கமலை ஞானப்பிரகாசர்

உள்ளுறை

நூன்முகம்	i
நன்றியுரை	iv
அப்பர் வாக்கு	vi
முன்னுரை	1—111
திருமுறைகளில் திருவானைக்கா	112—114
பாயிரம்	1
நைமிசாரணிய சருக்கம்	7
திருநாட்டுச் சருக்கம்	17
திருநகர் வளமைச் சருக்கம்	26
தல மகிமைச் சருக்கம்	34
செம்புமாமுனிச் சருக்கம்	46
ஞான உபதேசச் சருக்கம்	60
ஆதி பிரம உற்சவச் சருக்கம்	88
கரியமாலயச் சருக்கம்	111
இந்திரச் சருக்கம்	126
அகத்தியச் சருக்கம்	135
நவதீர்த்தச் சருக்கம்	143
ஆரம்பூண்ட சருக்கம்	163
பின்னிரக்கம் செய்த சருக்கம்	174
இலந்தி மூடின சருக்கம்	186
பின்னிணைப்பு	

பாயிரம்

நூலின் தொடக்கத்தில் செல்வக் கணபதி வணக்கம் உளது. வடமொழியிலிருந்து தமிழில் தந்திவனப் புராணத்தைக் கூறுமுன் அவரை வணங்குகிறார் கவிஞர். அடுத்துத் தல இறைவன் வணக்கம் கூறுவர். உமை, கதிரவன், சந்திரன், சிலந்தி, யானை, நான்முகன், அகத்தியன், திருமால், இந்திரன், அக்கினி ஆகியோர் துதித்த பெருமைமிகு அகிலாண்ட நாயகியின் அடிமலரை முடிமிசைக் கொள்வார். பின் அறுமுகன் வணக்கம் கூறிச் சைவக் குரவராம் நால்வரைப் போற்றுவார். அவையடக்கத்தில் சிலந்தி வாய் நூலுக்கிரங்கிய இறைவன் தன் நூலை ஏற்பர் என்று நம்பிக்கை கொள்வர்.

சூதமுனிவர் கூறிய தந்திவனப் புராணத்தை மறையவர் எடுத்துரைத்தார். அதனை உலகநாதன் தமிழிலுரைக்குமாறு வேண்ட, விருத்தப்பாவால் ஞானப்பிரகாசர் கூறினார்.

நைமிச வனமுனிவர்க்குச் சூதமுனி அருளிய பாத்ம புராணப் படிப் பதினான்கு சருக்கங்களும் 570 விருத்தங்களும் அமைய இந் நூல் உளது.

கடவுள் வணக்கம்

விநாயகர்

புந்திவனப் புறுமுனிவர் போற்றிசெய்யச்
சூதமுனி புகழ்ந்த மேன்மைத்
தந்திவனப் புராணத்தின் தக்கவட
மொழிதிருத்தித் தமிழால் கூற
அந்திவனப் புரிசடைமேல் ஆறமைத்து
வெண்ணாவல் அமர்ந்தோன் தந்த
தொந்திவனப் புறும்ஆதிப் பெருஞ்செல்வக்
கணபதியைத் தொழுதல் செய்வாம். 1

நூல் தொடக்கத்தில் விநாயகர் வணக்கம் கூறியது.

தந்திவனப் புராணம்-இந்நூலின் பெயரைத் தொடக்கத்தில் கூறியது.

தந்தி-யானை. வனம்-கா (திருவானைக்கா). அந்திவனம்-மாலையந்திச் செக்கர் வானத்தின் நிறம். ஆறு-கங்கை ஆறு. வெண்ணாவல் திருவானைக்காவிலுள்ள நாவல் மரம். இன்றும் இத்தலத்தில் நாவல்மரம் ஒன்று உளது. அமர்ந்தோன்-விரும்பி வீற்றுள்ளவன்; சிவபெருமான் ஆதிப் பெருஞ் செல்வக்கணபதி எனப்பெயர் உரைக்கப் பெற்றது. திருநகரச் சருக்கத்தில் சிவ பெருமானை ஆதிப்பெருஞ்செல்வர் எனக் குறிப்பிடுவதையும் காண்க. (81).

சிவபெருமான்

சீர்கொண்ட இமையவல்லி செங்கதிரோன்
வெண்திங்கள் சிலந்தி யானை
தார்கொண்ட சதுமுகத்தோன் தமிழ்ப்பொதியக்
குறுமுனிவன் சத்த தீர்த்தம்
கார்கொண்ட நிறம்தருமால் விண்ணரசு
வன்னியொடு கருதி ஏத்த
ஏர்கொண்ட வெண்ணாவல் நிழல்மகிழும்
கற்பகத்தை இறைஞ்சுவோமே. 2

நூலுக்குரிய தலைவன் வாழ்த்துக் கூறியது.

இமையவல்லி-உமை. செங்கதிரோன்-சூரியன். வெண் திங்கள்-சந்திரன். சிலந்தி-யானை பற்றிய கதை இந்நூலில் சிலந்திமுடினசருக்கத்தில் காணலாம். தார்-மாலை. சதுமுகத் தோன்-பிரம்மன். குறுமுனிவர்-அகத்தியன். சத்ததீர்த்தம்-ஏழு தீர்த்தம். மால்-திருமால் (விஷ்ணு). விண்ணரசு-தேவர்கள் தலைவனாம் இந்திரன். வன்னி-அக்கினி. கற்பகம்-சிவபெருமான்.

அகிலாண்ட நாயகி

நகிலாண்ட மணிவடமும் நகைமுகமும்
கருணைபொழி நயன வேலும்
துகிலாண்ட துடிமருங்கும் தொடிக்கரமும்
குண்டலப்பொன் தோடும் காதும்
முகிலாண்ட கருங்குழலும் கருதும்அடி
யவர்தமக்கு முன்னே தோன்றும்
அகிலாண்ட நாயகிதன் அடிமலர்என்
முடிமிசைமேல் அழுத்து வோமே. 3

திருவானைக்கா அம்மை வணக்கம் கூறியது.

நகில்-முலை. நயனவேல்-கண்ணாகிய வேல். துடிமருங்கு-உடுக்கை போன்ற இடை. தொடி-வளை. முடிமிசை தலைமேல் (வைத்து).

ஆறுமுகக் கடவுள்

முந்துமுகப் புடன்அளக முகிலாட
வளையாட முலைகள் ஆட
இந்துமுகத் தியர்ஆடி இனிதேற
மணற்குன்றில் ஏறி மேயும்
நந்துமுகத் தண்தரள மணிகொழிக்கும்
காவிரிசூழ் ஞான பூமி
ஐந்துமுகக் கடவுள்அருள் ஆறுமுகக்
கடவுளையாம் அன்பு கூர்வாம் 4

அளகம்-கூந்தல். இந்து முகத்தியர்-மதிபோன்ற முக முடைய பெண்கள். நந்து-சங்குவகை. தரளம்-முத்து. திருவானைக் காவில் பாயும் காவிரியின் பெருமை கூறியது. ஐந்துமுகக் கடவுள்-சிவபெருமான். அறுமுகக்கடவுள்-முருகன். கூர்-மிகுதி.

நால்வர்

காழிதனில் திருஞானம் பெற்றவன்பொற்
கழல்போற்றி கற்றூண் ஒன்றால்
ஆழிதனைக் கடந்தவன்தன் அடிபோற்றி
எங்கோன்பொன் அடிகள் நோவ
ஏழிசைமுத் தமிழ்அதனால் ஏவல்கொண்டோன்
கமலஅடி இணைகள் போற்றி
வாழிஎனச் சிறந்ததிரு வாசகஇன்
அமுதளித்தோன் மலர்த்தாள் போற்றி 5

காழி-சீர்காழி; திருஞான சம்பந்தர் பிறந்த திருத்தலம். **ஆழி-கடல்.** கற்றூண் ஒன்றால் (கடலைக்) கடந்தவன்-திருநாவுக்கரசர். எங்கோன் - சிவபெருமான். தமிழதனால் ஏவல் கொண்டோன்- சுந்தரர் (இங்கு அவர் தம் மனைவி பரவையிடம் சிவபெருமானைத் தூதனுப்பிய செய்தியின் பெருமை தமிழுக்கு ஊட்டப் பெறுகிறது.) திருவாசக இன்னமுது அளித்தோன்-மாணிக்கவாசகர்.

அவையடக்கம்

எந்நூலும் தேர்ந்துபுகழ் சூதன்அரு
மாமுனிவர்க்கு இனிது கூறும்
முன்னூலாம் புராணத்தின் முறைமைதனைச்
செந்தமிழால் மொழித லாலே
சின்னூலும் தெரியாத என்னூலும்
இவ்வனத்தில் சிலந்தி வாயில்
புன்னூலுக்கு இனிதிரங்கிப் பொன்மகுடம்
சூட்டுகின்ற புனிதற்கு ஆமே. 6

எந்நூலும்-எந்தநூலும். சூதன்-சூதமுனிவர். அருமா முனிவர்-நைமிச வனத்து முனிவர்கள். இவ்வனம்-திருவானைக்கா. சிலந்தி கதை இங்குக் கூறப்பெற்றுளது. சிலந்தி நூலை விரும்பிய சிவபெருமான் என் நூலையும் ஏற்பான். நூல் என்பது இங்கு இருபொருள் பட வந்தது.

குலசேகரமண் டபத்துஎந்தை
குலவும் பிரம உற்சவத்தின்
தலமே வியமா தவத்தோர்கள்
தானச் சமயத் துடன்இருந்து

புலன்மா முனிவர்க்கு அருள்சூதன்
புகழ்தந் திவனப் புராணத்தை
நலமா மறையோர் விரித்துரைக்க
நாடிக் கேட்கும் வேளைதனில், 7

குலசேகர மண்டபம்-விழாக் காலங்களில் இறைவன் எழுந்தருளும் மண்டபம். புலன்-அறிவு. மறையோர்-அந்தணர்.

வேறு

அவனியோர் போற்றும் அந்த அருஞ்சனப தன்னில் மிக்க
தவமுனி உலக நாதன் தக்கஇப் புராணந் தன்னை
எவரும்எண் தமிழ்நூ லாக இசைத்திட வேண்டும் என்ன
உவமைஇல் தமிழால் யானும் உரைத்தனன் விருத்தப் பாவால். 8

அவனியோர்-உலகமக்கள். உலகநாதன்-என்ற வள்ளல் பெயர் காணப்படுகிறது (உலகநீதி என்ற நூலை இயற்றியவர் இவர் என்பர்.) இந்நூல் விருத்தப்பாவால் அமைந்தது.

ஆசிரியர்

கற்பார் மகிழத் தந்திவனக்
கடவுள் புராணக் கதைபொழிப்பின்
சொற்பான் மைபெறும் வடநூலைத்
துலங்கு தமிழால் தொடுத்தமைத்தான்
நற்பார் புகழும் தென்கமலை
ஞானப் பிரகா சன்அந்தப்
பொற்பார் ஞான தேசிகனாம்
புகழ்செங் கமல பொற்பாதன் 9

பொழிப்பு-சுருக்கம். துலங்கு-விளங்குகின்ற. பார்-உலகம். பொற்பு-அழகு. ஆசிரியர் பெயர் இங்கு அமைந்துள்ளது.

நூல்

வேறு

காரணியும் நெடுஞ்சோலைக் களிவண்டு ஆர்க்கும்
காண்தருநை மிசவனத்தில் கலந்து வாழும்
ஆரண நூல் தருமுனிவர் கேட்கச் சூதன்
அருள்பாத்ம புராணத்தின் அடைவு நோக்கி

ஏரணியும் சருக்கம்ஈ ரேழது ஆக
இசைவிருத்தத் தொகைஐந்நூற்று எழுபது ஆகத்
தாரணிஎண் செந்தமிழால் வகுத்த மேன்மை
தந்திவனப் புராணத்தைச் சாற்றல் செய்வாம். 10

கார்-மேகம். ஆர்க்கும்-ஒலிக்கும். ஆரணம்-வேதம். ஏர்-அழகு. ஈரேழ் சருக்கம்-பதினான்கு சருக்கம் இந்நூலில் விருத்தம் ஐந்நூற்று எழுபது எனத் தெரிகிறது. (இச் சுவடியில் 176 என்ற எண்ணுள்ள பாடல் இல்லை.)

பாத்ம புராணம் இதன் முதல்நூல் என்பது இதனால் தெரிகிறது.

நைமிசாரணிய சருக்கம்

நைமிசவனம் பற்றி அறிவன பின் வருமாறு: அவ் வனமே சிவன் போல் விளங்கும். அவ் வனத்திலுள்ள மரங் களும் தவம் செய்வன போலும்! மான் போன்ற விலங்குகள் அன்புடன் வாழும். கிளிகள் மறையறிவு பெற்று விளங்கும். விலங்கு, பறவைகள் தத்தம் பகை நீங்கி வாழும். இறைவ னுக்கிட்ட மலர்கள் எங்கும் இறைந்து கிடக்கும். வற்கலை கள், தவக்கொடி போல் தோன்றும். முனிவர்கள் நீரில் மூழ்கித் தவம் செய்வர். சைவச் சின்னங்கள் அணிவர். சிவன் புகழையே எடுத்துரைப்பர். வஞ்சமற்ற வினை நீங்கித் தருமம் செய்வர். புலனடக்கம் பூண்பர். இந்திரன் வாழ்வையும் துரும்பென மதிப்பர். சருகு கனி கிழங்குண்பர். அவர்கள் தீர்க்க சத்திரம் எனும் வேள்வி செய்யும் போது அவ்வேள்வி காணச் சூதமுனி வந்தார். அவரை அவ்வன முனிவர்கள் வரவேற்று உலகில் மேன்மை பெற்ற தலம், மூர்த்தி, தீர்த்தம் பற்றிக் கூற வேண்டினர். அவ்வாறு கூறும் போது சிவன் நந்திக்குக் கூற அவன் சனற்குமாரர்க்கும் அவர் வியாசருக்கும் கூற அவர் தமக்குக் கூறியவாறு முழுதும் சொல்வேன் எனப் புராணம் தொடங்குவார் சூதமுனி.

சிவபெருமான் நந்திக்கன்றி அம்பிகைக்குச் சொன்ன அத்தல மகிமை கூறுதற்கரியது. நாவலந்தீவின் தென்பால் சோழ நாட்டில் விழவறா வீதி நாடு என்பது நாடுகளுக்கெல்லாம் தலைமை பெற்றது. அங்குப் பாயும் காவிரியின் தென் கரையில் 'ஆனைக்கா' என்பது உலகுதொழும் சிறப்புடையது.

இப் புராணத்தைச் சொல்வோர் கேட்க விரும்புவோர் இறை வனருளால் வினைநீங்கி உலகில் புகழும், நல்வாழ்வும், பொருளும், மேலான கதியும் பெறுவர் என்பர் ஆசிரியர்.

1. நைமிசாரணிய சருக்கம்

நைமிச வனம்

வேறு

பொற்கலை களபம் ஆரம் பூண்பவர் தம்மைப் போல்வார்
வற்கலை களபம் நீறு மணிகொள்தாழ் வடமும் பூண்பார்
சிற்கலை மதிமு டித்த சிவன்தனக் கு அன்பர் ஆவார்
நற்கலை உணர்வார் மேவு நைமிச வனம்உ ரைப்பாம். 11

கலை-ஆடை. களபம்-வாசனைக் கலவை. ஆரம்-சந்தனம். வற்கலை-மரவுரி- மணிகொள் தாழ்வடம்-மார்பில் தாழ்ந்த அக்கமணி மாலை.

மானுரு மருவிப் பச்சை வல்லியைப் புல்லி வாசத்
தேனுறு செவ்வி பெற்ற செழுமலர்க் கடுக்கை தாங்கி
ஊனுறு வேங்கை யின்தோல் உரகமும் புனைந்து மேன்மை
தானுறு தபோவ னந்தான் சங்கரன் எனவி ளங்கும். 12

சிவபிரானுக்கும் வனத்திற்கும் சிலேடை. மான் இருத்தல், பச்சைக் கொடியைத் தழுவுதல் (உமை, கொடி), கொன்றை (கடுக்கை) மலர்களைச் சூடியிருத்தல், வேங்கைத் தோல் அணிந்திருத்தல் ஆகியவற்றால் சிவனைப் போல் வனம் விளங்கியது.

மரங்கள் வேள்வி செய்தல்

வேறு

பிறந்தசெங் காந்தளின் பெருங்க ரத்திடை
நிறம்தரு மலர்மது நெய்வி டுத்துநல்
அறம்தரு வனந்தனில் அமைத ருக்களும்
திறம்தரு வேள்வியே செய்தல் போலுமால்! 13

மரங்களின் செயல் வேள்வி செய்வதை ஒத்திருத்தல். செங்காந்தள் மலர் யாகத்தீயாகவும், மலர்பொழியும் தேன் யாகத்தீயிலிடும் நெய்யாகவும் உருவகிக்கப்படுகின்றன.

ஆல்-அசை

பாம்பு யோகம் செய்தல்

புடையுறு முழையி டத்துப் பொருந்தியே இருந்து மெய்யைத்
தடையுற அணைத்து வாயுத் தாரணை தனையும் செய்தே
அடையும்அக் காயம் பேணித்து அமைந்திடும் அரவு தானும்
இடையறா யோகம் சாதித்து இருப்பது போலும் அன்றே. 14

முழை-குகை. வாயுத் தாரணை-காற்றை அடக்கிச் செயலற்றிருத்தல். காயம்-உடம்பு. அரவு-பாம்பு. யோகிகள் போல் குகையை அடைந்து, உடம்பை ஓரிடத்தில் இருத்திக் காற்றை அடக்கி இருப்பதால் பாம்பு யோகம் செய்வது போல் உள்ளது.

மானின் அன்பு

வேறு

சருகுரு பாத்துநீர் தன்னில் கன்னிமான்
அருகுதன் நிழல்மருண்டு அதன்வி டாய்கெடப்
பருகுதற் குறப்புனல் பற்று மோவெனப்
பெருகும்அன் புடன்அயல் பெயர்ந்து செல்லுமால் 15

மான்-தன்னிழலைப் பிணைமான் எனக் கருதி நீரளிக்கத் தான் உண்ணாது அகலும் அன்புநிலை இது. ஆல்-அசை.

கிளியின் அறிவு

தழைபயில் சோலைசூழ் தபோவ னந்தனில்
பழையமா தவர்உரை பயின்ற பான்மையால்
உழைபயில் சிறுவர்தாம் ஓது வேதநூல்
பிழைபல திருத்துவ பேசும் கிள்ளையே. 46

முனிவர் கூறும் வேதமொழிகளைக் கேட்டுப் பயின்ற கிளிகள், சிறுவர் ஓதும் மொழிகளிலுள்ள பிழைகளைத் திருத்தும். உழை-அருகு. கிள்ளை-கிளி.

உயிர்பகை நீங்கல்

இயங்கிள மானும்அவ் இகல்கொள் வேங்கையும்
வியங்கெழு சிங்கமும் மிகுத்த வேழமும்
புயங்கமும் கலுழனும் பொருந்தி ஒன்றியே
உயங்கவே பகையற உறவு கூருமால். 17

இயற்கையில் பகைமை கொண்ட மானும் வேங்கையும், சிங்கமும் யானையும், பாம்பும் கருடனும் பகையற்று உறவாக இவ் வனத்தில் வாழும்.

வியம்கெழு-பெருமைமிகுந்த. வேழம்-யானை. புயங்கம்-பாம்பு. உயங்க-வருந்த.

இறைவன்மேல் மலர்கள்

வேறு

போற்றும்ஆ லயங்கள் தோறும் புனிதனுக்கு இனிது சாத்தி
மாற்றிடு மலர்கள் எங்கும் வாட்டமுற்று அமையும் காட்சி
தேற்றிடும் தவத்தோர் தம்பால் சிலைமதன் விடுத்த வாளி
தோற்றிடும் பரிம ளித்துள் சோபமுற்று அயர்தல் போலும் 18

தவத்தோர்மேல் மன்மதன் எய்த அம்புமலர்கள் தோற்று வீழ்ந்து கிடப்பதுபோல் ஆலயங்களில் இறைவன் மீது சாத்திப் பின் களைந்த மலர்கள் (நிர்மால்யம்) வாடிக் கிடக்கும் காட்சி தெரியும்.

புனிதன்-சிவபெருமான். தேற்றிடும் - காமமயக்கங்களிலிருந்து உய்விக்கும். சிலை மதன்-கரும்பு வில்லுடைய மன்மதன். வாளி-மலர் அம்பு. பரிமளித்து-மணந்து. உள்சோபம்-மனச்சோர்வு.

மயிலின் செயல்

வேறு

மற்றயல் மயில்களும் மயில்கொள் சாயலார்
பற்றையே தவிர்ந்தவர் பதம்வைப் பாம்இடம்
செற்றைகண் டகமறச் செறிந்த பீலியின்
கற்றையாம் அலகினால் கடிதொ துக்குமால். 19

மயில்கள் துறவிகள் நடந்து செல்லுதற்கு எனத் தம் பீலிகளை உகுத்து நல்வழி அமைக்கும்.

செற்றை-உலர்சருகு முதலியன. கண்டகம்-முள். அலகு-துடைப்பம்.

மரவுரி புலர்த்தல்

வேறு

விரைந்துதென் புனலில் ஆடி மெய்த்தவத் தவர்அ விழ்த்து
மரந்தொறும் உறவி ரித்த வற்கலை புலரும் காட்சி
உரம்தரும் அருந்த வத்தின் ஒப்பிலா மேன்மை காட்ட
நிரந்தரம் உறஉ யர்த்த நெடுந்துகில் பதாகை போலும். 20

தெண்புனல்-தெளிந்தநீர். வற்கலை-மரவுரி. உரம்-மன வலிமை. நிரந்தரம்-எப்போதும். பதாகை-கொடி.

மறையவர் செயல்

ஆதர வுடனே தூநீர் ஆடுவார் அன்பி னாலே
நாதனைப் பூசை செய்வார் நாவினால் துதிப்பார் சிந்தை
நீதறத் தியானம் செய்வார் செபம்செய்வார் வேள்வி செய்வார்
ஓதுமா மறைகள் பாரில் உயிர்பெற்று நடத்தல் போல்வார். 21

மறையவர் செயல்கள் கூறப்படுகின்றன.

நாதன்-சிவபெருமான். திருமறைகள் உயிர் பெற்று நடத்தல் போல் மறையவர் வாழ்ந்தனர்.

ஓதுவார் ஓது விப்பார் உறுசமித் தொடுத ருப்பை
காதுவார் காது மேவு கண்டிகை நீறுஅ ணிந்து
போதுவார் போது தன்னைப் புலர்வதன் முன்னம் சென்று
கோதுவார் கோது வாரக் குழுவினால் குழுவும் என்றே. 22

சமித்து-ஓமவிறகு. போது - மலர்தற்கு முன்னுள்ளபூ குழு-கூட்டம்.

தவமதில் இளைத்து முத்திச் சாதனைக்கு இளைத்தி டாதார்
அவமுறு செய்கை இல்லார் ஐயம்இல் காட்சி உள்ளார்
சிவனுறு புகழ்உ ரைப்பார் தீயவை உரைத்தி டாதார்
பவநெறி தன்னில் செல்லார் பரானந்த நிலையில் செல்வார் 23

இளைத்து, இளைத்திடாதார்-உரைப்பார், உரைத்திடார்-செல்லார், செல்வார் என்ற முரண்தொடையைக்கண்டு மகிழலாம். அவம்-கேடு. ஐயமில்-சந்தேகம் அற்ற. காட்சி-அறிவுப் பார்வை. பவநெறி-பிறப்பைத் தரும் பாவவழி. பரானந்தம்-மேலான இன்பம்.

வேறு

விதித்திடு நன்னெறி மிக்க மாதவர்
கதித்தெழு செஞ்சடைக் கற்றை, மூலமோடு
உதித்தருஞ் சுழுமுனை ஊடு சென்றுமேல்
கொதித்தெழும் செந்தழல் கொழுந்து போலுமால். 24

கதித்து-எழுச்சியுற்று. மூலம்-தொடக்கம். (மூலாதாரம்) சுழுமுனை-ஆறாதாரங்களையும் ஊடுருவிநிற்கும் நாடி. ஆல்-ஈற்றசை. சடைக்கற்றை தழற்கொழுந்து போலும்.

இங்கித வசனமே இசைக்கு மாதவர்
தங்குவெண் நரையினில் தயங்கு நீடொளி
அங்கவர் நாவினில் அமைந்த பாரதி
பொங்கமே எழிற்புறம் போந்த போலுமால். 25

இங்கிதம்-இனிமை. பாரதி-கலைமகள். ஆல்-ஈற்றசை. மாதவர் முடி ஒளி சரசுவதியின் வெண்ணிறம் போலும்.

வஞ்சமா னவையெலாம் மறப்பர் அப்பொருள்
நெஞ்சக மீதினில் நினைவர் நெஞ்சுறும்
சஞ்சல வல்வினை தவிர்வர் சந்ததம்
எஞ்சலில் தருமமே இனிது செய்வரால். 26

அப்பொருள்-கடந்த பொருளாம் இறைவன். சஞ்சலம்-கவலை. சந்ததம்-எப்போதும். எஞ்சலில்-குறையாத. ஆல்-ஈற்றசை. மறப்பர், நினைவர்—தவிர்வர், செய்வர் என்பன முரண் தொடைகள்.

மலர் கொய்தல்

நிருத்திய பூசனை செய்ய வாவியில்
பருத்தபங் கயமும்உற் பலமும் கொய்வது
வருத்துறும் அனங்கவேள் வாளி ஆம்எனும்
கருத்தினால் அவைகளைக் களைதல் போலுமால். 27

வாவி-குளம். பங்கயம்-தாமரை மலர். உற்பலம்-குவளை மலர். இவ்விரு மலர்களும் மன்மதனுக்கு அம்புகள். அனங்கவேள்-மன்மதன். வாளி-அம்பு. ஆல்-ஈற்றசை. குளத்திலிருந்து இம்மலர்களைப் பூசைக்காகப் பறிப்பர்.

வணங்கிக் கேட்பது

தாழ்ப்பது சிரம்அரன் தன்னைப் போற்றியே
மீட்பதுஐம் புலன்களின் மேவு சிந்தையே
நாட்பது மப்பத நாதன் பான்மையே
கேட்பது பரகதி கிடைப்பது எண்ணியே. 28

தாழ்ப்பது-வணங்குவது. ஐம்புலன்கள் - கண், மூக்கு, வாய், செவி, மெய். நாட்பதுமம்-புதிய தாமரை. பரகதி-மேலான நிலை.

விண்ணோர் செல்வமும் வேண்டார்

வேறு

கலைகள்வற் கலைக ளேனும் காய்கனி உணவ தேனும்
நிலையிலாது அவைஉ ணர்ந்த நீதியர் ஆத லாலே
தலைமைசேர் அளகை வேந்தன் தரும்பெருஞ் செல்வம் தானும்
தொலைவில்இந் திராதி வாழ்வும் துரும்பென விரும்பு றாரே. 29

கலை-ஆடை. வற்கலை மரவுரி. அளகை வேந்தன்-செல்வத்திற்கு அதிபதியான குபேரன். இந்திராதி-தேவர் அரசனாம் இந்திரன் முதலானவர். விரும்புறார்-விரும்பார்.

ஒற்கமில் நீர்வார்ந் தானும் நிரந்துபுல் அருந்தி மிஞ்சும்
நெற்களும் சருகு நீரும் நிலத்துவிழ் கனியி னுள்ள
வற்கமும் கிழங்கும் கிண்டி வழங்கிய கிழங்கு தானும்
சொற்கஆர் அமுதம் என்னத் துய்த்தினிது இருப்பர் அன்றே. 30

ஒற்கம்-வறுமை, குறைவு. வற்கம்-வருக்கம். சொற்கம்-வானுலகு துய்த்து-உண்டு.

வேள்வி நடத்தல்

பேறினி தாக நல்கும் பெருவேள்வி அனைத்தின் உள்ளும்
வீறியது இதுவே என்று மெய்த்தவக் குழுவில் உள்ளோர்
தேறிய மனத்தர் ஆகித் தீர்க்கசத் திரமது என்றே
கூறிய வேள்வி தன்னைக் குறைவுஅற நடத்தி னார்கள். 31

வீறியது-பெருமை பெற்றது. வேள்வி-யாகம் (தீர்க்க சத்திரம்.)

சூதன் வரவு

அந்தநல் வேளை தன்னில் அறிவினால் தவத்தால் மிக்கோன்
முந்திய காமம் ஆதி மூஇரு பகைஅடர்த்தோன்
சிந்தையும் செய்கை தானும் சிவனிடத்து உரிமை பூண்டோன்
வந்தனன் வேள்வி காண மாமுனி சூதன் என்பான். 32

காமமாதி மூவிரு பகை-காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம். அடர்த்தோன்-வென்றோன்.

முனிவர் வரவேற்பு

எண்ணிய முனிவர் எல்லாம் எதிர்கொண்டு பணிந்து போற்றி
நண்ணிஆ தனத்துஇ ருத்தி நயந்துநல் உபசா ரங்கள்
புண்ணியன் தனக்கு நல்கிப் போதுதல் குறியா முன்னே
பண்ணிய தவமேது என்னப் பரிந்துநல் வரவுஉ ரைத்தார் 33

ஆதனம்-இருக்கை, குறியாமுன்-குறித்ததும். பரிந்து-விரும்பி.

சூதன் விடை

தொன்மைநூல் முனிவர் தம்மைச் சூதமா முனிவன் நோக்கித்
தன்மையே வளரத் தீர்க்கச் சத்திர வேள்வி தன்னில்
புன்மையில் சிறப்பு நாடிப் போந்துநும் குழுவின் எய்தும்
நன்மையின் மிக்கது ஆன நன்மையேது எனநவின்றான் 34

தன்மை-நற்பண்புகள். புன்மைஇல்-குற்றமில்லாத.

சூதறி வுடன்இவ் வாறு மொழிந்துநன் முறைவ ழாத
மாதவர் தம்மை நோக்கி மனமகிழ்ந்து இனிதி ருக்கும்
சூதமா முனிவன் தன்னைத் துணைக்கரம் குவித்துஇ றைஞ்சி
ஓதரும் பெருந்த வத்தோர் ஒருமொழி உரைக்க லுற்றார். 35

வழாத-கெடாத. துணைக்கரம்-இருகரம். ஓதரும்-உரைத் தற்கரிய.

முனிவர் வேண்டல்

மலர்தரும் உலகில் தீர்த்த மகிமைகள் பலவும் மிக்க
பலதல மகிமை தானும் பகர்ந்தனை நம்பால் அன்பால்
திலதமார் தலம்இ லிங்கம் தீர்த்தமும் மேன்மை பெற்ற
நலதலம் ஒன்று தன்னை நவின்றிட வேண்டும் என்றார். 36

மலர்தரும்-பரந்த. தீர்த்த மகிமை கூறியவர் தலமகிமை கூறியதும் கேட்டு மேலான தலம், மூர்த்தி, தீர்த்தம் கேட்டல். திலதம்-திலகம் போல் சிறப்பானது. நவின்றிட-சொல்ல.

சூதன் உரை

பலத்தினில் ஆத ரத்தால் பகர்ந்திடும் அவரை நோக்கி
நலத்தசொல் வியாதன் பாத நளினங்கள் உறவ ணங்கி
நிலத்தினுள் சிவால யங்கள் நெடிதுற நினைந்து மிக்க
தலத்தினில் மேன்மை பெற்ற தலம்ஒன்று சாற்றல் உற்றான். 37

பலன்-பயன். வியாதன்-வியாசமுனி. பாதநளினம்-திரு அடித்தாமரை. நெடிதுற-நீண்ட நேரம். சாற்றல்-சொல்லல்.

வரலாறு

கனக்கமெய் அன்பு வைத்த கயிலைவாழ் கடவுள் நந்தி
தனக்கருள் செய்த வாறு சனற்குமா ரற்கு நல்க
மனக்கரு ணையின்வி யாத மாமுனிக்கு அவன்வி ளம்ப
எனக்கு அவன்உரைத்த வாறு யான்உமக்கு உரைப்பேன்என்றான்

சிவன் நந்திக்கும், நந்தி சனற்குமாரற்கும், அவன் வியாசனுக்கும் கூற வியாசன் சூதனிடம் சொன்ன வரலாறு.

கனக்க-பெருமைப்பட. கடவுள்-சிவபெருமான். விளம்ப-சொல்ல.

சுத்தராம் முனிக ணங்கள் சூழ்ந்தினிது இறைஞ்சிக் கேட்பச்
சித்தமே மகிழ்ந்து சூதன் செவியினால் பருகத் தக்க
புத்தமுது அனைய பாற்ப புராணத்தில் வியந்து கூறும்
அத்தல மேன்மை தன்னை அடைவினில் விளம்பல் உற்றான் 39

சுத்தராம்-தூயவராகிய. பாற்ப புராணத்தில் வியந்து கூறும் தலத்தின் சிறப்புக் கூறல்.

நம்பர்தாம் கயிலை தன்னில் நந்நிகே சனுக்கே அல்லாது
அம்பிகை தனக்குச் சொன்ன அத்தல மகிமை தன்னை
நும்பொருட்டு இயன்ற வாறு நுவலுவன் அதனை முற்றும்
செம்பது மத்தோ னேனும் செப்புதற்கு எளிதன்று என்றான்.40

நம்பர்-சிவபெருமான். நந்திக்குமட்டுமன்றி அம்பிகைக்கும் அப்பெருமை கூறியது. நுவலுவன்-சொல்வேன். செம்பதுமத்தோன்-நான்முகன். பிரம்மாவாலும் அதன் பெருமை சொல்லுதற்கரியது.

விழவறா நாடு

ஆடக வரையின் தென்பால் அணிநாவல் தீவு தன்னில்
தோடலர் பொழில்கள் சூழும் சோழபூ தலத்து மிக்க
வீடரும் போகம் நல்கும் விழவறா வீதி நாடாம்
நாடதுஒன்று அதுவே எல்லா நாட்டினும் தலைமை யாமால் 41

ஆடகவரை-மேருமலை. நாவல் தீவு-பாரத நாடு. தோடலர்-பூஇதழ் விரியும். சோழபூதலம்-சோழநாடு. வீடரும் நீங்காத விழவறாவீதிநாடு என்பது சோழநாட்டின் உள் நாடு. ஆல்-அசை.

ஆனைக்கா

விழுவறா வீதி நாட்டின் மிக்க காவிரிநீ ரத்து
அழகுறு தென்பால் மேவும் ஆனைக்கா என்னும் பேரால்
பழமறை போற்று கின்ற பதிஒன் றுஉண்டு அதுவே வையம்
தொழுஉயர் பதிதான் என்றே சூதமா முனிவன் சொல்வான். 42

வையம்-உலகம். பதி-ஊர்.

புராணம் கேட்ட பயன்

வேறு

விரும்புறுநை மிசவனத்து முனிவர் கேட்க
வேதநெறிச் சூதமுனி விளம்பு மார்க்கம்
தரும்பொருளும் சொல்லும்அடை விரிவ்வி ரித்துத்
தந்திவனப் புராணத்தைச் சாற்று வோரும்
அரும்பொருள்கேட் டுகப்போரும் செம்பு நாதன்
அருளினால் வல்வினைகள் அனைத்தும் நீங்கிப்
பெரும்புவியின் மிருபுகழும் குன்றா வாழ்வும்
பெரும்பொருளும் பரகதியும் பெற்று வாழ்வார். 43

கேட்டோர்-நைமிச வனத்து முனிவர்கள். கூறியவர்-சூதமுனிவர். புராணத்தின் பெயர்-தந்திவனப் புராணம். கோவில் கொண்டருளியவர்-செம்புநாதர். கேட்ட பயன்-வினை நீங்கி உலகில் புகழும் வாழ்வும் பொருளும் மேலான கதியும் பெறுதல்.

நைமிசாரணிய சருக்கம் முற்றும்
(முதல் விருத்தம் நீங்கலாக விருத்தம் 42) (10+33=43)

2 திருநாட்டுச் சருக்கம்

தேவர்கள் நாடு போன்ற விழுவறா வீதி நாட்டின் வளம் பெரிது. இந்நாட்டில் உழவுத் தொழில் இடையறாது நடைபெறும். பலாவின் தேன் பாயும். வளமும், புகழும், தருமமும், முத்தமிழும் தழைக்கும்.

துன்புறுவன எவ்வுயிருமில்லை. சூது விளையாட்டில்லை. களவின்பமன்றிப் பொருட்களவு இல்லை.

இச் சருக்கத்தில் ஏழாம் பாடல் முதல் பதினான்காம் பாடல் வரை ஈற்றுச்சீர்கள் ஒன்றிய மடக்கணி பொருந்தச் சொல்வளம் பெருகக் காணலாம்.

இந் நாட்டில் முழவுகள் ஆர்க்கும். புண்ணியம் செய்ய மக்கள் ஆசைப்படுவர். ஆறுகளில் பல புள்ளினம் நிறைந்திருக்கும். சங்குகள் முத்துதிர்க்கும். பெண்கள் பலவகை ஒப்பனை செய்து கொள்வர். பூவைகள் காவியம் பாடும். யாவரும் நன்னூல்களைக் கற்பர். அறிஞர்கள் இத் தலத்தில் நீங்காது வாழ்வர். எங்கும் அறக்கொடி விளங்கும். நீர்த்தடமெங்கும் பூமணம் வீசும். ஆலைகளெங்கும் கரும்புப் பாகு மணம் வீசும். அன்ன சத்திரங்களில் உணவு வழங்குவர். தமிழ்ப் புலவர்க்கு உயர்ந்த கொடை நல்குவர்.

வீடுகளெங்கும் கோலமிடுவர். பழியற்ற வழியில் மக்கள் செல்வர். இத்தகைய பல வளமும் நலமும் பெற்ற இந் நாட்டை மண்ணுலகில் எந்த நாடும் ஒவ்வாது.

வானவர் நாடு போன்று இந் நாடு காட்சி அளிக்கிறது. ஆகாய கங்கை போன்ற பொன்னி எனும் ஆறு இந் நாட்டை விளங்கச் செய்கிறது.

2. திருநாட்டுச் சருக்கம்

உளம்பெறும் அழகு தன்னால் ஓங்கிய தருக்கள் தம்மால்
தளம்புறாப் பெரும்போ கத்தால் தழைத்திடும் செல்வந் தன்னால்
விளம்புறும் அமரர் நாடாம் விழவறா வீதி நாட்டின்
வளம்பெரி தேனும் ஈங்கு வல்லவா சொல்லு வோமே. 44

தருக்கள்-மரங்கள். தளம்புறா-சிந்தாத. பெரும்போகம்-பேரின்பம். அமரர் நாடு–தேவருலகம். வல்லவா-முடிந்த அளவு.

உழவர் செயல்

வேறு

ஓரிடத்தில் விழாக்கோலி உழுவார் மற்றும்
ஒருபுறத்து விரைதெளிப்பார் உழக்கி மற்றோர்
பாரிடத்தில் இளநாற்றுப் பறிப்பார் வேறோர்
பக்கம்நடு வார்களைகள் பறிப்பார் ஓர்பால்
சீரிடத்தில் ஒருமருங்கில் கதிர்கள் கொய்வார்
செந்நெலொரு புடைகுவிப்பார் சிறக்கும் நாடு
வேரிடத்தில் பலாச்சுளையின் செழுந்தேன் பாயும்
வியனாடு விழவறா வீதி நாடே. 45

விழாக்கோலி-பொன்னேர் விழாச் செய்து. விரை-விதை. உழக்கி-உழுது பதப்படுத்தி. ஒருபுடை-ஒரு பக்கம்.

நெல் விதைத்து, அறுவடை செய்யும் செயல் விளக்கமும் வேர்ப் பலாவில் தேன் பாயும் இயற்கை வளமும் சுட்டப் பட்டுள்ளன.

நாட்டின் வளம்

வேறு

பெரும்பயன் உதவும் நாடு பெருவளம் பயிலும் நாடு
தரும்புகழ் படைக்கும் நாடு தருமமே தழைக்கும் நாடு
கரும்புமுத்து அரும்பும் நாடு காவிரி பெருகும் நாடு
விரும்புமுத் தமிழ்சேர் நாடு விழவறா வீதி நாடே. 46

கரும்பிலே முத்துப் பிறக்கும் செய்தி காணப்படுகிறது. விழவறா வீதி நாட்டில் காவிரியும், முத்தமிழும் பெருகிவரும் பெருமை உளது.

தமிழின் பெருமையை ஆசிரியர் இடைவிடாது கூறுவர்.

வேறு

பரந்துபங் கப்படும் பழன ராசியே
திருந்திய கவடது செறியும் தாருவே
பொருந்துவ சிறையினைப் புட்கு லங்களே
அருந்தனம் மறைப்பவர் ஆடல் மாதரே. 47

பங்கப்படும்-தீமையுறும்; சேறுபடும். கவடது செறியும்-கவடம் நிறையும்; கிளைகள் செறிந்திருக்கும். பொருந்துவ சிறையினை-சிறைப்படும்; இறக்கை பெறும். அருந்தனம் மறைப்பவர்-செல்வத்தை மறைக்கும் கீழோர்; மார்பைக் கச்சையால் மறைப்பவர் என இருபொருள்பட அமைந்துள்ளது இப் பாடல்.

களவு

வேறு

வளவுதோ றிளைஞர் தம்மின் மகிழ்விளை யாட்டின் அல்லால்
உளவுசேர் சூது காணா. ஓடியே கன்னம் கொள்ளும்
அளவிய விழியார் மாதர், ஆடவர் உள்ளம் எல்லாம்
களவுசெய் திடுவது அன்றிக் களவெனப் படுவது இன்றே. 48

வளவு-வீதி. இன்ப விளையாட்டில் உளவு, சூது, கன்னம் போன்ற களவுத் தொழிலுக்குரிய சொற்களைப் பெய்து களவின்பத்தைச் சிலேடை நயம் தோன்ற அமைத்துள்ளார்.

மணங்கொள்பூஞ் சோலை அல்லால் மாதளை பயிலா. ஓசைக்
கணங்கொள்வங் கியத்துள் அல்லால் காளமே குறிப்பது எய்தா.
பணங்கொள்ஆ டரவம் அல்லால் பகருநாவு இரண்டு மேவா.
இணங்குபூ ணாரம் அல்லால் இசைந்திடா வயிரந் தானே. 49

மாதளை — மாதுளைமரம்; பெரிய விலங்கு. ஓசைக் கணங்கள்-ஒலிக் கூட்டம். காளம்-ஓர் இசைக் கருவி; நஞ்சம்.

பணங்கொள் ஆடரவு-படங் கொண்டு ஆடும் பாம்பு. வயிரம்-ஒருவகை மணி; பகைமை.

இனிவரும் பாடல்களில் மடக்கு நிலை கருதி அவற்றைச் சந்தி பிரிக்காமல் அங்ஙனமே தந்துள்ளோம்.

வறுமைக்கு வறுமை

வேறு

வயல்க ளெங்கு நடுமுழ வார்க்குமே
மன்னு வீதி நடுமுழ வார்க்குமே
உயரும் வான்மரு வித்துரு மங்களே
உழைக்கண் ணாரிதழ் வித்துரு மங்களே
புயல டைந்திடு மாசைக ளெட்டுமே
புண்ணி யந்தனி லாசைக ளெட்டுமே
கயல்து ரந்திடும் போதா வருந்தவே
கலியு மவ்விடை போதா வருந்தவே 50

நடும் உழவு ஆர்க்கும்-நடுகின்ற உழவுத் தொழிலின் ஓசை எழும். வீதி நடு முழவு ஆர்க்கும்-வீதி நடுவிலே முரசுகள் ஆர்க்கும். துருமம் வான் மருவி உயரும்-மரங்கள் வானைத் தொட்டு உயரும். உழைக்கண்ணார் இதழ் வித்துருமங்கள்-பெண்கள் உதடுகள் பவளங்கள் போலும். புயல் ஆசைகள் எட்டும் அடைந்திடும்-மேகங்கள் எட்டுத் திக்கும் அடையும். புண்ணியந்தனில் ஆசைகள் எட்டும்-செய்த புண்ணியத்தால் விரும்பியவை கிடைக்கும். ஆசைகள்-விரும்பியவை. எட்டும்-கிடைக்கும். கயல் போதா வருந்தத் துரந்திடும்-கயல் மீன்கள் நாரைகள் வருந்தும்படி விரட்டும். போதா-நாரை. துரந்திடும்-வெருட்டும். கலியும் அவ்விடை அருந்தப் போதா-அந்நாட்டில் வறுமையானது உயிர்களை உண்ணுவதற்கு வராது. போதா-வராது.

வளப்பம்

நற்று மேடை தொறும்புளி னங்களே
நதியி டங்கள் தொறும்புளி னங்களே
உற்றி யைந்திடு மந்தண ராசியே
உள்ள மெய்திடு மந்தண ராசியே
சுற்று மார்ப்பன பாடலம் போதியே
சோலை யெங்கணும் பாடலம் போதியே
முற்று முற்றன சங்க முகங்களே
முத்து திர்ப்பன சங்க முகங்களே. 51

நற்று மேடை—நறுமண மிக்க மேடை. புளினம்-மணல் திட்டுக்கள். புள் இனங்கள்-பறவைகள்.

உற்று இயைந்திடும் அந்தண ராசி-சனி, வியாழன் முதலிய ராசிகள் பொருந்தும். உள்ளம் அந்தணர் ஆசி எய்திடும்-மனங்கள் அந்தணரின் ஆசிகளை அடையும். பாடு அலம்பு ஓதி சுற்றும் ஆர்ப்பது-பக்கங்களில் தளும்புகின்ற மலைகள் சுற்றும் ஆர்க்கும். பாடலம் போதி-பாதிரி அரசு ஆகிய மரங்கள். முற்றும் உற்றன சங்கமுகங்கள்-முழுவதும் பொருந்தின சங்குக் கூட்டங்கள். சங்கமுகங்கள் முத்து உதிர்ப்பன-ஆறு கடலில் கூடுமிடங்களில் முத்துக்களைச் சொரிகின்றன.

சருவு மண்டை யுறுமோதி மங்களே
தடத்தி னண்டை யுறுமோதி மங்கவே
தெருவு தோறு மருகா வனங்களே
சிறப்பு மேவு மருகா வனங்களே
மருவு புட்களு மஞ்சன மாடுமே
மாதர் கண்களு மஞ்சன மாடுமே
பொருத டம்பெறுங் காவிய ராகமே
பூவை பாடுவ காவிய ராகமே. 52

ஓது இமங்கள் அண்டை உறும்; சருவும்—சொல்லப்பட்ட பொன்மணிகள் அருகில் பொருந்திச் சருவும். ஓதிமங்கள் தடத்தில் நண்டை உறும்-அன்னங்கள் நீர் நிலைகளில் நண்டுகளை அடையும். தெருவு தோறும் அனங்கள் அருகா-வீதி தோறும் அன்னசாலைகள் குறையா. மரு கா வனங்கள் சிறப்பு மேவும்-மணமுள்ள சோலைவனங்கள் சிறப்பை அடையும். புட்கள் மஞ்சனம் ஆடும்-பறவைகள் நீரில் குளிக்கும். மாதர் கண்கள் அஞ்சனம் ஆடும்-பெண்களின் கண்கள் அஞ்சன மைதீட்டப்பெறும். பொருதடம் காவி அராகம் பெறும்-அலை மோதுகின்ற நீர் நிலைகள் காவிமலர்களின் செவ்வண்ணம் பெறும். பூவை காவிய ராகம் பாடுவ-நாகணவாய்ப் பறவைகள் காவியத்தின் இராகத்தைப் பாடும்.

உலவு முற்பல வாவிக் குருகுமே
உள்ள மும்பல வாவிக் குருகுமே
இலகு கின்ற தருமத் தளங்களே
எங்கும் மேடை தருமத் தளங்களே
மலையில் நூல்பல யாவரும் கற்பதே
மனைக ளுந்தொலை யாவரும் கற்பதே
அலகில் வண்டினம் நற்றல வாசமே
அறிஞர் செய்வது நற்றல வாசமே. 53

உற்பல வாவிக் குருகு உலவும்-குவளை மலர் பூத்த தடாகங்களில் பறவைகள் உலவும். உள்ளம் பல ஆவிக்கு உருகும்-மனங்கள் பல உயிர்களுக்கும் இரங்கும். தருமத் தளங்கள் இலகுகின்ற-அறச் சேனைகள் விளங்குகின்றன. மேடை எங்கும் மத்தளங்கள் தரும்-மேடைகள் எங்கும் மத்தளங்கள் ஓசை தரும். யாவரும் கற்பது மலைவுஇல் பல நூல். மனைகளும் தொலையா அருங்கற்பது-இல்லங்கள் தொலையாத பெருங்கற்பை உடையன. அலகுஇல் வண்டு இனம் நற்றல் அவ்வாசம்-கணக்கற்ற வண்டுகள் விரும்புவது அந்த மலரின் மணம். அறிஞர் செய்வது நல்தல வாசம்-அறிஞர் அந்த நல்ல தலத்தில் வாசம் செய்வர்.

வாவி யெங்கு நவசீ கரங்களே
மாதர் செய்வ னவசீ கரங்களே
மேவு முள்ளந் தருமத் துவசமே
வீதி யாடும் தருமத் துவசமே
பூவை மங்கையர் போக நவிலுமே
பொய்பொ ருந்திடும் போக நவிலுமே
தாவி வாழையும் கொண்டலை மோதுமே
தடங்கள் பூமணங் கொண்டலை மோதுமே. 54

நவசீகரங்கள் வாவி எங்கும்-நீர் நிலை எங்கும் புது மழைத்துளிகள். மாதர் செய்வன வசீகரங்கள்-பெண்கள் செய்வன கவர்ச்சியான அலங்காரங்கள். உள்ளம் தருமத்து வசம் மேவும்-மனங்கள் அறத்தின் வசம் பொருந்தும். வீதி ஆடும் தருமத் துவசம்-அறக் கொடிகள் வீதிகளில் ஆடும். மங்கையர் போகம் பூவை நவிலும்-பெண்களின் கலவி ரகசியத்தை நாகணவாய்ப் பறவைகள் கூறும். பொய் போக நவிலும்-பொய்யைப் போகுமாறு கூறும். வாழை தாவிக் கொண்டலை மோதும்-வாழைமரம் தாவி மேகத்தை மூட்டும். தடங்கள் பூமணம் கொண்டு அலை மோதும்-நீர் நிலைகள் மலரின் மணம் பொருந்தி அலை மோதும்.

பொங்கு வீதி தொறுமாழி வையமே
புகழ்ம திக்கத் தருமாழி வையமே
தங்கு கண்களு மம்பர மேவுமே
தைய லாரிடை யம்பர மேவுமே
அங்க னஞ்சிறப் பாகு மணங்களே
ஆலை யெங்கணும் பாகு மணங்களே
திங்க ளேயன்ன சத்திர மெங்குமே
திதி லாவன்னச் சத்திர மெங்குமே. 55

வீதிதோறும் ஆழி வையம்-தெருத்தோறும் சக்கரம் பொருந்திய வண்டிகள். ஆழி வையம் புகழ் மதிக்கத்தகும்-கடல் சூழ்ந்த உலகம் இத்தலத்தின் புகழை மதிக்கத் தகும். கண்கள் அம்பு அரம் மேவும்-பெண்களின் கண்கள் அம்பையும் அரத்தையும் ஒக்கும். தையலாரிடை அம்பரம் மேவும்-பெண்களின் இடையானது வானத்தை ஒக்கும்; அதாவது உருவமற்றது போல் நுண்ணிதாக இருக்கும். அங்கனம் மணங்கள் சிறப்பாகும்-அவ்விடம் திருமணங்கள் சிறப்படைகின்றன. பாகு மணங்கள் ஆலை எங்கணும்-கரும்பாலைகளில் கரும்புப் பாகின் மணங்கள். திங்களே அன்ன சத்திரம் எங்கும்-சந்திரனைப் போன்ற வெண்குடைகள் எங்குமே உள்ளன. அன்ன சத்திரம் எங்கும்-எங்கும் அன்ன சத்திரங்களே உள்ளன.

தான மேவழு வாகன மாடையே
    தமிழ்க்க ளிப்பன வாகன மாடையே
தேனு குப்ப வனச முகங்களே
    செழிப்ப மாதர் வனச முகங்களே
வான மேடை யருஞ்சுதை வீறுமே
    மாதர் சொல்லு மருஞ்சுதை வீறுமே
ஆன சங்க மிடுமருங் கோலமே
    அகங்க ளெங்கு மிடுமருங் கோலமே. 56

வழுவா கன மாடை தானம்-தவறாத பெரிய பொற் காசுகள் தானம் செய்யப்படுவன. வாகனம் ஆடை தமிழ்க்கு அளிப்பன-தமிழுக்கு வாகனமும் ஆடையும் அளிக்கப்படுகின்றன. வன சமுகங்கள் தேன் உகுப்பன-வனக் கூட்டங்கள் தேனைச் சொரிவன. மாதர் வனச முகங்கள் செழிப்ப-பெண்களின் தாமரை போன்ற முகங்கள் செழிப்பையுடையன. வான மேடை அருஞ்சுதை வீறும்-உயர்ந்த மேடைகளில் அரிய சுண்ண ஒளி வீறு பெறும். மாதர் சொல்லும் அருஞ்சுதை வீறும்-பெண்களின் சொற்கள் அரிய அமுதத்தை ஒக்கும். ஆன சங்கம் மருங்கு ஓலம் இடும்-சங்குகள் அருகிலேயே ஒலியெழுப்பும். அகங்கள் எங்கும் அருங்கோலம் இடும்-வீடுகள் தோறும் அரிய கோலங்கள் இடப்படும்.

அசைவி லாதன விட்ட விபூதியே
    அழகு தந்திடு மிட்ட விபூதியே
திசையி டந்தொறு மாட வரங்கமே
    சிறக்கு மங்கைய ராட வரங்கமே

வசையி லாவழி யாவருஞ் செல்வரே
மலைவி லாவழி யாவருஞ் செல்வரே
இசையின் வண்டு முரல்வது நாட்டையே
எந்த நாடிணை யாருமிந் நாட்டையே. 57

அசைவு இல்லாதன இட்ட விபூதியே-விரும்புகின்ற ஐச்வரியங்கள் அழியாதவை. இட்ட விபூதி அழகு தருவது-நெற்றியில் இட்ட விபூதி அழகு தரும். திசையிடந்தொறும் ஆடவர் அங்கம்-எல்லாத் திசைகளிலும் ஆண்களின் சேனைகள். மங்கையர் ஆட அரங்கம் சிறக்கும்-பெண்கள் ஆடுவதால் அரங்குகள் சிறப்படையும். வசையிலா வழி யாவரும் செல்வர்-பழிச்சொல் இல்லாத வழியிலே எல்லோரும் செல்வமுடையவர்களே. யாவரும் மலைவிலா வழி செல்வர்-அனைவரும் மலைவில்லாத பாதையில் செல்வர். வண்டு முரல்வது நாட்டை-வண்டுகள் நாட்டை ராகம் பாடும். இந்த நாட்டை எந்த நாடு இணையாகும்-எந்த நாடு இந்த நாட்டுக்கு இணையாகும்?

தேவர் நாடு போல் விளங்குதல்

வேறு

கற்பக நாடு தன்னைக் காட்சிபெற் றிடவி ளக்கும்
அற்புத மேன்மை பெற்ற ஆகாச கங்கை போல
விற்பனம் மேவு கின்ற விழவறா வீதி நாட்டைப்
பொற்புற விளக்கு கின்ற பொன்னிநன் நதியொன் றுண்டால். 58

கற்பக நாடு-தேவருலகம். அங்கு அற்புத மேன்மை பெற்ற ஆறு ஆகாச கங்கை. விற்பனம்-கல்வி.

கல்வி சிறந்த விழவறா வீதி நாடு தேவருலகம் போலவும், அங்கு ஓடும் பொன்னி நதி ஆகாச கங்கை போலவும் காணப் பெறும்.

திருநாட்டுச் சருக்கம் முற்றும்

ஆக சருக்கம் இரண்டு. திருவிருத்தம் (1+) 57

3 திருநகர் வளமைச் சருக்கம்

பொன்னி ஆற்றின் தென்பால் உள்ளது இந்த ஞானபூமி என்னும் நகரம். நிலமகளுக்கு இந்நகர் திலகம் போன்றது. இதிலுள்ள கமுகஞ் சோலை கடல் போல் விளங்கும். வளம் பொங்கும் சோலைகள் மகளிர் போல அழகுடையன. சோலை களில் முல்லை மலர்கள் அரும்பும். தலைமக்கள் இன்பம் நுகர்வர். மகளிரை மயிலும் அன்னமும் சூழ்ந்து வரும். கிளி, பூவையுடன் மாதர் உரையினைப் பயில்வர்.

இத்தகைய சோலை சூழ்ந்த முதுநகரில் இரவு பகல் என்பன விளங்கா. சோலையில் பழுத்த கனிகளில் தேன் வடிந்து தேனாறாய் ஓடும். தடங்களில் பல மலர்கள் மணம் வீசும்.

இந் நகரிலுள்ள திருநீறிட்டான் மதில் சக்கரவாள மலை போல் உயர்ந்து விளங்கும். சோலையிலுள்ள கனிகளை வானரம் கவரும். மேடைகளில் விளங்கும் மடந்தையர் தேவமகளிர் போலிருப்பர். பொன் வாயில், தோரணம், தம்பம் போன்றவை சிறப்புடன் தோன்றும். மகளிர் தம் பாதங்கட்குச் செம்பஞ்சூட்டி அழகு செய்வர். வீதிகளில் ஆடல் பாடல் மலிந்திருக்கும். பளிங்கு மண்டபத்திலிருக்கும் மடந்தையர் திருமகள் போல் இருப்பர்.

போனக சாலைகளில் அன்னம் மலைபோல் விளங்கும். ஆடவர் பலர் அரன்பணி பூண்பர். தவத்தோர் குழு இந்நகரை நெருங்கும். இறைவனுக்கு மஞ்சன நீரைக் குடத்திலேந்தி அடியவர் செல்வர். இந்நகரில் அகிலாண்டவல்லியைப் பிரியா துறையும் சிவனை அடைந்தவர்க்கு என்றும் செல்வம் குறையாது.

3. திருநகர் வளமைச் சருக்கம்

அந்நதிக் கரையின் தென்பால் அவனியில் அனாதி ஆகி
உன்னருந் தலங்கள் உள்ளும் உத்தமம் ஆகி மிக்க
துன்னரும் அஞ்ஞா னங்கள் தொலைத்திடும் ஞான பூமி
என்னும்நா மப்ப டைந்த இயல்நகர் வளமை சொல்லாம். 59

அந்நதி-அந்தக் காவிரி யாறு. அவனியில்-உலகில். உன்னரும்-நினைத்தற்கரிய. துன்னரும்-நெருங்குதற்கியலாத. அஞ்ஞானங்கள் தொலைத்திடும் ஞானபூமி-அறியாமையைப் போக்கும் ஞானபூமியாம் திருவானைக்கா. இத்தலத்திற் குரிய பெயர்களுள் ஞானபூமி என்பதும் ஒன்று.

நிலமகள் திலகம்

வேறு

ஈட்டிய மேதினி என்னும் மங்கைதன்
கோட்டிய ஆடையே குலவு வாரிதி.
பூட்டிய ஆரம்அப் பொன்னி நன்னதி.
தீட்டிய நன்னுதல் திலதம் இப்பதி. 60

மேதினி-உலகம். கோட்டிய ஆடை - உடுத்திய ஆடை. வாரிதி-கடல். ஆரம்-முத்தாரம். நன்னுதல்-நல்ல நெற்றி.

உலகம் என்பது ஒரு பெண். கடல் அவளுடுத்த ஆடை. பொன்னி ஆறு அவளணிந்த முத்தாரம். திருவானைக்கா அவள் நெற்றியில் விளங்கும் திலகம் என்க.

கமுகஞ் சோலை

வேறு

நிரைகெழு பச்சி ளங்காய் நிறைந்திடு பழுக்காய் துன்னும்
விரைகமழ் பாளை மேவி மீதெழு கமுகஞ் சோலை
மரகதக் குவையி னோடு வண்துகிர்க் கொத்தும் முத்தும்
திரைகளில் தாங்கு நீலத் திரைக்கடல் போலத் தோன்றும். 61

நிரை-வரிசை. பச்சிளங்காய்-பாக்குப் பிஞ்சுகள். பழுக்காய்-பழுத்த பாக்கு. துன்னும்-நிறையும். விரை-மணம். குவை-குவியல். வண்துகிர்-வளமை பொருந்திய பவளம்.

கமுகஞ் சோலையிலுள்ள பச்சிளங்காய், பழுக்காய், பாளை ஆகியவை முறையே கடலிலுள்ள மரகதம், பவளம், முத்துப் போலத் தோன்றும். எனவே சோலை கடல் போலக் காணும்.

மாந்தளிர் சரணம் காட்ட வஞ்சியே மருங்குல் காட்ட
ஏந்திளங் கொங்கை யைச்செவ் விளநீர்கள் காட்டச் செவ்விக்
காந்தள்செங் கரங்கள் காட்டக் கந்தரம் கமுகு காட்டக்
கூந்தல்அம் கமுகு மாதர் கூந்தலின் அழகு காட்டும். 62

மாந்தளிர்-அடியையும், வஞ்சிக் கொடி-இடையையும் இளநீர்-கொங்கைகளையும், காந்தள்-கையையும், கமுகு-கழுத்தையும், கூந்தற் கமுகுகள் - கூந்தலையும் காட்டுவதால் சோலைகள் பெண்கள் போலத் தோன்றும்.

மகளிர்

வேறு

அரும்புறு முலைவிழி அலர்செங் கைத்தளிர்
தரும்பல மாதர்தண் டலைத்த ருக்களில்
விரும்பிய களிமது வியப்பில் சாய்ந்திடச்
சுரும்புபூங் கொடியெனச் சூழ்ந்து மொய்க்குமால். 63

பெண்கள் சோலை மரங்களில் சாய்ந்த போது, அவர்களின் மார்பு அரும்பாகவும், விழிகள் மலராகவும், கை தளிராகவும் கருதி, அவர்களைப் பூங்கொடி என மயங்கி வண்டுகள் சூழ்ந்து மொய்க்கும்.

அரும்பு-தாமரை மொட்டு. அலர்-மலர். தண்டலை-சோலை. தரு-மரம். சுரும்பு-வண்டு.

முல்லை

மின்னகை பொருந்துற வெடிக்கும் காந்தளே
அன்னகைம் மங்கையர் ஆடும் சோலையில்
நன்னகைத் தளவுஎதிர் நல்க ஆங்கவர்
புன்னகை நிரையெனப் போதுஅ ரும்புமால். 64

மின்னகை-மின்னலின் ஒளி. வெடிக்கும் - அலர்கின்ற. காந்தளே அன்ன கை-காந்தள் மலர் போன்ற கை. நன்னகைத் தளவு - நல்ல ஒளி பொருந்திய முல்லை. எதிர் நல்க-மாதர் எதிரிலே நகைக்கும்போது. ஆங்கு-அவ்விடத்து. அவர்-அம்மகளிர். புன்நகை நிரைஎன-சிறிய பல் வரிசை போல. போது அரும்பும்-மலர் மலரும்.

பெண்டிர் செயல்

வெயருற நுதல்விளை யாடும் மெல்லியர்
அயர்வில்பூஞ் சோலையில் அலரை வேண்டியே
உயர்தரும் அசோகமீது உதைந்து நாண்மலர்
துயருற ஆடவர் சோகம் எய்துவார். 65

நுதல் வெயர் உற-நெற்றியில் வியர்வை வரும்படி. அயர்வு இல்-சோர்வில்லாத. அசோக மரத்தின் மீது மகளிர் தம் காலால் எற்றப் (உதைந்து) புதிய மலர்கள் வருத்தமுற ஆடவர் வருந்துவர். ஆடவர் - தலைமக்கள். சோகம் எய்துவர்-துன்புறுவர்.

அசோகம், சோகம் என முரண்படச் சொல்லமைந்துள்ளன. மகளிர் காலால் எற்றியதால் உற்ற துன்பத்தைக் கண்டு பொறாத தலைமக்கள் மனம் வருந்துவர்.

பெண்டிர் நிலை

கஞ்சுக மணிமுலைக் கலச மங்கையர்
கிஞ்சுக வாய்மொழி கிளரும் சாயல்நீள்
நஞ்சுக இகல்விழி நடைவி ரும்பியே
அஞ்சுகம் மயில்உழை அன்னம் சூழுமால் 66

மணிமுலைக் கலசம்-செப்புப் போன்ற அழகிய முலை. கிஞ்சுகவாய்-செம் முருக்க மலர் போன்று சிவந்த வாய். மகளிரின் மொழி, சாயல், விழி, நடை ஆகிய இவற்றை விரும்பி முறையே கிளி, மயில், மான், அன்னம் ஆகியவை அவர் பின் சேரும். நஞ்சுக இகல் விழி-விடம் ஒழுகும்படி மாறுபடுகின்ற கண்கள். அஞ்சுகம்-கிளி. உழை-மான். மொழிக்குக் கிளியும், சாயலுக்கு மயிலும், விழிக்கு மானும், நடைக்கு அன்னமும் தோற்று அவர்கள் பின்னே சுற்றும் என்க.

மகளிரும் பறவைகளும்

வேறு

விரைவேக விரலி யற்றும் வீணைநன் நாதம் காவில்
இரைபயில் களிவி ரும்பும் இளங்குயி லுடனும் கையில்
புரையற ஓது கிள்ளைப் பூவையி னுடனும் மாதர்
உரையது பயில்வர் செஞ்சொல் ஒப்புமை காண்ப தற்கே 67

புரையற ஓது-குற்றமில்லாமல் மொழியும். கிள்ளை-கிளி. பூவை-நாகணவாய்ப்புள்.

தம் மொழியின் ஒப்புமை காணப் பெண்டிர் குயில், கிளி, மைனா ஆகியவற்றுடன் மொழி பயில்வர்.

ஒளிநிலை

செம்மணி வெயிலி னாலுஞ் செறிந்திடு கன்னல் ஈன்ற
அம்மணி நிலவி னாலும் அடரிருள் தொடர்வது அல்லால்
மொய்ம்மலர்ச் சோலை துன்னும் முதுநகர் தனில்எஞ் ஞான்றும்
மெய்ம்மதிக் கதிர்சேர் கங்குல் வெம்பகல் விளங்கொ ணாதே. 68

செறிந்திடு-அடர்ந்துள்ள. கன்னல்-கரும்பு. துன்னும்-நிறைந்த. முதுநகர்-பழைய நகரம். எஞ்ஞான்றும்-எப்போதும். கங்குல் - இரவு. விளங்கொணாது-அறிந்து கொள்ள முடியாது.

வயல்களில் செம்மணியும், கரும்பீன்ற முத்துக்களும் முறையே கதிரொளியும், நிலவொளியும் வீசிக்கொண்டே இருப்பதால் பகல், இரவு என்பதில்லை.

கனிச்சாறு

வேறு

மாங்கனி பலாக்கனி வாழை சாய்ந்திடு
பூங்கனி தன்னொடு பொருந்து மாதளந்
தீங்கனி கொழுஞ்சியின் செறிந்த பைங்கனி
ஆங்கனி ஒழுகுதேன் ஆறு போலுமால். 69

மா, பலா, வாழை, மாதுளை, கொழுஞ்சி ஆகிய கனிகளிலிருந்து கனிச்சாறு ஒழுகுகின்ற தேன்ஆறுபோன்றுள்ளது.

வாவி மணம்

ஒழுகிய தண்புனல் ஓங்கு வாவியில்
அழகிய பங்கயம் ஆம்பல் நீலமும்
முழுகிய மாதரார் மொய்த்தி டுங்குழற்
புழுகுஇயல் வாசமே பொருந்தி வீசுமால். 70

தண்புனல் - குளிர்ந்தநீர். வாவி-குளம். குழல் புழுகு-குழலில் பூசிய புனுகு. இயல்வாசம்-பொருந்திய மணம்.

குளத்திலுள்ள தாமரை, ஆம்பல், நீலம் போன்ற மலர்களில் இயல்பான மணத்திற்கு மாறாக மகளிரின் கூந்தலில் பூசிய புனுகு மணத்தைப் பெற்றுப் புது மணம் வீசும்.

திருநீறிட்டான் மதில்

வேறு

தாழ்ச்சி இல்சுதைத் தவள மேபெறும்
நீட்சி சேர்திரு நீறிட் டான்மதில்
ஆட்சி வையகம் அனைத்தும் சூழ்ந்திடும்
மாட்சி நேமிமால் வரையைப் போலுமால். 71

சுதைத் தவளம்-சுண்ணத்தின் வெண்மை. திருநீறிட்டான் மதில்-இறைவனே இம்மதிலைக்கட்ட முன் நின்றதாகவும், மதில் கட்டிய வேலையாட்களுக்குத் திருநீற்றுப் பொட்டலம் தந்ததாகவும் அதில் அவர்கள் செய்த வேலைக்குரிய பணமிருந்ததாகவும் கதை உளது.

வையகம்-உலகம். மாட்சி-பெருமை. நேமிமால் வரை-சக்கரவாளம் எனும் பெரிய மலை. திருநீறிட்டான் மதில் சக்கரவாள மலை போன்றது.

[இம்மதிலை ஒட்டியும் பிரம தீர்த்தத்திற்கு அருகிலும் உள்ள ஒரு சிறு கோவிலில் திருநீறிட்டான் மதிலைக் கட்டிய சித்தர் கோவில் உள்ளது. சித்தர் உருவின் முன்னர்ச் சாளக்கிராமத்தில் செய்த நாவற்கனிகள் வைக்கப் பெற்றுள்ளன.]

வானரச் செயல்

வேறு

திருந்திய மேனி லத்துச் சிகரச்செம் மணியை நோக்கி
அருந்துசெங் கனியது என்றே அவாவிய வான ரந்தான்
பொருந்திய உதய வெற்பில் பொருந்திடு கதிரோன் தன்னைத்
தரும்திறல் அனுமன் அன்று தாவுதல் காட்டல் போலும்! 72

மாளிகை உச்சியில் பதித்த செம்மணிகளைக் கனிகள். என நினைத்து அவற்றைப் பறிக்கப் பாயும் குரங்குகள், பண்டு அனுமன் உதயகிரியில் தோன்றிய கதிரவனைப் பற்றத் தாவிய செயலைக் காட்டும்.

மேடை மகளிர்

நண்ணிய மேடை தோறும் நாரியர் தோற்றம் பாரில்
பண்ணிய தவத்தின் ஆற்றால் பதியினை அடைவர் என்றே
புண்ணிய தவம்கு றைக்கப் புரந்தரன் ஏவ லாலே
மண்ணிடை இறங்கும் தெய்வ மடந்தையர் தம்மைப் போலும். 73

முனிவர்கள் தவத்தால் தன்பதியை அடைவர் எனக் கருதி அதனைக் கெடுக்க இந்திரன் கட்டளையிட மண்ணில் வந்திறங்கும் தேவமகளிர் போல மாளிகை மேடை தோறும் மகளிர் தோற்றம் வெளிப்படும்.

தோரணத் தோற்றம்

மலைவில்பொற் கபாட வாயில் மகரதோ ரணம்கொள் சிங்கத்
தலையது படிகத் தம்பந் தனில்எதிர் தோன்றும் காட்சி
கொலைசெயும் இரணி யன்தன் குடர்புனை நார சிங்கம்
நிலைபெறு தம்பந் தன்னின் நேர்பெறத் தோன்றல் போலும். 74

மலைவில்-ஒப்பில்லாத. படிகத் தம்பம்-பளிங்குத் தூண். நாரசிங்கம் - திருமாலின் நரசிங்கஅவதாரம். நேர்பெற- இரணியன் முன்னால்.

வாயில் தோரணத்திலுள்ள சிங்க வடிவம் பளிங்குத் தூணில் எதிர் தோன்றுவது இரணியனைக் கொல்ல நரசிங்கம் தூணில் தோன்றியது போலும்.

மலரழகு

குங்குமம் எழுதி முத்தின் கோலமார் வாயில் தோறும்
மங்கல மாக மாதர் வைத்தசெம் மலரின் நீட்டம்
அங்கன வாதம் நீங்காது அரவிந்தம் உலாவு பாத
பங்கயம் உறுசெம் பஞ்சு பயின்றிடும் சுவடது ஆமால். 75

குங்குமம் எழுதி முத்தினால் வாயில் தோறும் கோல மிட்ட மங்கையர் மங்கலமாக வைத்த மலர், அம்மகளிரின் தாமரை மலர் போன்ற செம்பஞ்சூட்டிய அடிச் சுவடு போல் விளங்கும்.

அரவிந்தம், பங்கயம்-தாமரை. செம்பஞ்சு பயின்றிடும் சுவடு-செம்பஞ்சுக் குழம்பு தீட்டிய அடிச்சுவடு.

மடவார் நிலை

விழவுசேர் ஆடல் பாடல் விளம்புறு மடவார் ஓசை
முழவுசேர் வீதி தோன்றல், முன்பினும் அதிக மான
அழகது பெறுதல் வேண்டி அகிலாண்ட வல்லி பாதம்
தொழுதிட அவனி தோற்றும் சுரலோக மாதர் போலும் 76

விழவு-விழா, வியம்-பெருமை. அவனி-உலகம். சுரலோக மாதர்-தேவருலகமகளிர். முன்பினும்—முன்பைக்காட்டிலும்.

மாதர் வீதியில் தோன்றுதல், மிக்க அழகு வேண்டி அகிலாண்டவல்லி அம்மை அடிதொழும் தெய்வமகளிர் தோன்றுதல் போலும்.

வேறு

பதித்திரிது இழைத்திடும் படிக நீடொளி
கதித்திடு மண்டபம் கலந்த மங்கையர்
கொதித்திடும் பாற்கடல் குலவு தெண்டிரை
உதித்திடும் பலதிரு உருவம் போல்வரால். 77

படிகம்-பளிங்கு. கதித்திடும்- (ஒளி) பொங்கும். கொதித்திடும்-மேல் எழுகின்ற.

பளிங்கு மண்டபத்தில் மகளிர் உருவம் பல தோன்றுதல் பாற்கடலிலிருந்து பல திரு(மகள்) வெளிவரல் போலும்.

அன்னசாலை

விடுத்திடும் கொடிகளால் மேக பந்தியைத்
தடுத்திடும் போனக சாலை எங்கணும்
கொடுத்திட வும்தினம் குறைப டாமலே
அடுத்துற வளர்வன அன்ன மாமலை. 78

பந்தி-வரிசை.

மாளிகை மீது கட்டிய கொடிகளால் மேக வரிசையைத் தடுக்கும் அன்னசத்திரத்தில் உள்ள சோறு, கொடுக்கக் கொடுக்கக் குறையாத அளவினவாய் விளங்கும்.

தவத்தார் செயல்

வேறு

ஆறுபூந் தடங்கள் சென்றே ஆடுவார் அலர்கள் கொய்வார்
நீறுமெய் புனைவார் அன்பால் நிமலனைப் பூசை செய்வார்
வீறும்ஆ கமபு ராணம் விரித்துரைப் பாரும் ஆகிப்
பேறுசேர் அருந்த வத்தோர் பெருங்குழு நெருங்கும் அன்றே. 79

தடங்கள்-குளங்கள், வீறு-பெருமை. பேறு-நல்வினை.

முனிவர் செயல்களாக நீராடல், மலர்பறித்தல், நீறு பூசல், பூசை செய்தல், ஆகமம் புராணம் ஆகியவற்றை விரித்துரைத்தல் கூறப்பட்டன.

மஞ்சன மேந்தல்

அழுந்துபொற் குடங்கள் தம்மில் அடியவர் முடியின் மீதில்
செழுந்திரு மஞ்ச னங்கள் சிவபூசைக்கு ஏந்து காட்சி
கொழுந்திளந் திங்கள் மேவுங் கோடீரம் பெறுசா ருபத்து
எழுந்திரைக் கங்கை தாங்கற்கு இயற்றிடு மாறு போலும். 80

அடியவர் முடியில் பொற்குடங்களில் மஞ்சள் நீரைச் சிவ பூசைக்காக ஏந்திய காட்சி, சிவன் கங்கையைத் தாங்கி நிற்கும் காட்சிக்கு ஒப்பாகும்.

அடியவர் சாருப நிலையில் சிவவடிவம் பெறுவர் என்பர். இங்கு அடியவர் தலையில் மஞ்சனநீர் சுமப்பது, சாருபம் அடையும் போது கங்கையைச் சுமப்பதற்குப் பழகுவது போன்றுள்ளது.

பறிந்திடும் ஆறு மோகப் பவந்தனை ஒழிக்கும் உண்மை
அறிந்திடும் தவத்தோர் போற்ற அகிலாண்ட வல்லி பாகம்
பிறிந்திடாது உறையும் ஆதிப் பெருஞ்செல்வன் இடத்தில் வந்து
செறிந்திடும் அவர்க்கெஞ் ஞான்றும் செல்வத்தில் குறைபாடின்றே

பறிந்திடும்-களையாக நீக்கப்படும். ஆறு மோகப்பவம். காமம் குரோதம் மதம் மாற்சரியம் முதலிய ஆறுபாவங்கள். ஆதிப் பெருஞ் செல்வன்-முதற் பொருள் சிவன்.

சிவனை அடைபவர்க்கு எப்போதும் செல்வம் குறையாது என்பர்.

திருநகர் வளமைச் சருக்கம் முற்றும்.

ஆக சருக்கம் மூன்று. திருவிருத்தம் (1+,80.

தலமகிமைச் சருக்கம்

இது ஞானபூமி எனவே தன்னிடம் வந்தவர்க்கு இத்தலம் முத்தி அளிக்கும். உலகிலுள்ள மற்றெல்லா இடங்களிலும் சிறந்து விளங்கும் உறுதிப் பொருள் நான்கினுள் வீடு இதுவே. தவத்தோர் சூழுமிருப்பிடம் இது. இதனை நினைத்தவுடன் ஒருவன் செய்த பழவினைக்கணக்குக் கழிந்து விடும். உலகிலுள்ள பிற. புண்ணிய தீர்த்தங்களிலும், தலங்களிலும் சென்று பெறும் பயனை இத்தல வாசம் மட்டுமே அளிக்கும். பஞ்சபாதகங்களை நீக்கும், உலகில் ஞானம் தரும் தலம் வெவ்வேறு இருப்பினும் இது ஒன்றே ஞான பூமி என்ற பெயர்பெற்றது. பெருமை, புகழ், கல்வி இவற்றின் விளைவிடமாம். இதில் தருமம் நீதி தவம் ஆகியவை தங்கி இருக்கும். இதனை நோக்கி ஏழடி நடப்பின் எழுவகைப் பிறப்பு நீங்கும். ஒருநாள் தங்கின் தவப்பேறு கிட்டும் இதற்குச் செல்வோர் இன்புறுமாறு வழியில் நிழல் தந்த மரம் சுவர்க்கம் புகும். அவர்கள் தங்கிச் செல்ல மடமுதவும் பேற்றை மறைகளாலும் கூற முடியாது. இதன் எல்லையை மிதித்தால் வினைதீரும்; காமம் ஒழியும். இத்தலம் கண்ட கண்கள் நரகம் காணா இதன்புகழ் கேட்ட செவிகள் கூற்றுவன் மொழி கேளா. பலவகைப் பாவம் செய்தோர் இங்கு ஓரிராத் தங்கின் பாவம் நீங்கிச் சிவகணநாதர் ஆவர். உயிரினங்களுக்கு அளிக்கும் உணவு முதலிய பொருள்கள் சிவனுக்கு அளித்தவை ஆகும்.

இப்பதி அடைந்தவர்கள் தானம், தவம், தருமம், வேள்வி, செபம், கல்வி, யோகம், முத்திசாதனை முதலிய புரிதல் வேண்டாம். அவர்கட்கு அவற்றை இத்தலமே தரும். இங்குள்ளோர் நினைப்பே தியானம்; கூறுமொழியே மந்திரம்! செய்யும் தொழிலே சிவபூசை. பல அறங்களைக் கொன்ற பாவம் இத்தலத்து ஈசனைக் காணத் தீரும்.

இத்தலத்தீர்த்தத்தில் மூழ்கி, இறைவனை வணங்கின் உயிர்களின் தலை எழுத்து அழியும். காவிரி ஆடில் பிறவிப் பிணி நீங்கும். இறைவனுக்கு ஒரு சங்களவு நீரிடின் பல உயர்ந்த பொருள்களை அபிடேகம் செய்த பயன் பெறுவர். இவ்விறைவன் பெயரைக் கூறின் எண்ணிய பொருள்கள் வந்து சேரும். இவ்விறைவனை வணங்கிய யானை நற்பதம் பெற்றது எனில் ஆகமவிதிப்படி பூசை செய்வோர் போகமும் வீடும் பெறுவர் என்பதும், சிலந்தியே நற்பேறு பெறின் சிவாலயத் திருப்பணி புரிவோர் பெறுகின்ற நற்பேறு சொல்லற்கரியது ஆகும். இறைவனைத் தெரிசித்த உயிர்கள் சிவப்பேறு பெறும்.

இங்கு நெருப்பில் ஒருபிடி அன்னமிடில் அசுவமேத யாகம் செய்த பயன் கிட்டும். இத்தலத்தில் மூன்று நாள் தங்கின் காசியில் மூன்று கற்ப காலம் தங்கிய நன்மை பெறுவர். இங்குச் சிந்திய அன்னத்தைக் காகம் உண்ணின் நூறு அந்தணர்க்கு உணவிட்ட பயன் வரும். செம்புத் தீர்த்தமளித்தல், பாலைவனத்தில் பலகோடிக் குளம் வெட்டி நீரளித்தலினும் சிறந்தது. அந்தணர்க்கு அளவற்ற பொன் தருவது போன்றது இங்கு ஒரு காசு தானமிடல். இவ்வூரில் பிச்சை ஏற்றுண்பது அமுதுண்பதிலும் மேலானது. தெய்வப் பிறவியிலும் இத்தலத்தில் சிற்றுயிர்களின் பிறப்புச் சிறந்தது. இத்தலம் விட்டு மற்றைய தலங்கள் செல்வோர் அறிவிலார். இது காவிரிக்குத் தென்பால் உளது. இதன் பெருமை புலவர்களாலும் கூறுதல் அரிது.

4. தல மகிமைச் சருக்கம்

இகலிடு கலிவெம் பாவம் இவற்றையும் இழைக்கும் போதில்
பகலிடம் உறும்இ ருள்போல் பற்றறுத் திடுவது ஆகி
அகலிட மீதில் வந்தே அடைபவர்க்கு எல்லாம் முத்திப்
புகலிடம் ஆகும் ஞான பூமியின் மகிமை சொல்வாம்: 82

இகல்-பகை. கலி-வறுமை. பகலில் வரும் இருள்போல் பற்றினை அறுக்கும். அகலிடம்-அகன்ற இடமுள்ள உலகம்

ஞானபூமி என்பது திருவானைக் காவிற்குரிய சிறப்புப் பெயர்களுள் ஒன்று.

ஞானபூமி

பெரும்பதி பசுபா சத்தின் பெற்றியை முற்றும் எங்கோன்
விரும்புஅதி சயவிண் ணோர்க்கு விளம்பினன் ஆத லாலே
அரும்பதி எவற்றின் உள்ளும் அதிகமாய் விளங்கும் அந்த
இரும்பதி ஞான பூமி எனும் பெயர் படைத்தது அன்றே. 83

பதி, பசு, பாசம்—மூன்று உண்மைப் பொருள்கள்: எங்கோன்-சிவபெருமான். விண்ணோர்க்கு - தேவருக்கு விளம்பினன்-கூறினான். இரும்பதி-பெருமை மிக்க தலம். ஞானபூமி-தலப்பெயர்.

தவத்தோர் சூழ்தல்

மறத்தவர்க்கு எய்த ஒண்ணா. மறத்தினை மறந்தி ருக்கும்
அறத்தவர்க்கு எய்தல் ஆகும் அறம்பொருள் இன்பம் வீடாம்
திறத்துநால் வகைத னக்கும் சேர்விடம் ஆகும் என்றும்
துறத்தலால் உயர்த வத்தோர் சூழ்ந்திடத் துலங்கும் அன்றே 84

மறத்தவற்கு-தீவினை செய்வோர்க்கு.

அறம் பொருள் இன்பம் வீடாம் நாற்பொருள் சேர்ந் திருக்குமிடம் துறவறத்தில் சிறந்த தவத்தோர் சூழ்ந்திருத் தலால் துலங்கும்.

மைபுனை கண்டத்து எங்கோன் மலைமக ளுடன் இன் புற்ற
மெய்பெறு ஞான பூமி மேவுதல் நினைத்த போதே
செய்பல வினைதொ குத்துச் சித்திர குத்தன் சேர்த்த
கைவினைக் கணக்குஅ னைத்துங் கழிபடத் தருவது அன்றே. 85

மைபுனை கண்டத் தெங்கோன்-ஆலகால நஞ்சினைக் கழுத்தில் கொண்டுள்ள சிவபெருமான். ஞானபூமி-தலப் பெயர்.

இவ்விடத்தை அடைய நினைத்தால் சித்திரகுத்தன் தொகுத்த கைவினைக் கணக்கெல்லாம் கழியும்.

சித்திரகுத்தன்-உயிர்களின் நல்வினை, தீவினை களைக் குறிக்கும் கணக்கன்.

தலவாசம்

பொரும்புனல் கங்கை ஆதி புண்ணிய மேன்மை பெற்ற
பெரும்புவித் தீர்த்தம் ஆடிப் பெற்றிடும் பயனி னாலும்
அரும்பதி ஆரூர் காசி அம்பலம் சென்று போற்றித்
தரும்பய னாலும் ஞானத் தலவாசம் கிடைக்கும் அன்றே. 86

கங்கைமுதலிய புண்ணிய தீர்த்தங்கள் ஆடிய பயனாலும் ஆரூர், காசி, சிதம்பரம் முதலிய புண்ணிய தலங்கள் சென்று போற்றிய பயனாலும் இவ்வூர் வாசம் கிடைக்கும். இதனால் மற்றவற்றினும் இதன் பெருமை விளங்கும்.

அம்பலம்-சிற்றம்பலமாம் சிதம்பரம்.

இறைவன் பெயரின் பயன்

வஞ்சமே தவிர்த்தி டாத மனத்துறு மாசு மாறாப்
பஞ்சபா தகங்கள் யாவும் பருதிமுன் இருளே என்ன
நஞ்சமே புனைந்த சம்பு நாதனென்று ஒருகால் கூற
நெஞ்சமீது எப்போ தேனும் நினைந்திட நீங்கும் அன்றே. 87

பாம்பை அணிந்த சம்பு நாதன் என்ற பெயரை ஒருகால் கூறினாலும் மனம் எப்போதாவது நினைத்தாலும் வஞ்சகம் நீங்காத மனத்தில் குற்றம் மாறாத பஞ்சபாதகங்கள் யாவும் சூரியன் முன் இருள் போல் நீங்கும்.

நஞ்சம்-நஞ்சுள்ள பாம்பு. சம்புநாதன் - சம்புநாதர் என்ற சிவபெருமான். சம்பு முனிவர் பூசித்ததாலும் நாவல் மரத்தின்கீழ் அமர்ந்ததாலும் இப்பெயர் அமைந்தது. ஒருகால்-ஒருமுறை.

(செம்புநாதர் கோயிலைப் பழங் கோயில் என்பர். இதனருகில் செம்பு தீர்த்தமும் உளது.)

ஞானபூமியின் பெயர்ப் பெருமை

உத்தமப் பருப்பதத்தோடு ஓங்குகே தாரம் காசி
மெய்த்தலம் எவையும் ஞானம் விளைந்திடத் தருவ தேனும்
அத்தலம் எவையும் வெவ்வேறு ஆனபே ரமையும் நாளும்
இத்தலம் ஞான பூமி என்னும்பேர் இசையும் அன்றே. 88

உத்தமப் பருப்பதம்-மேலான கைலைமலை. கேதாரம் காசி போன்றவை ஞானம் அளிக்குமிடங்கள்.

இது ஒன்றே ஞான பூமி என்ற பெருமை உடையது. பருப்பதம்-மலை, இசையும்-பொருந்தும்.

செல்வமும் பண்புமுள்ள இடம்

வியனுறு தேசு கல்வி விளைவிடம் என்னச் சீலம்
நியமம்நற் தருமம் ஓங்கும் நீதிஇன் மதிமெய்ஞ் ஞானம்
அயர்வருந் தவம்இ ருக்கும் ஆலயம் என்னச் செல்வம்
பயனுறு கோச மென்னப் பார்தனில் விளங்கும் அன்றே. 89

வியன்-பெருமை. தேசு-புகழ். அயர்வு-சோர்வு. சோர்வு. ஆலயம்-கோவில். கோசம்-கரு வூலம்.

பலவகை நற்செல்வமும் பண்பும் உறையுமிடமாக இது உளது.

தலப் பயன்

வேழம்ஆ தரித்துஇ றைஞ்சும் மெய்ஞ்ஞான பூமிக்கு ஏக
ஏழடி நடப்பார் ஆகில் எழுவகைப் பிறப்பும் நீங்கும்
தாழ்வறப் பிறிதி டத்தில் தவம்பல இயற்றும் பேறு
வாழும்அத் தலத்தில் ஓர்நாள் வைகுவோர்க்கு எய்தும் அன்றே 90

வேழம்-யானை. (திருவானைக்காவின் பெயர்வரக் காரணம்) ஞானபூமி-தலப்பெயர். இத்தலம் நோக்கி ஏழடி நடந்தால் ஏழுபிறப்பும் நீங்கும். பிறிதிடம்-மற்ற இடம். பிறதலங்களில் பலநாள் தவம் செய்தால் கிடைக்கும் பேற்றினை எல்லாம் இத்தலத்தில் ஒருநாள் மட்டும் தங்கினால் பெறலாம்.

இழிதரு பவம்அ கற்றற்கு இயல்ஞான பூமிக்கு ஏகும்
வழிதனில் நிழற்றும் தாரு வர்க்கமும் சுவர்க்கம் சேரும்
உழிதரு தவத்த வர்க்காங்கு ஒருமடம் உதவும் பேற்றை
மொழிதரு மறைக ளாலும் முடிவுற மொழியொ ணாதே 91

பவம் அகற்றற்கு இயன்ற ஞானபூமி-தலநிலை. இத் தலத்திற்குச் செல்லும் வழியில் நிழல் செய்யும் ஓரறிவுயிர் மரங்களும் சுவர்க்கம் சேரும் எனில் மற்ற உயிர்களும் சேரும் என்பது வெளிப்படை. உழிதரு-திரிதருகின்ற. பல இடங் களில் சென்று தவம் செய்வோர் இங்குத் தங்குதற்கு ஒரு மடம் உதவினால் அதன் பெருமை சொல்லற்கரிது.

வினையும் அறுபகையும் தீர்தல்

தொல்லையில் வினையும் ஊழாய்ச் சூழ்ந்திடும் வினையும்மேலை
எல்லையில் வினையும் எங்கோன் எல்லையின் மிதிக்கத் தீரும்
வெல்அயில் விழியார் நல்கும் வெங்காமம் முதல்ஓர் ஆறும்
ஒல்லையில் அழியும் வெய்யோன் உதயத்தில் திமிரம் போல. 92

தொல்லையில்-பண்டு; முன்பிறவிகளில்செய்த. ஊழ்-விதி எல்லையற்ற வினைக்கூட்டம் இத்தலத்தை மிதிக்கத் தீரும். வெல்அயில்விழி-எவற்றையும் வெல்லும் கூர்மை யான வேல் போன்ற விழி. மாதர் தரும் காமம் முதலிய ஆறு தீமைகள் காமம், குரோதம், மோகம், லோபம், மதம், மாற்சரியம் என்பவை. ஒல்லையில் - விரைவில். வெய் யோன்-கதிரவன். திமிரம்-இருள்.

கதிரவன் முன் இருள் போல் அறுபகை அழியும்.

கண்கள் செவிகள் பெறும் பயன்

அளந்திடா மேன்மை பெற்ற அத்தலம் தன்னை இன்பம்
விளைந்திடக் கண்ட கண்கள் வெம்மைசேர் நிரயம் காணா
கிளர்ந்தஅத் தலத்தின் மேன்மை கேட்டிடும் செவிகள் பேழ்வாய்
வளைந்தபற் கூற்று வன்தன் வாய்மொழி கேட்டி டாவே. 93

அத்தலம் - திருவானைக்கா. நிரயம் - நரகம்.

இத்தலத்தைக் கண்ட கண்கள் நரகத்தைக் காணா. பேழ்வாய்-பிளந்தவாய். கூற்றுவன்-யமன்.

இத்தலப் பெருமை கேட்ட செவி யமனின் மொழியைக் கேட்கமாட்டா.

ஓரிரவு தங்கும் பயன்

சீருறும் ஆடல் பாடல் திருடல்வா ணிபம்அ வற்றால்
வாருறு முலையார் தன்பால் வைக்கும்ஆ சையினா லேனும்
போருறு மழுவ மைத்தோன் புகழ்ஞான பூமி தன்னில்
ஓரிரவு உறையப் பெற்றோர் உயர்கண நாதர் ஆவார். 94

வார்உறு-கச்சணிந்த. மழுவமைத்தோன் - மழுப்படை உடைய சிவபெருமான். ஞானபூமி-தலம்.

ஆடல், பாடல், திருடல், வணிகம், காதல் ஆகிய காரணத்துக்காகவேனும் இவ்வூரில் ஓரிரவு தங்கினோரும் கணநாதர் ஆவர்.

கொடைப்பயன்

ஊணது புரிதல் அன்னம் உறவினர்க்கு உதவல் ஆடை
பூணது புனைத லாலே பொருள்பல சேர்த்தல் எல்லாம்
சேணது கமழ்பூஞ் சோலைச் சிவஞான பூமி தன்னில்
வீணது வாகா. நெற்றி விழியினன் தனக்கே ஆகும். 95

ஊண்-உணவு- சேண்-நெடுந்தொலைவு. சிவஞானபூமி-தலம். நெற்றிவிழியினன்-சிவபெருமான்.

இவ்வூரில் உண்டல், உதவல், ஆடை அணி அணிதல், பொருள் பல சேர்த்தல். ஆகிய செயல்கள் எல்லாம் வீணாகாமல் இறைவனுக்கே உரிமையாகும்.

தலமடைந்தவர் பெறும்பயன்

தானம்ஏன்? தவம்ஏன்?மிக்க தருமம்ஏன்?வேள்வி தான்ஏன்?
ஞானம்ஏன்? செபம்ஏன்? கல்வி தன்மைஏன்? யோகந் தான்ஏன்?
மோனம்ஏன்? தீர்த்தந் தான்ஏன்?முத்திசா தனைஏன்? -சுத்த
ஞானமேன் மையினால் ஓங்கும் அப்பதி அடைந்து ளார்க்கே. 96

இத்தலம் அடைந்தவர்க்குத் தானம் தருமம், வேள்வி புரிதல், ஞானம், செபம், கல்வி, நன்மை, யோகம், மோனம், தீர்த்தமாடல், முத்திசாதனை முதலியன வேண்டா. இப் பதியை அடைவதே எல்லாப் பயனும் நல்கும்.

அவர் செய்கை சிவபூசை

பெய்திடு மலர்ப்பூஞ் சோலைப் பெருஞான பூமி தன்னில்
எய்திடும் அவர்நி னைப்பது அனைத்தும் தியானம் ஆகும்
வைதிடும் மொழிய தேனும் மந்திர செபம்ஆம் தம்மில்
செய்திடும் தொழில்அ னைத்தும் சிவபூசை ஆகும்அன்றே. 97

அதனை அடைந்தவர் நினைப்பது அனைத்தும் தியானம் ஆகும். வைதாலும் அவை மந்திர செபமொழிகள் ஆகும். செய்யும் தொழில் யாவும் சிவபூசையாகும். எண்ணம், சொல், செயல் மூன்றின் சிறப்பு வெளிப்படுகிறது.

பாவம் தீர்தல்

அறந்தனை அழித்த தீங்கும் அன்பொடு பிறர்செய்ந் நன்றி
மறந்திடு தீங்கும் மாதர் மறையவர் பசுக்கள் மற்றும்
இறந்திடச் செய்த தீங்கும் இவையெல்லாம் ஞான பூமி
சிறந்திடும் அமிர்த லிங்கம் தெரிசிக்கத் தீரும் அன்றே. 98

அறம் கொன்ற பாவம், அன்பாகப் பிறர் செய்தநன்றியை மறந்த பாவம், பெண்கள் மறையவர் முதலியோரைக் கொன்ற பாவம் ஆகியவை இஞ்ஞான பூமியிலுள்ள அமிர்த லிங்கத்தைக் காணின் தீரும்.

அமிர்தலிங்கம்-தல இறைவன் பெயர்.

தலை எழுத்து நீங்கல்

பழுதறச் செம்பு தீர்த்தம் படிந்துஅமு தேசன் தன்னைத்
தொழுதுநல் லஞ்செ ழுத்தும் சொல்லுதல் வல்லோர் தம்பால்
முழுதுற முண்ட கத்தோன் முண்டகத் தீமை யாக
எழுதிய எழுத்துஅ னைத்தும் இமைப்பினில் அழியும்அன்றே 99

செம்புதீர்த்தம்-தலத்திலுள்ள தீர்த்தம். அமுதேசன்-தல இறைவன் பெயர். அஞ்செழுத்து-நமசிவாய மந்திரம் (பஞ்சாட்சரம்). முண்டகத்தோன் - தாமரையிலமர்ந்துள்ள பிரமன். முண்டகம்-தலையில். இத்தலத்தீர்த்தத்தில் மூழ்கி பஞ்சாட்சரம் செபித்துவுடன் பிரமன் எழுதிய தலை எழுத்தாம் தீவினைப் பயன் உடனே நீங்கும்.

நீர் ஆட்டின் பயன்

எங்கும்நீர் பரவு பொன்னி இடத்தில்வந்து இறைஞ்சு வோர்தம்
மங்குநீர் மையும்பி றப்பும் மாற்றும்எம் பிரானுக்கு அங்கோர்
சங்குநீர் உதவி நெய்பால் தயிர்மதுக் கடம்அ னேகம்
பொங்குநீர் தன்னோடு ஆட்டும் புண்ணியம் நண்ணு வாரே. 100

பொன்னியாம் காவிரியில் ஆடுவோர் மனக்குறையும் பிறவிப் பிணியும் நீங்கும். எம்பிரானுக்கு ஒரு சங்கின் அளவு நீரை அபிடேகம் செய்தால் பல குடங்களில் நெய், பால், தேன் முதலியவை அபிடேகம் செய்த புண்ணியம் அடைவர்.

எண்ணிய எய்தல்

நண்ணிய புகழ்சேர் செம்பு நாதனென்று ஓதப் பெற்ற
புண்ணிய கற்ப தாரு போதுசெய் யாத வண்ணம்
மண்ணினி லுள்ளோர் விண்ணோர் வந்திருந் துரைப்ப தல்லால்
எண்ணிய பொருள்கள் தாமும் இமைப்பினில் உதவும்அன்றே.101

செப்புநாதன் என்ற பெயருரைப்பதன் பயன். நண்ணிய-தானே வந்தடைந்த. கற்பதாரு-கற்பகமரம். நினைத்த பொருள் உடனே கைவரப்பெறும்.

அருச்சனைப் பயன்

ஏகநா தனைஇ றைஞ்ச இருந்தழை பறித்தி டும்கைந்
நாகமும் துன்பம் நீங்கி நற்பதம் பெற்றது என்றால்
ஆகம விதியோடு அன்பால் அருச்சனை புரியப் பெற்றோர்
போகமும் வீடும் எய்தல் புதுமையாய்ப் புகல்வது அன்றே. 102

ஏகநாதன்-சிவபெருமான். இருந்தழை-பசுந்தழைகள். கைந்நாகம்-யானை.

யானை பூசித்து நற்பதம் பெற்றது. ஆகமவிதிப்படி பூசிப்பவர் போகமும் வீடும் பெறுவர்.

(சிலந்தி மூடிய சருக்கம் காண்க)

ஆலயப்பணியின் பயன்

நுண்ணிய சிலந்தி வாயில் நூலினாற் பந்தர் இட்டு
நண்ணிய பேற்றை எண்ணில் ஞானபூ மியின்இடத்தில்
திண்ணிய சிவால யத்தில் திருப்பணி விருப்ப மாகப்
பண்ணிய மாந்தர் பேற்றைப் பகர்ந்திடற்கு எளிமைஅன்றே 103

சிலந்தி நூலாற் பின்னித் தன் கடமையைச் செய்தது. ஞானபூமி தலப் பெயர்.

சிலந்தி போல் சிவாலயப்பணி புரிவோர் சிவப் பேறடைவர்.

இச்சிலந்தியே பின்னர்க் கோச்செங்கணானாகப் பிறந்தது.

(சிலந்தி மூடிய சருக்கம் காண்க)

சேவிக்கும் பயன்

அரிசன முலையார் ஆடும் அப்பதிப் பணிசெப் பூடே
துரிசுறு அமுத லிங்கம் சொற்பெருங் குளிகை ஒன்று
பரிசன வேதி ஆகும் பரிந்துடன் அருச்சிப் போர்க்குத்
தெரிசன வேதி ஆகும் சேவிக்கும் அவர்த மக்கே. 104

அரிசனம்-மஞ்சள். துரிசுறு-குற்றமற்ற. அமுதலிங்கம்-தல இறைவன். குளிகை-மாத்திரை. பரிசனவேதி-பிற உலோகங் களைத் தொட்டுப் பொன்னாக்குவது. தெரிசனவேதி-பிற உலோகங்களைக் கண்டவுடன் பொன்னாக்குவது போல் உயிர்கள் உயர்வடைதல்.

சோறிடல், மூன்று நாள் தங்குதல் தரும் பயன்

ஆசிலா அங்கி தன்னில் அன்னமோர் பிடிஅ ளிக்கில்
ஏசிலா அசுவ மேத யாகத்தின் பயனை நல்கும்
மாசின்மூ வைகல் அவ்வூர் வைகலுற் றிடுவா ராகில்
காசியிற் கற்பம் மூன்று கலத்தலின் நலத்த அன்றே. 105

ஆசு-குற்றம். அங்கி-நெருப்பு. ஏசிலா-குற்றமில்லாத. வைகலுறுதல்-தங்குதல்.

இப்பதியில், நெருப்பில் ஒருபிடி அன்னமிடில் அசுவமேத யாகம் செய்த பயன் கிட்டும். இத்தலத்தில் மூன்று நாள் தங்கினால் காசியில் மூன்று பகற் காலம் தங்கியிருந்த நன்மை கிட்டும்.

காகம் உண்ட உணவின் பயன்

வந்தொரு காகம் ஞான மகிதலந் தன்னில் அன்னம்
சிந்தியது ஒன்றைக் கவ்விச் சென்றிடப் பெறுவ தாகில்
அந்தணர் நூறு பேர்க்கங்கு அறுசுவை அளித்த அன்னம்
தந்திடும் பயனை ஒப்பாம் சாற்றுதற்கு எளிமை அன்றே. 106

ஞான மகிதலம்-தலப்பெயர் ஞானபூமி.

இப்பூமியில் சிந்திய அன்னத்தைக் காகம் கொண்டு செல்லின் நூறு அந்தணர்க்கு உணவிட்ட பயனுக்கு ஒப்பாம்.

செம்புதீர்த்தப் பயன்

மொய்த்திடும் பரல்உ றைக்கும் முதுசுரத்து அனந்த கோடி
துய்த்திடும் புனல்த டங்கள் தொடுதலின் நீடு பேறும்
உய்த்திடும் செம்பு தீர்த்தத்து ஒருசெம்பு தீர்த்தந் தன்னை
எய்த்திடும்அவர்க்கு நல்கும் இதற்குஇணை எனஒண் ணாதே. 107

பரலுறைக்கும் - பரற்கற்கள் காலை உறுத்துகின்ற. முதுசுரம்-பாலை. புனல்தடம்-நீருள்ள குளம். தொடுதலின்-தோண்டுதலைக் காட்டிலும். செம்புத் தீர்த்தம்-தலத்திலுள்ள தீர்த்தம். ஒரு செம்புத் தலத்தீர்த்தம் அளித்தல் பாலை வனத்தில் பலகோடிக் குளம் வெட்டி நீரளித்தலைவிடப் பயன் தரும்.

கொடைப்பயன்

அருகுஆசி மொழியும் மிக்க அந்தணர் தமக்கும் முத்தி
தருகாசி தன்னில் கோடி தமனியம் உதவும் பேறு
பெருகுஆசில் பொன்னி சூழ்ந்த பெருஞான பூமி தன்னில்
ஒருகாசின் உறுதா னத்துக்குஉவமையாய்உ ரைக்கொ ணாதே. 108

தமனியம்-பொன். ஆசில்-குற்றமற்ற. ஞானபூமி-தலப் பெயர்.

அந்தணர்க் களிக்கும் அளவற்ற பொன்னால் பெறும் பயனை இத்தலத்தில் ஒரு காசு அளித்தால் பெறும் பேற்றுடன் உவமையாகக் கூற இயலாது.

சுரர் வாழ்வினும் இத்தல வாழ்வு மேல்

கற்பக வனத்தின் நீழல் கலந்தினிது இருந்து நாளும்
சொற்பகர் அமுத ருந்தும் சுரர்வாழ்வு, நரரே ஆகிப்
பொற்புஅக லாத ஞான பூமியின் புறவ ரைக்கே
அற்பகல் ஐயம் ஏற்றுண்டு அமைவதற்கு இயைவ தன்றே. 109

கற்பகவனம்-வான்உலகிலுள்ள தெய்வமரக்கா. சொற் பகர்-புகழ் மிக்க. பொற்பு-பெருமை. ஞானபூமி-தலப் பெயர். புறவரை-வெளி எல்லை; அல்பகல்-இரவும் பகலும். ஐயம்-பிச்சை.

இது திரிசிராப்பள்ளிக் குன்றினைக் குறிப்பதுமாம்.

தேவருலகில் அமுதுண்பது இங்குப் பிச்சை ஏற்றுண்ப தற்கு ஈடாகாது.

இங்குச் சிற்றுயிர்ப் பிறப்பும் நன்றே

அருங்கதி தன்னைப் பெற்றே அண்டர்ஆ வதினும்அண்டம்
நெருங்குறு கமுகஞ் சோலை நிறைஞான பூமி தன்னில்
இருங்குரற் கழுதை காகம் ஏனமாய் ஞனர் ஆகிப்
பெருங்குரல் ஞாளி யாகிப் பிறப்பது பெரிதும் நன்றே. 110

அருங்கதி-பிறத்தற்கரியநிலை. அண்டர்-தேவர். தேவ ருலகில் பிறப்பதிலும் இத்தலப்பிறப்பு சிறப்புடைத்து. ஞான பூமி-தலப்பெயர்.

இங்குக் கொடிய குரலுடைய கழுதை, காகம், பன்றி (ஏனம்), நாய் (ஞாளி) ஆயினும் தெய்வ உலகில் தேவராகப் பிறப்பதைக் காட்டிலும் நன்று.

வேறுதலம் நாடுவோர் சிறுமை

சொற்றலம் ஈறி ருக்கத் தொல்வினை அகற்ற வேண்டி
நற்றலம் பிறிதும் ஒன்றை நாடியே உழலும் மாந்தர்
பொற்றலம் மருவும் ஐந்து பூந்தரு நிழலில் போந்தும்
சிற்றலர் உலறு கானில் செடிபிற தேடு வோரே 111

புகழ்மிக்க இத்தலம் இருக்க வினை நீக்க வேண்டி வேறு தலம் நாடி அலைவோர், பொற்பூமலரும் பூம்பொழிலுள்ள நிழலிருந்தும் சிறுகாட்டில் சிறுசெடி தேடுவோர் போன்று அறிவில்லாதவர் ஆவர்.

சிற்றலர் - சிறிய மலர்கள். உலறுகானில் - உலறுகின்ற காட்டில்.

தலப் பெருமை உரைக்க அருமை

பூவிரி தருவ னங்கள் புறம்இரண் டினும்நெ ருங்கும்
காவிரி நதியின் தென்பால் கலந்தஅத் தலத்தின் மேன்மை
பாவிரி கலைகள் எல்லாம் பயின்றிடு மவர்க ளேனும்
நாவிரி யுடன்அ னைத்தும் நவின்றிடல் எளிமை அன்றே. 112

தலத்தின் இருப்பு பூஞ்சோலை இருபுறமுங் கொண்ட காவிரிக்குத் தென் பக்கம். அதன் பெருமையைப் புலவர்களால் நாவால் விரித்து அனைத்தும் கூறுதல் எளிதன்று.

தலமகிமைச் சருக்கம் முற்றும்

ஆக சருக்கம் 4 திருவிருத்தம் (1+) 111

(செம்புலிங்கம், அகிலாண்டவல்லி துணை உண்டாக வேணும். இனிச் செம்புமாமுனிச் சருக்கம் வரலாறு. சிவமயம்.)

செம்பு மாமுனிச் சருக்கம்

இத்தலத்தில் வந்து செம்பு முனிவன் தவம் செய்ததை இச் சருக்கம் கூறும்.

பிரமன் தான் படைத்த திலோத்தமை மீது மையல் கொண்ட தன் பாவம் தீர இங்கு வந்து தவம் செய்தான். சிவனருளால் வந்து பொன்னியிலாடித் தன்வினை தீருமாறு தங்கினான். இங்கிருந்தால் மேலும் மேன்மை பெறலாமென்று மழையிலும், வெயிலிலும் கடுந் தவம் இயற்றினான்.

நாவல் மரத்தின்கீழ் தவம்புரிந்த முனிவன்முன் ஒருநாள் வெண்ணாவற் கனி வீழ்ந்தது. அதனை வியந்த முனிவன் அது இறைவற்கு அமுதாம் என அதனை ஏந்திக் கைலை சென்றான். (இங்குக் கைலை வளம் கூறுதல் அழகு மிக்க பகுதிகளாம்)

மான் குட்டிகளும், சிவன் விடையும், மரகத ஒளியைப் பசும் புல்லெனக்கவ்வ விரும்பும். தென்றல் தன்வெம்மை தீரக்குளிரருவி நீரில் படிந்து தண்மை உறும். சிங்கமும், யானையும் போரிட்டு இரத்தம் சிந்திய இடத்தில் யானை மத்தக முத்துக்கள் சிதறி இருத்தல் செவ்வானில் விண்மீன் பரவியதுபோல் தெரியும். நிலத்தைச் சிவன் விடை, கொம்பால் குத்துதல் பூமகளைத் திருமாலாம் கணவன் வடுப்படுத்தல் போலும். அம்மையின் சேவடிச் சுவடுகள் தாமரை நிரைபோல் தோன்றும். கணநாதர் பாதங்களில் முற்கரக் கருவிபட்டு எழும் வயிரப் பொறிகள் வானத்து மின்மினிபோல் தோன்றும். அரமகளிர் கூந்தற்கிடும் அகிற்புகையை மேகமெனக் கருதி மயில்களாடும். சிவனடி பணியும் தேவர்களின் மணிமுடியின் பொன் பொடி எங்கும் பரவும். இம்மலையில் சிவபெருமான் உறைவதால் தேவர் உறங்குவதைத் துறந்தனர்.

கைலாயத்தில் கோபுரம், மதில், தோரணம் ஆகியவை விளங்கும். அங்குள்ள மண்டபத்தில் கூடிய திருமால் 'அயன்' மற்றுமுள்ள தேவர்திரளை நந்திதேவர் விலக்க, அரம்பையர் ஆலத்தி ஏந்த, நாரதர் இசைபாட இறைவன் சிங்காசத்தில் இருந்தான். அவ்வேளையில் செம்புமுனி நாவற் கனியுடன் வந்து அதனை இறைவனிடம் நல்கினான். சிவன் அக்கனியை அருந்தி விதையை உமிழ முனிவன் அதனைத் தவப்பேறாகக் கருதி உண்டான்.

அவ்விதை முனிவனுடலில் முளைத்துத் தலைவழியே வெளி வந்து வானில் மரமாய்க் கிளைத்தது! முனிவன் இறைவனை அந்நிழலிலிருக்குமாறு வேண்டஞானபூமியிடத்துச் செல்லின் அங்கு அடைவதாகச் சிவன் அருளினான். விடைபெற்று முனிவன் ஞானபூமிக்குப் புறப்பட்டான்.

மரம் முளைத்த முனிவனைக் கண்டு பறவைகள் வியந் தகன்றன. தரையில் நடக்கும் கற்பக மரமென முனிவன் நடந்தான். படைப்பின்அதிசயம் என நான்முகன் கருதினான். அவ்வுருவம் ஏன் எனப் பிரமன் கேட்க நடந்தவற்றை முனிவ னுரைத்தான். அது கேட்டுப் பிரமன் தானும் சிவனைக் காண முடியும் என மகிழ்ந்தான். மழையிலும், வெயிலிலும் சம்பு முனி தவம் புரிந்தான். கனியின் தேன் ஆனந்தக் கண்ணீராக, வண்டோசை அஞ்செழுத்தாக, நிற்குநிலை சமாதியாக வெண்ணாவல் மரமும் தவம் புரிந்தது.

5. செம்பு மாமுனிச் சருக்கம்

மேதகு புகழ்படைத்த மெய்ஞ்ஞான பூமி தன்னில்
ஓதரு வளங்கொள் மேன்மை உரைத்தனம் முன்னும் பின்னும்
தீதிலா மேன்மை பெற்ற செம்புமா முனிவன் போந்து
மாதவம் புரிந்துஇ ருந்த வண்மையை வகுத்து ரைப்பாம். 113

ஞானபூமி-தலப்பெயர். ஓதரும்-சொல்லற்கரிய. செம்பு மாமுனி-தாம்தவம் செய்த காலத்து வெண்ணாவற் கனிவீழ அதனைச் சிவனிடம் கொடுக்க அவர் உண்டுமிழ்ந்த விதையை உண்ணவே உடம்பில் அது முளைத்துத் தலை வழியே நாவல் மரமாக வளர அத்துடன் பல இடங்கள் சென்று இறுதியில் திருவானைக்காவில் தவம் செய்து அதற்குச் 'செம்புகேஸ்வரம்' என்று பெயர் வரக் காரணமா யிருந்தவர்.

பிரமனின் தீவினை

வருந்தியே சகம்அ னைத்தும் மலரவன் படைக்கும் நாளில்
திருந்திய அழகுஅ னைத்தும் திரட்டியே தான்ப டைத்த
அருந்திலோத் தமைஇ டத்தில் ஆசைஉ ற்று அணைத லாலே
பொருந்தியது அவம்த னக்கும் புணர்ப்பலாப் புணர்ப்பின் தீமை

மலரவன்-பிரம்மா. புணர்ப்பலா-சேரத்தகாத.

அந்தவல் வினையி னாலே ஆண்மையும் அறிவும் நீங்கித்
தந்திடும் படைப் பனைத்தும் தலைதடு மாறி மிக்க
சிந்தைஆ குலமும் எய்திச் செவ்வியும் தளர்ந்து நின்றான்
முந்தவே முகுந்தன் உந்தி முண்டகம் தனில்உ தித்தோன். 115

தலைதடுமாறி-நிலைகெட்டு. ஆகுலம் - வருத்தம். செவ்வி-அழகு. முகுந்தன் உந்தி முண்டகம் - திருமாலின் கொப்பூழியிலுள்ள தாமரை. உதித்தோன்-தோன்றிய பிரமன்.

பிரமனுக்குச் சிவன் அருள் புரிதல்

ஏதினால் இடர்த விர்ப்போம் என்றுளம் மெலிவுற்று எந்தாய்
சோதியே அரனே என்று துதித்துறத் தொழுது போற்றும்
ஓதிமன் தனக்குஇ ரங்கி உமையொடு விடையின் மீதில்
ஆதிநா யகன்முன் தோன்றி அவன்த னக்கு அருள்பு ரிந்தான். 116

ஏதினால் - எக்காரணத்தால். ஓதிமன் - அன்னத்தை வாகனமாக உடைய பிரமன்

பொன்னிசூழ் ஞானபூமி புட்கர ணியில்சென்று ஆடித்
தன்னிகர் இலாத சோதிச் சங்கர நாதன் தன்னைப்
பன்னிய மலர்கொண்டு ஏத்திப் பணிந்துஅருந் தவம்பு ரிந்தால்
உன்இடர் வினைத விர்ப்போம் என்றனன் உலகநாதன் 117

ஞானபூமி-தலப்பெயர். புட்கரணி-குளம். பன்னிய-இதழ் நெருங்கிய. உலகநாதன் - சிவபெருமான். (இந்நூலைப் பாடுவித்தவர் பெயரும் அமைந்துள்ளது.)

பிரமன் திருவானைக்காவிற்குப்போதல்

திருந்தஅம் புலிமு டித்தோன் திருவுளச் செயல்நன்று என்றே
பொருந்தஅன் பொடுவ ணங்கிப் போற்றிநற் புண்ட ரீகத்து
இருந்தவன் இருந்த வத்தோர் இறைஞ்சுஞா னத்த லத்தில்
அருந்தவம் புரிவ தற்கே அக்கணம் தன்னில் போந்தான். 118

அம்புலி-பிறை. புண்டரீகம்-தாமரை. இருந்தவம்-பெருமை மிக்க தவம். ஞானத்தலம்-தலப்பெயர்.

பிரமன்தவம் புரிதல்

சங்கர நாதன் தன்னைச் சதுமுகன் வணங்கி முன்னம்
பொங்கரவு அணிந்தோன் கூறும் பொய்கைநீ ராடிப் பொற்பார்
செங்கர மகள்பு ணர்ப்பின் தீங்கினை நீங்கி என்றும்
இங்குஅரண் அருந்தவத்துக்குஎனமகிழ்ந்துஇனி துஇருந்தான் 119

சதுமுகன்-பிரமன். அரவணிந்தோன்-பாய்பைத் தரித்த சிவபெருமான். பொற்பார்-அழகுமிக்க.மகள் புணர்ப்பின்தீங்கு-திலோத்தமையைக் கூடியபாவம். அருந்தவத்துக்கு அரண் என என்று கூட்டுக. அரண்-புகலிடம்.

தங்கிஆங்கு அயனும் அந்தத் தலத்துறை மகிமை கண்டே
இங்கிதில் இருந்தால் மேன்மை இன்னமும் பெறலாம் என்றே
பொங்கிய பனியில் வானில் பொழிந்திடு மழையிற் சூழும்
அங்கியில் மெய்வ ருந்த அருந்தவம் புரியும் நாளில் 120

அயன்-பிரமன். அங்கியின்-நெருப்பில்

தவம்புரி செம்புமுனி முன் நாவற்கனி வீழ்தல்

மண்ணினில் ஆண்மை செம்பொன் வரையயில் செம்பு நீழல்
நண்ணியோர் முனிவன் மிக்க நற்றவம் புரியும் அந்நாள்
புண்ணிய முனிவன் தன்முன் புதுமைபெற்றுஅக் காலத்தில்
ஒண்ணிற வெண்மை பெற்ற ஒருகனி வீழ்ந்தது அன்றே. 121

செம்பொன் வரை-மேருமலை. செம்பு நீழல்-நாவல் மர நிழல். ஒண்ணிறம்-ஒளிபெற்ற நிறம். ஒருகனி-ஒப்பற்ற பழம்.

முனி கயிலை செல்லல்

வருங்கனி அதனைக் கண்டுஇவ் வனத்துள கனிகள்எல்லாம்
கருங்கனி தெய்வீ கத்தால் கண்டதிவ் வெண்ணிறம்சேர்
அருங்கனி எம்பி ரானுக்கு அமுதுசெய் தற்காம் என்றவ்
இருங்கனி அங்கை ஏந்தி ஏகினன் கயிலை தன்னில். 122

காட்டிலுள்ள கனிகளே அத்தகைய கனியைக் கண்டதில்லை எனில் மற்றவற்றைப் பற்றிக் கூறவேண்டாம்.

அமுது செய்தற்கு-உண்ணுதற்கு. இருங்கனி-பெருமை மிக்க பழம்.

கயிலை வளம்

ஒளர்ந்தபொன் முடிதான் காணக் கிடைந்திடாது அயனும்மாலும்
தளர்ந்திடத் தளரா மேனித் தவளமாய் நின்றது என்ன
அளந்திட அண்டம் தன்னை ஆகாயம் தன்னில் ஓங்கி
வளர்ந்திடும் கயிலை வெற்பின் வளம்சில விளம்பல் உற்றாம் 123

சிவனின் அடிமுடியை மாலும் அயனும் தேடிக் காணாக் கதை

தவளம்-வெண்மை. அண்டம் ஆகாயத்தில் ஓங்கி நின்ற நிலை. வெற்பு-மலை. விளம்பலுற்றாம்-கூறுவோம்.

விலங்குகள் மயங்குதல்

வள்ளைநேர் குழையார் ஆடும் மணித்தடம் தன்னில் பச்சைக்
கிள்ளைநேர் மரக தத்தின் கிளர்தரு கிரணம் நோக்கிப்
பிள்ளைமா னினமே அன்றிப் பிறையணி பெருமான் ஏறு
வெள்ளைமால்விடையும்கவ்வவிரும்புறும்இளம்புல்என்றே. 124

வள்ளைநேர் குழையார்-வள்ளைக் கொடி போன்ற காதினையுடைய மகளிர். மணித்தடம்-அழகிய குளம். கிள்ளைநேர்-கிளி போன்ற பச்சை நிறமுடைய. மரகதம்-நவமணியுள் ஒன்று.

மான் குட்டிகளன்றிச் சிவபிரானின் விடையும் மரகத ஒளிக் கதிரைப் பசும் புல்லென மயங்கிக் கவ்வ விரும்பும்.

தென்றல் குளிர்தல்

மிளிர்தரு வேனிற் காலம் மேவிய வெம்மை தீர
ஒளிர்தரு நிலவு தன்னில் உலாவிய பருவத் தென்றல்
தளிர்தரு வானில் ஓங்கும் சந்தனா டவியில் போந்து
குளிர்வரை அருவி நீரில் குளித்துஅதி சீதம் ஆமால் 125

வேனில் வெம்மை தீரக்குளிர் நிலாவில் உலாவிய தென்றல் சந்தனக் காட்டில் சென்று, மலை அருவியில் குளித்து மேலும் குளிர்ச்சி பெறும்.

சந்தன அடவி-சந்தனக் காடு. வரை-மலை. சீதம்-குளிர்ச்சி.

விலங்கின் போர்

திண்பொருப்பு அன களிற்றைச் சீயம்கண் டார்த்துச் செந்நீர்ப்
புண்படப் பொருத டத்தில் பொருந்து வெண் கோடும்முத்தும்
வெண்பிறைத் திரள்உ திக்கும் வியப்புறு செக்கர் வானின்
பண்புறப் பலஉ டுக்கள் பரவுதல் போலும் ஆமால் 126

பொருப்புஅன—மலை போன்ற. களிற்றைச் சிங்கம் போரிட்டு இரத்தம் சிந்திய இடத்தில் யானைக் கொம்பும் கொம்பில் உதிர்ந்த முத்துக்களும் கிடப்பது செக்கர் வானில் விண் மீன்கள் பரவியது போல் காணும்.

உடுக்கள்-விண்மீன்கள்.

ஏற்றின் செயல்

யோகநன் மேன்மை பெற்ற பூதலம் எனும் டந்தை
மோகன முலையது என்ன முந்தும்அம் மலையி டத்தில்
சேகுஅன நெடுங்கோட்டு ஏறு செய்திடும் இரணம் அண்ணல்
வாகனம் ஆன கேள்வன் வடுப்படுத் திடுதல் போலும் 127

நிலமடந்தையின் முலைபோன்றது அம்மலை. காளை நிலத்தில் குத்திய கோடுகள் சிவபிரான் வாகனமான கணவன் தன் மனைவியாம் நிலத்தை வடுப்படுத்துதல் போலும்.

சேகுஅன-வயிரம் போன்று வலிய. கோட்டுஏறு-கொம் புள்ள காளை. திருமாலே சிவப்பெருமான் வாகனமாகிய நந்தி யாயினன் என்பது புராண வரலாறு.

அம்மையின் அடிச்சுவடு

ஏர்த்தட இந்து காந்தத்திடம்பயில் தடங்கள் தோறும்
ஆர்த்தபைங் கலபக் கொங்கை அம்பிகை உலாவு போதில்
சேர்த்த செம் பஞ்சு பெற்ற சிற்றடிச் சுவடு தோன்ற
நீர்த்தடம் பயில்சரோச நிரைதனை நிகர்க்கும் ஆமால். 128

ஏர்-அழகு. தடம்-பெரிய. இந்து காந்தம்-சந்திரகாந்தக்கல் தடங்களில் பதிந்த அம்பிகையின் செம்பஞ்சு தீட்டிய அடிச் சுவடுகள் குளத்தில் மலர்ந்த தாமரை மலர்களை ஒக்கும்

சரோசம்-தாமரை. ஆல்-ஈற்றசை.

வயிரப் பொறிகள்

வேறு

நன்மனத் திறல்கண நாதர் தங்களின்
முன்மதர்த்தெறிந்திடும் முற்க ரம்பொரு
வன்மையில் பொடித்தெழு வயிரப் பல்பொறி
மின்மினித் திரள்என விண் அடர்க்குமால் 129

கணநாதர் வீசுகின்ற முற்கரம் என்ற படைக் கருவிபட்டு எழும் வயிரப் பொறிகள் வானில் மின்மினிகள் எழுவது போலும் ஆல்-ஈற்றசை.

மயிலாடுதல்

வரிவிழிச் சூர்அர மாதர் மாமலர்ப்
புரிகுழற்கு இடும்அதில் புகையை நோக்கியே
கரியமா முகிலெனக் கந்த வேள்பரி
விரிதரு சிறகொடும் விரும்பி ஆடுமால் 130

சூரா மகளிர் தம் கூந்தற்கிடும் அகில் புகையை மேகம் எனக் கருதி மயில் தோகை விரித்தாடும்.

சூரரமகளிர்-தெய்வப்பெண்கள். குழல்-கூந்தல். கந்த வேள் பரி-முருகனின் வாகனமாம் மயில்.

பொற் பொடி

உம்பர்நா யகன்தனை உம்பர் வந்தெதிர்
கும்பிடு மணிமுடிக் குழாம்இ ழைந்திடும்
பைம்பொடி எங்கணும் பரந்து மொய்த்திட
செம்பொன்மால் வரையெனும் சிறப்பும் எய்துமால் 131

உம்பர்நாயகன்-சிவபெருமான்,

சிவபிரானைத் தேவர் வந்து விழுந்து கும்பிட மணிமுடி இழைத்த பொன் பொடி எங்கும் பரவச் செம்பொன் மலை என்ற சிறப்புச் சேரும்.

வேறு

அயிலையே வியந்த கந்தன் ஐங்கரன் தன்னைத் தந்த
மயிலைஓர் பங்கில் வைத்தோன் மகிழ்ந்தினிது உறைத லாலே
துயிலையேதுறந்த விண்ணோர் தொழுதினிது இறைஞ்சி ஏத்தும்
கயிலையின் வளமை யாவர் கட்டுரைத்து இடுதல் வல்லார் 132

அயில்-வேல். ஐங்கரன்-விநாயகன். மயில்-உமை.

ஆலயச் சிறப்பு

சிகர கோபுர ராசியும் செம்பொன்மா மதிலும்
பகர ருந்துகிற் பதாகையும் படகநீள் படியும்
நிகரில் நீடொளி நிறைமணி நிறைந்திடுஞ் செம்பொன்
மகர தோரண வாசலும் வயங்கும்ஆலயத்தின் 133

கோபுரங்கள், மதில், கொடி, படி, மகர தோரண வாசல் ஆகியவை விளங்கும் ஆலயத்தில்.

மண்டபம்

கொய்யு மாமலர்க் கற்பகப் பூந்தொடை குலவப்
பைய ஓங்கிய பரிமளத் தூமமே பரவச்
செய்ய மாமணித் தீபமா லிகைபல செறியத்
துய்ய மாமணித் தூண்பயில் சோதிமண் டபத்தில் 134

தொடை-மாலை. பரிமளத்தூபம் - நறுமணப் புகை. மாலிகை-வரிசை. துய்ய-தூய.

தேவர் கூட்டம்

வேறு

திறம்பெறும் அயன்மால் விண்ணோர் திருவடி இணையைப் போற்றப்
பிரம்பினால் நந்தி கேசர் பெருந்திரள் தன்னை நீக்க
அரம்பையர் இரும ருங்கும் அங்கைஆ லத்தி ஏந்த
நரம்புறு வீணை ஏந்தி நாரதர் கீதம் பாட 135

அயன்-பிரம்மா. இணை-இரண்டு.

சிவன் கொலுவிருக்கை

விசைந்ததுந் துபிகள் ஆர்ப்ப விண்அரம் பையர்கள் ஆடத்
தசைந்திடும் உபய கொங்கைச் சைலமா மடந்தை போற்ற
அசைந்தபொற் கவரி வீச அணிதிகழ் முத்தின் பந்தர்
இசைந்தசிங் காசனத்தில் இருந்தனன் ஏக நாதன் 136

துந்துபி - இசைக் கருவி. உபயம்-இரண்டு. சைலமா மடந்தை-மலைமகளாம் உமை. ஏகநாதன்-சிவபெருமான்.

முனி தந்த கனியைச் சிவன் அருந்தல்

பொருந்தும்அவ் வேளைதன்னில் போந்துமா முனிவன் போற்றித்
திருந்தும்அக் கனியை அண்ணல் செங்கைமா மலரின் நல்கப்
பரிந்துடன் அதனை வாங்கிப் பவளச்செவ்வாய்வைத்து எங்கோன்
அருந்தினன் அவனி டத்தில் அன்பினால் அகம கிழ்ந்தே 137

முனிவன்-செம்பு முனி. அக்கனி-அந்த வெண்ணாவற் கனி செங்கைமலர்-சிவந்த கையாம் மலரில். எங்கோன் சிவபெருமான்.

சிவன் அளித்த விதையை முனிவன் அருந்தல்

அத்தன்அக் கனிதனை அருந்தி யேதரும்
வித்தினை அம்முனி விரும்பி வாங்கியே
சித்தமோடு ஆரன்தரு சேடம் பெற்றிட
எத்தவம் புரிந்தனம் என்று அருந்தினான் 138

அத்தன்-சிவபெருமான். வித்து-விதை. சித்தம்-அருள் மனத்தோடு. சேடம்-எச்சில்.

முனி உடலில் நாவல் மரம் வளர்தல்

அந்நிலை மாமுனி அருந்தும் அவ்விதை
உன்னிய உடலில்வேர் ஊன்றி அங்கவன்
சென்னியில் உறவெளித் திறந்து சாகையாய்
முன்னிய அண்டமா முகடு அடர்ந்ததே 139

உன்னிய-நினைத்த. சென்னி-தலை. சாகையாய்-கிளைகளாகி.

மரம் தழைத்தல்

வேறு

சாற்றரு நுண்ணி தேனும் சற்குரு உபதே சம்தான்
போற்றரும் அகண்ட ஞான பூரணம் விளைத்தல் போல
நீற்றணி புனைசெம் மேனி நின்மலன் பவளச் செவ்வாய்
மாற்றது வளர்ந்து செவ்வி மாறாது தழைத்தது அன்றே 140

சாற்றரு-சொலற்கரிய. நுண்ணி தேனும்-சிறியதாயினும். பூரணம்-முழுமை. வாய் மாற்று-வாயிலிருந்து உமிழ்ந்தது.

முனிவன் வேண்டலும் இறைவன் அருள்தலும்

அடர்ந்தெழும் அதனைக் கண்டே அதிசயித்து அருந்த வத்தோன்
வடத்துநன் நிழலைப் போல்இம் மரநிழல் உறைவாய் எண்ணத்
தடத்துநான் முகத்தோன் முன்னம் தவம்செயும் ஞான பூமி
இடத்துநீ எய்து நின்பால் எய்துவம் என்றான் எங்கோன் 141

வடத்து நன்னிழல்-ஆலமரத்தின் நிழல்.

சிவன் ஆலின் கீழிருந்தது போல் இந்நாவல் மரத்தின் கீழிருக்க முனிவன் வேண்டுதல்.

தடம்-பெருமை. ஞானபூமி-தலப்பெயர். எங்கோன்-சிவபெருமான்.

முனிவன் போதல்

சனித்தவத் தருவும் மிக்கதவம் செயற்கு இயைந்தது ஆகும்
நினைத்திடு வரமும் நன்றாய் நேர்படும் எனவ ணங்கி
வினைத்திறல் விடையோன் தன்பால் விடைபெற்று விமலன் பொற்றாள்
மனத்தினில் கொண்டு ஞான மகிதலம் போகல் உற்றான் 142

சனித்த-தோன்றிய. விடையோன் - சிவபெருமான். விமலன்-சிவபெருமான். ஞான மகிதலம்-தலப்பெயர்.

பறவை நிலை

கனியுறு தாரு என்னில் கரசரண் ஆதி காணா
மனிதரே ஆகின் கோடு மலர்கனி மற்றும் காணாத்
தனிஇது ஒன்றுஎன்ன மாயை தான்என மருண்டு புட்கள்
அனுதினம் முனிவன் தன்னை அணுகிடா அகன்றி டாவே 143

பழம் தரு மரம் என்றால் கைகால்கள் இருத்தல் இல்லை மனிதராகில் கொம்பு, மலர், கனிகள் இருத்தல் இல்லை. இது என்ன மாயை எனப் பறவைகள் நாளும் இம்முனியை அணுகாது அகலதிருக்கும்.

திருவானைக்கா அடைதல்

ஆசிலா அனந்த போகம் அண்டர்பெற் றிட வ ழங்கி
ஏசிலா மானிடர்க்கும் இட்டகா மியங்கள் நல்கிக்
காசினி தனில்ந டக்கும் கற்பகத் தாரு என்ன
மாசிலா முனிவன் ஞான மகிதலம் தன்னில் போந்தான் 144

ஆசு-குற்றம். இட்ட காமியம்-மனத்தில் விருப்பியவை. காசினி-உலகில்.

உலகில் நடக்கும் கற்பக மரமென முனிவன் நடந்தான். ஞானமகிதலம்-தலப்பெயர்.

பிரமன் வியப்பு

சென்றிடு முனியைக் கண்டு செய்திடும் படைப்பின் உள்ளும்
தோன்று தொட்டு உள்ளது ஆகும் தோற்றநால் வகை இடத்தும்

ஒன்றிடத்து ஒன்றுஉண் டாகா உண்டாய இதுதான் என்கொல்
என்றுஉளத்துஅதிசயித்தான்இயற்றவம்செயும்நால் வேதன். 145

தொன்று தொட்டு வரும் நால்வகைப் பிறப்பில் ஒன்றில் ஒன்று உண்டாகாது. மரமும் மனிதனும் இயைந்த இப்பிறவி அதிசயம் எனப்படைப்புக்கடவுளாம் நான்முகன் வியந்தான். பறவைகள் வியந்தது போல் படைப்புக் கடவுளும் வியந் தான்.

பிரமன் கேள்வி

பரவிய பரிம ளம்சேர் பங்கயத் தடத்தின் பாங்கர்
மருவிய அயனைக் கண்டு வணங்குஅம் முனியை நோக்கி
விரவும்இவ் வுலகி னுக்கு விபரீதம் ஆகும் இந்த
உருவம்நீ அமைந்தது என்கொல் என்றனன்உலகு அமைத்தோன்
146

பரிமளம்-நறுமணம். பங்கயம்-தாமரை.

தன்னை வணங்கிய முனிவனைப் பிரமன் இவ்வுருவம் அமைந்தது ஏன் எனக் கேட்டான்.

முனிவன் விடை

உயர்ந்திடு கயிலை ஆதிக்கு ஒண்கனி அளித்த வாறும்
வியந்தது விளைந்த வாறும் மேவியாம் உறைய நின்பால்
அயன்தவம் செய்த லத்தில் அடைந்திடுஎன்று அகண்ட நாதன்
இயம்பிய வாறும் போதில் இறைவனுக்கு அவன்உரைத்தான்147

கயிலை ஆதி-சிவபெருமான். வியந்தது-வியப்பை ஊட்டும் வகையில்-மனித உடலில் மரம் முளைத்த செயல். அயன் தவம் செய்யும் தலம் அடையச் சிவன் பணித்தல். அகண்ட நாதன்-சிவபெருமான். போதில் இறைவன் - தாமரை மலரி லுள்ள பிரமன். அவன்-செம்பு முனி.

பிரமன் மகிழ்ச்சி

எனையும்ஓர் பொருளது ஆக எம்பிரான் திருஉ ளத்தில்
நினையவும் பெற்றேன் என்று நீர்விழி மல்க இன்பம்
புனையும்மெய்ப் புளகம் எய்தப் புதுநறும் புண்ட ரீக
மனைஉறை சதுமு கத்தோன் மகிழ்ச்சியால் அவசம் உற்றான்148

புண்டரீகமனையுறை - தாமரை மலரை வீற்றிருக்கும் இடமாகக் கொண்ட. சதுமுகத்தோன்-பிரமன். அவசம்-தன்னிலை மறந்தநிலை.

சேரஆங்கு அவன்சொற் கேட்ட திசை முகன் இவனால் யாமும்
நீரவே ணியனைக் காண நேர்படும் எனம கிழ்ந்தே
நாரணன் உந்தி வந்தோன் நற்றவன் தன்னைக்கையால்
ஆரவே தழுவிக் கொண்டாங்கு அருகினில் இருத்திக்கொண்டான்
149

திசைமுகன் - பிரமன். நீரவேணியன் - சிவபெருமான். நாராணன் உந்தி வந்தோன் திருமால் நாபியில் உதித்த பிரமன்.

முனிவன் தவம்

அரும்பகற் கோடை தன்னில் ஐங்கனல் இடத்தில் உற்றும்
பெரும்புயற் காலம் தன்னில் பெய்திடு மழையில் நின்றும்
வரும்பனிப் பருவம் தன்னில் வான்பனி தனில்ந னைந்தும்
விரும்புறத் தவம்பு ரிந்தான் வெண்ணாவல் முனிவன் என்பான்150

கோடையில் வெயிலிலும், மழைக் காலத்தில் மழையிலும், பனிக்காலத்தில் பனியிலும் நின்று செம்புமுனி தவம் செய்தான்.

வேறு

பெருகுகங் கைச்சடைப் பிரானை உன்னியே
உருகுநன் மனத்துடன் உறையும் மாமுனி
சருகு தண்ணீர்கனி தணந்த வாயுவைப்
பருகியும் அருகியும் பயின்ற னன்தவம் 151

கங்கைச் சடைப்பிரான் - சிவபெருமான். உன்னி-நினைந்து. தணந்த-ஓரிடம் விட்டு மறுவிடம் செல்லும், குளிர்ந்த. அருகியும்-குறைந்தும்.

நாவல் மரத்தின் தவம்

அருத்துநற் கனியின் செந்தேன் ஆனந்தக் கண்ணீர் ஆகத்
திருத்தும்இன் சுரும்பின் ஓசைச் செப்பும்அஞ் செழுத்தே ஆகத்
தரித்தொரு நிலையே நிற்கும் தன்மையே சமாதி யாகப்
பெருத்தவெண் ணாவல் மிக்க பெருந்தவம் புரிந்தது அன்றே 152

கனியின் தேன்-ஆனந்தக் கண்ணீர். வண்டின் ஓசை - ஐந்தெழுத்தோசை. நாவல் மரம் நிற்கும் நிலை-சமாதிநிலை இவ்வாறு நாவல் மரம் தவம் புரிந்தது என்பர்.

செம்பு மாமுனிச் சருக்கம் முற்றும்.

ஆக சருக்கம் 5

திருவிருத்தம் (1+) 151

திருச்சிற்றம்பலம்

ஞான உபதேசச் சருக்கம்

சிவபெருமானிடத்து அகிலாண்ட அம்மை ஞான உபதேசம் பெற்றதை இச்சருக்கம் கூறும். கயிலையில் திருவோலக்க மண்டபத்தில் இறைவன் வீற்றிருந்தான். உமையவள் சிவனைத் துதித்துச் சரியை, கிரியை, யோகத் தன்மையை அருளவேண்ட இறைவன் நுண்ணிய அப்பொருளை நுவலத் தொடங்கினான். கிரியை உளத்தை விளக்குதலால் ஞானம் தோன்றும் என்றான் கிரியை பற்றி அம்மை வினவித் தவம் செய்தற்கு உரிய ஓரிடம் உரைக்க இறைவனை வேண்டினாள். பிரமனும், செம்பு முனிவனும் தவம் செய்யும் ஞான பூமியில் அம்மையைத் தவம் புரியுமாறு சிவன் கூறினான். அம்மை மறுபடியும் சிவன் பால் கயிலையை விட்டு அத்தலஞ் செல்ல வேண்டுமா எனக் கேட்கக் கயிலை கூட ஆனைக்கா நல்கும் பயனை நல்காது எனச் சிவன் கூற ஞான பூமியை உமை அடைந்தாள்.

அம்மையைப் பிரமனும் செம்பு முனியும் எதிர்கொண்டனர். அங்கு அம்மை வந்த காரணத்தைப் பிரமன் வினவ ஞான உபதேசம் பெற வந்ததைக் கூறினாள். அதற்குத் தவம் புரியுமாறு பிரமன் உமையிடம் கூறினான். கயிலையில் வீற்றிருத்தல் போல் அம்மை ஆனைக்காவில் இருந்தாள். இறைவனுக்குரிய பொருள்களைத் தோழியர் சுட்டிக் காட்டவும் மனமமையாது அம்மை வற்கலை ஆடை பூண்டு நெருப்பில் நின்று தவம் செய்து உடல் மெலிந்தாள். சிவலிங்க பூசை செய்ய நினைந்து அம்மை பிரமனை அழைத்து இலிங்கம் அமைத்துத் தருமாறு கேட்க அவன் மறுமொழியாக அம்மை விரும்பும் பூதத்தை இலிங்கமாக வகுத்துப் பூசனை செய்ய வேண்டினான். பிரமபுட்கரணி நீரையே அம்மை இலிங்கமாகக் கருதித் திரட்டினாள். அதனால்

அமுதீசர் என்ற பெயர் அந்த இலிங்கத்திற் கமைந்தது. செம்பு முனிவனை இறைவற்கு நிழலாகுமாறு அம்மை கூறினாள்.

பூசைக்குரிய பொருள்களைத் தோழிமார் அமைக்க அம்மை இறைவனைப் பூசித்தாள். மந்திர சுத்தி செய்து ஒருமை மனத்துடன் அபிடேகம் செய்து, பூவிட்டுப் பல வழியில் வழிபட்டு இறைவற்குக் கனி அமுது படைத்துப் பல உபசாரம் செய்தாள். ஐந்தெழுத்தோதித் துதித்தாள். அது கண்ட இறைவன் வெண்ணாவலின் கீழமைந்த அப்புலிங்கத்திலிருந்து தோன்றினான். பாததீர்த்தம் அருளினான். அண்ணல் அம்மையைத் தழுவி வரம் எது வேண்டும் எனக் கேட்க அம்மை இத்தலம் அடைந்தோர் பரகதி அடைய அமுதலிங்கமாகி அருளவும் ஒன்பது தீர்த்தங்களில் ஆடுவோர் வினை தீரவும் வேண்டினாள். சிவன் அவ்வாறே அருள் தந்தான்.

ஞான உபதேசமாக முப்பொருள் உண்மை கூறிப் பாசம் கெட ஞானமுண்டாம், சிவம் மாறாத பொருள் அதுவே மயக்கமுறாப் பொருள், பல்வகை ஆன்மாக்கள் நிலை, பிறப்பிறப்பால் முத்தி உணராதநிலை, சுத்தமாயை விளக்கம், கேவலநிலை சகலநிலை, சிவசக்தி அடிப்படையில் உண்மை காணும் சுத்த நிலை, அஞ்ஞானத்தால் அடையுங் குற்றங்கள், மயக்கம்நீங்க மெய்ப்பொருள் காணல், சுத்தாவத்தையில் சமாதி சேரும் மெய்ஞானத்தால் உயிர் சிவத்தோடு சேரும் முத்திநிலை ஆகியவை பற்றிச் சிவன் அருளினான்.

அம்மை வேண்டியவாறு இத்தலம் ஓங்க அருளீந்தான். செம்புமுனியிடம் இறைவன்கேட்டதற்கிணங்க அம்முனி இறைவன் பெயர் செம்புநாதன் எனவும் குளம் செம்பு தீர்த்தம் எனவும் பெயர் பெற வேண்டினான். இறைவன் அவ்வாறே அருளினான். இப்புராணம் கூறுவோர் கேட்போர் செம்புநாதன் அருளால் வினை நீங்கி உலகில் புகழும், பெருவாழ்வும், அருளும் நற்கதியும் பெறுவர்.

6. ஞான உபதேசச் சருக்கம்

பொருள்மேன்மைபயிலு ஞான பூதலம் தனில்வெண்ணாவல்
தருமேனி முனிவன் போந்துதவஞ்செய்யும்பான்மை சொன்னோம்
அருண்மேவும் அமுதே சன்பால்அகிலாண்ட அம்மை மெய்ம்மை
பெருஞான உபதே சம்தான் பெற்றிடும் பான்மை சொல்வாம் 153

ஞானபூதலம்-தலப்பெயர். தருமேனி முனிவன்-செம்பு முனிவன். அருண்மேவும் அமுதேசன்-அருளொளி நிரம்பிய சிவபெருமான் (அமுதலிங்கர்)

இறைவன் கொலுவீற்றிருத்தல்

சிமையமால் கயிலை வெற்பில் தெய்வமங் கையர்கள் செங்கை
அமைவுறு மணிக்கா ளாஞ்சி அடைப்பைகொண்டுஅருகு சூழச்
சமையமண் டபம்சேர் சிங்கா சனத்தினில் இரும ருங்கும்
இமையவர் மகிழ்ந்து போற்ற எம்பிரான் இனிதுஇருந்தான். 154

சிமையம்-உச்சி. மால்-பெருமை. காளாஞ்சி – எச்சில் படிகம். சமைய மண்டபம்–திருவோலக்கமண்டபம். இமையவர்-தேவர். (155ஐக் காண்க)

அம்மை துதித்தல்

இவ்வணம்எம்பி ரான்தான் இந்தி ராதிபர் தமக்கு
மெய்வணம் காட்சி நல்கும் வேளையில் வேளை நல்கும்
அவ்வணங்கு இனிதுஎ ழுந்தே அகண்ட நாயகனை நோக்கிக்
கைவணங்குஉறப்பேரன்பு கதித் திடத்துதிக்கல்உற்றாள். 155

வணம் - வண்ணம். இந்திராதிபர்-இந்திரன் முதலிய தேவர்கள், வேளை நல்கல்-முருகனை அளித்தல். அணங்கு-உமை அம்மை, கதித்திட-பொங்கி எழ. வணங்குற-வணங்க.

அரியயன் வருந்தித் தேடும் அடிமுடி படைத்தாய் போற்றி
கரிய ஐந்தலை மாநாகக் கங்கணக் கரந்தாய் போற்றி
உரியஎண் கணனே போற்றி உயிர்ப்பெருந் துணையே போற்றி
பரிபுர ஒலியாய் வேதம் பரவு பொன் பதத்தாய் போற்றி. 156

அரிஅயன்-திருமாலும் பிரமனும். நாகத்தைக் கையில் கங்கணமாகத் தரித்திருப்பவன் சிவன். எண்கணன்-எட்டு வகைக் கணங்களை உடைய சிவபெருமான். பரிபுரம்-சிலம்பு. வேதம் துதிக்கும் திருவடி-சிவபெருமான் திருவடி.

குறைந்தவெண் திங்கள் என்னும் குடிபுகு முடியாய் போற்றி
சிறந்திடும் கனற்கண் என்னும் திலதநன் னுதலாய் போற்றி
புறந்தரு புரமெரித்த புன்னகை முகத்தாய் போற்றி
நிறந்தரும் ஆல கால நீலமா மிடற்றாய் போற்றி. 157

குறைந்த வெண் திங்கள்-பிறைமதி. கனற்கண்-நெற்றிக் கண்ணில் அக்கினி இருத்தல் குறிக்கும். ஆலகால விடத்தால் கழுத்து நீல நிறம் பெற்ற செய்தியை ஈற்றடி குறிக்கும். மிடற்றாய்-கழுத்தைஉடையவனே!

உமைவேண்டல்

சரிவளை உமையாள் ஈசன் தன்னைஇவ் வாறு போற்றித்
திரிவு ஐயம் விகற்பம் இன்றித் தேவரீர் அருளி னாலே
சரியைநற் கிரியை யோகத் தன்மைக ளுணரப் பெற்றேன்.
அரியமெய்ஞானம்என்பால்அன்பினால்அருள்வாய்என்றாள். 158

சரிவளை-கையில் சரிகின்ற வளையல்கள்.

திரிவு-மாறுபாடு ஐயம்-சந்தேகம் விகற்பம்-இரண்டாக நினைத்தல்.

சரியை 4வகை: சரியையிற் சரியை என்பது திருக்கோயிலில் திருவலகிடல், திருமெழுக்கிடல், திருவிளக்கிடல் தூபமேற்றல், நந்தவனம் வைத்தல் முதலியன. சரியையிற் கிரியையாவது சந்திரசேகரர், இடபாரூடர் முதலிய இருபத்தைந்து மூர்த்தங்களு ளொன்றனையோ ஆவரண மூர்த்திகளுள் ஒன்றனையோ வழிபடல். சரியையில் யோகமாவது இருதயத்தில் உருத்திரக் கடவுளைத் தியானம் செய்தல்

சரியையில் ஞானமாவது அத்தியான பாவனையி னால் ஓரனுபவ உணர்வு நிகழ்தலாம்.

கிரியை வகை 4. கிரியையிற் சரியை யாவது சிவபூசைக்கு வேண்டும் உபகரணங்கள் செய்து கோடல் கிரியையில் கிரியையாவது சிவாகமத்தில் விதித்தவாறே இலிங்க வடிவில் செய்யும் பூசனை. கிரியையில் யோகமாவது அகத்தே பூசை, ஓமம், தியானம் மூன்றற்கும் மூவிடம் வகுத்துக் கொண்டு செய்யும் அந்தரியாகம். கிரியையில் ஞானமாவது அவ்வந்தரியாக உறைப்பின் கண் நிகழும் ஓர் அனுபவ வுணர்வு. யோகம் என்பது இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பன. ஞானம் பரஞானம், சிவ ஞானமாம்.

சிவன் மறுமொழி

பண்ணியல் மொழிஇவ் வாறு பகர்ந்தி டப்பால நீற்றுப்
புண்ணியன் உளமகிழ்ந்து புன்னகை புரிந்து நோக்கி
நுண்ணிய பொருளது ஒன்றை நுவன்றனை அதன்பேறு எய்த
நண்ணிய நின்பால் அன்பால் நவிலுவம் எனஉ ரைத்தான். 159

பண்ணியல்மொழி-இசை போலும் மொழி பேசும் உமையம்மை. பாலம்-நெற்றி. புண்ணியன்-சிவபெருமான். நுவன்றனை-சொன்னாய். நவலுவம்-சொல்வோம்.

கிரியை

வளைந்தகண் ணாடி தன்னை மாசற விளக்குச் சோதி
விளைந்திடும்அவ்வா று போல விரும்பிய கிரியை யாவும்
உளந்தனை விளக்கு ஞானம் உதித்திடும் ஆதலாலே
கிளர்ந்திடு கிரியை ஞானம் கிடைத்திடும் நிமித்தம் என்றான், 160

அவ்வாறு—அந்நெறி. கிரியை உள்ளத்தை விளக்கும். ஞானம் தோன்றும் கிரியை-ஞானம் கிடைத்தல்.

தவம் செய்தற்குரிய இடத்தை அம்மை கேட்டல்

கரியகந் தரன்இவ் வாறு கட்டுரைத் திடவே நீல
வரிவிழி உமையும் ஈசன் மலரடி வணங்கிப் போற்றிக்
கிரியையின் முயல ஞானம் கிடைக்குமேல்கிரியை ஆதற்கு
உரியமா தவம்மு யற்றற்கு ஓரிடம் உரைப்பாய் என்றாள். 161

சுரியகந்தரன் - நீலகண்டனாம் சிவன். கட்டுரைத்திட, முறையாகக் கூற. முயற்றற்கு-முயன்று செயற்கு.

இறைவன் விடை

முத்துஅன நகைஇவ் வாறு மொழிந்திட முனிவர் போற்றும்
வித்தகன் உமையை நோக்கி மெய்ஞ்ஞானம் பெறுதல் வேண்டின்
மொய்த்தபங் கயத்தோன் செம்பு முனிவனும் தவம்இ யற்றும்
அத்தலம் அடைந்து நீயும் அருந்தவம் புரிவாய் என்றான். 162

முத்துஅனநகை-முத்துப் போல் பல்லை உடைய உமை. முனிவர் போற்றும் வித்தகன்-சிவபெருமான். பங்கயத்தோன்-பிரமன். அத்தலம்-ஞானபூமி.

வேறு

நம்மைநீ அன்பொடு ஞான பூமியில்
செம்மைசேர் அருச்சனை செய்து நாடொறும்
பொய்ம்மையில் அருந்தவம் புரியி லக்கணம்
மெய்ம்மைசேர் ஞானமும் விளையும் என்றனன். 163

ஞானபூமி - தலப்பெயர். பொய்ம்மையில் அருந்தவம் செய்யின் ஞானம் விளையும்.

உமை மொழி

தாளமா மணிமுலை தன்னொடு இப்படிக்
கா்ளகூ டம்புனை கண்டன் கூறவே
வாளதுஆ கியவிழி மடந்தை அண்ணல்பால்
மீளவோர் மொழிதனை விளம்பல் உற்றனள். 164

தாளமாமணிமுலை - கைத்தாளம் போன்ற முலையை உடைய உமை அம்மை. தாளம்-கைத்தாளம் (போன்ற) (வாட்போக்கி உலா. 251.) காளகூடம் புனை கண்டன்-சிவபெருமான் (காளகூடம்-ஆலகாலவிடம்.(வாள்) விழிமடந்தை-உமைஅம்மை. விளம்பல்-சொல்லுதல்.

வேறு

ஏறுமால் விடையாய் நீயிங்கு இருத்தல்பெற்று இருந்த வத்தோர்
பேறுமாய்க் கங்கை ஆதிப் பெருந்தீர்த்தம் பொருந்தி மற்றும்
கூறுமால் அயன்விண் ணோர்கள் கும்பிடும் கயிலை அல்லால்
வேறுமோர் தலத்தில் செல்லல்வேண்டுமோ எனமொ ழிந்தாள்.

மால்விடையாய்-பெருமை பொருந்திய காளை மீது வந்த சிவபெருமானே! அயன்-பிரம்மா.

கங்கையில் குளித்துக் கயிலையில் தவம் செய்வதைவிடச் சிறப்பான ஒரு தலம் உண்டா என அம்மை கேட்டாள்.

சிவன் மறு மொழி

பேசருங் கயிலை தன்னில் பெருமையைக் குறித்து மிக்க
ஈசனை அகன்றிடாமல் இருப்பது நினைத்தும் குன்றா
நேசமோடு உமைவி ளம்ப நெடுஞ்சடை மீதில் கங்கை
மாசறு திங்கள் வைத்தோன் மறுமொழி உரைக்கல் உற்றான் 166

மாசறுதிங்கள் வைத்தோன்-சிவபெருமான் பிறைமதியில் குற்றமின்மையால் மாசறு திங்கள் என்றார். கயிலையில் சிவனை விட்டு விலகாதிருக்க அம்மை விரும்புகிறாள் என்பது இதனால் புலனாகிறது.

தலப்பெருமை

கருத்துறு தவம்அ னைத்தும் கன்ம பூமியில் அல்லாது
பெருத்திடு பயனை நல்காப் பெருங்கிரி ஈது போகம்
அருத்திடு பூமி ஆகும் ஆதலால் அத்த லத்தில்
இருத்தலும் அருந்தவங்கள் இயற்றலும் வேண்டும் என்றான்.

கன்மபூமி-பரதநாடு. கயிலைகூடத் திருவாணைக்கா நல்கும் பெரும் பயனை நல்காது. அருத்திடுபூமி - துய்க்கும் பூமி. இத்தலத்திலிருந்து தவம் செய்ய வேண்டும் என்றான் சிவன்.

ஆனைக்கா செல்ல அம்மை நினைத்தல்

நெறித்திடுந் திங்கள் வேணி நிமலன்இவ் வாறு கூற
மறித்துரை செய்தி டாது மலரடி வணங்கி ஏத்திக்
குறித்துஅரன் தனைநீங் காதுள் கொண்டுசெம் மணிகள் மேடை
எறித்திடும் ஞான பூமிக்கு ஏகுமாறு உளத்(து)அமைத்தாள். 168

நெறித்திடும்-கலைகள் முறையாக வளர்ந்தும் தேய்ந்தும் வரும். வேணி-சடைமுடி. நிமலன்-சிவபெருமான். மறித்து-எதிராது. அரன்-சிவபெருமான். ஞானபூமி-தலப்பெயர்.

உமை தவம் செய்ய வருதல்

வேறு

மேதகு சிகையுடன் விசையைப் போற்றிடப்
பூதமும் கணங்களும் புடைவளைந்திட
நாதன்அங்கு அருளிய ஞான பூமியில்
மாதவம் செயஉமை வந்து போந்தனள் 169

விசையை - வெற்றி மகளாம் உமையை. ஞானபூமி-தலப்பெயர்.

ஆனைக்காவே சிறப்புடைத்து

அத்தகு கயிலைவிட்டு அகில நாயகி
இத்தலம் தனில்தவம் இயற்றப் போந்தனள்
நத்தணி வாவிசூழ் ஞான பூமியோ
வித்தகன் கயிலையோ மேன்மை பெற்றதே 170

அகில நாயகி-உலகத்தாயாம் உமை (இத்தலத்திறைவி திருநாமம்) நத்து-சங்கு, நந்து நத்தாயிற்று. வாவி-குளம். வித்தகன்-சிவபெருமான்.

உமை தவம் செய்ய வந்ததால் இத்தலமே கயிலையினும் மேன்மையுற்றது.

பூமகளின் புண்ணியம்

விண்ணுயர் கயிலையை விடுத்து மேன்மைசேர்
திண்ணிய அருந்தவம் செய்யச் சிந்தையில்
எண்ணிய உமையமை எய்தல் இங்குஎனப்
புண்ணியம் புரிந்தனள் பூம டந்தையே. 171

உமையமை-உமையம்மை.

அம்மை இத்தலத்தில் எய்தலால் பூமடந்தை புண்ணியம் செய்தாள்.

உமையை முனிவனும் பிரமனும் பணிதல்

வேறு

வேதம் ஆகமம் இரண்டும் விரும்பிவந்து இறைஞ்சு மாபோல்
மூதறி அயனும் சம்பு முனிவனும் கருதும் உள்ளத்து
ஆதர வுடனே போற்றி ஆங்குஎதிர் கொண்டு செம்பொன்
பாதபங் கயம்ப ணிந்தார் பணிமொழி உமையைக் கண்டே. 172

பிரமனும் சம்பு முனியும் முறையே வேதமும் ஆகமமும் போல இத்தலத்தில் வந்து தவம் செய்தனர்.

பிரமன் வினா

ஊக்கமாய் எம்பி ரானுக்கு உயிர்த்துணை ஆகி என்று(ம்)
நீக்கமி லாத நீயும் நீங்கிஇத் தலத்தில் போந்தாய்
ஆக்கம் ஏதுஎன நினைந்தோ அரன்ஊடல் புரிந்தோ எங்கள்
பாக்கிய வசமோ என்றான் பங்கயா சனத்துஇ ருந்தோன் 173

இங்கு வந்ததின் ஆக்கம் ஏதோ? அரனுடன் கொண்ட ஊடலோ? எங்கள் பாக்கியமோ? எனப்பிரமன் கேட்டான். பங்கயாசனத்து இருந்தோன்-பிரமன்.

உமை விடை

இத்தகை சதுமுக கத்தோன் இயம்பிட இமைய வல்லி
உத்தமன் தன்பால் ஞான உபதேசம் விரும்பு மாறும்
அத்தகு ஞான பூமி அடைந்தனன் அனுக்கை தன்னால்
மெய்த்தவம் புரிதற்கு அண்ணல்விளம்பியவாறு சொன்னாள் 174

சதுமுகத்தோன் - பிரமன். இமையவல்லி - உமை. உத்தமன்-சிவபெருமான். ஞானபூமி-தலப்பெயர். அனுக்கை. அருள். விளம்பியவாறு-சொன்னபடி.

உமையைத் தவம் செய்ய வேண்டல்

பொற்புஅமர் புரிசை ஞான பூமியின் மகிமை யாகும்
அற்புதம் தனைஎன் போலும் அவர்களால் உரைக்க வற்றோ
கற்புடை அணங்கே எங்கோன் கற்பனை முறைவ ழாமல்
தற்பர ஞானம் எய்தத் தவம்புரிந்து அருள்வாய் என்றான். 175

பொற்பு-அழகு. புரிசை-மதில்; திருநீற்று மதில் சிவ பெருமானே சித்தராக வந்து கட்டினார் என்பது புராணம் கூறும் வரலாறு. ஞானபூமி-தலப்பெயர். கற்பனை-கட்டளை. தற்பரஞானம்-இறையறிவு.

கற்புடை அணங்கு என்பதற்கு இமயமலையில் வாழ்ந்த தெய்வம் என்பர்.

176 ஆம் பாடல் இல்லை. (இங்கு ஓலையில் இதற்கென வெற்றிடம் காணப்படுகிறது.)

இருவரும் நீங்கல்

ஈங்கிவள் தன்னால் யாமும் எந்தையைக் காண்போம், என்றே
ஓங்கிய மகிழ்ச்சி கூற உமையவள் தனைவ ணங்கித்
தேங்கமழ் கமலத் தோனும் செம்புமா முனிவன் தானும்
ஆங்கவள் ஆற்றத் தத்தம் ஆச்சி ராமத்து அடைந்தார் 177

எந்தை-சிவபெருமான். கமலத்தோன்-பிரம்மா. ஆச்சிராமம்-தவம் செய்தற்குரிய இடம்·

(ஓலையில் தொடர் எண் 25 என உளது.)

உவமை இருத்தல்

வேறு

கற்பக வனநிகர் காவும் கங்கைநீர்
பொற்பமர் பொன்னியம் புனலும் நோக்கியே
அற்புத அத்தலத்து அமல வெள்ளிமால்
வெற்புஅதில் எனஉமை வீற்றி ருந்தனள் 178

கற்பக வனம் போன்றது திருவானைக்கா. கங்கை போலப் பெருமையுடையது காவிரி. அவ்விடத்தில் கயிலை மலை (வெள்ளிமால் வெற்பு)யில் வீற்றிருப்பது போல் உமை வீற்றிருந்தாள்.

பாங்கியர் ஆற்றுதல்

ஏற்றினை ஏனவெள் எயிற்றை மானினைத்
தோற்றிய கொன்றையம் தொடையைக் காட்டியும்
போற்றிய பாங்கியர் பொருப்பின் வஞ்சியை
ஆற்றின விரகமுற்று அழுங்கு றாமலே 179

ஏறு-காளை. ஏனம்-பன்றி. எயிறு-பல் (கொம்பு) பொருப்பின் வஞ்சி - மலைமகளாம் உமை. அழுங்குறாமல்-தீராமல். சிவபெருமான் முடியில் பன்றிக் கொம்பு, கொன்றை மாலை ஆகியவை சூடியவர்.

தோழியர் சிவபெருமான் பொருள் பலவற்றைக் காட்டியும் மலைமகளின் விரகம் தீரவில்லை.

உமை தவம்

வேறு

புனிதமாம் இடமும் காற்றும் பூந்தரு வனமும் இன்பாம்
பனிதரு தடமும் உய்யப் பண்ணுதற்கு எண்ணு வான்போல்
வனிதையர் திலதம் அன்னாள் வனந்தரு காய்கிழங்கு
கனியுடன் இனிய தெண்ணீர் கவர்ந்தரும் தவம்பு ரிந்தாள் 180

வனிதையர் திலதமன்னாள்-பெண்களுள் திலகம்போன்ற உமை. அவ்விடத்துள்ள வனம், குளம், போன்றவை உய்ய அம்மை காய்கனி உண்டு தவம் புரிந்தாள்.

சடைமுடி, மரவுரி தரித்தல்

வேறு

யோகமே பயின்றிடும் உத்த மர்க்குஅரும்
போகமேன் மைகள்தரும் பொருப்பின்வஞ்சியும்
மேகம்நேர் கருங்குழல் வேணி ஆகவே
ஆகம்மேல் வற்கலை ஆடை சூழ்ந்தனள். 181

பொருப்பின் வஞ்சி-உமை. வற்கலை-மரவுரி.

மேகம் போன்ற குழல் சடைமுடியாகவும், மார்பின் மேல் மரவுரியை ஆடையாகவும் கொண்டாள்.

நெருப்பில் தவம்

வேறு

புனல்பயில் திங்கள் கொன்றை புடைபயில்சடையோன் நெற்றிக்
கனல்எதிர் மாய்ந்தோன் வந்து கணைதொடுத்துஅடரா வண்ணம்
உனல்அரும் காவல் செய்யும் உபாயமாம் என்ன ஓரைந்து
அனலிடை உமையாள் நின்றே அருந்தவம் புரியல் உற்றாள்

நெற்றிக் கனலெதிர் மாய்ந்தோன் சிவபெருமானின் நெற்றிக்கண் நெருப்பால் எரித்த மன்மதன். அடரா வண்ணம்-தாக்காத வண்ணம். உனல்அரும் - எண்ணுதற்கரிய ஓரைந்து அனலிடை- ஐம்பூதங்களின் ஒன்றாம் நெருப்பில் நின்று.

மழையில் தவம்

முயலுறும் அருந்த வத்தின் முக்கணான் இடத்தில் வைத்த
மயலெனும் கொடிய செந்தீ மாற்றுவாள் போல மாறாப்

புயலது பொழிய நின்றாள் பொங்கு பேருளி னாலே
இயலது பொருந்த முப்பத்து இரண்டறம் வளர்க்கும் வஞ்சி 183

முக்கணான்-சிவபெருமான். மயல்-காமம். புயல்-மழை. முப்பத்திரண்டறம் வளர்க்கும் பெண் உமை.

பனியில் தவம்

முந்தைநூல் முறைவ ழாது முதிர்தவ நிலையில் நிற்கும்
விந்தையர் மடந்தை தன்பால் மிகப்பொழி பனியின் சட்டம்
சிந்தைகூர் அருந்த வம்செய் திருந்திழை வருந்தக்கண்டே
தந்தையாம் இமவான் அன்பால் தழுவுறும் தன்மை போலும் 184

விந்தையர் மடந்தை-தேவமகளாம் உமை பனிநீரில் அருந்தவம் செய்யும் நிலை.

தந்தை இமவான் மகளைத் தழுவிய தன்மை போலும்.

உடல் மெலிவு

வேறு

வளர்ந்திடும் பேருள் வல்லி மேனிதான்
உளந்தரும் அருந்தவத்து உறவ ருந்தியே
தளர்ந்துடல் மெலியவும் சாரும் மாசிலா
இளம்பிறை போல வேஎழில் படைத்ததே. 185

வல்லி-வல்லிக் கொடி போன்ற உமை. உறவருந்தியே-மிகவும் வருந்தியே. அம்மைஉடல் மெலிய இளம்பிறை போல் எழில் கொண்டது.

பிறை போன்றது எனக் கூறுவதால் இறைவன் அருளுக் கிடம் ஆவாள் என்பது குறிப்பு.

வேறு

மென்மைசேர் இமைவல்லி மேனி மேவரும்
வன்மைசேர் அருந்தவம் வருந்த ஆற்றுதல்
புன்மைசேர் மருங்குலம் பூவை பொற்கிரி
தன்மைசேர் தடமுலை தாங்கப் பெற்றதே. 186

நுண்ணிய இடையால் பூவைப் போன்ற உமை அம்மையின் பொன்மலை போன்ற முலைகளைத் தாங்கப் பெறுதல் போன்றது.

நுண்ணிய இடை பெருமுலையைத் தாங்குவது மென்மை படைத்த இமவல்லி கடுந்தவம் செய்யும் நிலை.

பிரமன் வருகை

வேறு

தவமொன்றி வருந்தி ஆகம் தளர்ந்திடும் சயில மங்கை
சிவலிங்க பூசை தன்னைச் செய்திடும் கருத்தி னாலே
புவனங்கள் படைத்தோன் தன்னைப் புந்தியில் குறிக்கும் முன்னம்
அவன்வந்து வணங்கி நின்றான் அக்கணம் அகம கிழ்ந்தே 187

தவம்ஒன்றி-தவத்தில் பொருந்தி. ஆகம்-உடம்பு. சயிலம்-மலை.

சிவலிங்க பூசை செய்ய நினைத்த அம்மை பிரமனை நினைக்க அக்கணமே அவன் வந்து வணங்கி நின்றான்.

கான்செய் பூங்குழல்முன் போந்து கமல பீடத்து இருந்தோன்
தான் செய செயவென் றேத்தித் தவம்எது செய்தேன் என்னைத்
தேன்செயும்மொழியாய்உன் றன்திருவுளத்துஅழைக்கப்பெற்றேன்
யான்செய வேண்டு கின்றது என்என இயம்பி நின்றான். 188

கான்-மணம். பூங்குழல்-உமை. கமலபீடத் திருந்தோன்-பிரமன். தேன் செயு மொழியாய்!-உமையை நோக்கிய விளி. தான் செய்யும் செயல் யாது என பிரமன் உமையிடம் கேட்டு நின்றான்.

உமை பூசிக்க இலிங்கம் கேட்டல்

நேசமோடு அவன்உ ரைக்க நேரிழை அவனை நோக்கி
ஈசனை அருச்சிப் போர்க்கே எய்தும்எப் பயனும் அன்றோ
பூசனை புரிவ தற்குப் பொருந்திய இலிங்கம் ஒன்றை
ஆசற வகுத்துஎ மக்குஇங்கு அளித்திட வேண்டும் என்றாள். 189

நேரிழை-உமை. ஆசற-குற்றமின்றி. ஈசனை அருச்சிப் போர்க்கே பயன் கிட்டும். அதனால் பூசனை புரிய இலிங்கம் வகுத்துத்தர பிரமனை அம்மை கேட்டாள்.

பிரமன் விடை

பகுத்திடு பஞ்ச பூதப் பரிணாமம் ஆகி உள்ள
சகத்தினில் வடிவுஅ னைத்தும் சங்கரன் வடிவே அன்றோ
மிகுத்திடும் அன்பினால்நீ வேண்டிய பூதம் தன்னில்
வகுத்துஅருச்சனைசெய்என் றான் மண்ணுலகினைவகுத்தோன்

பஞ்சபூதம்-நிலம், நீர், காற்று, நெருப்பு, வானம் எனும் ஐம்பூதங்கள்.

'ஐந்தின் மயக்கம் உலகம்' என்பது பழமரபு எல்லா வடிவும் சங்கரன் வடிவம் அதனால் அன்பினால் நீ வேண்டிய பூதத்தை இலிங்கமாக வகுத்து அருச்சனை செய்க என்றான் பிரமன்.

நீரை இலிங்கமாக்குதல்

சுரும்புஅமர் குழலாள் வேதன் சொல்லிய மொழிஉள் கொண்டே
வரும்பல வடிவும் ஈசன் வடிவுஎனும் கருத்தி னாலே
பெரும்பல வினை ஒழிக்கும் பிரமபுட் கரணி தன்னில்
அரும்புனல் தனையி லிங்கம் ஆகுமாறு உளத்துஅ மைத்தாள்

சுரும்பு-வண்டு. குழலாள்-உமை. வேதன்-பிரமன் பிரமபுட்கரணி - தலத்திலுள்ள பல தீர்த்தங்களில் ஒன்று. அப்பொய்கையின் நீரை அம்மை இலிங்கமாகுமாறு கருதினாள்.

அன்னியம் அறவே நின்றும் அறிகொணா முதல்வன் தன்னைத்
தன்னிகர் சக்தி காட்டும் தன்மையைக் காட்டு வாள்போல்
பொன்னிசூழ் தலத்தில் வேதன் பொய்கையில் புனித நீரைக்
கன்னியாய் உலகம் ஈன்றாள் கரத்தினால் திரட்டல் உற்றாள்

அன்னியம் அற - வேறுபாடின்றி. முதல்வன் - சிவ பெருமான்.

சக்தி தன் தன்மையைக் காட்டுவாள் போலக் காவிரி சூழ்தலத்தில் பிரமபுட்கரணி நீரைக் கையால் இலிங்கமாகத் திரட்டினாள்.

கருமேனி இமைய வல்லி கருத்தினால் திரட்டும் தெண்ணீர்
ஒருமேனி இலிங்கம் ஆகி ஒளிபெறத் தோன்றும் தோற்றம்
அருமேனி தனில்ஓர் பாகம் அம்பிகை பயின்றாள் என்றே
திருமேனி முழுதும் கங்கை சென்றுறக் கவர்தல் போலும் 193

கருமேனி இமையவல்லி-உமையம்மை.

அம்மை, சிவபெருமானின் உடம்பில் பாதியைப் பெற்றதைக் கங்கை பொறாமல் அவன் திருமேனி முழுதும்கவர்ந்தது போல்நீரால் இலிங்கம் அமைந்தது என்பது குறிப்பு.

மையுறு விழிம டந்தை மலர்க்கையால் திரட்டும் தெண்ணீர்
மெய்யுறு சோதி லிங்கம் வியப்புரு சிறப் பநோக்கி
ஐயுற ஒன்றும் இன்றி அருந்தவப் பயன் அனைத்தும்
கையுற வந்தது என்றே கண்களித்து உளம கிழ்ந்தாள். 194

மடந்தை-உமை. மலர்க்கை-மலர் போன்ற கை.

தவப்பயன் கைமேற் கிடைத்தது போன்று அம்மை திரட்டிய நீரில் இலிங்கம் வெளிப்பட்டது.

சிவன் அமுதீசுரர் எனப் பெயர் பெறல்

நிறங்கொள் பிரமபுட்கரணி
நிறைநீர் தடத்துக் குறையாத
அறங்கொள் அகிலாண் டவள்என்னும்
அணங்கு கரத்தால் திரட்டுகின்ற
நிறங்கொள் புனலே அமுதாகும்
செயலால் அமுதீசுரர் என்றும்
பிறங்கும் செழுநீர்த் திரள்என்றும்
பெயர்பெற் றனன்எம்பெருமானே 195

பிரமபுட்கரணி-தீர்த்தம். அகிலாண்டவள் - அகிலாண்ட நாயகி என்பது இத்தல இறைவி பெயர். நிறம்-ஒளி.

நீர் அமுதாகும் செயலால் அமுதீசுரர் என்று இத்தலக் கடவுள் பெயர் விளக்க முறுகிறது.

பிறங்கும்-விளங்கும்.

செம்புமுனி நிழல் புரிதல்

சார்ந்திடும் அமுத லிங்கம் தனக்கு நன்நீ ழலாகச்
சேர்ந்திடுஎன்று இமய வல்லி செம்புமா முனியைக் கூற
நேர்ந்தது தவப்பேறு இன்றி நினைந்திடும் படியே என்று
கூர்ந்திடும் உளம கிழ்ந்து குளிர்நிழல் புரிந்து நின்றான். 196

அமுதலிங்கம்-தல இறைவன் பெயர். உமை செம்புமா முனியை இறைவனுக்கு நிழலாக அமைய வேண்டு மென்று கூற முனிவர் அம்மை மொழிப்படி நிழலைத் தந்து நிற்றல்.

நாவல் நின்ற நிலை

முடிபகி ரண்டம் ஓங்க மூலம்பர தாளம் செல்லக்
கடிகமழ் பணைகள் சென்று கலந்தட்ட திசையும் துன்ன

அடிமுடி அயன்மால் தேட அண்ணலார் நின்றது என்ன
நெடிவெண் ணாவல்என்று நிலைபெற நின்றதுஅன்றே 197

முடி-அண்டம். ஓங்கவும் அடி(மூலம்) பாதலம் செல்லவும் மணமிக்க கிளைகள் எட்டுத் திசைகளில் பரவவும் திருமாலும்-பிரமனும் தேட நின்ற சிவபெருமான் போல நாவல் மரம் நின்றது.

தலநாவல் பெருமை இறைவன் பெருமையுடன் ஒப்பிடப் பெறுகிறது.

உமை பூசை புரிதல்

ஓங்குபேர் அன்பால் பூசை உபகர ணங்கள் எல்லாம்
பாங்கியர் இனிது அமைத்துப் பணிவிடை செய்து போற்றத்
தேங்கமழ் தூய்நீ ராடிச் சிறந்த ஆ சனத்துஇருந்து
பூங்குழல் இமைய வல்லி பூசனை புரியல் உற்றாள் 198

பூசைக்குரிய பொருள்களைத் தோழிமார் அமைத்தனர் அம்மை நீராடிச் சிறந்த ஆசனத்திலிருந்து பூசனை புரிந்தாள்.

சுத்திவகை

சுந்தர வடிவை ஆத்ம சுத்தியாய்ப் புனிதம் ஆக்கி
அந்தரி யாகம் செய்தே அமைத்தரும் தான சுத்தி
சிந்துர நுதலாள் மிக்க திரவிய சுத்தி அன்பின்
மந்திர சுத்தி செய்து வருமனத் து ஒருமை பூண்டே. 199

பூசை செய்யும் முறை கூறப் பெறுதல்:

இலிங்க வடிவை ஆத்துமசுத்தியாய்த் தூய்மை செய்தல் அந்தரியாகம்-மனத்தினாற் பூசை செய்து, இடத்தூய்மை செய்தல் மன ஒருமை பூணல் ஆகிய செயல்தள் அம்மையின் செயல்களாம். சிந்தூரம்-குங்குமம்.

ஆன்மசுத்தி, தானசுத்தி, திரவியசுத்தி, மந்திரசுத்தி ஆகியன காண்க.

தென்பால் அமணர் கழுவேறச்
செம்பொன் சிவிகை தனிலேறத்
தன்பால்ஆகும் திருமுலைப்பால்
தருவாள் நறுநெய் தயிர்செந்தேன்

இன்பாய் இசைந்த கரும்பினீர்
இளநீர் கனிநீர் பனிநீரும்
அன்பால் ஆன்பால் முதலனகொண்டு
அரன்பால் செய்தாள் அபிடேகம் 200

தென்பால்-பாண்டிநாட்டில் சம்பந்தரிடம் அனல்வாதம் புனல்வாதம் செய்து தோற்ற அமணர் கழுவேறினர். வென்ற சம்பந்தர் பொற்சிவிகை ஏறினார். இதற்குக் காரணம் அம்மை முலைப்பால் தந்த பெருமையே. இக்கதை இங்குக்கூறப் பெற்ற நோக்கம் அம்மை அமுதேசருக்கு அபிடேகம் செய்த பயன் என்பதாம்.

அபிடேகப் பொருள்கள்: நெய், தயிர், தேன், கரும்புச் சாறு, இளநீர், கனிச்சாறு, பனிநீர், பசுவின் பால் முதலியன.

வேறு

ஆதார சத்திமுதல் குடிலை ஈறாய்
அமைந்திடும்ஆ சனம்ஆகும் அரவிந் தத்தின்
மீதாகும் அவிந்தியா தேகம் தன்னில்
விமலனைஆவா கித்தேகமலம் என்னும்
போதாரும் திருக்கரத்துப் பொருப்பின்மாது
புட்பஅஞ் சலிபுரிந்துபுனிதன் செம்பொன்
பாதார விந்தமுக மவுலி சேவித்து
பாத்தியா சமனாதி பரிந்துஅளித்தாள் 201

ஆதாரசத்தி-அடிப்படைஆற்றல். குடிலை-சுத்த மாயை ஆசனம்-இருப்பிடம். அரவிந்தம் - தாமரை. ஒவ்வொரு ஆற்றலும் வீற்றிருக்கும் இடத்தைத் தாமரையாக உருவகம் செய்வர். அவித்தியா தேகம்- ஆணவ உடல். ஆவாகித்தல்- இடம் பெறச் செய்தல். பொருப்பின்மாது - மலைமாதாம் உமை. புட்பஅஞ்சலி-கைநிறையக் கொண்ட பூவிட்டு வழிபடல். பாதாரவிந்தம்-அடித்தாமரை. மவுலி-முடி. பாத்தியம்- சோடோசோபசாரங்களில் ஒன்றான கால் கழுவக் கொடுக்கும் நீர். ஆசமனம்-வலக்குடங்கையால்-மந்திரபூர்வமாக நீரை மும்முறை உள்கொள்ளுகை.

வேறு

பாத்திரம் உறநி ரைத்த பங்கயம் முதலாய் உள்ள
பூத்திரள் இருகை ஏந்தி பூசனை புரிந்து மன்னும்
நேத்திரம் ஆகும் செல்ல நீலஉற் பலங்க ளாலே
சாத்திர விதிவ ழாமல் சாற்றினள் சயில மங்கை, 202

பங்கயம்-தாமரை. நேத்திரம்-கண். நீலவுற்பலம்-கருங் குவளை. சாத்திர விதிப்படி சூட்டினாள் சயிலமங்கை-மலை மகளாம் உமை.

கனி அமுது படைத்தல்

கூரமுது உதித்திடும் குரைக டல்கடு
வாரமுது எனச்செயும் அகில நாயகி
சீரமுது எனத்தரு செழுங்கொ ழுங்கனி
பேரமுது அளித்தனள் பெருகும் அன்பினால் 203

கூர்-மிகுதி. கடு-ஆலகாலவிடம். குரைகடல்-ஒலிக்கும் கடல். அகிலநாயகி-தல அம்மை.

உபசாரம்

கைக்கொள் இலைஅடைக் காயும் நல்கியே
அக்கணம் தூபதி பாதி ஆதிய
தக்கவண் இரண்டுப சாரம் ஆனவை
மிக்கபே ரன்பினால் வியந்து அளித்தனள் 204

இலை அடைக்காய் - வெற்றிலை பாக்கு. ஆதிய-முதலாயவை. இரண்டுபசாரம் அன்பினால் அளித்தாள் அம்மை.

அஞ்செழுத்து செபித்தல்

நஞ்சமுத் தியவர நதியு டன்மதிப்
பிஞ்சமுத் தியசடைப் பிரான்ம கிழ்ந்திட
நெஞ்சமுத் தியபெரு நேயம் பொங்கவே
அஞ்செழுத் தினைச்செபித் தாங்கு அளித்தனள் 205

நஞ்சு-நஞ்சுள்ள பாம்புக்கு ஆதபெயர். வரநதி-புண்ணிய ஆறாம் கங்கை. மதிப்பிஞ்சு - பிறைமதி. அஞ்செழுத்து-நமசிவாய என மந்திரம்.

உமைதுதித்தல்

இகலரும் கடலையும் மீறி வானையும்
தொகலரும் கரத்தினால் தொகுத்த ளத்தல்போல்
அகலரும் சதுமறை ஆக மங்களால்
புகலரும் துதியினைப் போற்றல் உற்றனள் 206

இகல்-பகை. தொகல்-தொகுத்தல். சதுமறை - நான்கு வேதம். புகலரும்-சொல்லற்கரிய.

வேறு

அளவிட அரியாய் போற்றி அணுவினுக்கு அணுவே போற்றி
இளமதிச் சடையாய் போற்றி என்னுயிர்க்கு உயிரே போற்றி
உளமொடு வாக்கி னுக்கும் உன்னரும் பொருளே போற்றி
தளர்வறு கருணைக் குன்றே தாணுவே போற்றி போற்றி 207

அரியாய் - முடியாதவனே. இளமதி - பிறைச்சந்திரன். உன்னரும் - நினைக்க முடியாத. தாணுவே- இலிங்கமாக நிலை பெற்ற சிவபெருமானே.

ஆகமப் பொருளே போற்றி அருந்தவப் பயனே போற்றி
நாகபூ டணனே போற்றி ஞானக்கண் அருள்வாய் போற்றி
ஏகநா யகனே போற்றி எமக்குநா யகனே போற்றி.
போகமும் வீடும் நல்கும் புராதனா போற்றி போற்றி 208

நாகபூடணன்-பாம்பை அணியாக அணிந்தவன். ஏக நாயகன்-ஒப்பற்ற தலைவன். போகம்-சொர்க்க இன்பம். புராதனா-பழைமையானவனே!

வேறு

தொனியே றஇவ்வா றுதுதித்து உமையாள்
தனியே தவம்வருந் தல்தவிர்ந் திடவே
இனியே னும்எழுந் தருள்என் உயிரின்
கனியே எனநின் று கனிந்து அயர்வாள் 209

தொனி-ஒலி.

இறைவனை உயிரின் கனி எனத் துதித்தல். கனியமுது படைத்தது (203)இல் காண்க.

இறைவன் தோன்றல்

வேறு

ஈன்றுலகு அளித்த வஞ்சி இவ்வண்ணம் அரனைப் போற்ற
ஊன்றிய திருவுள் ளந்தான் உருகியே பெருகி நீழல்
ஆன்றவெண் ணாவல் நின்ற அப்புலிங் கத்தின் உள்ளே
தோன்றினன் அரிஅ யற்கும் தோன்றுதற்கு அரிய சோதி 210

உலகைப் பெற்றெடுத்த வஞ்சி-உமை. ஊன்றிய-நிலை பெற்ற. ஆன்ற-நிறைந்த. அப்புலிங்கம்-நீரால் திரட்டிய

லிங்கம். அரி அயன் ஆகியோர்க்குத் தோன்றாச் சோதி சிவபெருமான்.

தீர்த்தம் கொடுத்தல்

ஈர்த்திடும் இமய வல்லி இலிங்கத் துள்இளவெண் திங்கள்
ஆர்த்திடும் சடைமுடித்தான் அவன்தனை எதிர்கண்டு ஏத்திக்
கூர்த்திடு பாத தீர்த்தம் கொடுத்திடக் குறைவி லாத
தீர்த்தமாம் அவைஅனைத்தும் திருவுளத்தினில் அடைத்தாள்.211

ஈர்த்திடுமிமயவல்லி-இறைவனால் கவரப் பெற்ற உமை. இளவெண் திங்கள்-பிறைச் சந்திரன். ஆர்த்திடும்-புனைந்திடும். சடை முடித்தான்-சிவபெருமான். கூர்த்திடு-பெருகிடும்.

இறைவன் கொடுத்த பாத தீர்த்தத்தை அம்மை தன் உள்ளத்தில் அடைத்தாள்.

குறைமென்மருங்குல்உமைஅன்புகுறையாஉளத்தில்குறித்தளவில்
இறையும் தரியாத் தீர்த்தமெல்லாம் திரண்டேஇறையவன்
உறையும் கெற்பக்கிரகத்தில் உதித்தே ஈசனுறு திசையில்
அறையும் சீர்மெய்த்தீர்த்தமென அகலா வினைகள் அகற்றிடுமால்

மென்மருங்குல்-மெல்லிய இடை. இறையும் தரியா-சற்று நேரங் கூட நிற்காமல். ஈசனுறுதிசை-சிவனுள்ள திக்கு, வடகிழக்கு. அறையும்-கூறும். அகலாவினை-தீராவினை.

இறைவன் வெளிப்பட்டவுடன் இறைவி பாத்தியங் கொடுத்தற்கு நினைந்த தீர்த்தங்கள் எல்லாம் ஈசான திக்கில் தோன்றி 'ஸ்ரீமதி' தீர்த்தம் எனப் பெயர் பெற்றது.

உமை உபசாரம்

ஏத்திய உமைமடந்தை எதிர்தொழுந் தனைத்தி ருக்கண்
சாத்திய அகண்ட நாதன் தன்னருள் பெறுதல் வேண்டித்
தீர்த்தமா னவைஅனைத்தும் திரண்டுஎழு புனலி னாலே
பாத்தியம் உதவி மற்றும் பலவுப சாரம் செய்தாள் 213

ஏத்திய - புகழ்ந்த திருக்கண் சாத்திய - அருளிய. அகண்டநாதன் சிவபெருமான். பாத்தியம் - பெரியோர்க்குத் திருவடி கழுவத் தரும் நீர்.

இறைவன் தழுவல்

புளகமெய் அரும்பக் கொங்கை பூரிக்கப் பொற்றோள் மீதில்
அளகமே சரிய வந்தித்து அருகுநின்று இறைஞ்சு மாதை
உளமகிழ்ந்து அருந்த வத்தில் உறமெலிந் தனைநீ என்றே
இளநகைபுரிந்தேஅண்ணல்இருகையால்தழுவிக்கொண்டான் 214

புளகம்-மயிர்ச் சிலிர்ப்பு. கொங்கை-முலை. அளகம்-கூந்தல். வந்தித்து-வணங்கி. உற-மிக. இளநகை-புன்னகை. அண்ணல்-சிவபெருமான்.

உமைவரம் வேண்டல்

தன்னிடத்து உறையும் மாதைச் சங்கரன் இனிது நோக்கி
என்னிடத் தினில்வ ரம்தான் ஏதுவேண் டியதுஎன்று ஓத
உன்னிடத் தினில்மெய்ஞ் ஞானஉபதேசம் தானும் அல்லால்
நின்னிடத்துஅடியேன்வேண்டநினைந்தமைசிறுதுண்டுஎன்றாள்

தன்னிடத்து-தன் இடப்பக்கத்தில். மாது-உமை. ஓத-கூற. ஞானவுபதேசம் கேட்கும் குறிப்புளது.

வேறு

புனிதஞா னம்பெறும் பூமி எய்திய
மனிதர்தாம் பரகதி மருவ நல்கியே
அனுதினம் நீயும்அவ் அமுத லிங்கமீது
இனிதிருந்து அருளுவாய் என்று இயம்பினள். 216

ஞானபூமி-தலப்பெயர். பரகதி-மேலான நிலை. அமுத லிங்கம்-நீரால் தோன்றிய லிங்கம்.

குளமிவை ஒன்பதில் குறுகி ஆடுவோர்
அளவில்பல் வினையெலாம் அகன்று வாழவும்
உளமுடன் அளிப்பதிங்கு ஒன்று அனந்தமாய்
வளர்வதும் எனக்குநீ வழங்கிடு என்றனள் 217

ஒன்பது குளம் இத்தலத்திலுள்ள தீர்த்தங்கள் அவை பின் வருமாறு: 1. சிவதீர்த்தம் 2. பிரம்மபுட்கரணி 3. செம்புதீர்த்தம் 4. இந்திரதீர்த்தம் 5. சூரியதீர்த்தம் 6. இராமதீர்த்தம் 7. அகத்தியதீர்த்தம் 8. அக்கினிதீர்த்தம் 9. சந்திரபுட்கரணி.

முதல் தீர்த்தம் சுவாமி சன்னதிக்கு அண்மையில் ஊறுவது.

2ஆம் தீர்த்தம் தெற்கு வீதியில் பிரம்ம தீர்த்தத் தெரு அக்கிர காரத்துள்ளது.

3ஆம் தீர்த்தம் அம்மைகோவிலிலிருந்து கிழக்கே போகும் வழியில் உள்ள விசுவநாதர் விசாலாட்சி ஆலயத்திற்கு அருகிலுள்ளது.

4 ஆம் தீர்த்தம் சுவாமி சன்னிதியிலுள்ள கொடிமரத்திற்குத் தென் மேற்கில் உள்ளது.

5 ஆம் தீர்த்தம் ஆயிரங்கால் மண்டபத்திற்குத் தென் பக்க முள்ளது.

6 ஆம் தீர்த்தம் திருச்சி இலால்குடி பாதையில் மேல் பக்கமுள்ளது.

7 ஆம் தீர்த்தம் அம்மை சன்னிதியில் கிணறாக உள்ளது.

8 ஆம் தீர்த்தம் வசந்த மண்டபத்திற்கு மேற்பக்கமுள்ள தோப்பி னுள் உள்ளது.

9 ஆம் தீர்த்தம் திருவரங்கக் கோவிலுக்குள் உள்ளது என்பர்.

ஞானோபதேசம்

வேறு

பொருவிழி உமைஇவ் வாறு புகன்றுஎதிர் போற்றி நிற்கச்
சருவுவெம் பவம கற்றும் சங்கரன் உளம கிழ்ந்தே
திருவருள் கண்ணால் நோக்கிச் சிவகரம் சிரத்தில் சேர்த்தி
அருள்பெறு ஞான பாத அடைவினை அருளிச் செய்வான் 218

பொருவிழி - போர் செய்யும் கண்கள். சருவு - இருள். வெம்பவம்-கொடியவினை,பிறப்பு. சிவகரம் சிரத்தில் சேர்த்து அருள்புரியும்நிலை. ஞானபாதம் அடைதலைக் குறித்தல்.

அதிகமாம் சிவாக மங்கள் அருமறை எவையி னுள்ளும்
மதிதரு ஞான பாத மார்க்கமது உணர வேண்டில்
பதிபசு பாசம் என்னப் பகர்ந்திடும் திரிப தார்த்த
விதிமுறை அடைவு தன்னில்விளங்குதல்வேண்டும் என்றான் 219

அதிகம்-பல, பெருமைமிக்க. மார்க்கம்-வழி. பதி-இறை. பசு-உயிர். பாசம்-தளை. திரிபதார்த்தம்-முப்பொருள்.

பதிஉண்மை

தன்மைசேர் பதியின் உண்மை தனையுறச் சாற்றும் போதில்
தொன்மையின் மலாதி நீங்கும் சோதியாய் நித்த மாகி
நன்மனா திகள்ள வைக்கும் நாடரும் பொருளாய் ஒன்றாய்
சின்மய வியாபி யாகித் திகழ்ந்துடன் நிற்கும் அன்றே 220

தொன்மை-அனாதி காலம் தொட்டு. மலாதி-ஆணவம், கன்மம், மாயை முதலிய மலங்கள் முதற்கொண்டு. நித்தம்-அழியா நிலை. மனாதி-மனம், வாக்கு, காயம் முதலியன. சின்மயம்-ஞான மயம். வியாபி-எங்கும் பரவி நிற்பவன்.

பசுத்தனை வினைக்கு ஈடான பாசத்தி னுடனே கூட்டிப்
பொசித்தலின் பொருட்ட தாகப் பொறிபுலன் இயற்றிப் பாசம்
நசித்திட மலபா கத்தில் ஞானத்தை உதவித் தன்பால்
வசித்தரும் களங்கம் நீக்கி வான்பதம் உதவும் அன்றே. 221

பொசித்தல்-உண்டாக்குதல். பொறி-மெய், வாய், கண், மூக்கு, செவி, எனும் ஐம்பொறிகள். புலன்-சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் எனும் ஐம்புலன்கள். பாசம் கெடமும் மலத்தில் ஞானம் தோன்றச் செய்தல். களங்கம்-குற்றம். வான்பதம்-மேலான நிலை.

சிவம் சத்தியைத் தோற்றுவித்தல்

உன்னிடு சத்தி யாலே ஊசியை மலைத்தும் தன்பால்
துன்னிடும் விகாரம் ஒன்றும் தோய்ந்திடாக் காந்தம் போலத்
தன்னிடம் தனில்உண் டான சத்தியால் சகம் அனைத்தும்
மன்னிட நடத்து வித்து மருவிடா விகாரம் தானே. 222

உன்னிடு-நினைத்திடும். ஊசி காந்தம் எனும் உவமை-ஊசியைக் காந்தமுடையதாக மாற்றினாலும் காந்தத்திற்கு எவ்வகை மாற்றமும் அடையாதது போன்று சிவம் தன்னிடம் சக்தியைத் தோற்றுவித்தாலும் எவ்வித மாற்றமும் அடையாது என்பதாம்.

இறைவன் மயக்கமுறான்

இந்திர சாலம் கண்டோர் எவரையும் மயக்கம் செய்து
மந்திர வாதி தன்னை மயக்குறா வாறு போலத்
தந்திர மான பாசம் செகத்தினை மயக்கம் செய்து
முந்துறத் தனைஇ யற்றும் முதல்வனை மயக்கு றாதே 223

இந்திர சாலத்தைக் காண்போர் மயங்குவர். அதனைச் செய்யும் மந்திரவாதி மயக்கமுறான். அது போலப் பாசம் உலகினை மயக்குமாறு செய்யும் இறைவன். அப்பாசத்தால் மயக்கமுறான்.

மூவுயிர்கள்

சான்றுறுவிஞ் ஞானகலர் தகும்பிரள
யாகலரே சகலர் என்று
மூன்றுவிதப் பசுவாக மூலமந்
திரோதானம் மெய்சுத்த மாயை
ஆன்றமக மாயைகணம் அமைவகையாம்
அரும்பாச மனாதி தன்னில்
ஊன்றிடுமான் மாவில்இவை ஓரைந்தால்
ஆக்கை எடுத்து உழலும் ஆன்மா. 224

பசுக்கள்-விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என மூவகை. மாயை-திரோதானம், சுத்தமாயை, மகமாயை என மூவகை. மனம் முதலியவற்றில் நிலைபெறும் ஆன்மா, பல உடல்களில் புகுந்து பிறப்பெடுக்கும். விஞ்ஞான கலர்-ஆணவமல்லாத ஏனைய இரண்டிலிருந்தும் நீங்கியவர். பிறப்பிறப்பற்ற இறுதிநிலைக்குப் பக்குவப்படும் முதல்வகை உயிர். பிரளயாகலர்-மாயை நீத்த உயிர் பிறப்புக்குட் படாதவர். தம்நிலையால் உயர்நிலை அடைபவர். சகலர்-மும்மலங்கட்டு ஆட்படுமுயிர் பிறப்பிறப்புக்குட்பட்டு உடம்பில் பிறப்புற்று பொறி புலன்களில் செயல்படுவர். திரோதானம்-மறைப்பது.

அறைந்திடு பசுவர்க் கம்தான் அனாதியே ஆண வத்தால்
மறைந்திரு வினைக்கே டாக வருதனு கரணம் போகம்
உறைந்திடு புவனம் என்னும் ஒரு நான்கு பந்தம் எய்திப்
பிறந்திறந்து உழலும் முத்திப் பெரும்பயன் உணர்ந்திடாதே 225

பசுவர்க்கம்-உயிர்க்கூட்டம். அனாதி-தொடக்கமில்லாத. ஆணவம்- ஆணவமலம். இருவினை-நல்வினை, தீவினை. தனு-உடல். கரணம்-மனம், புத்தி, அகங்காரம், சித்தம் எனும் உட்கருவிகள் நான்கு. போகம்-அனுபவிக்கும் பொருள். உறைந்திடு புவனம்-வாழ்ந்திடும் உலகம். பந்தம்-கட்டு. உயிர்கள் பிறந்திறந்து முத்திப்பயன் உணர்ந்திடாது.

சுத்தமாயை

அடர்த்திடும் அறிவு முற்றும் ஆணவ மனத்திரோதம்
நடத்திடும் ஆக்கை ஆதி நால்வகை ஆகு மாய்கை
திடத்துறு கன்ம மும்சஞ் சிதமுதல் மூவ கைத்தாம்
தொடுத்திவை பிரயோ கம்செய் தொழில்பெறும் சுத்தமாயை 226

அறிவு, ஆணவம், திரோதம் இவற்றால் உடல் பற்றிய நிலை புலப்படும். கன்மம்-வினை. சஞ்சிதம் - பிறவியில் ஈட்டிய வினை. பிரயோகம்-பயன்படுத்தல். சுத்த மாயை யின் தொழில் பெறும் நிலை. சுத்தமாயை, அசுத்தமாயை பிரகிருதி மாயை என வகைப்படுத்துவர். முதலாவது மாயையின் ஆதிநிலை. இரண்டாவது அது மலத்துடனும் கர்மாவுடனும் சேர்ந்த நிலை. பிரபஞ்சத்திற்கு முதற்காரண மாவது பிரகிருதி மாயை. சுத்தமாயை விந்து, குடிலை மாமாயை, குண்டலினி எனப் பலவாறு அழைக்கப்பெறும்.

கேவலாவத்தை

கீழொடு நடுமே லாகும் கேவல சகல சுத்தம்
ஊழுறு பயனால் ஆன்மா ஊன்றுமூன்று அவத்தை ஆகும்
சூழுமவ் அவத்தை மூன்றில் சொல்லும்அக் கருவி எல்லாம்
தாழுற மலத்துஅ ழுந்தும் தன்மைகே வலமது ஆமே. 227

கீழ், நடு, மேல் நிலை-கேவலம், சகலம், சுத்தம்என்பவை. ஊழ்-வினை. மூவகை அவத்தை சாக்கிர முதலாம் உயர் நிலை உபாதி என்பர். அகக்கருவி புறக்கருவிகள் எல்லாம் தாழ்வுற மலத்தில் அழுந்தும் தன்மை 'கேவலம்' ஆகும்.

சகலாவத்தை

இருள்தரும் கேவ லத்தில் இருங்கலை சிறிது ணர்த்தப்
புருடனாம் தன்மை எய்திப் பொறிபுலன் வழியில் சேர்ந்து
மருள்தரும் அவைஅ வற்றின் வடிவதாய்த் தனையும் ஓராது
அருள்தனைப் பெறாது பந்தத்து அடைவது சகலம் ஆமே 228

இருள்தரும்-மயக்கம் தரும். இருங்கலை-பெருமை மிக்க கலை. புருடன்-உயிர், ஆன்மதத்துவத்தில் ஒன்று. பொறி-புறக் கருவி. புலன்-அகக்கருவி. மருள் தரும்-மயக்கமூட்டும். ஓராது-எண்ணாமல். அருள்தனை - இறைவன் அருளை. பந்தம்-பாசம்.

புருடத் தன்மை பெற்றுப் பொறிபுலங்காட்டும் வழியில் சென்று அம்மயக்க வடிவை உற்றுத் தன்னை உணராமல் கடவுள் அருளைப் பெறாமல் தளையில் சிக்குவது 'சகலம்'.

சுத்தாவத்தை

மாயைசேர் சகல மான மனாதிகள் இடமாய்க் காணல்
ஆயவை சத்தாம் ஏதும் அறியொண்ணாக் கேவ லத்தில்
வயதிவ் இரண்டும் இன்றிச் சிவசத்தி கரணதீ வமாக
மேயதன் உண்மை காண்டல் விகற்பமில் சுத்தம் ஆமே. 229

மனம் முதலியவற்றால் கலாவத்தை காண்பது சத்து. கேவலத்தில் எதுவும் அறிய முடியாது. சிவசக்தியின் அடிப் படையில் பொருந்தியதின் உண்மை காண்பதே ஐயமற்ற 'சுத்தம்'.

சத்திநிபாதம்

சேர்ந்திடும் காமம் ஆதி தீய்க்குணம் அஞ்ஞா னத்தால்
சார்ந்திடு மலபா கத்தைத் தரும்இரு வினையின் ஒப்பி
நேர்ந்திட வந்த சத்தி நிபாதத்தால் அஞ்ஞா னம்தான்
சோர்ந்திடக் குணமோர் ஆறும் சோர்வதற்கு ஐயம் இன்றே 230

காமம் முதலிய தீய பண்புகள் அஞ்ஞானத்தால் சாரும் நல்வினை தீவினை என்பன மலபாகம் தரும்.

சத்திநிபாதம்-பக்குவமுடைய ஆன்மாவில் திருவருள் பதிகை. அறுகுணம்-காமம், குரோதம், மதம், மாற்சரியம், மோகம், லோபம் என்பன.

குரவன் அருள்

மருள்உறு குணங்கள் நீங்க
வந்திடும் உபசாந் தம்பெற்று
அருள்உறு குரவன் தந்த
அறிவினால் பாசம் நீங்கி
இருள்அடர் கதிரோன் சோதி
இரண்டுஅறப் பொருந்தும் கண்கள்
பொருளினைக் காண்டல் போல் மெய்ப்
பொருளையும் தனையும் காணும். 231

மருள்-மயக்கம், அறியாமை. அறியாமைப் பண்புகள் நீங்க உபசாந்தம் பெறமுடியும். உபசாந்தம்-விருப்பு வெறுப்பின்மை. குரவன்-ஆசிரியன், சிவன்.

இறைவன் அருளால் பாசம் நீங்கி மெய்ப் பொருளைக் காணமுடியும். பொருள் மேல்பட்ட கதிரொளி கண்ணில்

பொருந்தப் பொருளைக் காண்பது போல் உயிர், இறை அருளால் மெய்ப் பொருளைக்காணும். ஆன்மா கண்ணுடன் ஒப்பிடப் பெறும்.

பேரின்ப முத்தி

சுத்தமா வத்தை என்னத் துலங்கும்அச் சமாதி சேரும்
உத்தம மெஞ்ஞா னத்தால் உறுபசுத் துவமும் நீங்கி
அத்தகு பரசி வத்தோடு அபேதமாம் முத்தி எய்திப்
பெத்தமாப் பாச நீங்கிப் பேரின்பம் பெறுவர் அன்றே. 232

சுத்தாவத்தையில் சமாதி சேரும் மெய்ஞ்ஞானத்தால் பசுத்தன்மை நீக்கிப் பரசிவத்தோடு ஒன்றுபட்டு முத்திநிலை எய்தும். பாசம் நீங்கிப் பேரின்பம் பெறும்.

இறைமை விளங்கல்

மங்குலால் மறைந்த வெய்யோன் மறைப்பது நீங்க முன்னைப்
பொங்கொளி தனைப்ப டைத்தல் போலவே மலம றைப்பில்
தங்குமான் மாவும் பாசம் தன்னைவிட்டு அகன்றவாறே
எங்குமாம் நிலைமை பெற்றே இறையென விளங்கும்அன்றே233

மங்குல்-மேகம், வெய்யோன்-கதிரவன். ஆன்மா-உயிர். மறைத்த மேகம் விலகக் கதிரவன் ஒளிவீசுவது போல் ஆன்மாவை மும்மலம் மறைக்கும் போது அறியாமை இருளில் கிடக்கும். அம்மலம் நீங்கிய பின் இறை ஒளியில் விளங்கும்.

இறைவன் வரம்

மற்றுஇவை அருளிச் செய்து மலைமகள் ஏகிப் பாவம்
பெற்றிடு வரமும் என்றும் பெயர்ந்திடாது அமுத லிங்கத்து
உற்றிடு வரமும் தீர்த்தம் உயர்தலம் தருமம் ஓங்க
நற்றிரு வரமும் ஈந்தான் நாதமேல் நடிக்கும் நாதன் 234

மலைமகள்-உமை. அமுதலிங்கம்-தல இறைவன்; நீராலமைந்த லிங்கத்தில் வீற்றிருக்க வரம் பெறுதல். தீர்த்தம் தலம் தருமம் ஓங்க வரம் தருதல்: நாதமேல் நடிக்கும் நாதன்-சிவபெருமான். நாததத்துவம் இங்கு நினைத்தற் குரியது.

அரும்புஅமர் கொங்கைக்கு இவ்வாறு
அருள்புரிந் ததன்பின் அண்ணல்
திரும்பியே வணங்கி நிற்கும்
செம்புமா முனியை நோக்கி
இரும்புவி தனில்த வத்தால்
எய்த்தனை இங்கு நீதான்
விரும்பிய வரமேது என்ன
மிகமகிழ்ந்து அவனும் உரைப்பான். 235

அரும்புஅமர் கொங்கை-தாமரை மொட்டுக்களும் விரும்பும் மார்பை உடைய உமை. இரும்புவி-பெரியவுலகம். எய்த்தனை-இளைத்தாய். அவன்-செம்புமுனி.

செம்புநாதன், செம்புதீர்த்தம்

சூடிய திங்கள் வேணிச் சுத்தனே அடியேன் என்றன்
நீடிய தவத்தால் நீ என் நிழலுறப் பெற்றேன் உன்றன்
நாடிய பேரும் செம்பு நாதனே ஆகி யான்இங்கு
ஆடிய தடமும் என்பெயர் ஆகவும் வேண்டும் என்றான். 236

வேணி-முடி.

செம்புமுனி இறைவனைத் தன்னிழலிலுற்றதால் பெயர் செம்பு நாதன் ஆகவும், தான் குளித்த குளம் செம்பு தீர்த்தம் எனப் பெயர் பெறவும் வேண்டுகிறார். செம்புநாதன் என்ற தல இறைவன் பெயர்க் காரணம் இங்குப் புலப்படும். இத் தீர்த்தம் இக்கோவிலுள் விசுவநாதர் விசாலாட்சி கோவிலின் அண்மையிலுள்ளது.

வணங்கிஇவ் வாறு செம்பு மாமுனி கூற வெற்பின்
அணங்கினுக்கு அருள்புரிந்த அண்ணல்தான் அவனை நோக்கிக்
குணங்கிளர் முனிவன் நீதான் குறித்திடும் படியே சிந்தை
இணங்கிய வரம்இ ரண்டும் ஈந்தனம் எனஉ ரைத்தான் 237

வெற்பின் அணங்கு-மலைமகளாம் உமை. அண்ணல்-சிவபெருமான். இறைவன் செம்புமுனிவனுக்கு இரண்டு வரம் ஈதல்.

ஞானஉபதேசச் சருக்கம் முற்றும்
ஆக சருக்கம் ஆறு.
திருவிருத்தம் (1+) 236
திருச்சிற்றம்பலம்

ஆதிபிரம உற்சவச் சருக்கம்

இச்சருக்கம் பிரமன் திருவிழாவை நடத்துதல் கூறும் இறைவன் அம்பிகைக்கு அருளிய வேளை தமக்கான வேளை எனப் பிரமனும் போற்றித்துதித்தான். பிரமன் வேண்டிய வரம் யாதென இறைநுன் கேட்கப் பொய்கைக்குப் பிரமபுட்கரணி எனப் பெயரிட வேண்டும்; மாசியில் தொடங்கி பிரமோற்சவம் நடத்த வேண்டும், என வேண்ட இறைவன் அவ்விரு வரங்களை நல்கினான். அம்பிகை, செம்புமுனிவர் ஆகியோர்க்காக அமுத லிங்கத்தில் இறைவன் இனிதிருந்தான்.

திருவிழாவுக்காக முளைப்பாலிகை இட்டனர். மாசியில் மகர ராசியில் பிரமன் இடபக் கொடி ஏற்றினான். உணவு, பொன் முதலியவற்றை அன்பர் சொரிந்தனர். வீட்டினைத் தூய்மை செய்து கோலமிட்டனர். தெருக்கள் கடல் போல் விளங்கின. மேடைமீது மகளிர் ஏறிச் சாளரம் வழியே விழாக் கண்டனர். திண்ணைகளில் பூரணகும்பம் வைத்தனர். வாசலில் வாழையும் கரும்பும் கமுகும் கட்டினர். பலமலர்களைத் தொங்கவிட்டனர்.

வேள்விப்புகை, அகிற்புகை, அட்டிற்புகை ஆகியவை வானில் எழுந்தன. அதனிடை விழாக்காண மகளிர் எழுந்தனர். தேர்க்கொடிகளில் பல ஒவியங்கள் தீட்டியிருந்தனர். அன்னக் கொடி பிரமன்போல் விளங்கியது. கிளைக்கொடிகள் கற்பகமரம் போல் தோன்றின. சூரியவட்டம் சந்திரவட்டம் ஆகியவற்றை எடுத்தனர். பல இசை ஒசை, துதிக்கும் ஒசை வேத முழக்கம் ஆகிய ஒசை முழங்கின. மயில் ஆட மங்கையரும் ஆடினர். ஆலவட்டமும் வெண்குடையும் பிடித்தனர்.

விழாவில் விநாயகர், முருகன், தண்டி ஆகிய திருவுருவங்கள் அன்பருடன் எழுந்தருளின. இறைவன் வருகையைச் சின்னங்கள் தெரிவித்தன. வாள், குஞ்சம் போன்றவை சூழ எடுத்து வந்தனர். கட்டியங்காரர் சூழ்ந்தனர். விழாக்காண வந்த அன்பர்கள் இறைவனைத் துதித்துப் போற்றினர்.

தேவர்களும் இதுகண்டு களித்தனர். அன்பர்கள் எதிர் கொண்டேத்தினர். தவம்புரிவோர், திருமால், இந்திரன், பிரமன் ஆகியோர் வந்தனர். விநாயகன் பெருச்சாளி மீதும், முருகன் மயில் மீதும், சிவன் பூதவாகன மீதும், அம்மை அன்னத்தின் மீதும் உலாவந்தனர்.

மக்களின் கண்கள் இறைவனை மொய்த்தன. அம்மையுடன் பூம்பந்தர்க் கீழ் இறைவன் போந்தான். நாகவாகனத்திலும் எழுந் தருளினன். இறைவனை முத்தின் பந்தர் தாங்கியது. பிரமன் தேரிலிருந்து சிவபெருமானைப் போற்றினான். தேவர் அமுதம் அமுதலிங்கமாகவும் தோன்றும்.

வெண்டுகிலுடுத்த பெண்கள் கைகுவித்து வணங்கினர்; ஆலத்தி ஏந்தினர். ஆராக்காதல் பூண்டனர். பத்தர் பாமழை பொழிந்தனர். பூமழை பொழிந்தது.

பங்குனியில் உரோகிணி நாளில் பிரமன் சிவனுக்கு அபிடேகம் செய்தான். அவ்விழாவின் தீர்த்தம் பெற்றவர் பிறவி நீங்குவர். இவ்விழாவால் சிவனுக்கு முன்பினும் பின்னழகர் என்ற பெயர் ஏற்பட்டது. இவ்விழாவை மக்கள் பிரமவுற்சவம் என வழங்கினர்.

ஆதி பிரம உற்சவச் சருக்கம்

வேறு

அறைபுனல் தனைஇ லிங்கம் ஆக்கியே அருந்த வம்செய்து
உறையும் உமையாள் ஞான உபதேசம் பெறுதல் சொன்னோம்
பிறைஅணி அரனுக்கு ஆதிப் பிரமன்நல் திருவி ழாவைக்
குறைவற நடத்து கின்ற கொள்கையைக்குறித்துஉரைப்பாம் 238

அறைபுனல்-ஒலிக்கின்றநீர்.

அமுதலிங்கம் பற்றிய செய்தி. முன் சருக்கத்தில் உமை உபதேசம் பெற்றதைக் கூறிச் சிவபெருமானுக்குப் பிரமன் திருவிழா நடத்துதல் கூறுகிறார்.

பிறைஅணிஅரன்-பிறையை அணிந்த சிவபெருமான். உரைப்பாம்-சொல்வோம். உயர்வுப்பன்மை.

பிரமன் துதி

வேறு

எந்தைதான் அம்பிகைக்கு இனிது இரங்கிய
வந்தவே ளையில்தமக்கு ஆனவே ளைஎன்று
உந்திதந் தவனுமாங்கு உறவ ணங்கியே
சிந்தைகூர் துதிபல செப்பல் உற்றனன் 239

எந்தை-சிவபெருமான்.

அம்மைக் கிரங்கிய வேளையே தமக்கு உரிய வேளை எனப் பிரமன் எண்ணுதல்.

உந்தி தந்தவன்-திருமாலின் உந்தியிலே பிறந்தவன் பிரமன். உற-பெரிதும். கூர்-மிகுதி.

வேறு

பராபரம் ஆனாய் போற்றி படைத்தளித்து அழிப்பாய் போற்றி
கராசலம் உரித்தாய் போற்றி கண்கள்மூன்று உடையாய் போற்றி
அராஅணி சடையாய் போற்றி அடியவர்க்கு எளியாய் போற்றி
சராசர வடிவே போற்றி தற்பரா போற்றி போற்றி 240

பராபரம்-மேலான பரம் பொருள்.

படைத்து அளித்து அழித்தல் இறைவனின் முத்தொழில். கராசலம்-கையையுடைய மலையாம் யானை.

கசாசுரனைச் சிவபெருமான் உரித்த வீரச்செயல்

அரா பாம்பு. சராசரம்-அசையும் பொருள், அசையாப் பொருள். தற்பரம்-கடவுள், சிவபெருமான்.

காக்குநா யகனே போற்றி கருணைவா ரிதியே போற்றி
ஆக்கமும் வீடும் நல்கும் அருமறைப் பொருளே போற்றி
வாக்கொடு மனத்துக்கு எட்டா மாதவப் பயனே போற்றி
நீக்கமில் சோதி ஆன நிமலனே போற்றி போற்றி 241

நாயகன்-தலைவன். கருணை வாரிதி-அருளாகிய கடல். ஆக்கம்-நன்மை. சொல்லாலும், எண்ணத்தாலும் காண முடியாதவன் இறைவன். சோதி-ஒளி வடிவானவன். நிமலன்-குற்றமற்றவன்.

வேறு

தூண்டிய ஓதிமன் துதிக்க இவ்வணம்
தாண்டிய மால்விடைத் தாணு நோக்கியே
ஈண்டிய நின்துதிக்கு யாமம கிழ்ந்தனம்
வேண்டிய நல்வரம் வேண்டிடு என்றனன். 242

ஓதிமன்-அன்னப்பட்சியை வாகனமாகவுடைய பிரமன். மால்விடைத் தாணு-பெருமைமிகு காளையை வாகனமாக உடைய சிவன். ஈண்டிய-செறிந்த. (துதிக்கு+யாம்= துதிக்கியாம்)

நல்வரம் வேண்டு எனச் சிவன் பிரமனிடம் கூறினார்.

பிரமபுட்கரணி

வேறு

வரமது வேண்டிடு என்ன மலரவன் தன்னை நோக்கிப்
புரமிதில் விளங்கும் இந்தப் பொய்கைதான்பொய்ம்மை இல்லாத்
தரமும்உற் றவர்தாம் மூழ்கில் சாலோகம் பெறுவ தற்கே
பிரமபுட் கரணி என்னும் பெயர்பெற வேண்டும் என்றான் 243

மலரவன்-பிரமன். தன்னை-சிவபெருமானை. புரம்-திருவானைக்கா. பொய்ம்மையில்லாத்தரம் - பொய்க்காத தன்மை; என்றும் வற்றாதநிலை. சாலோகம்-சைவர்கள் கூறும் நான்கு அருள் நிலைகளில் ஒன்று, இறைவனுடன் இருக்கும் நிலை.

பிரமஉற்சவம்

மருஅவிழ் கடுக்கை யோனே மாசிமான் தலைதொ டங்கி
ஒருவிழா நடத்துகின் றேன்உ ரோகிணி ஈறுஅது ஆகப்
பெருவிழா என்னும் ஆதிப் பிரமவுற் சவம் ஆயார்க்கும்
கருவிழா வாறு மேலாம் கதிதர வேண்டும் என்றான் 244

மரு-மணம். கடுக்கையோனே - கொன்றை யணிந்த சிவனே! மாசி-மாசி மாதம். மான்-மகரராசி (முதல்) ரோகிணீ முடிவு இது பிரமவுற்சவம் என்ற பெயர் பெற வேண்டுதல். இவ்விழாவிற்கு வந்தவர்க்கு மறுபடியும் கருவில் பிறவாநிலை வேண்டும் எனப் பிரமன் வரம் கேட்டல்.

சிவனருளல்

ஏற்றுயர் கொடியி னானும் இவ்வணம் அயன்விரும்பிப்
போற்றிய பான்மை கண்டு புந்தியில் உறமகிழ்ந்து
தோற்றிய பங்க யத்துத் தோன்றலே நீவி ரும்பிச்
சாற்றிய வரம்இ ரண்டும் தந்தோம்என்று அருளிச் செய்தான். 245

ஏற்றுயர் கொடியினான் - காளையைக் கொடியாகவுடைய சிவன். அயன்-பிரமன். பங்கயத் தோன்றலே-திருமாலின் உந்தித் தாமரையிலுதித்த பிரமனே! அருளிச் செய்தான்-கூறினான்.

வேறு

உம்பர் போற் றியதல உறுப்புக்கு ஆகவும்
செம்புமா முனிதவச் செய்கைக்கு ஆகவும்
அம்பிகைக்கு ஆகவும் அமுத லிங்கமீது
எம்பிரான் உளமகிழ்ந் து இனிது இருந்தனன். 246

உம்பர்-தேவர். தலம்-இடம். செம்புமுனி - நாவல்மரம் தாங்கிய முனி.

அமுதலிங்கத்தின் மீது இறைவனிருக்கக் காரணம்.

எவ்வுரு வமும்படைத் திடுமன் நான்முகன்
செவ்வுரு ஒன்றினைத் தியானம் செய்தநீ
இவ்வுரு அமைத்தருள் என்று வேண்டவே
அவ்வுரு அமைத்தனள் அகில நாயகி 247

பிரமன் எவ்வுருவையும் படைப்பவன். அத்தகையோன் வேண்ட அகிலநாயகி அமுதலிங்கம் அமைத்தாள்.

முளைப்பாலிகை

அத்திரு நாள்தனக் காக நான்முகன்
வைத்தபா லிகைதொறும் மருவு வெண்முளை
மெய்த்திரு நாடனை வியந்து செய்தலால்
மொய்த்திடும் அவன்புகழ் முளைத்தல் போலவே. 248

திருநாள்-திருவிழாவிற்குரிய நாள். பாலிகை-முளைப் பாலிகை. மெய்த்திருநாடன்-சிவபெருமான். மொய்த்திடும்-செறிந்திடும்.

சிவன் புகழ் முளைத்தல் போல் முளைப்பாலிகை முளைத்தது. புகழினை வெண்மை நிறமாகச் சுட்டுதல் மரபு.

கொடியேற்றம்

வேறு

மாசிலா அயனும் மாசி மான்தலை நாளின் மிக்க
தேசிலா கியவெள் ளேற்றுத் திருக்கொடி அதனை ஏற்றி
ஏசிலாது அதின்மூ வாறில் எண்வகைக் கொடியும் ஏற்றி
ஆசிலா விழவு தன்னை அடவினில் நடத்தல் உற்றான். 249

மாசிலாஅயன்-குற்றமற்ற பிரமன். மாசிமான்-மாசி மாதத்தில் மகரராசி. விடைக்கொடி ஏற்றல்-பின் பல் வகைக் கொடி ஏற்றல் ஆசு-குற்றம். அடவினில்-முறையாக.

இருகொடை

வேறு

கன்னதா னம்தரு களிறுஉ ரித்தவன்
உன்னதா னம்தரம் உயர்வி ழாவினில்
அன்னதா னம்தனோடு அன்பர் ஆனவர்
சொன்னதா னம்தனைச் சொரிந்து அளிக்கவே. 250

கன்னதானம் தருகளிறு-கன்ன மதம் பொழியும் யானை உன்னதானம் - நினைவிலுயர்ந்த தானம். அன்னதானம், சொர்ணதானம் அளித்தல்.

விழாக்கோலம்

எழுமணி பொன்னலகு இட்டுஓ துக்கியே
செழும்இம சலம்உறத் தெளித்து வேதிகை
விழுமிய குங்குமம் மெழுகி மீதுறக்
குழுமிய கருப்புரக் கோலம் மல்கவே 251

அலகினால் கூட்டிப் பனிநீர்தெளித்துத் திண்ணையைக் குங்குமத்தால் மெழுகிக் கருப்புரக் கோலமிட்ட விழாக் கோலம் எழுகிறது.

தேர்ச்சிறப்பு

வேறு

பாரகோ புரமும் உச்சியில் தெளித்த
பளிங்கினால் அமைத்தசே கரமும்
தோரணக் குழுவும் திறல்நிலைத் தேரும்
துலங்கு கண்ணாடிக் குழுவும்
மேருவும் அதன்மேல் துருவனும் வன்கை
வீக்கிய பாசமும் அதனில்
சேரும்அவ் விமானத் திரளும்மா தவனும்
திங்களும் உடுக்களும் சிவனும். 252

பாரகோபுரம்-பெரியகோபுரம். சேகரம்-முடி. வீக்கிய-கட்டிய. மாதவன்-சிவபெருமான். உடுக்கள்-விண்மீன்கள். சிவனும்-ஒக்கும்.

கோபுரம், சேகரம், தோரணம், தேர், விமானம் ஆகிய வற்றின் சிறப்பு.

தெரு

திரைசெறி வனப்பைக் கொடித்திரள் காட்டத்
தேரெலாம் மரக்கலம் காட்ட
நுரைசெறி எழிலைக் கவரிகள் காட்ட
நுண்ணறும் புகைமுகில் காட்ட
முரசொலி காட்டிப்பா ளைசெம் பழுக்காய்
முத்தமும் பவளமும் காட்ட
நிரைசெறி தீபம் செம்மணி காட்ட
நெடுந்தெரு கடல்களே நிகர்க்கும். 253

அலைகள் கொடிகள் தேர்கள்-மரக்கலம். நுரைகள்-கவரிகள். புகை-முகில். கமுகின் பாளையும் பழுத்த காயும்-முத்தும் பவளமும். விளக்குகள்-மணிகள். என்பதால் தெருக்கள் கடல்களைப் போன்றன, இது உருவகம்.

மகளிர் முகம்

வேறு

சுதைகொள்மா மேடை எங்கும் தொழஎழு மாதரார்தம்
புதியவாள் நகையின் சோதி பொருந்திய வதனக் காட்சி
உதையாமல் வரையின் அல்லால் உயர்வரை எங்கும் தோன்றும்
மதிபல என்னக் கண்டோர் மதியினை மருட்டும் அன்றே. 254

சுதை-சுண்ணம். வாள்நகை-ஒளிபொருந்திய முறுவல் வதனம்-முகம்.

உதயகிரியில் அன்றி உயரந்த மலைகள் எங்கும் தோன்றிய பலமதிகள் என்ன மேடை மீது எழுந்த மகளிர் முகம் பார்ப்போர் அறிவை (மதியை) மருட்டும்.

கண்கள்

உழிதரு நீலச் சோதி உற்றிடு சாள ரத்தின்
வழிதொறும் இனிது நோக்கி மாதரார் ஆதரம் சேர
விழிதரு காட்சி மாட்சி மேவுகாழ் உந்தி ஆற்றின்
சுழிதொறும் அகன்றி டாமல் துடித்திடும் கயல்கள் போலும். 255

உழிதரு-சுழலும். சாளரம்-சன்னல். காழ்-பருக்கைக் கற்கள்.

சாளரம் தோறும் பெண்கள் சேர்ந்து கண் விழித்து நிற்கும் காட்சி ஆற்றின் சுழி தொறும் அகலாமல் துடிக்கும் கயல் போல் இருக்கும்.

பூரணகும்பம்

வேறு

மங்கையர் தனங்கள் பழித்திட மெலிந்தோம்
வைகலும் மறுகினில் இன்று
சங்கரன் அடைந்தான் அவனடி தொழுதத்
தனத்தைநே ராகுவம் என்று
கொங்கலர் தீப நறும்புகை சூழக்
கொண்டுவந் திருப்பதே போலப்
பொங்கெதிர் வீதி வேதிகை அனைத்தும்
பொருந்தின பூரண கும்பம். 256

வைகலும்-நாளும். மறுகு-தெரு. நேராகுவம்-ஒப்பாகுவோம். கொங்கு-மணம். வேதிகை-திண்ணை.

திண்ணைகளில் பூரண கும்பம் வைத்துள்ள காட்சிக்குரிய தற்குறிப் பேற்றம்.

வாழை, கரும்பு

வீதியின் இடத்தில் பெருமலர் விரித்து
மேற்குலை சாய்த்தவா ழையுடன்
ஏதிலா மதுரக் கன்னல் ஒன்றாக
இணங்கியே நின்றிடும் இயல்பு
காதலால் இளைஞர் செம்மடல் எடுத்துக்
கடைத்தலை நின்று எதிர் இறைஞ்ச
மாதரார் இங்கு வந்து வந்து அவரை
மணந்துடன் நிற்பதே போலும். 257

வாசலில் குலைவாழையுடன் இனிய கரும்பும் கட்டியுள்ள காட்சி காதல் இளைஞர் மடல் கொண்டு கடைவாசலில் இறைஞ்ச மாதரார் உவந்து வந்தவரை மணந்து ஒன்றாக நிற்பது போலாம்.

கமுகும் யானையும்

வேறு

செழித்திடு வீதி வேழத் திரள்மணி வாசல் தோறும்
அமுத்துபூ கங்கள் தன்னை அங்கையால் அளாவும் காட்சி
வழுத்துசீர் இளைஞர் ஊடல் மருவிய மாத ரார்தம்
கழுத்தினில் உறவ ளைந்த கரங்கள்போல் நெருங்கும்அன்றே 258

வேழம்-யானை. பூகம்-கமுகு.

பாக்குமரத்தை யானையின் துதிக்கை வளைத்த காட்சி ஊடல் கொண்ட மாதர் கழுத்தை ஆடவர் கரம் வளைத்தது போலும்.

வண்டின் நிலை

மங்கையர் முகமும் கண்ணும் வாசல்எம் மருங்கும் தூங்கும்
பங்கய மலரும் நீலோற் பலங்களும் கலந்து தோன்ற
வெங்கயம் உலாவு கின்ற வீதியில் இருமருங்கும்
மங்கையர் மருவி எங்கும் அடர்வன அறுப தங்கள் 259

மருங்கும்-பக்கமும். வெங்கயம்-கோபங் கொண்ட யானை. அறுபதம்-வண்டு. மாதர் முகமும் கண்ணும், வாசலிலே தொங்கும் தாமரையும் நீல மலரும் கலந்து தோன்ற வீதியில் வண்டுகள் மாதர் முகத்தை அம்மலர்களெனச் சென்றடையும்.

புகை

வேறு

மாநகர் அந்தணர் மகத்தெ ழும்புகை
யானவீ தியிலிடும் அகில்ந றும்புகை
போனக சாலையில் புகையோடு ஒன்றியே
வானக முகிலுடன் மருவி ஒன்றுமால் 260

மாநகரம் மானகர் என எதுகை நோக்கித் திரிந்தது.

மகம்-வேள்வி. யானவீதி-சிவிகை செல்லும் வீதி. போனகசாலை-உணவுச்சாலை. போனகம்-உணவு.

வேள்விப் புகை, அகில் புகை, உணவுச்சாலைப்புகை ஆகிய மூன்று புகையும் சேர்ந்து வானில் உள்ள முகில்களோடு ஒன்றாகச் சேரும்.

புகையிடை மகளிர்

கண்டுஎதிர் விழவினைக் கரங்கு வித்திடக்
கொண்டல்மீது அரம்பையர் கூடி நிற்றல்போல்
விண்டுஎழு நறும்புகை வீதி எங்கணும்
மண்டிட அதனிடை மாதர் மொய்த்தனர். 261

கொண்டல்-மேகம்.

விழாக் காண மேகத்தின் மீது அரம்பையர் நிற்றல் போல வீதியிலெழுகின்ற நறும் புகையிடையே பெண்கள் நின்றனர்.

தேர்க்கொடி

வேறு

பழுதற இருமருங்கும் பலவிதம் பெறும் உருக்கள்
எழுதிய இடக்கியங்கள் இசைந்து நின்று அசைந்த காட்சி
தொழுதனம் திருவிழாவைத் தொல்வினை அகல என்றே
முழுதுடை அமரர் எல்லாம் முறைமுறை நடித்தல் போலும். 262

இடக்கியம்-தேர்க்கொடி.

பல உருக்கள் எழுதிய தேர்க் கொடிகள் அசைந்த காட்சி தேவர்கள் தம் வினை அகலத் திருவிழாவைத் தொழுது நட மாடுதல் போலும்.

அன்னக் கொடி

வேறு

நெடிய செந்நிறச் சேறாடி நீங்குறாது ஓங்கும் அன்னக்
கொடியது பயிலும் காட்சி குறைவறத் திருவி ழாவைப்
படிமிசை நடத்து கின்ற பலத்தினால் பண்டு காணா
முடியது மீளக் காணும் முண்டகத் தவனைப் போலும். 263

படிமிசை-உலகின் மீது. பலம்-பயன். முண்டகத்தவன்-தாமரையிலுள்ள பிரமன்.

அன்னக் கொடி அமைந்துள்ள காட்சி முன்னர்ப் பிரமன் அன்ன வடிவமாகிக் காணாச் சிவபெருமான் முடியினை உலகில் நடைபெறும் இவ்விழாவில் காண்பது போலும்.

கிளைக்கொடிகள்

வளர்ந்திடு மேடை வீதி மருங்கினில் நெருங்கி மீது
கிளர்ந்திடும் எழில்ப யின்ற கிளைக்கொடி கிளர்க்கும் அன்பால்
தளர்ந்திடாது அரன்தி ருக்கண் சாற்றிடும் இடங்கள் தோறும்
அளந்திட அரிய செல்வம் அளித்திடும் தருக்கள் போலும். 264

மேடை வீதியிடங்களில் கட்டிய கிளைக் கொடிகள் அரன் அருள் கண்ணால் செல்வம் அளிக்கும் கற்பகத் தருக்கள் போல் விளங்கும்.

சூரியவட்டம், சந்திரவட்டம்

வேரியம் தொடைகு லாவு வீதிகள் தனில்உ யர்த்த
சூரிய வட்டத் தோடு துலங்கு சந்திர வட்டங்கள்
சீரிய இரவி திங்கள் திருவிழாத் தெரிசித் தற்குப்
பாரிய உருவு அனேகம் படைத்துவந்து உதித்தல் போலும். 265

வேரியம்தொடை-தேன் சிந்தும் அழகிய மலர் மாலை

சூரிய வட்டம் சந்திரவட்டம் தெருக்களில் விளங்குவது அவையிரண்டும் பல உருவத்தோடு வந்து உதித்தல் போலும்.

ஓசை

மண்ணினில் முழவின் ஓசை மாதவர் துதிக்கும் ஓசை
விண்ணுறு முழவின் ஓசை வேதங்கள் முழங்கும் ஓசை
பண்ணியல் ஓசை ஓர்ஏழ் பரவையின் ஓசை என்ன
நண்ணிய அண்ட கோளம் நடுங்குற அடர்த்தது அன்றே. 266

முழவு-மத்தளம். விண்ணணி முழவு-இடி. ஏழ் பரவை-ஏழுகடல்கள். நண்ணிய-அடைந்த. அடர்த்தது-சென்றடைந்தது.

மகளிர் நடம்

வேறு

மெய்த்திடு வானமா மேக ஓசையில்
உய்த்திடு மயிலினம் உற நடத்தல்போல்
மொய்த்திடு பலவித முழவின் ஓசையின்
நெய்த்திடு குழலியர் நிருத்தம் செய்யவே. 267

மேகத்தின் ஓசைக் கேற்ப மயிலினம் ஆடுதல் போல் மத்தளங்களின் ஓசைக்கேற்ப மண நெய் பூசிய பெண்டிர் நாட்டியம் ஆடினர்.

ஆலவட்டம், வெண்குடை

அடர்ந்திட எங்கணும் ஆல வட்டமீது
இடந்தரு வெண்குடை இலகு காட்சிதான்
படர்தரு வாளராப் பல்வ ளத்துடன்
தொடர்ந்திட எழுமதித் தோற்றம் போலுமால். 268

அடர்ந்திட-நெருங்கி. எங்கணும்-எல்லா இடத்தும். ஆல்-அசை.

ஆலவட்டங்கள் மீது வெண்குடை விளங்கும் காட்சி பாம்பு தொடர்ந்திட எழும் சந்திரன் தோற்றம் போலும்.

பல்வளம்-நச்சுப் பல்லின் வளம் என்ற பொருளும் விளங்குகிறது.

கவரி, பீலி

பெருந்திரை கங்கையின் பெருகு நீருடன்
கருந்திரை யமுனைநீர் கலந்த பான்மை போல்
திருந்திய கவரியின் திரளினோடுஎதிர்
பொருந்திய பீலிகள் புடைஇ ரட்டவே. 269

கங்கையின் நீரின் நிறம் வெண்மை. யமுனையின் நீரின் நிறம் கருமை. இவ்விரண்டும் கலப்பது போல் கவரியும் மயிற் பீல விசிறிகளும் மாறி மாறி வீசப்பெற்றன.

பந்தங்கள்

நலந்தர எழுந்திடு ஞான பானுமுன்
கலந்திட அலர்ந்திடு கமலக் காடுபோல்
மலர்ந்தெழு விண்ணவர் மகுடச் சோதிபோல்
நிலந்தனில் நிறைந்தன நெருங்கு பந்தமே. 270

அறிவுக் கதிரவன் முன் சேர மலரும் தாமரைக் காடு போல இறைவனை வணங்கும் தேவர் மகுடங்களின் ஒளி போல் நிலத்தின் மேல் பந்தங்கள் நிறைந்தன.

சில தெய்வங்கள் பத்தர்கள் சூழல்

முன்புற ஐங்கரன் முருக வேளுடன்
பின்புறத் தண்டியும் பிறைம ழுப்பிணைந்து
இன்புறு பத்தர்கள் எங்கும் சூழவே
அன்புற அயன்எழுந்து அருளப் பண்ணினன். 271

ஐங்கரன் - விநாயகன். முருகவேள்-முருகக் கடவுள். தண்டி-சண்டேசுரர்-பிறைமழு - பிறைபோன்ற மழுவாயுதம் அயன்-பிரமன்.

ஒற்றைச் சின்னம்

வேறு

அண்ட நாயகன் வந்தான்அவ் அம்பிகை தனைஓர் பாகம்
கொண்ட நாயகன் வந்தான்அக் கொற்றவேள் வடிவை நீறு
கண்ட நாயகன் வந்தான்அக் கடல்எழு கால கூடம்
உண்ட நாயகன் வந்தான்என்று ஊதின ஒற்றைச் சின்னம் 272

சிவபெருமான் வருகையைக் கூறும்சின்ன முதல் அண்ட நாயகன், உமையொடு பாகம் உடையவன், மன்மதனை நீறாக்கியவன், கடலில் எழுந்த ஆலகால நஞ்சை உண்டவன் என இறைவன் பெருமையை எடுத்துரைத்தல்.

திலகம்ஆர் விழியோன் வந்தான் திரிபுரம் எரித்தோன் வந்தான்
இலகுபேர் அழகன் வந்தான் இளம்பிறை முடித்தோன் வந்தான்
அலகில்பேர் படைத்தோன் வந்தான் அடியவர்க்கு எளியோன் வந்தான்
உலகநா யகன்வந் தான்என்று ஊதின ஒற்றைச் சின்னம் 273

நெற்றி கண்ணால் திரிபுரமெரித்தவன், அழகன், பிறை முடித்தவன், பலபேர் படைத்தவன், அடியார்க்கெளியவன், உலகத் தலைவன் எனச் சிவன் பெருமையை ஒற்றைச் சின்னம் ஊதின. உலகநாதன்-தலஇறைவன் பெயர்.

வாள், குஞ்சம் முதலியன

வேறு

மணிஉறை பயிலுடை வாளும் வாளுறு
தணிவில்பொற் குஞ்சமும் தமனி யப்பெரும்
பணிபெறு பிரமன்தன் பைம்பொற் கண்டியும்
அணிகொள் பொன்அடைப்பையும் மருங்கு சூழவே

உறை-வாளிடுஉறை. தமனியம்-பொன். கண்டி-கழுத்தணி.

வாள், குஞ்சம், கண்டி, அடப்பை சூழவருதல்.

கட்டியக்காரர்

பூட்டிய செம்மணிப் பொற்பி ரம்பினை
நீட்டியே வானவர் நெருக்கை நீக்கியே
ஈட்டிய பெரும்புகழ் இசைத்துச் சம்முகங்
காட்டிய கட்டியக் காரர் சூழ்ந்தனர் 275

பொற்பிரம்பினை நீட்டி வானவர் கூட்டத்தைக் கட்டியக்காரர் கட்டுப்படுத்தினர். இறைவனைத் தரிசிக்கும் 'சம்முகம்' காட்டுதல்.

அன்பர் போற்றுதல்

வேறு

வரகரா சலம்உரித்த மனோகரா மத்தா சுத்தா
புரகரா பூத நாதா புராதனா புனிதா தேவா
உரகரா சனைஅ ணிந்த கங்கணா உலக நாதா
அரகரா என்று நின்றே அன்பர்கள் போற்றி செய்தார் 276

வரகராசலம்-உயர்ந்த யானை (கசாசுரன்) மத்தன்-பித்தன், சிவன். புரகரன் - சிவன். உரகராசன்-பாம்பின் அரசன். உலகநாதன்-தலஇறைவன் பெயர்.

(இவ்வாறு வடமொழி பயின்று வருதல் இவர் பாடல்களில் அரிது.)

தேவர், முனிவர் போற்றுதல்

வேறு

சேகர மிசைநிலாச் சிந்தும் இந்துவும்
சாகர விடம்தனைத் தரித்த கண்டமும்
மாகரம் மருவுமான் மழுவும் நோக்கியே
நாகரும் முனிவரும் நயந்து போற்றினர் 277

சேகரமிசை-முடிமீது. இந்து-பிறைமதி. சாகரவிடம்-கடலில் தோன்றிய ஆலகால நஞ்சு. கண்டம்-கழுத்து. மாகரம்-பெருமை மிக்க கையில். நாகர்-தேவர்கள்.

சுரர் களித்தல்

விண்டொளி கடிகையாம் விழிகொள் நெற்றியும்
குண்டல இளவெயில் குலாவ வேயலான்
முண்டகம் எனஒளிர் முகத்தின் செவ்வியும்
கண்டுல கோர்சுரர் கண்களித்தனர் 278

கடிகை-காலம். வெயில்-ஒளி. முண்டகம்-தாமரை. சுரர்-தேவர்.

அன்பர் ஏத்தல்

கொங்குஅண வியதொடைக் குலவு வாகுவும்
கங்கணம் செறிகர கமலக் காந்தியும்
அங்குஅணங்கு இனிதுற அமர்ந்த பாதமும்
எங்கணும் அன்பர்தாம் எதிர்கொண்டு ஏத்தினர் 279

கொங்கு அணவிய-மணமுள்ள. தொடை-மாலை. வாகு-தோள். காந்தி-ஒளி, அமர்ந்த-விரும்பிய.

அருந்தவர் போற்றல்

மணிஅணி பணாமுடி வாளரா எனஅணி
மணிபதக்கம் உற்றுஅமைத்த மாலைசேரும் ஆர்வமும்
தணிவில் மெய்ப்புகழ் எனத்தகு கூலமும்
பணிவுடன் அருந்தவர் பரிந்து போற்றினர் 280

மணி-மாணிக்கம். பணா-படம். வாளரா-ஒளிபொருந்திய பாம்பு. கூலம்-மான்.

மால் அயன் முதலியோர் போற்றல்

திரிபுரம் தடிந்தும்அச் சிலம்பி தன்னொடும்
கரிபுரந்து அருளிய கருணை வாரிதி
பரிபுரம் தரும்இரு பதசரோருகம்
அரிபுரந் தரன்அயன் அணுகிப் போற்றினர் 281

சிலம்பி-சிலந்தி. கரி புரந்தருளிய கருணை-திருவானைக்காவில் யானைக்கு அருள்புரிந்த செய்தி. வாரிதி-கடல். பரிபுரம் - அன்பும், வலிமையும். பதசரோருகம் - திருவடித் தாமரை. அரி, புரந்தரன், அயன் - திருமால், இந்திரன், பிரமன்.

ஆனைமுகன்

வேறு

நிகரற்ற பொற்கு டைக்கீழ் நீள்பெருச் சாளி மீதில்
புகருற்ற மதக போலப் போதக முகத்தோன் போதல்
நுகரத்தேன் இறாலை வேண்டி நுடங்கிடா நெடுங்கிரிப்பொற்
சிகரத்தின் மீதில் ஏறும் சிந்துரம் போன்றது அன்றே 282

புகர்-புள்ளி. மதகபோலம்-மதம் ஒழுகும் கன்னம். போதகம்-யானை. சிந்துரம்-யானை. விநாயகன் வருகை, தேன்இறாலை வேண்டிப் பெரிய மலைச் சிகரத்தின் மீதில் ஏறும் யானையைப் போன்றது. பொற்குடை தேன்இறாலுக்கும், பெருச்சாளி மலைக்கும் உவமை.

முருகன்

சாலவெண் கவரி துன்றும் தடமணி வீதி தன்னில்
கோலமார் மயிலின் மீதில் குமரவேள் அமையும் காட்சி
ஓலமார் திரைஉ லாவும் உவரியின் உறப்ப டிந்த
நீலமாமுகில்மேல் தோன்றும்நிறம்கொள்செங் கதிரோன்போலும்

சால-மிகுதி. துன்றும்-நெருங்கும். தட-பெருமை. உவரி-கடல்.

மயிலின் மீது முருகன் வரும் காட்சி கடல் மேல் படிந்த நீலமுகில் தோன்றும் செங்கதிரோன் போல விளங்கும்.

கடலும் நீலமுகிலும் = மயிலும் அதன் விரித்த தோகையும் செங்கதிரோன் = முருகன்.

பூதமீது பூதநாதன்

ஓதரும் பஞ்ச பூதம் உருவமாம் உலகுஅ னைத்தும்
தீதறத் தானே நின்று செலுத்துதல் காட்டல் போல
மேதகு மண்ணோர் விண்ணோர் வீதியில் ஆத ரிக்கப்
பூதவா கனம்தன் மீது போந்தனன் பூத நாதன் 284

ஐம்பூத உருவமாம் உலகம் யாவையும் தானே நின்று ஆணை செலுத்துதல் போல் பூதங்களின் தலைவனாம் சிவபெருமான் பூதவாகனமீது பவனி வந்தான்.

அன்னத்தின் மீது அம்மை

சாற்றிடும் அகில மாதைத் தாங்கியோர் சகத்தோர் துன்பம்
மாற்றிடத் தோன்றும் அன்ன வாகனம் அவையம் எல்லாம்
போற்றிடு மடவல் செய்யப் பொன்னடி நடைக்கொவ் வாமல்
தோற்றிடும் பரிப வத்தால் சுமந்திடும் பான்மை போலும் 285

அகிலமாது-உமை சகத்தோர்-உலகமக்கள்.

அம்மை அன்னவாகனத்தில் எழுந்தருளல்.மடவல்-உமை. அன்னம் அம்மையைச் சுமக்கும் காரணம் அவள் நடைக்கு ஒவ்வாமல் தோற்ற துன்பம் போலும்.

காட்சிஅருளல்

தெள்ளிய பச்சை வல்லி செறிந்தசெம் மேனி எம்மான்
துள்ளிய தவள மேனித் துங்கமால் விடைமேல் தோன்ற
ஒள்ளிய மரக தம்சேர்ந்து ஓங்குமா ணிக்க வெற்பு
வெள்ளிமால் வரையது ஒன்றின் மீதுறத் தோன்றல் போலும் 286

பச்சைக் கொடி போன்ற அம்மை, செம்மேனிச் சிவபெருமானுடன் வெள்ளிவிடைமேல் தோன்றும் காட்சி மரகதக் கொடி படர்ந்த மாணிக்கமலை வெள்ளிமலை மீது தோன்றுதல் போலும்.

சிவன் தோற்றம்

மாதவர் மாதர் கண்கள் வடிவெலாம் மொய்ப்ப வெள்ளைப்
போதகம் தன்னில் தோன்றல் புரந்தரன் ஆக முன்னம்
ஓதரும் தவமு யன்ற உபமன்னு முனிவன் உள்ளும்
சோதனை பண்ண எங்கோன் தோன்றிய தோற்றம் போலும் 287

முனிவர், மாதர் ஆகியோர் கண்கள் இறைவன் மீது மொய்த்தன. அக்காட்சி முன்னர் உபமன்னு முனிவனைச் சோதனை செய்ய இந்திரன் வடிவில் இறைவன் காட்டிய தோற்றம் போலும்.

பூப்பந்தர்

ஓவிய மடந்தைநீங்கி யோகஞ்செய் போதில் போர்வேள்
ஏவிய பூவோர் ஐந்தும் இசைந்திடப் பெறாத எங்கோன்
தேவியோர் பாகம் தன்னில் சிறந்திடப் பெறுகை யாலோ
பூவிளைப் பந்தர் தன்னில் போந்தனன் புவனி போற்ற 288

ஓவியமடந்தை-உமை.

பார்வதியை நீங்கிச்சிவன் யோகம் செய்யும் போது மன்மதன் ஏவிய ஐந்துபூ அம்புகள் அவனை அடையவில்லை. அதனால் இன்று அம்மையுடன் பூப்பந்தர்க் கீழ்ப் போந்தனன்.

நாகவாகனம்

மின்பொரு மணிகு லாவு வீதியில் விரும்பும் அன்பர்
முன்புபோந்து உரக வேந்தன் முதல்வனைத் தாங்கித் தோன்றல்
நன்பொருள் மார்க்கம் தன்னை நயந்திடும் உயர்ந்த வேதம்
தன் பொருள் இதுவே என்று சகத்தினில் காட்டல் போலும் 289

மின்-ஒளி. உரகவேந்தன்-பாம்பரசன்.

நாக வாகனத்தில் இறைவன் எழுந்தருளுதல், நற்பொருள் மார்க்கத்தை விரும்பும் வேதத்தின் பொருள் இதுஎன உலகிற்குக் காட்டுவது போலும்.

முத்துபந்தர்

வனிதையோர் பாகம் தாங்கி மதியுடன் நதியும் தாங்கும்
புனிதவே ணியனைத் தாங்கிப் போந்திடு முத்தின் பந்தர்
பனிதரு துளிகள் எங்கும் பயின்றிடல் முயன்று லூதை
இனிதுதன் வாயின் நூலால் இழைத்திடும் பந்தர் போலும் 290

உமை, பிறை, கங்கை ஆகியோரைத் தாங்கும் சிவபெருமானை முத்தின் பந்தர் தாங்கும் தோற்றம் சிலந்தி தன் வாயால் இழைத்த நூலில் பனித் துளிகளைப் பரப்ப முயன்றது போலும்.

(சிலந்தி மூடின சருக்கம் காண்க)

தேர்

வேறு

தடம்பயில் திரிபுரம் சாடும் எல்லையில்
வடம்பயில் வையமாம் வையம் மீதினில்
அடர்ந்திடு சாரதி ஆகிஉய்த் தல்போல்
இடம்பெற இலங்குதேர் இடத்தில் ஏத்தினன் 291

தடம் - சோலை. சாடும் - அழிக்கும். வடம்-கயிறு. வையமாம் வையம்-தேராம் உலகம். அடர்ந்திடு சாரதி-செலுத்தும் பிரமன் முன்னர்த் திரிபுரம் எரித்த காலத்தில் சாரதி ஆனது போல் பிரமன் தேரிலிருந்து சிவனைப் போற்றினான்.

அமுதலிங்கம்

மந்தர மணிவரை வான்அ ளாவுதேர்
முந்தர அதனிடை மூண்ட நீள்வடம்
சுந்தர அண்ணல் துலங்கு பாற்கடல்
அந்தர அமுதம்அவ் அமுத லிங்கமே 292

மந்தரமலை தேராகவும், வாசுகி என்ற பாம்பு நீண்ட வடமாகவும், திருமால் பள்ளிகொண்ட பாற்கடலிலிருந்து எழுந்த அமுதம் அமுதலிங்கமாகவும் தோன்றும்.

வெண்துகில் பெண்டிர்

பலஇயல் ஆகிய பதுமன் உற்சவத்து
உலவிய பாரதி உருவம் ஆம்என
நிலவிய கருப்புர நிறம்கொள் வெண்துகில்
குலவிய கோதையர் குழுமிச் சூழவே 293

பதுமன் உற்சவம்-பிரமவுற்சவம். பாரதி-கலைமகள் (வெள்ளாடை தரித்தவள்)

வெண்துகில் உடுத்த பெண்கள் பாரதி போல் குழுமினர்.

மகளிர் கரங்குவித்து வணங்கல்

நவிரிசின் னமும்அதிர் நல்வி ழா எதிர்
கவிரிதழ் மங்கையர் கரம்கு வித்தனர்
அவிரொளி மகுடமீது அணிவெண் திங்களால்
குவிதரு பங்கயக் குழாமது என்னவே 294

நவிர்-யாழ்வகை. கவிர்-செம்முருக்கமலர்.

இவைன் வர மகளிர் தாமரை மலர் போன்ற கரம் குவியும் காட்சி சிவன் முடியிலுள்ள திங்களைக் கண்ட தாமரைக் கூட்டம் குவிந்தது போல் தோன்றும்.

ஆலத்தி எடுத்தல்

நலங்கிளர் செவ்விகொள் நளின மீதினில்
துலங்கிய இளம்கதிர்ச் சுடர்கள் போலவே
அலங்கல்மென் குழலியர் அணிவளைக் கையால்
இலங்கும்ஆ லத்திகள் ஏந்திப் போந்தனர் 295

நளினம்-தாமரை. அலங்கல்-மாலை.

பெண்கள் கையில் ஆலத்தி ஏந்தி நின்ற காட்சி தாமரை மீது கதிர்ச்சுடர் போல் விளங்கும்.

மகளிர் துதி

வேறு

நிறைஅணி அழகன் மேனி நெஞ்சினுள் அடக்கிக் கொள்வார்
குறைவிலா அழகு அனைத்தும் கொள்ளைகொண் டிடவே செல்வார்
கறைபுனை திருமி டற்றைக் கண்டகண் மீளாது என்பார்
இறைவனே எமக்கு நீஇங்கு இரங்குவாய் எனத்து திப்பார் 296

சிவபெருமான் அழகுருவை மகளிர் நெஞ்சில் அடக்குவர் அவன் அழகைக் கொள்ளைக் கொள்ளச் செல்வர். நீலகண்டத்தைக் கண்ட கண் மீளாது என்பர். இறைவனைத் தம்மீது இரக்கங் காட்டுமாறு வேண்டுவர்.

உருகுவார் தொழுவார் வீழ்வார் ஓடுவார் மீள்வார் இன்பம்
பெருகுவார் துதிப்பார் சூழ்வார் பேரழகு அனைத்தும் கண்ணால்
பருகுவார் களிப்பார் என்ன பாக்கியம் செய்தோம் என்பார்
முருகுவார் மலர்இ றைப்பார் மொய்த்தனர் இரும ருங்கும் 297

உலாவரும் இறைவனைக் கண்ட மகளிர் நிலை.

முருகுவார்-அழகு ஒழுகும். மருங்கு-பக்கம்.

பலமழை

பாமழை பொழிந்தனர் பத்தர் வெண்பொரி
மாமழை பொழிந்தனர் மைந்தர் மாதர்மேல்
ஏமழை பொழிந்தனன் இரதி காவலன்
பூமழை பொழிந்தனர் பொங்கு வானவர் 298

பா-பாட்டுக்கள். ஏ மழை-பூவாகிய அம்புமழை. இரதி காவலன்-மன்மதன்.

மழை பொழிதல் போல் பல செயல்கள் நிகழ்ந்தன.

திருச்சாந்து சாத்தல்

அந்தக வயிரித்துளன் ஆகம் எங்கணும்
சந்தனக் குழம்புமேல் சாத்தும் சாந்தணி
கந்தரம் மேவிய காள கூடமே
சுந்தர வடிவெலாம் தோன்றல் போலுமே 299

அந்தக வயிரி-அழிக்கும் வைரி. ஆகம்-மார்பு. கந்தரம்-கழுத்து. காளகூடம்-நஞ்சு.

சிவன் கழுத்திலுள்ள நஞ்சு சந்தனம் பூசிய உடம்பு எங்கும் தோன்றும் போலும்.

பலபொடி

தேய்ந்து வானவர் முடிசிந்து பொற்பொடி
ஏந்திழை யார் இழை இழைந்தி டும்பொடி
ஆய்ந்தனர் புனல்விளை யாட வீதியில்
போந்திடும் அரிசனப் பொடியோடு ஒன்றுமால் 300

வானவர் பொன் முடியிலிருந்து சிந்தும் பொற்பொடியும் மகளிர் பொன் நகையோடு இழைந்திடும் பொடியும் புனல் விளையாட வீதியில் கிடக்கும் மஞ்சட்பொடியோடும் தோன்றும்.

பிரமன் அபிடேகம் செய்தல்

வேறு

பிரமபுட் கரணி பொன்னி பெருகுதண் புனலி னாலும்
கரமலர் தனில்அ ணைந்த கமண்டலப் புனலினாலும்
வரம்தர மீனத் திங்கள் மருவுரோ கணிநாள் தன்னில்
பரமனைச் சதுமு கத்தோன் பரிந்து அபி டேகம் செய்தான் 301

பிரமபுட் கரணி நீர் பொன்னிநீர் கையிலுள்ள கமண்டல நீர் இவற்றால் பெருக வரம் தரம் பங்குனியில் (மீனமாதம்) உரோகிணி நாளில் சிவபிரானைப் பிரமன் அபிடேகம் செய்தான்.

தீர்த்தமாடலின் பயன்

அடுத்திடு நிறையு வாவி லங்கையால் துங்க வேழம்
படுத்துரி போர்த்த எங்கோன் பங்குனித் திருவி ழாவில்
கொடுத்திடும் தீர்த்தம் தன்னில் மூழ்குவோர் கொடிய பாசம்
தொடுத்திடு பிறவி என்னும் தொல்கடல் மூழ்கு றாரே 302

நிறைஉவா-முழுமதி. துங்கவேழம்-மேலான யானை (கசமுகாசூரன்) எங்கோன்-சிவபெருமான்.

பங்குனித் திருவிழாவில் தீர்த்தம் மூழ்கியவர் பிறவிக் கடல் மூழ்கார் என இத்திருவிழாவின் பயன் கூறியது.

வேறு

வீசுகம லத்திருந்தோன் நடத்து மாசி
விழா அதனில் எழுந்தருளும் வியப்பு நோக்கி
ஆசில்புகழ் திருவசந்தன் அழகன் என்றும்
அழகுக்கு நிகர் ஆரும் ஒவ்வார் என்றும்
தேசுபுகழ் முன்பினும்பின் னழகன் என்றும்
சிந்தைதனில் உவப்பதனால் செப்ப லாலே
பேசுமிந்தப் பெயர்கள் அந்நாள் ஆதி ஆகப்
பேருலகி னார்அறியப் பெற்றது அன்றே 303

கமலத்திருந்தோன்-பிரமன். வசந்தன்-மன்மதன். முன்பினும் பின்னழகர்-இது தல இறைவன் பெயர் (விடையாற்றி) வசந்தவிழா எனப் பெயர் பெறும் காரணம்.

ஆதி பிரம உற்சவம்

வேறு

சிரமதில் மதியை வைத்த சிற்பரன் தன்னி டத்தில்
வரமது பெற்ற வேதன் மாசிநல் விழாவை வானோர்
நரர்மதித் திடும்வி யப்பால் நடத்துநாள் நுடங்கி ஆதிப்
பிரமவுற் சவமது என்னும் பெயரது படைத்தது அன்றே 304

சிற்பரன்-சிவன். வேதன்-பிரமன். நரர்-மக்கள்.

ஆதிபிரமவுற்சவச் சருக்கம் முற்றும்.

ஆக சருக்கம் 7

திருவித்தம் (1 +) 303

ஆறுமுகம் துணை

கரிய மாலயச் சருக்கம்

இராமனின் வீரகத்தி தீர்த்ததை இச்சருக்கம் கூறும் இராவணனைக் கொன்ற பாவத்தை இராமன் சேதுவில் தீர்த்தான். பின்னர்ப் புட்பகவிமானம் ஏறிய போது அவனைக் கும்பகன்னன் பிரமகத்தி தொடர்ந்தது. பல இடங்களில் தொடர்ந்து வந்த அது, இராமன் பொன்னிக்கரையிலுள்ள ஆனைக்காவை அடைந்ததும் அப்புறத்தே நின்றது. அதனால் அத்தலச் சிறப்பை இராமன் உணர்ந்தான். அது மேலும் தொடரா வண்ணம் அங்கு ஒரு இலிங்கம் தாபிக்கக் கருதி அங்கதனை ஏவினான். சாளக்கிராம மலையை அடைந்து நீல நிறம் கொண்ட இலிங்கம் கொண்டுவர அதனைக் கோவிலுக்கு மேற்கே இராமன் அமைத்து வழிபட்டான். அவனை அடைந்த பிரமகத்தி நீங்கியது. மகிழ்ச்சியுடன் அயோத்தி சென்றான்.

இத்துடன் திருமால் வீடணன் பெட்டகத்திலிருந்து திருவரங்கத்தில் உறைந்த காரணத்தையும் இச்சருக்கம் கூறும். அயோத்தியில் இராமன் முடிசூடிய பின் அவனை விட்டு நீங்க விரும்பாத வீடணனுக்குத் தான் வணங்கும் கடவுளை அளித்து இராமன் விடையளித்தான். வீடணன் இலங்கை செல்லும் வழியில் பெட்டகத்தைப் பொன்னியின் இடைக்குறையில் வைத்துப் பூசை புரிந்தான். பூசைமுடித்துப் பெட்டகத்தை எடுக்க இயலாது வருந்தினான். தான் அங்கு அகலாது தங்கிய காரணத்தைத் திருமால் கூறினான். அதனால் ஞானபூமியின் சிறப்பை வீடணன் அறிந்தான். சைவத் தலங்களுள் ஆனைக்காவின் தலைமையைப் பல நிலைகளில் வீடணன் உணர்ந்தான். சிவராத்திரி மகிமையைத் தெளிந்தான். சிவன் மேல் திருமால் கொண்ட அன்பைப் புலப்படுத்தி ஆண்டு தோறும் வந்து அருச்சித்துச் செல்லுமாறு கனவில் கூறிய திருமாலின் மொழிகளைத் தேர்ந்த வீடணன் இராம தீர்த்தத்தில் மூழ்கிக் கரியமாலயனை வணங்கி இலங்கை ஏகினான்.

(கரியமாலையன் என்பது கரியமாலயன் என ஆயிற்று)

8. கரிய மாலயச் சருக்கம்

ஏர்த்திடு போமன் என்கோன் இன்புற முழவுஅ னேகம்
ஆர்த்திட நடத்துகின்ற அணிவிழா அடைவு சொன்னோம்
கூர்த்திடும் இராக வன்பால் கொடுமைசெய்வீர கத்தி
தீர்த்துஅரண் அருள்புரிந்த செய்கையின் சிறப்புரைப்பாம் 305

ஏர்த்திடு-ஏத்திடு (புகழ்ந்திடும்). எதுகை நோக்கித் திரிதல். போதன்-நான்முகன். என்கோன்-என் தலைவனாம் சிவன். முழவு-மத்தளம். அணிவிழா-பிரம்மவுற்சவம். அடைவு-முழுமை. கூர்த்திடு-வீரமிகுந்த. வீரகத்தி-வீரனைக் கொன்ற பாபம் (கும்பகன்னனைக் கொன்ற பாவம்)

வேறு

பெற்றஅரும் கற்புடைய பெருந்திருவைக்
    கரந்துஅரக்கன் பிடித்துப் போந்த
செற்றமொடு திரைக்கடலைச் சேதுபந்தம்
    செய்துஇலங்கை சென்றே குன்றாக்
கொற்றமுள தசமுகனைக் கும்பகன்னன்
    தனைவலியால் கொன்றுநீதி
கற்றதசரதராமன் கனகவிமா
    னத்தேறிக் கடிது போந்தான், 306

பெருந்திரு-திருமகளாம் சீதை. கரந்து-துறவி வேடத்தில் மறைந்து. அரக்கன்-இராவணன். செற்றம்-சினம். சேது பந்தம்-சேது அணை. கொற்றம்-அரசு. தசமுகன்-இராவணன். கனகவிமானம்-பொன்விமானம் (புட்பகம்)

பெயர்ந்திடும்போ தவர் இருவர் பிரமகத்தி
ஆகிஉடன் பிடித்துப் போத
அயர்ந்துதச ரதராமன் பிரமகத்தி
தனைஅகற்ற வேண்டி
இயைந்தருளா கடல்தடத்தில் இசையும்இரா
மீச்சுரமா லிங்கம் தாபித்து
உயர்ந்தபெரும் புகழ்படைத்து ஓங்கும்இரா
வண் கத்தி ஒழிந்தது அன்றே 307

பிரமகத்தி அந்தணனைக் கொன்ற பெரும் பாவம். (இராவணன் அந்தண மரபினன்) அயர்ந்து-சோர்ந்து. குரை-ஒலிக்கும். தடம்-வழி. தாபித்து-அமைத்து. இராவணனைக் கொன்ற பெரும்பாவம் இராமீச்சுரத்தில் இராமன் சிவனை வணங்கியதால் தீர்ந்தது.

போகவீடு அளித்திடும்அப் புனிதலிங்கம்
தனைத்தொழுது போற்றமிக்க
ஊகமே இராகவன்தான் உத்தரதிக்
கினில் எய்த உன்னிமன்னும்
வேகமார் உயர்புரவி விரவிஎழில்
பரவும்ஒரு விமானத்து ஏறி
ஏகவே கும்பகன்னன் எனும்பிரம
கத்திவிடாது ஏகிற்று அன்றே 308

போகவீடு-இன்பவுலகம். புனிதன்-சிவன். உத்திரதிக்கு-வடக்கு திசை. உன்னி-கருதி. புரவி-குதிரை. விமானம்; புட்பகவிமானம். வடதிசை சென்ற இராமனை விடாது கும்பகன்னனைக் கொன்றதால் உண்டான பிரமகத்தி தொடர்ந்தது.

தொடர்ந்துபெரும் பகைஅடர்க்கும் காகுத்தன்
பிரமகத்தி தொடர மாந்திக்
கடந்திடுதற்கு அரிதாய கானகமும்
நெடுவரையும் கடந்து திண்தேர்
அடர்ந்தபெரு வேகமுடன் ஆற்றிடைப்போந்து
இனிதுவைக அடர்ந்த சோலைத்
தடந்துஅருவி நீழல்பயில் தன்னிகராம்
பொன்னிநதித் தடத்தில் போந்தான் 309

காகுத்தன்-இராமன். மாந்தி-துன்பம் அடைந்து. ஆற்றிடை-வழியின் பக்கம். தடந்து-பெருகி.

தீங்குஅரிய பொன்னிஎனும் திருநதியில்
அருநிதியாம் தென்பால் எய்தித்
தாங்குஅரிய தண்டலைசூழ் சம்புவனம்
போதலுமே தண்டாது ஈயும்
ஈங்குஅரிய பெருங் கொடையோர் இடம்தனில் வந்து
அடைந்தவர்தம் இன்மை போல
நீங்குஅரிய பிரமகத்தி நீங்கியகன்று
அப்புறத்தில் நின்றது அன்றே 310

தீங்கரிய-தீமையில்லாத. தண்டலை-சோலை. தண்டா தீயும்-குறையாமல் கொடுக்கும்.

கொடையாளியை அடைந்தவர் வறுமை அகல்வது போல் இராமனை விட்டுப் பிரமகத்தி அப்புறத்தே நின்றது.

நிந்தை செயும் பிரமகத்தி நீங்குதலால்
அப்பதியில் நீங்கா மேன்மை
சிந்தைதனில் அதிசயித்துச் சென்றுவான்
முகடுஅளக்கும் செறிந்த வாசக்
கொந்துஅடரும் வெண்ணாவல் குளிர்நிழல்
சிறந்ததிருக் கோயில் வைகும்
எந்தைதனை இயல்வலம்போந்து இனிது கண்டு
தொழுதுஏத்தி இன்பம் உற்றான் 311

வான்முகடு-வானத்தின் உச்சி. கொந்து – கொத்து. வெண்ணாவல் – சம்புமுனியிடம் பிறந்த நாவல்மரம். இயல் வலம்-கோயிலை வலம் செய்தல்.

பின்னும்அந்தப் பிரமகத்தி பின்தொடராது
ஒருதடத்தில் பெருநீ ராடித்
தன்னிகராம் அத்தீர்த்தத் தடம்தனில் ஓர்
சிவலிங்கம் தாபிப் போம் என்று
உன்னுமனத் தினன்ஆகி அங்கு அதற்கா
அங்கதனை உவந்து நோக்கி
இன்னில மேல் தாபித்தற்கு இயைந்தலிங்கம்
தனைக்கொடுவா எனவி டுத்தான் 312

தடம்-குளம். தாபிப்போம் - அமைப்போம். அங்கதன்-வாலிமகன். முன்னர் இராமீச்சரத்தில் இலிங்கம் அமைக்க அனுமனை அனுப்பிய இராமன் இங்கு அங்கதனை அனுப்பும் நெறி இராமாயணத்தில் தூது அனுப்பும் போது முதலில் அனுமனையும் பின் அங்கதனையும் அனுப்பிய செய்தி கருதற்குரியது.

கிடைப்புஅரிய பெருஞ்சாளக் கிராமநெடும்
கிரிஅதனைக் கிட்டி ஆங்கே
இடைக்கண் இலிங் கம்பலவின் இந்திரநீ
லச்சிலையாய் இலிங்கம் ஒன்றைத்
தொடைக்குஇனிய புயத்துஏந்தித் தொலையாத
கிரிவனங்கள் தொலைத்தே மிக்க
கொடைக்குரிசில் ஆகியஅக் கொற்றவன்பால்
அக்கணமே கொண்டு போந்தான் 313

சாளக்கிராமம் மலையில் தோன்றிவரும் கண்டகி ஆறு. அதில் கிடைக்கும் உருண்ட கற்களைக் கொண்டு சிவ பூசைக்குரிய இலிங்கமாகக் கொள்வர். இலிங்க வடிவில் கிடந்த பல கற்களில் இந்திர நீல நிறம் கொண்டதை அங்கதன் தேர்ந்தெடுத்தல். தொடை-மாலை. கடக்கத் தொலையாத மலைகளையும் காடுகளையும் கடந்தான், கொடைக்குரிசில், கொற்றவன்-இவை இராமனைக் குறிப்பன.

திடத்தின்அவன் கொடுபோந்த சிவலிங்கம்
தன்னைஎதிர் சென்று வாங்கி
இடத்துறுதன் புகழென்ன ஈறிலா
அருநிதியம் எனஇ ராமன்
விடத்தையணி அமுதேசன் விளங்குதிருக்
கோயிலுக்கு மேல்பால் மேலைத்
தடத்திடைஅவ் இலிங்கத்தைத் தாபித்தான்
விதிமுறைமை தவறா வண்ணம் 314

திடம்-உறுதி. இராமன் புகழும் செல்வமும் போல் கோயிலுக்கு மேற்குப் பக்கம் இலிங்கத்தை அமைத்தான். இன்றும் இக்கோவிலின்முன் தாமரைக் குளம் இருப்பதைக் காணலாம். பெரும்பாலும் இக்கோவில் கரியமாலயன் என்பதைப் பிறபொருள்பட எளிய மக்கள் வழங்கி வருகின்றனர்.

இராமன் செயல்

தாவித்தஅவ் இலிங்கத்தைத் தரும்அன்பால்
அர்ச்சித்துத் தன்கண் ஆரச்
சேவித்து முறைவழுவா மகாதானம்
அவைஅனைத்தும் செய்தே சிந்தை
பாவித்தற்கு அரியதுஒரு பரஞ்சுடரை
அன்பினுடன் பரவிக் கையால்
தூவித்தண் நறுமலர்கள் வேதபாதத்
தவத்தால் துதிக்கல் உற்றான் 315

தாவித்தல்-அமைத்தல். வேதபாதத்தவம்-வேதம் ஓதித் தவம் புரிதல். மலரருச்சனை, சேவித்தல், தானம்புரிதல் பாவித்தல், பரவுதல், மலர் தூவுதல், துதித்தல் ஆகியவை இராமனின் செயல்கள்.

சிவனருள்

ஆர்த்திட அங்கு அவன்உரைத்த வேதபாதத்
தவத்தால் அகம்மகிழ்ந்தே
நீர்த்தரங்கச் சடாஅடவியோன் நிலைபெறும் அவ்
இலிங்கத்து நேரே தோன்றிக்
கூர்த்திடும்அவ் இராகவனைக் குறித்துநின்னைப்
பிரமகத்தி குறுகா வண்ணம்
தீர்த்தனம்என்று இனிதுஅருளி மூர்த்திதரும்
இலிங்கத்தில் திரோற்ப வித்தான். 316

தரங்கம்-அலை. சடாஅடவியோன் - சடைக்காடனாம் சிவன். குறுகாவண்ணம்-அடையாதபடி. தீர்த்தனம்-முடித்தோம். திரோற்பவித்தான்-நிலையாக அமர்ந்தான்.

கறுவிமிகப் பகைஅடர்க்கும் காகுத்தன்
தனக்குநெடும் கடலில் தோன்று
மறுவணிபோல் திருமிடற்றான் மறுவிலாது
இனிதுஅளித்த வரத்தி னாலே
தறுகிமனம் தளர்ந்தனன் அறுதிபெறும்
சிவலிங்கம் தன்னைச் சார்ந்த
சிறுவனைச் சென்று அடர்கூற்றின் செய்கையெனப்
பிரமகத்தி தீர்ந்தது அன்றே 317

கறுவி-கோபித்து. காகுத்தன் - இராமன். மறு-கறை. மிடற்றான்-கழுத்தை உடைய சிவன். தறுகி - வருந்தி- சிறுவன்-மார்க்கண்டேயன் சிவனை மார்க்கண்டன் அடைந் தான். அவனை அடைந்த யமன் செயலற்றுப் போனது போல் இராமன் ஆனைக்கா அரனை அடையப் பிரமகத்தி நீங்கியது.

வேறு

விருத்தமாய் வருத்து கின்ற வீரகத் தியையும் நீங்கிக்
கருத்துற மகிழ்ச்சி பொங்கக் கரியமா லயனைப் போற்றித்
திருத்தகு செம்பு நீழல் செம்புநா தனைவ ணங்கி
அருத்திசேர் இராக வன்தான் அயோத்திமா நகரில் போந்தான் 318

விருத்தம்-பெருக்கம், வீரகத்தி - பெரும்பாவம். செம்பு நீழல்-நாவல்மர நிழல். அருத்தி-ஆசை.

கரியமாலயன் அருள்

வேறு

எரியமால் இலங்கையைச்செற்று
இராவணன் தன்பத்து முடி இடறியே வால்
அரியமால் போந்துஇறைஞ்சும் அன்றுமுதல்
அவ்இலிங்கம் அவனிமீதில்
பெரியமால் உறுமவர்தம் பிரமகத்தி
முதலான பிணியும் நீக்கும்
கரியமா லயன்எனும்பேர் கற்றவர்கள்
இனிதுரைக்கப் பெற்றது அன்றே 319

இடறி-சிதைத்து. ஏவால்-அம்பினால். பெரியமால்-பெரு மயக்கம். கரியமாலயன்-இச்சருக்கத்தில் இப் பெயர் அமைந் துள்ளது.

கரியமாலையன் என்பது குறுக்கல் விகாரமாயிற்று.

அரங்கன் வரலாறு

வேறு

வீடணன் பெட்ட கத்தில் வேயவம் மாய வன்தான்
தேடரும் செம்பு நாதன் சேர்வையும் சோர்வி லாத
நாடரு ஞான பூமி நலத்தையும் முன்னிப் பொன்னி
ஊடமர்ந்துஎன்றும்நீங்காதுஉறைந்ததும்உரைத்தல்செய்வாம் 320

வீடணன் - இராவணன் தம்பி. வேய - பொருந்திய. சேர்வை-அடைவு. ஞானபூமி-தலப்பெயர்.

திருமால்வீடணன் பெட்டகத்தில் இருந்து பொன்னியின் திருவரங்கத்தினிடையே அமைந்த வரலாறு கூறத் தொடங்குவார்.

இராமன் வீடணன் உரையாடல்

வேறு

மாதிலங்கு மார்புபயில் மன்னவன்தான்
அந்நகரின் மருவிச் செம்பொன்
மூதிலங்கை மாநகரை முறைகாத்தற்கு ஏகு
எனவே மொழிந்து நின்றோன்
மீதிலங்கும் அலங்கல்புனை வீடணனைக்
கட்டுரைக்க வீட ணன்தான்
போதிலங்குஎன் போதம்உன்தன் போதுஇலங்கு
பதம்நீங்கிப் போதாது என்றான் 321

மாது திருமகள். மன்னவன் - திருமாலாம் இராமன். அலங்கல்-மாலை. கட்டுரைக்க-முறையாகக் கூற. போது அறிவு, மலர்.

இராமன் விடை கொடுத்தல்

செம்மைபெற ஆங்குஅவன்தன் செப்புமொழி
தனைக்கேட்டுச் சீதை கேள்வன்
பொய்மைஇலா வாதம்சேர் வீடணனைப்
பேரன்பு புரிந்து நோக்கி
எம்மை இறைஞ் சுதல்போல யாம்இறைஞ்சும்
கடவுளைநீ இறைஞ்சிடு என்றே
மெய்ம்மைபயில் பிரணவமாய் விளங்குவிமா
னமும் கொடுத்து விடைகொடுத்தான். 322

சீதைகேள்வன் - சீதையின் கணவனாம் இராமன். இராமன் தான் வணங்கும் பெருமானை வீடணனும் வணங்குமாறு கூறிப் பிரணவமாய் விளங்கும் விமானம் கொடுத்தல்.

வீடணன் போதல்

வேறு

அலங்கல்சேர் வீடணன்அ யோத்தி நீங்கியே
துலங்குபெட் டகத்தினுள் துயிலும் மாயனை
விலங்கல்நேர் மணிப்புயம் மீதில் தாங்கியே
இலங்கைமா நகர்தனை எய்தப் போந்தனன் 323

அலங்கல்-மாலை. மாயன்-திருமால். விலங்கல்-மலை மணிப்புயம்-அழகிய தோள்.

பொன்னி அரங்கத்தில் பூசை

பெருந்திரு மால்தனைப் பெட்ட கத்துடன்
அருந்திறல் வீடணன் தாங்கிப் போந்துடன்
பொருந்திரைப் பொன்னியில் புளினம் மீதுவைத்து
இருந்துஅரும் பூசனை இனிதுஇ யற்றினன் 324

பெட்டகம்-பெட்டி. பொரும்-மோதும். புளினம்-ஆற்றிடைத்திட்டு.

முறைபயில் பூசனை முடித்து மேவலர்
திறையிடும் இலங்கையில் செல்ல எண்ணியே
கறைகொள்வேல் வீடணன் கரிய வண்ணனாம்
இறைஉறை பெட்டகம் எடுக்கல் உற்றனன் 325

மேவலர்-பகைவர். திறை-கப்பம். கறை-பகைவரின் குருதிக்கறை. கரியவண்ணன்-திருமால்.

வீடணன் அயர்வு

உயர்த்த பெட்டகம் நிலத்துடன் அழுந்தியே
பெயர்த்திடை வருந்தியும் பெயர்ப டாதலால்
வெயர்த்திடு பயத்தொடு மெலிந்து வீடணன்
அயர்த்திடும் உளத்தினன் ஆகி நின்றனன் 326

அச்சத்தில் வியர்வை மிகும் நிலை இது. அயர்த்தல்-சோர்தல்.

தாங்கிய பெட்டகம் தரித்தது இவ்வுழை
நீங்கரிது ஆகும்இந் நிலத்து வாசியோ
தீங்குயான் இற்றைநாள் செய்தது உள்ளதோ
ஈங்குஇதற்கு என்செய் வேன்என அயர்ந்தனன் 327

இவ்வுழை-இவ்விடம். வாசி-தன்மை.
தன் குறை உள்ளதோ என வீடணன் ஐயுற்றான்.

கனவில் மாயவன் உரை

மனமுற வீடணன் வருந்தி டாவகை
கனவினில் எய்தியே கரிய மாயவன்
புனைதிரைப் பொன்னியின் புளின பூதலம்
தனைஅக லாதமை சாற்றல் உற்றனன் 328

பெருமான் கனவில் வந்துரைத்தல்.

கரியமாயவன்-திருமால். திரை-அலை. புளின பூதலம்-ஆற்றிடை நிலமாம் அரங்கம். அகலாதமை-நீங்கா நிலை.

வேறு

அறந்தரு மேன்மை எய்தும் ஐங்கோச அளவைப் பெற்றுச்
சிறந்தமெய்ஞ் ஞான பூமித் திருஎல்லை அதனில் வந்து
பிறந்தவர் மீள வந்து பிறவார் அப்பெரும்ப திக்கே
இறந்தவர் இறவா இன்பம் எய்துவர் எனஉ ரைத்தான் 329

ஐங்கோசம்-பஞ்சகோசம் எனப்படும் அன்னமய கோசம்-பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்தமய கோசம் என ஆன்மாவை மூடிக் கொண்டிருப்பவை.

ஞானபூமி-தலப்பெயர். இதில் பிறந்தவர் மறுபடியும் பிறவார். இறந்தவர் இறவா இன்பம் அடைவர்.

தரையில்வந்து இனிது இறைஞ்சு சம்புமா முனிபொ ருட்டும்
உரை கொள் மெய்ஞ் ஞானம் நாடும்உமையவள்பொருட்டும் ஆகப்
புரையில்எம் பெருமான் ஞானப் பூமியின் இடத்தில் வெள்ளி
வரையினும் அதிக மான மகிழ்ச்சிபெற் றுஉறைவன் என்றான் 330

சம்புமுனி, உமை ஆகியோர் பொருட்டுச் சிவபெருமான் இங்கு வெள்ளிமலையைவிட மிகுதியான மகிழ்ச்சிபெற்றிருப்பான்.

புரை-குற்றம். ஞானபூமி-தலப்பெயர்

வினை நீக்கும்

கதிதரும் அத்தலத்துக் கங்கையே முதலது ஆன
நதிக ளானவை அனைத்தும் நற்றவம் பெரிதுஇ யற்றிப்
பதிதனைச் சூழ்ந்துஇ லங்கும் பைம்புனல் தடாகம் ஆகி
மதியுடன் ஆடு வோர்தம் வல்வினை ஒழிக்கும் என்றான் 331

கதி-மேலான நிலை.

கங்கை முதலான ஆறுகள் இங்கு வந்து தவம் இயற்றி நீர்த்தடமாகி விளங்கும். அறிவோடு விரும்பி வருவோரின் தீவினையை நீக்கும்.

கொடை நிலை

தென்அள கையும்ஒவ் வாத சிறப்பமைந் துஉறப்ப யின்ற
புள்அள வியபூஞ் சோலை புகழ்ஞான பூமி தன்னில்
எள்அள வேனும் அன்பாய் ஈந்திடில் அதுதான் வானம்
உள்அளவு ஓங்கும்செம்பொன்ஓங்கல்போல்வளரும் என்றான் 332

அளகை-குபேரன் தலைநகர். உற-மிகுதி. புள்அளவிய பூஞ்சோலை-பறவை நிறைந்த மலர்ச்சோலை. ஞானபூமி-தலப்பெயர். செம்பொன் ஓங்கல்-பொன் மலையாம் மேரு.

இத்தலத்தில் சிறிது கொடுப்பினும் அது என்றும் வளரும் மேருமலை போல் வளரும்.

பெறும்பேறு

பொருவிலா ஞான பூமி பொருந்திய புள்ளும் ஆவும்
தருவுநற் சிவப தத்தைச் சார்ந்திடும் என்றால் குன்றாத்
திருவுறும் அத்த லத்தில் சிவனிடத்து அன்பி னோடு
மருவினர் மருவும் பேறு வகுத்துஎவர் உரைக்கவல்லார் 333

பொருவிலா-ஒப்பிலாத. ஞானபூமி-தலப்பெயர்.

புள், மா, தரு-பறவை, விலங்கு மரம் எனும் அத்தலத்தில் சிற்றறிவுடைய உயிர்கள் சிவபதம் சாரும். இதனால் சிவனிடத்து அன்புகொண்ட மனிதர் பெறும்பேறு உரைத்தற்கு அரிது.

ஞானப்பேறு

முறிந்திடும் ஓடும் கல்லும் மொய்த்திடும் பாலும் எங்கும்
செறிந்திடும் மணலும் மற்றும் சிவலிங்க வடிவே யாகும்
அறிந்திட அரிதாம் மென்மை அமைந்திடும் அத்த லம்தான்
பிறிந்திடா அகன்ற ஞானம் பெற்றிடும் பெருமை தன்னால் 334

உயிரற்ற ஓடு, கல், போன்றவையும் இத்தலத்தில் சிவலிங்கமாம்.

பிறிதல்-அகலல்.

தலப் பெருமைக்குரிய காரணம் கூறப்பெறல்.

காசியினும் மேல்

மாசியாம் திங்கள் தன்னில் மாசிலாப் பொன்னி மூழ்கித்
தேசினான் மேன்மை பெற்ற செம்புநா தரையும் போற்றி
ஆசிலா மதில்வ லம்வந்து அப்பதி உறையும் பேறு
காசியில் கற்பம் ஒன்று கலத்ததின் நலத்தது ஆமால் 335

மாசிமாதம் காவிரியில் மூழ்கிச் செம்புநாதரைப் புகழ்ந்து மதிலைவலம் வந்தால் காசியைவிட தலம் பயப்பது. தேசு-ஒளி. ஆசு-குற்றம். கற்பம்-பேரளவு. ஆல்-ஈற்றசை.

தானத்தலைமை

கானமார் தருக்கள் உள்ளும் கற்பகத் தாருவேபோல்
வானமார் கிரிகள் உள்ளும் மகமேருக் கிரிபோல் வன்மை
ஆனமா நதிகள் உள்ளும் ஆரநன் னதிபோல் சைவத்
தானம்ஆ னவையுள் இந்தத் தானமே தலைமை ஆமால் 336

மரங்களுள் கற்பகத் தருவும், மலைகளுள் மேரு மலையும் ஆறுகளுள் கங்கையும் சிறந்தன. அவைபோல் சைவத்தலங்களில் திருவானைக்கா தலைமை பெற்றது.

மறையவர்க்குணவு

மறையவன் ஒருவர் உள்ளம் மகிழ்ந்திட நெகிழ்ந்த சிந்தை
குறைவற ஒருபோது அன்னம் கொடுத்திடில் தொடுத்துஇயற்றி
நிறைதரு பொருள்அ னந்தம் நேர்ந்திடச் சேர்ந்தி டாத
முறைதனில் வேள்வி கோடி முயலும்பேறு இயலும் என்றே 337

மறையவர்க்கு ஒரு பொழுது உணவு கொடுப்பதன் பயன் கோடி-எண்ணிக்கை மிகுதி.

சிவராத்திரி சிவப்பேறு

வேறு

ஒருசிவ ராத்திரி உபவ சித்திடர்க்
கரிசற செம்புபுட் கரணி மூழ்கியே
தெரிசனம் செய்துநற் செம்பு நாதனைப்
பரசினர் ஒன்றுவர் பரசி வத்துடன் 338

சிவராத்திரியில் உண்ணா நோன்புடன் செம்பு புட்கரணியில் மூழ்கிச் செம்புநாதனை வணங்கினால் பரசிவத்துடன் ஒன்றுவர்.

உபவசித்து-உண்ணாதிருந்து. பரசினர்-வணங்கியவர்.

இத்தல உயிர்க்குத் துயர் செய்தால் நரகு

திருந்தும்அத் தலத்திலோர் செந்து நொந்திட
அருந்துயர் செய்யினும் அளத்தில் ஆளுவார்
பெருந்த போதனர்க்கு அரும்பிழை புரிந்தவர்
பொருந்துவர் நரகெனப் புகல வேண்டுமோ 339

செந்து-சிறிய உயிர். அருந்துயர் கொடுந்துன்பம். அளம்-நரகச் சேற்றில்.

சிறியஉயிர் பெரிய உயிர் என்ற பேதமின்றி இத்தலத்தில் எவ்வுயிர்க்குப் பிழைபுரியினும் நரகத்தில் வீழ்வர்.

தலத்தோர் பெறும்பேறு

திருத்தம் ஆகிய நவதீர்த்தம் மூழ்கியே
உருத்திர மணிவடம் உவந்து நீறுமெய்
தரித்துஎழுத்து அஞ்சையும் சாற்றி இத்தலத்து
இருத்தல் பெற்றவர்கள் பேறுஎண்ணல் ஆகுமோ 340

இத்தலத்திலுள்ள ஒன்பது தீர்த்தங்களில் மூழ்கி உருத்திர வடமும், நீறும் தரித்து, ஐந்தெழுத்தும் ஓதி இங்கு இருப்பவர் பேறு எண்ண முடியாது.

தலப், மூர்த்தி,அன்பர்சிறப்பு

வேறு

தங்குதற்கு இத்த லம்போல் தலமும் ஒன்றுஇல்லைத் தெய்வம்
பொங்குஅருள் செம்பு நாதன் போலவும் இல்லை என்போல்
அங்குஅவன் தனக்கும் இல்லை அன்பனும் ஆதலாலே
இங்குஅவன் தன்னைப்போற்றிஇருந்தனன் யானும் என்றான்341

இத்தலமே சிறந்தது. இம்மூர்த்தியே சிறந்தது. என்போல் அன்பனுமில்லை என்பது வெளிப்படை.

செப்புநாதன் எனும் பெயரிடல்

இன்புறு செம்பு நாதன் எனும்திரு நாமம் தன்னை
அன்புறு புதல்வர்க்கு இட்டே அழைத்திடப் பெறுவர் ஆகில
முன்பொடு பின்பும் ஆகும் மூவெழு மரபின் உள்ளோர்
துன்புறு வினைகள் நீங்கிச் சுரர்தொழ வாழ்வர் என்றான் 342

மக்கட்குச் செம்புநாதன் எனும் பெயரிட்டால் தனக்கு முன்னும் பின்னும் உள்ள மரபினோர் வினை நீங்கித் தேவர் தொழ வாழ்வர் என்பது

தெய்வம், தீர்த்தம் தலம்

செம்பு நாதனுக்கு ஒப்பான தெய்வமும் தெய்வீகம்சேர்
செம்பு தீர்த்தம் தனைப்போல் தீர்த்தமும் செல்வம் ஓங்கும்
செம்பு நல்வனத்துக்கு ஒப்பாம் திருநகர் தானும் இந்தச்
செம்புவின் மேன்மை பெற்ற தீவினில் உளதோ என்றான் 343

தெய்வம், தீர்த்தம், தலம் மூன்றும் இந்நாவலந் தீவில் மேன்மை பெற்றன. செம்புவின் மேன்மை பெற்றதீவு-நாவலந்தீவு.

விடணன் செல்லல்

வேறு

பூண்டபேர் அன்பொடு போற்றி அண்ணலை
ஈண்டியாம் உறைகுவம் இனிது வந்துநீ
யாண்டுதோறு இங்குஎமை அருச்சித்து ஏகுஎன
வேண்டினன் அவன்தனை விடுத்துஅகன்றனன் 344

அண்ணல் - சிவபெருமான். உறைகுவம் - தங்குவோம்

ஆண்டு தோறும் நீ வந்து அருச்சித்துச் செல்கெனக் கனவில் திருமால் கூற வீடணன் செல்லல்.

கனவினில் கரியவன் கட்டு ரைத்தமை
நனவினில் தெளிந்தபின் நாடி வீடணன்
சினமிலாப் புரம்அடர் செம்பு நாதனை
வினைவிலார் இணைஎன மிகம தித்தனன் 345

கனவில் திருமால் மொழியைத் தெளிந்த வீடணன் செம்புநாதற்கு இணை இலை என மதித்தான்.

இரியவல் வினைபடிந்து இராம தீர்த்தநீர்
கரியமா லயன்தனைக் கண்டு போற்றியே
திரியவந்து இறைஞ்சியே செம்பு நாதனை
உரியதன் இலங்கையில் ஒருப்பட்டு ஏகினான் 346

இரிய-நீங்க. ஒருப்பட்டு-மனம் ஒன்றுபட்டு.

கரியமாலயச் சருக்கம் முற்றும்.

ஆகச்சருக்கம் எட்டு.

திருவிருத்தம் (1+) 345

இந்திரச் சருக்கம்

இச் சருக்கம் இந்திரன் வீரகத்தி போக்கியதைக் கூறும். விருத்திரன் எனும் அசுரன் தவத்தால் வரம் பெற்றுத் தேவருலகம் சென்றான். அரசரும் அமரரும் போரிட்டனர். விருத்திரன் முன் அமரர் நில்லாது தளர அவன் மீது இந்திரன் வச்சிராயுதத்தை ஏவினான். அதனால் வீழ்ந்த அசுரனின் வீரகத்தி இந்திரனைப் பற்றியது. அவன் பல தலங்கள் சென்று பலதீர்த்த மாடியும் விடாது தொடர்ந்தது அதிலிருந்து நீங்குதற்குரிய வழியை வியாழ பகவானிடம் சென்று கேட்க ஞானபூமியின் பெருமை கூறினான். இந்திரன் இத்தலத்தை அடைந்திட வீரகத்தி அகன்றது. அதனால் பொன்னி ஆகாய கங்கையாகவும், அச்சோலை கற்பகச் சோலையாகவும் மக்கள் தேவராகவும் தென்பட இந்திரன் மகிழ்ந்தான்.

வெண்ணாவலீசனைக் கண்டு இந்திரன் தன் ஆயிரங் கண்ணு மிமையாது நின்றான். அமுதேசனைப் போற்றித் துதித்தான். அவன்முன் விநாயகன், முருகன், உமை, ஆகியோருடன் இறைவன் தோன்றி என்ன வரம் வேண்டும் எனக் கேட்க வீரகத்தி தீரத்தானாடிய தீர்த்தத்திற்குத்தன் பெயராக வேண்டு மென இந்திரன் வேண்ட இறைவன் அவ்வாறே அருளினான். பின் இறைவனையும் அம்மையையும் வணங்கி இந்திரன் அமராவதி அடைந்தான்.

9. இந்திரச் சருக்கம்

துரந்தி ராவணன்தன் வாழ்நாள் தொலைந்திடும் இராகவன்தான்
உரந்தரு பிரம கத்தி ஒழித்திடு பான்மை சொன்னோம்
வரந்தரும் அத்த லத்து வந்துஅரன் தனைஇ றைஞ்சிப்
புரந்தரன் வீரகத்தி போக்கிய பான்மை சொல்வாம் 347

அரண்-சிவபெருமான். புரந்தரன்-இந்திரன். வீரகத்தி-பெரும்பாவம்.

விருத்திரன் தேவருலகம் செல்லல்

வேறு

விருத்திரன் எனும்பெயர் மேவு தானவன்
உருத்திரன் மகிழ்ந்திடும் உறுத வத்தினால்
பெருத்திடு நல்வரம் பெற்று வீறுடன்
வருத்திடச் சுரர்பதி வந்து போந்தனன் 348

தானவன்-அசுரன். உருத்திரன்-சிவபெருமான். உறு-மிகுதி. சுரர்பதி-தேவருலகம்.

தேவ அசுரர் போர்

வரையொடு வரையென வரைவி லாதுநீள்
கரைபொரு கடலொடு கடலது என்னவே
நிரைபொரும் அடுபடை நிருதர் தம்முடன்
புரையறும் அமரர்கள் பொருதல் உற்றனர் 349

வரை - மலை. நிரை-வரிசை. நிருதர் - அசுரர். புரையறும் அமரர்கள்-குற்றமற்ற தேவர்கள்.

இடந்தரு கடலினில் எழுந்து பொங்கிய
விடந்தனை நிகரென வெம்மை கூரவே
அடர்ந்திடு விருத்திரன் அமரில் வானவர்
படர்ந்திடு சேனையும் பதைப தைத்தவே 350

விடம்-நஞ்சு நிகர்-ஒப்பு. கூரவே-மிகுதியாகவே.

இந்திரன் வச்சிரத்தை ஏவல்

தீங்கியல் தருவிருத் திரன்அ டர்ந்திட
ஏங்கிய வானவர் இடைதல் நோக்கியே
ஓங்கிய புரந்தரன் உறுக ரதெனில்
தாங்கிய வச்சிரம் தனைவி டுத்தனன் 351

இடைதல்-வருந்துதல். வச்சுரம்-இந்திரனுக்குரிய படை.

விருத்திரன் விழுதல்

வேறு

கொதித்தெழு கருணை விசும் குருபரன் திருக்க டைக்கண்
பதித்திடும் அடியார் தங்கள் பரவசஞ் சிதமது என்ன
மதித்திடு புரந்த ரன்தன் வச்சிரம் சென்று வீழ
எதிர்த்திடு விருத்தி ரன்தான் ஈடழிந்து அவனி வீழ்ந்தான் 352

குருபரன்-சிவபெருமான். சஞ்சிதம்-முன்வினைப் பயன்.

அடியார்களின் சஞ்சித வினை இறைவன் அருட்பார்வை யால் வீழ்வது இங்கு உவமையாக வந்துள்ளது.

இந்திரனை வீரகத்தி தொடர்தல்

வேறு

உரமுறு விருத்திரன் உடைந்து வீழ்ந்திட
விரவும்அவ் உடல்எழும் வீரகத்திதான்
கரமுறு வாளொடும் கதித்த பல்லொடும்
சுரர்அதி பதிதனைத் தொடர்ந்து போந்ததால் 353

உரம்-வலிமை. கதித்த-எழுந்த.
வீரகத்தியின் வருணனை இங்குள்ளது.
சுரர்அதிபதி-இந்திரன். ஆல் - ஈற்றசை.

இந்திரன் வினை தவிராமை

சேர்ந்திடும் பலபவ தீர்த்தம் ஆடவும்
கூர்த்திடும் தவம்செபம் கோடி செய்யவும்
ஓர்ந்திடு புரந்தரன் உடல்வி டாமலே
சார்ந்திடும் அவ்வினை தவிர்ந்தது இல்லையால் 354

கூர்ந்திடும்-வளர்ந்திடும். ஓர்ந்திடு-நினைந்திடும். ஆல்-ஈற்றசை.

இந்திரன் சுரர்குருவை அடைதல்

அங்கது தவிர்ந்திடா அடவு நோக்கியே
இங்கிதற்கு என்செய்வோம் என்றுஇ ரங்கியே
பொங்கிய அவ்விடர் போக்க எண்ணியே
தங்கிய சுரர்குரு தன்னைச் சார்ந்தனன் 355

அடவு-நெருங்கிய சேர்க்கை. சுரர்குரு-தேவர்குரு, வியாழபகவான் (பிரகஸ்பதி)

குருவின் கேள்வி

வேறு

தன்னிடம் அதனில் வந்த சதமகன் தன்னைக் கண்டே
உன்னிடும் உபசா ரத்தின் உடன்எதிர் கொண்டு போற்றி
மன்னிடும் ஆத னத்தில் வைத்துநீ வந்த வாறுஇங்கு
என்னிடை என்கொல் என்றான் இமையவர் குரவன் ஆவான் 356

சதமகன்-இந்திரன். மன்-நிலைபேறு. குரவன்-குரு, வியாழன்.

இந்திரன் உபாயம் கேட்டல்

தேவர் கோன் குரவன் கூறும் செம்மொழி தன்னைக் கேட்டே
ஈவதோ சிறிதும் இல்லார் இடத்துறு பழிச்சொல் என்ன
ஆவதோ வகையி னாலும் அகற்றொணா வீர கத்தி
போவதோர் உபாயம் கேட்கப் பொருந்தினன் நின்பால் என்றான்

தேவர் கோன்-இந்திரன். குரவன்-குரு, வியாழன்.

ஈகை இல்லாதாரிடம் பழிச்சொல் இருக்கும் என்ற உண்மை இங்கு உவமையாக அமைந்துள்ளது.

அகற்றொணா-நீக்க முடியாத. உயாயம்-தந்திரம்.

குரு மொழி

நற்றவம் தருமம் தானம் நவில்பல கலைகள் எல்லாம்
கற்றவன் புரந்தரன்தான் கட்டுரைத்து அதனைக் கேட்டே
உற்றவல் வினைஒழித்தற்கு உபாயம் ஒன்று எண்ணி விண்ணோர்
கொற்றவன் தன்னை அன்பால் குறித்துரைத்து இடுதல் உற்றான்

தவம், தருமம், தானம், கலை ஆகிய கற்றவன் வியாழ பகவான். விண்ணோர் கொற்றவன்-இந்திரன்.

அடர்ந்திடு கடல்கள் சூழும் அவனியில் அழகார் பொன்னித்
தடந்தனில் அயன்மால் போற்றச் சச்சிதா னந்தம் ஆன
நடந்தரு செம்பு நாதன் நயத்திடு ஞான பூமி
இடந்தனில் செல்லின் அல்லாது இத்துயர் நீங்காது என்றான்

அவனி-உலகம். சச்சிதானந்தம்-உண்மை, அறிவு. இன்பம். ஞானபூமி-தலப்பெயர்.

இறைவன், நீர்த்தம், தலம் பற்றிய செய்தி இங்குளது- இங்குச் சென்றாலே வீரகத்தி தீரும் என உறுதி கூறல்.

இந்திரன் ஞான பூமிக்குப் போதல்

கொடையாளர் தமிழில் என்னும் கொற்றமார் குலிசவெற்றிப்
படையாளன் குரவன் சொன்ன படியினில் படியில் போந்துஅவ்
அடையாளம் தன்னை நாடி அமுதமே னியனாம் வெள்ளை
விடையாளன் ஞான பூமி மீதினில் வந்து போந்தான் 360

கொடையாளர்க்குரிய இடம் எனும் அரசுடைய இந்திரன். குரவன்-குரு, வியாழன். குலிசம்-வச்சிராயுதம். படி-வண்ணம், உலகம். அமுதமேனி - நீர்வடிவில் உள்ள இலிங்கம். ஞானபூமி-தலப்பெயர்.

வீரகத்தி அகவல்

குளிகையின் இயைந்த செம்பில் கூர்ந்திடு களங்கம் என்ன
ஒளியின்முன் இருளது என்ன உம்பர்கோன் உயர்பூஞ் சோலை
அளிஅமர் ஞான பூமி அணுகலும் அணுகாது அஞ்சிக்
களிஅமர் வீர கத்தி கணத்தினில் அகன்றது அன்றே 361

குளிகை-மாத்திரை. களங்கம்-களிம்பு தோன்றும் குறை. உம்பர்கோன்-இந்திரன். அளிஅமர்-வண்டுகள் விரும்பிப் பாடும். ஞானபூமி-தலப்பெயர்.

வீரகத்தி ஞானபூமியினை அடைந்தவுடன் அகன்றது. இரு உவமைகள் தொடர்ந்து வந்துள்ளன.

வளமை காணல்

ஞானங்க ளான மூதூர் நன்னதித் தடம்ஆ காயத்
தானகங் கையை நேராக ஆங்குளோர் அமர ராகக்
கானகம் அவைஅ னைத்தும் கற்பகச் சோலை யாக
வானகம் தன்னின் மிக்க வளமைகண்டு உளம்ம கிழ்ந்தான் 362

பொன்னிநதி ஆகாய கங்கையாகவும், அங்குள்ள மக்கள் தேவராகவும், சோலைகள் கற்பகச் சோலையாகவும் இந்திரனுக்குத் தெரிந்தன.

கோயிலை அடைதல்

வானுறு கங்கை ஆடும் வானவர் தங்கள் கோமான்
பூநறை மருவு கின்ற பொய்கை ஒன்று அதனில் ஆடிக்
கானுறும் உயர்வெண் ணாவல் கலந்திடும் பரமா னந்தத்
தேனுற நாடி அம்பொன் செறிந்திடக் கோயில் புக்கான் 363

நறை-தேன். வெண்ணாவல் - தலத்திற்கரிய மரம். பரமானந்தத் தேன்-மேலாம் இன்பம் தரும் தேன் எனும் சிவபெருமான்.

இந்திரன் அதிசயம்

கமையுறாது இகல்வெள் ளானைக் கடவுள்பால் கடலின் ஊடே
குமையுறா அமுதம் ஆன குளிர்சிவ லிங்கம் கண்டே
இமையுறாக் கண்கள் ஓரா யிரம்அவை பெற்றும் சற்றும்
அமைவுறா ஆர்வம் தன்னோடு அதிசயம் உற்று நின்றான் 364

கமை-பெருமை. இகல்-பகையால் சினங்கொள்ளுதல். வெள்ளானைக் கடவுள் - இந்திரன். குமைவுறா-கடைந் திடாத.

அமுதலிங்கம் கண்டு இந்திரன் கண்கள் இமையான்; ஆயிரம் கண்கள் பெற்றும் அமையான்;அதிசயித்து நின்றான். அகலிகை பால் காமுற்றுக் கௌதமன் சாபத்தால் இந்திரன் பெற்ற ஆயிரங் கண்களின் பயனை இன்று அடைந்தான் என்பது குறிப்பு.

இந்திரன் பூசை புரிதல்

ஆதிநா யகனைப் போற்றி அகிலாண்ட வல்லி என்னும்
மாதினை உறவ ணங்கி வருதிரைப் பொன்னி நீரின்
கோதிலா அபிடே கத்தால் குறைவில நெய்வேத் தியத்தாற்
போதினான் மந்தி ரத்தால் பூசனை புரியல் உற்றான் 365

ஆதிநாயகன்-சிவபெருமான். கோதிலா - குற்றமில்லாத. நெய்வேத்தியம்-நைவேத்தியம், காணிக்கை.

கதிமுழுது அருள்வாய் போற்றி கருணைவா ருதியே போற்றி
மதியினுள் உறைவாய் போற்றி வரம்எமக்கு அருள்வாய் போற்றி
துதிசெயற்கு அரியாய் போற்றி தொழுமவர்க்கு எளியாய் போற்றி
நதிபுனை சடையாய் செம்பு நாதனே போற்றி போற்றி 366

இந்திரன் போற்றி வணங்குதல்.

மதியினுள்-அறிவினுள். அரியாய்-அருமையுடையவனே. நதி-கங்கை,

பூதநா யகனே போற்றி பொருப்புறு விருப்பு மங்கைக்
காதல்நா யகனே போற்றி கண்கள்மூன் றுடையாய் போற்றி
வேதநா யகனே போற்றி விமலனே போற்றி விந்து
நாதநா யகனே செம்பு நாதனே போற்றி போற்றி 367

பூத கணங்களுக்குச் சிவபெருமான் தலைவன்.
பொருப்பு-இமயமலை. விமலனே-குற்றமற்றவனே!

விந்து நாத தத்துவங்களுக்குத் தலைவன் சிவபெருமான். தலஇறைவன் பெயர் இருபாடல்களின் ஈற்றிலும் உள்ளது.

இறைவன் காட்சி

அக்கண் ஆ யிரத்தோன் இவ்வாறு அருகுபோற் றிடமகிழ்ந்தே
மெய்க்கணா திபனும் துங்க விசாகனும் மருகுஇ றைஞ்ச
மைக்கணாள் உமைம டந்தை வாமபா கத்தை வவ்வ
முக்கணா யகன்அ வன்தன் முன்னுறத் தோன்றி நின்றான் 368

கண்ணாயிரத்தோன்-இந்திரன். கணாதிபன்-கணபதி, பிள்ளையார். விசாகன்-முருகன். வாமபாகம்-இடப்பக்கம். வவ்வ-விரும்ப.

கரந்திடா மனத்தன் பாலும் கற்பக மலரி னாலும்
நிரந்தரம் அருச்சித்து ஏத்தி நின்றினிது ஆத ரிக்கும்
புரந்தரன் தன்னை நோக்கிப் புந்தியில் நீநி னைந்த
வரந்தனை வேண்டிடு என்றான் மரமறை தனக்குஎட் டாதான்

கரந்திடா-மறைக்காத நிரந்தரம்-எப்போதும். புரந்தரன்-இந்திரன். மாமறை தனக்கு எட்டாதான்-சிவபெருமான்.

இந்திரன் வரம் கேட்டல்

உருத்திரன் இவ்வாறு ஓத உம்பர்கோன் எதிர்வ ணங்கி
விருத்திரன் தன்னைக் கொன்ற வீரகத் தியையும் நீக்கி
அருத்தியில் ஆடும் தீர்த்தம் அடியனென் பெயர தாக
வருத்துநல் வினைக ளெல்லாம் மாற்றிட வேண்டும் என்றான்

உருத்திரன் - சிவபெருமான். உம்பர்கோன் – இந்திரன்.

தான் நீராடி வீரகத்தி தீர்ந்த தீர்த்தம் தன்பெயரால் விளங்க இந்திரன் வேண்டுதல்.

இறைவன் அருளல்

பூண்டியல் அன்பு பெற்ற புரந்தரன் இவ்வாறு ஓதத்
தாண்டிய விடையில் ஏறும் தம்பிரான் மகிழ்ந்த வன்தான்
வேண்டிய வரம்இ ரண்டும் விரும்பிய வாறு நல்க
ஈண்டிய அமுத லிங்கத் திடத்தினில் திரோப வித்தான் 371

இந்திரன் கேட்ட வரங்களை இறைவன் நல்கினான். அங்குத் தோன்றிய சிவபெருமான் அமுதலிங்கத்தில் திரோபவித்தான். (மறைந்தான்)

இற்திரன் அமரருலகு அடைதல்

வெண்ணிலவு அதனை ஏந்தி வெண்ணாவல் இனிதி ருக்கும்
அண்ணலை அடிவ ணங்கி அகிலாண்ட மாதைப் போற்றித்
திண்ணிய வீர கத்தி தீர்ந்திடும் புரந்த ரன்தரன்
புண்ணிய அமரர் போற்றப் பொன்னகர் தன்னில் போந்தான்

நிலவு அணிந்து வெண்ணாவல்கீழ் வீற்றிருக்கும் சிவபெருமானை வணங்கி, அம்மையை வணங்கி இந்திரன் அமராவதி (பொன்னகர்) சென்றான்.

இந்திரச் சருக்கம் முற்றும்
ஆகச் சருக்கம் 9
திருவிருத்தம் (!+) 371

அகத்தியச் சருக்கம்

அகத்தியன் தென் திசை சென்று அமுதேசனை வணங்கி உலகினைச் சமதலம் செய்ததை இச் சருக்கம் கூறும்.

கயிலை மலை மிகுந்த பாரத்தால் தாழ்ந்தது. அதனால் உலகம் பிறழ்ந்தது. தென்திசை உயர்ந்ததைச் சமதலம் ஆக்க முனிவரும் அமரரும் இறைவனைப் போற்றி வேண்டினர். அது கேட்ட இறைவன் தென்பால் மலயத்தில் தன்னொப்பவர் இருத்தல் வேண்டும் எனக் கூறி, அங்கு அகத்தியனைச் செல்லுமாறு கூறினான். சிறியனான தான் சென்று உலகு சமானம் ஆவது எங்ஙனம் என இறைவனை அகத்தியன் கேட்க, ஞான பூமியில் வைகினால் அவற்றால் பெற இயலும் என்றருளினான் இறைவன்.

தென்திசை சென்ற அகத்தியன் செம்புவனங் கண்டு, காவிரியில் மூழ்கி இறைவனை வணங்கினான். தவம்புரிந்து போற்ற, அமுதலிங்கத்தில் இறைவன் தோன்றினான். அவனிடம் தானாடிய தீர்த்தத்திற்குத் தன் பெயர் அமையவும், அதில் மூழ்கியோரின் வினை தீரவும், உலகைச் சமநிலையில் நிறுத்தும் சித்தி பெறவும் அகத்தியன் வேண்டினான். அவ்வாறே இறைவனருள் புரிந்தான். பின் அகிலாண்டவல்லியை வணங்கிப் பொதியமலை போந்தான் அகத்தியன். அங்குச் செல்ல, உலகம் நடுநிலையில் நின்றது.

10. அகத்தியச் சருக்கம்

மிகைத்திடு புரந்த ரன்தான் விருத்திரா சுரனைக் கொல்லப்
பகைத் தெழும் வீர கத்தி பணிஅறுத் திடுதல் சொன்னோம்
அகத்தியன் தென்பால் மேவி அமுதேசன் தனைஇ றைஞ்சிச்
சகத்தினை அவன்தன் அன்பால் சமதலம் செய்தல் சொல்வாம்

மிகைத்திடும்-வெற்றி கொள்ளும். தென்பால்-தென்னாடு. அமுதேசன்-தலஇறைவன். சகம்-உலகம்.

தென்திசை உயர்தல்

வீறிய விடையோன் வெள்ளி வெற்புறும் அதிபா ரத்தால்
மாறிய தென்பால் ஓங்கி வடதிசை தாட்சி ஆகி
ஏறியும் குறைந்தும் செஞ்சொல் இலக்கணம் தெளிந்தி டாதார்
கூறிய கவிதை என்னக் குவலயம் பிறழ்ந்தது அன்றே 374

வீறிய - பெருமைமிக்க. விடையோன் - சிவபெருமான். வெள்ளிவெற்பு-கைலைமலை. தாட்சி-தாழ்ச்சி. குவலயம்-உலகம்.

செஞ்சொல் இலக்கணம் தெளியார் கூறிய கவிதை போல் உலகம் பிறழ்ந்தது என்பது உவமை.

சிவனிடம் முறையீடு

தொனிதரு தமிழ்தேர் தென்பால் துங்கமாய் வடபால் தாழும்
தனிநெடும் புவியை எங்கும் சமதலம் ஆக்க வேண்டிப்
பனிஇளம் பிறைஅ ணிந்த பரஞ்சுடர்க் கயிலை தன்னின்
முனிவரும் அமரர் தாமும் முறையிடச் சென்று போந்தார் 375

தொனி-ஒலி. துங்கம்-மேன்மை. பனி-குளிர்ச்சி. பரஞ்சுடர்-சிவபெருமான்.

நள்ளுற வாசல் காக்கும் நந்திதன் அனுச்சை பெற்றே
உள்ளுற அருகு சென்றே உம்பரும் முனிவர் தாமும்
துன்னுறும் இளமான் ஏந்தும் சோதிபொற் பாதம் தன்னைத்
தெள்ளுறும் இருகை கூப்பிச் செயசெய எனத்துதித்தார் 376

நள்-பெருமை. அனுச்சை-அனுமதி. உம்பர்-தேவர். தெள்ளுறு-தெளிவுற்ற

கோலமால் விடையாய் போற்றி குணப்பெரும் குன்றே போற்றி
ஆலமது அணிந்தாய் போற்றி அடியவர்க்கு எளியாய் போற்றி
காலனை அடர்த்தாய் போற்றி காமனை எரித்தாய் போற்றி
சூலபா ணியனே போற்றி சோதியே போற்றி போற்றி 377

கோலமால்-அழகும் பெருமையும் உடைய. ஆலம்-நஞ்சு. காலன்-யமன். காமன்-மன்மதன். சூலபாணியன்-சூலத்தைத் தரித்த சிவபெருமான்.

துன்றுவா னவர்இவ் வாறு துதித்திடத் தோகை பாகன்
நன்றுநீர் வந்தது என்கொல் நவின்றிடும் என்ன விண்ணோர்
குன்றுசூழ் தராத லம்தான் குறைத்தல்ஏ றுதல்ஒன்று இன்றி
நின்றநின் செங்கோல் என்ன நிலைபெற வேண்டும் என்றார்

துன்று-நெருங்கு. தோகை பாகன் - சிவபெருமான். நவின்றிடும்-செல்லும்.

உலகம் குறைதல் ஏறுதலின்றி இறைவனின் செங்கோல் போல் நிலைபெற வேண்டி நின்றார். இங்கு இறைவன் செங்கோல் உவமையாமிறது.

சிவன் விடை

மெய்ம்மைநற் புகழ்துதிக்கும் விண்ணவர் தம்மை நோக்கித்
தம்மைஒப் பிலாத மேன்மைத் தகைமையார் தராத லம்தான்
செம்மைஒப் பாதல் வேண்டில் தென்திசை மலையம் தன்னில்
எம்மைஒப் பவர்ஒ ருத்தன் இருந்திட வேண்டும் என்றான்.

தகைமையார் - சிவபெருமான். மலையம் - பொதிகை

உலகம் செம்மை நிலைபெறப் பொதிகை மலைதன்னில் எம்மை ஒப்பவர் இருக்க வேண்டும் எனச் சிவன் கூறல்

அகத்தியன் சிறப்பு

ஒப்பவர் மிக்கார் இல்லாய் உன்னைஒப் பவரும் உண்டோ
இப்படி அருள்பு ரிந்தது என்னென எந்தை நந்தம்
மெய்ப்பதம் விரும்பும் அன்பான்மெய்ம்மையால் எம்மை ஒப்பாய்
அப்படி அன்பின் மிக்கான் அகத்தியன் எனஉ ரைத்தான் 380

இறைவன் தனக்கு ஒப்பும் மிகையும் இல்லான். அகத்தியன் இறைவன்பால் கொண்ட அன்பால் இறைவனை ஒப்பவன் என்பது சிவபெருமான் கூற்று.

சிவன் அகத்தியனைப் பொதியத்தில் இருக்குமாறு கூறல்

கூரணி மழுஅ மைத்தோன் குறுமுனி தன்னைநோக்கித்
தாரணி அதனை எங்கும் சமானம்ஆக் குதல்பொருட்டால்
சீரணி முனிவன் நீதான் தென்புவி அதனில் துவன்றே
ஏரணி பொதிய வெற்பில் இருந்திட வேண்டும் என்றான் 381

மழு அமைத்தோன்-சிவபெருமான். குறுமுனி-அகத்தியன் தாரணி-உலகம். தென்புவி-தென்னாடு. ஏர்-அழகு. பொதிய வெற்பு-மலயம்.

அகத்தியன் கேள்வி

அருந்திறல் அண்ணல் கூற அகத்தியன் அரனை நோக்கி
வருந்திநின் திருவாக்கு இன்று மறாதுயான் செல்வேன் என்றும்
திருந்திடா அவனி எங்கும் சிறியனேன் சென்று தென்பால்
இருந்திடச் சமானம் ஆவது எவ்வண்ணம் எனஉ ரைத்தான்

அண்ணல் அரன்-சிவபெருமான். மறாது-மறுக்காமல். அவனி-உலகம். எவ்வண்ணம்-எப்படி.

ஆனைக்காச் செல்ல அருளல்

அனந்தசித் திகள்அ ளிக்கும் அமுதலிங் கம்சேர் பூங்கா
வனந்தரு ஞான பூமி வைகிநீ செல்லின் மிக்க
கனந்தரும் அவனி எங்கும் சமதலம் ஆகத் தக்க
கனந்தரு சத்தி எய்தக் கடவை என்று அருளிச் செய்தான் 383

அனந்த-எல்லையற்ற. அமுதலிங்கம் - தலஇறைவன். ஞானபூமி - தலப்பெயர். கனம்-பெருமை. சத்தி - ஆற்றல். எய்தக்கடவை-அடையும் பேறு பெறுவாய்.

அகத்தியன் தென்திசைக்கு ஏகல்

மின்னியல் வேணி யோன்பால் விடைபெற்றுஅவ் விடை யவன்தன்
உன்னுதல் அரிய பொற்றாள் உளத்தில்கொண் டுஉளத் தினூடே
அன்னியம் அறவி ளங்கும் அவன்திரு வாக்குத் தன்னைச்
சென்னியன் மீது கொண்டு தென்திசை நோக்கிப் போந்தான் 384

மின்-ஒளி. வேணியோன்-சிவபெருமான். விடையவனிடம் விடை பெற்றான் அகத்தியன். அன்னியம்அற-வேறுபாடு இன்றி. சென்னி-மலை. போந்தான்-சேனான்.

ஞான பூமி அடைதல்

விண்ணினில் ஓங்குகின்ற வெண்ணாவல் அதனைக் கண்டே
மண்ணினில் ஓங்கு செம்பு வனம்இது தானே என்று
நண்ணிய பொன்னி என்னும் நதித்தடம் தன்னில் மூழ்கிப்
புண்ணிய முனிவன் ஞான பூமியின் வந்து போந்தான் 385

செம்புவனம், பொன்னிநதி, ஞானபூமி என இத்தலச் சிறப்புடையனவற்றை முறையே காணல்.

அம்மை அப்பனை வணங்கல்

நெருங்குபங் கயம்கு லாவு நெடுந்தடம் தன்னில் மூழ்கி
அருங்கதி அனைத்தும் நல்கும் அகிலாண்ட மாதைப் போற்றிக்
கருங்கடு மிடறுஅ ணிந்த கருணையங் கடலைப் பாரில்
இருங்கடல் பருக வந்தோன் இருகணால் பருகி நின்றான் 386

பங்கயம்-தாமரை. கதி-வேறு. கடு-நஞ்சு; மிடறு-கழுத்து

கையால் கடலைக் குடித்த அகத்தியன் கண்ணால் கருணைக்கடலாம் சிவபெருமானைப் பருகினான்.

அகத்தியன் ஐய மகிழ்ச்சி

நினைத்தவர் மனத்தின் உள்ளே நீங்கிடா அமுத லிங்கம்
தனைத் தொழுது இறைஞ்சிப் போற்றத் தகைமையால் தகைபடாது
மனத்தினில் கண்டுள ழுந்து மல்கிய மகிழ்ச்சி வெள்ளம்
அனைத்தும்இச் சிற்று டற்குள் அடங்குமோ எனம கிழ்ந்தான்

அமுதலிங்கம்-தல இறைவன்.
இறைவனைக் கண்ட மகிழ்ச்சிவெள்ளம் தன் சிறு உடலில் அடங்குமோ என மகிழ்ந்தான்.

அகத்தியன் தொழுதல்

அத்தலம் தனில்அ மைந்தே அகமகிழ்ந்து அகத்தி யன்தான்
மெய்த்தவம் பெரிது இயற்றி வெண்ணாவல் நீழல் மேவும்
சுத்தமாம் அமுத மேனிச் சோதியைத் தொழுது நாளும்
புத்தலர் கொண்டுஇ றைஞ்சிப் பொன்னடி போற்றல் உற்றான்

அமுதமேனிச் சோதி-நீர் வடிவம் அமைந்த ஒளியாம் சிவபெருமான். அலர்-பூக்கள்.

செம்பொன்னே மணியே போற்றித் திருவருள் கடலே போற்றி
உம்பர் நா யகனே போற்றி உமைஒரு பாகா போற்றித்
தம்பமாய் உலகுஅ னைத்தும் தாங்குமெய்ப் பொருளே போற்றி
நம்பனே போற்றி செம்பு நாதனே போற்றி 389

உம்பர் நாயகன்-தேவர் தலைவனாம் சிவபெருமான் தம்பம்-கம்பம் (தாணு). நம்பன்-சிவபெருமான்.

சிவன் தோற்றம்

ஆங்கவன் அருச்சித்து ஏத்தும் அன்பினால் அகம கிழ்ந்தே
தாங்கெழில் அமுத லிங்கம் தன்னிடை வந்து தோன்றிப்
பூங்கமழ் கொன்றை வேணிப் புராந்தகன் முனியை நோக்கி
ஈங்குநீ வேண்டு கின்றது என்என முனிவன் சொல்வான் 390

அமுதலிங்கம் - தலஇறைவன். வேணி - சடைமுடி. புரந்தகன்-திரிபுரமெரித்த சிவபெருமான்,

அகத்தியன் கேட்ட வரம்

யானுகந்து ஆடும் தீர்த்தம் என்பெயர் ஆகி அந்தத்
தூநெடும் புனலில் தோய்ந்தோர் தொல்வினை அகலு மாறு
மாநிலம் தனைநி றுத்த வளர்சத்தி பொருந்து மாறும்
தானுகந்து அடிய னேற்குத் தந்தருள் புரிவாய் என்றான் 391

அகத்தியன் (1) தான் ஆடிய தீர்த்தத்திற்கு அகத்திய தீர்த்தம் என்ற பெயரமையவும் அதில் குளித்தவர் பழவினை அகலவும் வேண்டுதல். (2) மேலும் உலகம் நிலைபெறுதற்கு ஆற்றல் பெற வேண்டுதல்.

இறைவன் அருளல்

அமைதரு தீர்த்தம் தானும் அனைய பேர் ஆக நல்கி
உமைதனைப் பாகம் வைத்தோன் உற்பவித்து இலிங்கம் தன்னில்
சுமைதரு கடல்கள் ஏழும் சூழ்ந்திடும் அவனி தன்னைச்
சமதலம் ஆக்கு தற்குச் சத்தியும் இனிதுஅ ளித்தான் 392

இறைவன் அவ்வாறே வரமளித்தல்.
உற்பவித்தல்-தோன்றுதல். அவனி-உலகம்.

போற்றியே வரம்இவ் வாறு புகன்றிடப் புந்திஆரத்
தேற்றிய முனிவன் தன்னைச் சிந்தையில் நீவி ரும்பிச்
சாற்றிய வரம்இ ரண்டும் தந்தோம் என்று அருளிச் செய்தே
ஏற்றியல் கொடியி னானும் இலிங்கத்தில் திரோப வித்தான்

சாற்றிய-சொல்லிய. ஏற்றியல் கொடியினான்-சிவபெருமான். திரோபவித்தான்-மறைந்தருளினான்.

அகத்தியன் புறப்படல்

அதியமாம் அழகு பெற்ற அகிலாண்ட மாதைப் போற்றி
நதியரவு அணிந்த செம்பு நாதனைத் தொழுதுஇ றைஞ்சித்
துதிவமைவு உறாத மேன்மைத் தொல்புகழ் படைத்து வீறும்
பொதியமால் வரைஇ டத்தில் போந்தனன் புலனின் மிக்கான்

நதியரவு-கங்கை நதியும், பாம்பும். பொதியமால் வரை. பொதியம் என்ற பெருமைமிக்க மலை. புலனின் மிக்கான்-அறிவிற்பெரியோனாம்-அகத்தியன்.

கோவைசேர் தமிழ்வி ரிக்கும் குறுமுனி குளிர்பூஞ் சோலைப்
பூவை சேர் மலைய வெற்பில் போந்திடப் புவனி எங்கும்
காவைமா நகரி டத்தில் கலந்திடும் அருந்த வத்தோர்
நாவையே நிகரது என்ன நடுநிலை நின்றது அன்றே 395

கோவைசேர்-கோவை முதலிய நூல்கள் நிறைந்த, காவை-தலப்பெயர்.

பொதியத்தில் அகத்தியன் சேர உலகம் நடுநிலையில் நின்றது. இதற்குத் திருவானைக்காவிலுள்ள அருந்தவத்தோர் நாப் போல் நடுநின்றது என்பது உவமை.

அடியார் பெருமை

கடிகமழ் பொழில்சூழ் ஆனைக் காவினில் கடவுள் பாத
முடியினால் வணங்கு வானோர் முனிவரன் முந்நீர் சூழும்
படியினைச் சமானம் ஆகப் படிந்திடப் பணித்தான் எங்கோன்
அடியவர் பெருமை தன்னை அளவிடற்கு எளியது அன்றே

கடி-மணம். ஆனைக்கா-தலப்பெயர். முந்நீர்-கடல்.

அகத்தியன் செயலால் அடியவர் பெருமை அளவிடற்கு அரியதாம்.

அகத்தியச் சருக்கம் முற்றும்
ஆகச் சருக்கம் 10
திருவிருத்தம் (1+) 395

நவதீர்த்தச் சருக்கம்

இச்சருக்கம், அன்பால் வந்து நன்னீராடுவார் வினைதீர்க்கும் நவதீர்த்தம் பற்றிக் கூறும்.

1. பிரம தீர்த்தம்

பிரமன் தன் மகளைப் புணர்ந்த பாவம் நீங்க ஆடிய தீர்த்தம் பிரமபுட்கரணியம். பார்த்த கண் வாங்காமல் பார்க்கும் அழகுடையது. தெளிவு, குளிர்ச்சி, இனிமை முதலிய தன்மைகள் கொண்டது. இதில் ஆடியவர் கல்வி, மெய்யறிவு, இன்பம், தவம் ஆகியவை பெறுவர். உரிமையற்ற புணர்ச்சியால் பெறும் பாவம் ஒழிவர். இறக்கும் போது இத்தீர்த்தத்தில் ஒரு துளி பெறின் காம முதலிய குற்றம் நீங்கிச் சிவரூபம் பெறுவர்.

2. சூரிய தீர்த்தம்

சூரியனின் கதிர்கள் தன் புதல்வியர் மேல் பட்டுத் துன்புறுத்தியதால் அவற்றைச் சாணையிலிட்டுக் கடைந்தான் மயன். செய்கை அறியாது திகைத்த ஆதவன் தன் கதிர்கள் சுடர் பெறச் செய்த தீர்த்தம் இது. இதில் மூழ்கின் பிணியும், வினையும் நீங்கிப் புகழ் பெறுவர்.

3. இராம தீர்த்தம்

கும்பகர்ணனைக் கொன்ற பிரமகத்தி தீர இராமன் இதில் மூழ்கினான். இதில் ஆடுவோர் பிறவி நீங்குமாறு வினையும், பகையும் தீரும்.

4. சந்திர தீர்த்தம்

காசிபர் சாபத்தால் சந்திரன் ஒளி மங்கினான். உரோகிணி தவிரத் தன்னுடைய மற்ற மனைவியரிட்ட சாபத்தால் சந்திரன் மெலிந்தான். ஆனைக்கா வந்து ஒரு புட்கரணியிலாடத் தீவினை தீர்ந்தான். அதனால் இது சந்திர தீர்த்தம் ஆயிற்று. இதில் ஆடுவோர் பிணிநீங்கி ஒளியும் அருளும் புண்ணியமும் பெறுவர்.

5. செம்பு தீர்த்தம்

செம்புமுனி பெற்ற வரத்தால் இத்தீர்த்தம் இப்பெயர் பெற்றது. இது அளவற்ற பேரறிவு தரும், வினைகளை நீக்கும். இதில் தோய்ந்தவர் அஞ்ஞானம் நீங்கி உருத்திரகணமாவர். இத் தலத்து எந்நீரிலாடினும் அதுவே சம்புதீர்த்தமாகித் தீவினை நீக்கும் தகைமை உடையது.

6. அகத்திய தீர்த்தம்

அகத்தியன் இதில் ஆடிப் பின் புவி சமதலமாகச் செய்ததால் இப்பெயர் பெற்றது. அறிவு, வாழ்நாள், வினைநீக்கம் ஆகிய வற்றை அது அளிக்கும்.

7. இந்திர தீர்த்தம்

விருத்திரனைக் கொன்ற பாவத்தை இந்திரன் இதில் ஆடித் தீர்த்துக்கொண்டான். மந்திரத்தால் விலக்கரிய பிரமகத்தியை இது நீக்கும்.

8. அக்கினி தீர்த்தம்

வருணன் மனைவியை விரும்பிய அக்கினி வருணன் சபித்ததால் ஒளி குறைந்தான். தன் குறை போக்க இதில் மூழ்கி நலம் பெற்றான். மற்றத் தேவர்க்கு முகமானான். இதில் மூழ்கி யவர் ஒளியுடல் பெறுவர். ஊணல்லா ஊண் உண்ட தீங்கும் நீங்குவர்.

9. சீர்மெய்த் தீர்த்தம்

அம்பிகை ஆடிய தீர்த்தம் இது. இதனை மனத்தில் நினைக்கத் தீவினை நீங்கும். எண்ணிய எல்லாம் தரும். பல தீர்த்தங்களில் ஆடிய பயனை இது தரும்.

10. இத்தீர்த்தங்களில் மூழ்கும் முறை

தைமாத நிறைநிலா நாளில் வழிபாடு செய்து மூழ்கின் நலம் பெறுவர். இறைவன் முன்னுள்ள மண்டபத்தில் முப்பது கோட்டம் அமைத்து ஒன்பது மண்ணும் ஏழுதளிரும், ஆனைந்தும் நவத்திரவியங்களும் வைத்துக் கீழ்க்கண்டவாறு கூறும் மரம், கணங்கள், தெய்வம் ஆகியவற்றை வணங்கித் திரவியங்களைப் பூசி ஆடுதல் முறைமை.

எண்	தீர்த்தம்	மரம்	முனிவன்	தெய்வம்	கணநாதன்	தானம்
1	பிரமதீர்த்தம்	மா	பிரமன்	சங்கரநாதன்	புட்வவந்தன்	எள்
2	சூரியதீர்த்தம்	வில்வம்	பிருகு	சூரியன்	அம்பரீடன்	மணிகள்
3	இராமதீர்த்தம்	இலுப்பை	இராமன்	கரியமாலயன்	வீரபத்திரன்	கண்ணாடி
4	சந்திரதீர்த்தம்	புன்னை	சந்திரன்	புடவிகாக்கன்	குமுதம்	பொன்
5	செம்புதீர்த்தம்	நாவல்	வசிட்டன்	மகேசன்	சுனந்தன்	கோதுமை
6	அகத்தியதீர்த்தம்	பலா	அகத்தியன்	அகிலாண்ட அம்மை	சுனகி	ஆடை
7	இந்திரதீர்த்தம்	தென்னை	மந்திரமுனிவன்	இந்திரன்	கும்போதரன்	நெய்
8	அக்கினிதீர்த்தம்	புளி	அத்திரி	அக்கினி	கபத்தி	செந்நெல்
9	சீர்மெய்த்தீர்த்தம்	வெண்ணாவல்	கார்க்கியமுனிவன்	அமுதலிங்கம்	சுகந்தன்	இலிங்கம்

இவ்வாறு நீராடி, நீர்க்கடன் கழித்து, வேதியர்க்குத் தானமளிப்பதால் தீர்த்தத்துள்ள பயன் கிட்டும். நவதீர்த்தத்தில் மூழ்கின் மேன்மையும், மேலானகதியும் கிட்டும். மூன்று கரணங்களையும் சிவனுக்குப் படைத்து, ஐந்தெழுத்தை 108 முறை கூறின் பஞ்சபாதகம் நீங்கும், பிணிநீங்கி, நீண்ட ஆயுள் பெற்றுப் புகழ், செல்வம், இன்பம், தருமம், சிவஞானம் முதலியவற்றை அடைவர்.

11. நவதீர்த்தச் சருக்கம்

அ. பிரம தீர்த்தம்

உவமையில் அகத்தி யன்தான் உயர்ஞானத் தலத்தில் வந்து
தவமுயன்று அவனி தன்னைச் சமதலம் செய்தல் சொன்னாம்
அவனியில் அன்பி னால்வந்து ஆடுவார் வினைகள் தீர்க்கும்
நவவித மாகும் தீர்த்த நலந்தனை நவிலு வோமே. 397

ஞானதலம்-ஞானபூமி. அவனி - உலகம். ஆடுவார்-மூழ்குவார். நவவிதம்-ஒன்பது வகை.
(காண்க 216)

மயலுறச் சதுமு கத்தோன் மகளினைப் புணர்ந்த தீங்கால்
அயர்வுறு மனத்தன் ஆகி அடைந்து ஞானத் தலத்தில்
துயர்தனைத் தவிர்ப்ப தற்குத் தோயும் அத் தோயம் தொன்மைப்
பெயர்படைத் திடும்எந் நாளும் பிரமபுட் கரணி என்றே. 398

மயல்-ஆசை. சதுமுகன்-பிரமன், மகள்-திலோத்தமை.
(காண்க. 114)

தோயம்-குளிக்கும்இடம்.

பிரமபுட்கரணி என்ற பெயர் பெற்ற நிலை.

அழகு

முண்டக நிரையி னாலும் முத்தணி தடத்தி னாலும்
அண்டர்கள் முனிவர் சூழ ஆதரித்து இடுத லாலும்
வண்டகம் மருவும் சோலை வளைந்திடப் பெறுத லாலும்
கண்டகன் வாங்க ஒண்ணாக் கவின்தனைப் படைத்தது அன்றே

முண்டகம்-தாமரை. தடம்-குளம். அண்டர்கள் - தேவர்கள்.

பார்த்தகண் வாங்கா அழகு படைத்தது இது.

பண்பு

புயலுறும் ஈகை யாளர் போன்றுதண் அளிஉ டைத்தாய்
அயலுறும் இரவ லார்போல் அதிலகு வாகிச் செஞ்சொல்
வியலுறு தமிழின் செய்யுள் என்னவே இனிமை எய்திச்
செயல்சிவ னிடத்தில் வைத்தோர் சித்தைபோல் தெளியும் ஆமால்

புயல்-மேகம். தண்ணளி-குளிர்ந்த அருள். இரவலர். ஏற்போர். அதிலகு-மிகுதியும் எளிமை. ஆல்-ஈற்றசை.

தமிழ் போல் இனிமை சுட்டும் ஆசிரியர் தமிழன்பு புலப்படுகிறது.

சிவனிடத்தில் செயல் வைத்தவர் சிந்தை போல் தெளிவு உள்ளது. குளிர்ச்சி, எளிதில் எய்தல், இனிமை, தெளிவு ஆகிய பண்புகள் தீர்த்தத்திற்குரியவை.

பயன்

பிரமதீர்த் தத்தில் ஆடப் பெறுமவர் பிரம னைப்போல்
அருமைசேர் கல்வி மாதை அழகுற நாவில் கொள்வர்
தருமமெய்ஞ் ஞானம் இன்பம் தவம்எனும் இவைப டைப்பர்
உரிமையில் புணர்ச்சித் தீங்கும் ஒருங்குடன் ஒழிப்பார் அன்றே

இத்தீர்த்தத்திலாடியவர் (பிரமன் போல் கலைமகளை நாவில் கொள்வதால்) கல்விச் சிறப்புப் பெறுவர். மெய்யறிவு, இன்பம், தவம், பெறுவர். உரிமையற்ற புணர்ச்சியால் பெறும் தீங்கும் ஒழியப்பெறுவர்.

தெளிதரு பிரம தீர்த்தச் செழும்புனல் தன்னில் அங்கோர்
துளியுத ரத்துஇ ருக்கத் துஞ்சிடப் பெறுவர் ஆயின்
களிதரு காமம் ஆதி கலந்திடு கசட ரேனும்
ஒளிதரு சிவரூ பம்பெற் றுஓங்குதல் உண்மை ஆமே. 402

தீர்த்தத்தில் ஒரு துளியாகிலும் இறக்கும்போது பெறுவராயின் அவர்கள் காமம் முதலிய குற்றமுடையவராயினும் சிவரூபம் பெறுதல் உண்மை என வற்புறுத்தல்.

(பிரமதீர்த்தம் முற்றும்)

ஆ. சூரிய தீர்த்தம்

மயன் செயல்

சதிருறு தொழில்ம யன்தான் தருபுதல் வியர்கள் மெய்யில்
முதிருறும் இரவி மெய்யில் முளைக்கதிர் கிரணம் நோக்கி
அதிருறு முனிவு கண்டே ஆங்கவன் தனைப்பி டித்துக்
கதிரெலாம் மழுங்கு தற்குக் கடைந்தனன் சாணை தன்னில் 403

கதிர்-திறமை. இரவியின் கதிர்கள் தன் புதல்வியர் மெய்யில்பட்டுத் துன்புறுத்தியதால் அவற்றைப் பிடித்துக் கதிர் மழுங்கச் சாணையிலிட்டுக் கடைந்தனன் மயன்.

கதிரோன் கலக்கம்

தறுகிய தெய்வத் தச்சன் சாணையின் இடத்தில் எற்றி
இறுகவே கடைந்த போதில் இருங்கதிர் மழுங்க லாலே
மறுகிய மனத்தன் ஆகி மற்றிதற்கு என்செய் வோம்என்று
அறுகதிர் கருதி நின்றான் ஆர்எழு வாசித் தேரோன் 404

தறுகிய-தடைப்படுத்திய. தெய்வத் தச்சன் - மயன். இருங்கதிர்-வலிமைமிக்க கதிர். மறுகிய-சுழலும். எழுவாசித் தேரோன்-ஏழு குதிரை பூட்டிய தேருடைய கதிரவன்.

கதிரோன் சுடர்பெறல்

இடர்தனைத் தவிரும் மார்க்கம் ஈதுஎன மனத்தில் எண்ணிப்
படர்புகழ் இபவ னத்தில் பரமனைப் பணிந்து போற்றி
அடர்தர முன்பி னும்தான் அதிகமாம் கிரணம் தன்னைச்
சுடர்பெறும் அந்தத் தீர்த்தம் சூரிய தீர்த்தம் ஆமால் 405

இபவனம்-ஆனைக்கா. அடர்தர-செறிவுமிக.

சுடர் பெறுமாறு செய்த தீர்த்தம் சூரியதீர்த்தம் ஆயிற்று. ஆல்-ஈற்றசை.

பயன்

சொற்றரும் அந்தத் தீர்த்தம் சூரியன் தன்னைப் போலக்
குற்றவெம் பிணிகள் போக்கிக் கொடுவினை இருளை நீக்கி
அற்றமில் இதையம் என்னும் அரவிந்தம் தனைஅ லர்த்தி
உற்றவர் தமக்கு மென்மேல் ஓங்குஒளி உதவும் அன்றே. 406

இதில் மூழ்குவார் சூரியன் போல் பிணி நீங்குவார். வினை இருள் நீங்குவர். அவர் இதயம் எனும் தாமரை மலரும். புகழ் பெருகும். கதிரவனுக்கேற்ப இருளைப் போக்குதல், தாமரையை மலர்த்தல், ஒளியூட்டல் ஆகிய செயல்கள் குறிக்கப்பட்டுள்ளன.

(சூரிய தீர்த்தம் முற்றும்)

(ஆக தீர்த்தம் இரண்டு) விருத்தம் 10.

இ. இராம தீர்த்தம்

ஏர்த்திடும் இலிங்கம் தாபித்து இராவணன் கத்தி தன்னைத்
தீர்த்திடச் சேது தன்னில் நீக்கிய நிருபன் தன்பால்
ஆர்த்தெழு கும்ப கன்னன் ஆகிய பிரம கத்தி
தீர்த்தலின் இராம தீர்த்தம் ஆகியது அந்தத் தீர்த்தம் 407

ஏர்-அழகு. கத்தி-கொலை செய்த பாவம். நிருபன்-அரசன்.பிரமகத்தி-கொலையுண்டவன் ஆவி கொலை செய்தவனைத் தொடர்தல்

308 ஆம் பாடலைக் காண்க.

பயன்

எவரும்எண் ணிராம தீர்த்தம் இராமனைப் போல மிக்கப்
பவம்எனும் கடலைச் சாடும் பரிந்துஉயிர் பலவும் காக்கும்
அவமுறு சிந்தை என்னும் அருஞ்சிலைக்கு அறிவு நல்கும்
கவலைகூர் வினைகள் என்னும் கடும்பகை அடங்கும் அன்றே

பவம்-பிறப்பு. அவம்-கேடு. சிலை-கல். கூர்-மிகுதி.

இராமன் பற்றிய நிகழ்ச்சிகளை உள்ளடக்கி அகலிகை கல்வடிவம் நீங்கித் தன் வடிவு பெற்றது போல் தீய அறிவு மாறி நல்லறிவு வரும் இராவணன், கும்பகன்னன் போன்றவர் பகை அடங்கியது போன்று கவலைதரும் வினைகள் அடங்கும்.

(இராமதீர்த்தம் முற்றும்)

(ஆக தீர்த்தம் மூன்று விருத்தம் 12.)

ஈ. சந்திர தீர்த்தம்

சந்திரன் மெலிவு

வரோதயம் ஆன திங்கள் வருத்தகா சிபன்சா பத்தால்
பரோபகா ரம்செய் யாதார் பான்மைபோல் ஒளிம ழுங்கி
உரோகிணி தனையே புல்க ஊடுமங் கையர்சா பத்தால்
விரோதமேற் கொண்டார் போல மெலிந்தனன் மெலியா மேனி

வரோதயம்-தெய்வ வரத்தால் தோன்றும் உயிர்கட்கு நன்மை செய்யாதவர் தன்மை போல் காசிபர் சாபத்தால் சந்திரன் ஒளி மழுங்கினான். உரோகிணி பால் கொண்ட அன்பால் மற்ற மனைவியர் சந்திரனிடம் ஊடிச் சாபமிடப் பகை கொண்டவர் போல் மேனி தேய்ந்தான் சந்திரன்.

சிவனருள்

திகைத்தசந் திரனும் வந்து செம்புநா தனைக்கண்டு ஏத்தத்
தொகுத்தபுட் கரணி ஒன்றில் தோய்ந்திடும் தவத்தி னாலே
மிகத்தளர் வான மேனி மீளவும் நிறையப் பெற்றான்
சகத்தினில் அந்தத் தீர்த்தம் சந்திர தீர்த்தம் ஆமால் 410

சகம்-உலகம். ஆல்-ஈற்றசை.

திருவானைக்கா வந்து செம்புநாதனை வணங்கி ஒரு புட்காணியில் ஆடியதால் தேயும் மேனி நிறையப் பெற்றான் சந்திரன். உலகில் அத்தீர்த்தம் சந்திர தீர்த்தம் ஆயிற்று. இது திருவரங்கக் கோயிலகத்துளது என்பர்.

பயன்

துன்னிய அத்த டத்தில் தோய்ந்தவர் தேய்ந்தி டாத
தன்னிகர் ஒளியும் மிக்க தண்ணளி தனையும் எய்தி
மன்னிய பிணிஅ னைத்தும் மாற்றியே மனத்தி னூடே
உன்னிய பயனும் சேர்வர் உடுபதி தன்னைப் போல 411

துன்னிய-நெருங்கிய. தண்ணளி - குளிர்ந்து அருள். மன்னிய-நிலைபெற்ற. உடுபதி-சந்திரன்,

அக்குளத்தில் குளத்தவர் ஒளியும் அருளும் எய்திப் பிணி நீக்கவும் கருதிய பயன் பெறவும் இயலும்.

(சந்திரதீர்த்தம் முற்றும்.)

(ஆகதீர்த்தம் 4) திருவிருத்தம் 15. சிவமயம்

உ. செம்பு தீர்த்தம்

அம்பு தீர்த்துஅடர் அயில்விழி பாகனை அடைந்தே
செம்பு தீர்த்தமாம் இலஞ்சியம் தடத்திடை நண்ணி
வம்பு தீர்த்திடும் செம்புமா முனிபெறு வரத்தால்
செம்பு தீர்த்தம்அது எனும்பெயர் படைத்தது அத் தீர்த்தம் 421

அம்புதீர்த்து அடர்விழி-அம்பினை வென்று போர்புரியும் விழியை உடைய உமை. இலஞ்சி-பொய்கை. அம்பு-துன்பம்.

பயன்

தருங்கலை வல்லோர் போற்றும் செம்புதீர்த் தத்துத் திங்கள்
பெருங்கலை உறையும் வாவில் பெரிதுசென்று ஆட வல்லோர்
அருங்கலை எண்இ ரண்டில் அமைத்திடு நிவர்த்தி ஆதி
இருங்கலை ஐந்தில் எய்தும் இருவினை எய்தி டாரே 413

திங்கள் பெருங்கலை உறையும் வாவு-முழுமதிநாள் எண் இரண்டு-பதினாறு.

பதினாறு வயதில் பெறும் கலைகளை ஐந்து வயதில் அடையலாம். இருவினைகள் அவர்களை அடையா.

அளித்திடு செம்பு தீர்த்தத்து அரும்புனல் தன்னைக் கண்கள்
களித்திடக் காண்ப ரேனும் கரத்தினால் சென்னி மீதே
தெளித்திட வல்ல ரேனும் சென்றிடப் படிவ ரேனும்
அளித்திடும் பிறப்பின் உள்ள அவலவல் வினைகள் எல்லாம் 414

அளித்திடும்-அழித்திடும்; போகி.

செம்புதீர்த்த நீரைக் கண்ணால் கண்டாலும், கையில் எடுத்துத் தலையில் தெளித்தாலும் சென்று ஆடினாலும் பிறப்பிலுள்ள தீயவல் வினைகள் நீங்கிவிடும்.

தூயமே ருவினிடத்தில் தோன்றியநா
வற்கனியின் சொரிநீர் வெள்ளத்
தாயமா னதத்தின்பால் அடைந்தவற்றை
வெற்றுநிற மாக்கல் போலத்
தோயமார்த் தடமும்தோய்ந் தவரவர்
தம்அஞ்ஞானத் துகளை நீக்கிக்
காயபே தம்புரிந்து கண்மூன்றும்
கரநான்கும் காட்டும் தானே 415

மேருமலையில் நாவற் கனிச்சாறு பாய அதனால் கற்கள் பொன்மயமாம். அதனாலாய பொன் விமானத்தில் அடைத்த மற்ற பொருள்களின் நிறம் வெறுமை ஆகுடு. அதுபோல இப்பொய்கையில் தோய்ந்தவர் அஞ்ஞானம் நீங்கித் தெய்வ வடிவமுற்று உருத்திரகணமாவர்.

வேறு

எப்புனல் தன்னில் ஆடி எகி னும்இத் தலத்தில்
அப்புனல் தீர்த்தம் ஆகி அருவினை அகற்றும் என்றே
செப்புநன் மேன்மை பெற்ற செம்புதீர்த் தத்தில் ஆர்த்த
மெய்ப்புனல் ஆடு மேன்மை விரித்தெவர் உரைக்க வல்லார் 416

இத்தலத்தில் எந்த நீரில் ஆடினாலும் அது தீர்த்தமாகத் தீவினையை நீக்கும் என்று சொல்லும் நன்மை பெற்றது செம்புதீர்த்தம். அதன் பெருமையை விரித்து உரைக்க இயலாது. (காண்க. 235)

செம்புதீர்த்தம் முற்றும்
(ஆக தீர்த்தம் 5) திருவிருத்தம் 20
திருச்சிற்றம்பலம்

௩௭. அகத்திய தீர்த்தம்

ஓங்கிய புவியின் தென்பால் உன்னதமாகித் தோன்றும்
தீங்கினைத் தவிர்க்க வந்தோன் இருந்து ஞானத் தலத்தில்
பூங்கமழ் பொய்கை ஆடிப் புவிசம தலமாச் செய்தான்
ஆங்கவன் ஆடும் தீர்த்தம் அகத்திய தீர்த்தம் ஆமால் 417

பழனம்-வயல். புவிசமதலமாச் செய்தான்-அகத்தியன். ஆல்.ஈற்றசை

(காண்க 392-395)

பயன்

தருவிரில் திரள்சூழ் நீழல் தரும்அகத் தியதீர்த் தம்தான்
மருவினர்க்கு அறிவுஉண் டாக்கி வாழ்நாளும் பெரிது நல்கு
பரவுநற் கல்வி எல்லாம் பயிற்றிடும் பயின்ற போதம்
மருவினைக் கடல்கள்அ டக்கும் அகத்தியன் தன்னைப் போல

இருள் ஒளிக்கெதிரானது. ஆயினும் இருள் நிழல் தரும் அகத்தியதீர்த்தம் அறிவுண்டாக்கி வாழ்நாளும் நல்கும் கல்வியைப் பயிற்றிடும். பெற்ற அறிவு, வினைக் கடல் கடக்கும்-அகத்தியன் கடலை உண்டது போல.

(அகத்திய தீர்த்தம் முற்றும்)
(ஆக தீர்த்தம் 6) திருவிருத்தம் 22

எ. இந்திர தீர்த்தம்

கடங்கொண்ட வெள்ளானைக் கடவுளும்அத்
தலத்தடைந்து கடல்போல் ஓங்கும்
தடங்கொண்ட புனல்மூழ்கிச் சங்கரனை
ஏத்தும் அரும் தவத்தான் முன்னம்
திடங்கொண்ட விருத்திரனைச் சென்றடர்த்த
வீரகத்தி தீர்த்த லாலே
இடங்கொண்ட அத்தீர்த்தம் இந்திரபுட்
கரணிஎன இசைந்தது அன்றே. 419

கடம்-மதம். வெள்ளானைக் கடவுள்-இந்திரன்.

விருத்திரனைக் கொன்ற கொலைப்பாவம் தீர்ந்தது. (காண்க 370)

பயன்

இந்திரநீலத் தடத்தால் இளங்கமல மதுநிலம் என்னத் தோன்றும்
இந்திரபுட்கரணிதனில் இனிதாடி அத்தலத்தின் இடத்தின் மேவும்
இந்திரவிநீக் கரிய பிரமகத்தி ஆதிவினை இருள்கள் நீக்கி
இந்திரன்தன் பதமதனில் இமையவர்கள் தொழுதேத்த இருப்பது
ஆமே 420

இந்திர நீலம்-கருநீலம்.

தாமரையும் குளத்தின் நிறத்தால் நீல மலரெனத் தோன்றும். விலக்கரிய பிரமகத்தியை இப்பொய்கையாட்டு நீக்கியது.

(இந்திர தீர்த்தம் முற்றும்)
(ஆகதீர்த்தம் 7) ஆக விருத்தம் 24

ஏ. அக்கினி தீர்த்தம்

வருணனிட்ட சாபம்

மதியாது கனல வன்தான் வருணன் ஆகிய நீர்க்கோவின்
நதியாகு மாதர் தம்மை நயந்தனன் கனவு தன்னில்
பதியாகும் வருண ராசன் பண்ணிய கொடிய சாபம்
அதனால் அங்கு அவன்தன் தேசும் அதோமுகம் ஆனது அன்றே

கனலவன்-அக்கினி, அதோமுகம்-கீழ்நோக்கு முகம்.

வருணன் மனைவியரை விரும்பியதால் சாபமிட அக்கினியின் ஒளி குறைத்தது.

அக்கினி தவம்

வருணன்மங் கையர்தம் கற்பு மங்கவே செய்த அங்கி
இரணிய ரேதன் ஆகி இங்குஇதை நீங்க வேண்டி
அரணிய பவத்தி னால்வந்து அருந்தடம் கண்டு மூழ்கி
முரணுஉறு தவம்பு ரிந்து முத்தனைப் பத்தி செய்தான் 422

அங்கி-அக்கினி. இரணியரேதன்-பொன் வீரியமிழந்தவன். அரணியம்-காடு பவம்-தோற்றம். முரணுஉறு பாவத்துடன் மாறுபாடுகின்ற முத்தன்-சிவபெருமான்.

சிவன் வரம்

அன்றுசெய் தவத்தி னாலே அங்கிதான் அமரர்க்கு எல்லாம்
ஒன்றிய முகமு மாய்மே லோங்கிய சுடரும் ஆகி
நன்றிசேர் வரம்பெற்று ஓங்கி நலத்தினால் நிலத்தின் ஊடே
சென்றுலகு இறைஞ்சும் அங்கித் தீர்த்தம்ஆ கியதுஅத் தீர்த்தம்

அக்கினி மற்ற தேவர்க்கு முகமாதல்.
நன்றி-நன்மை. அங்கித்தீர்த்தம்-அக்கினி தீர்த்தம்.

பயன்

கனலவன் தீர்த்தம் தன்னைக் கண்டோர்க்கும் பரிசித் தோர்க்கும்
புனலிடை மூழ்கு வோர்க்கும் பொருந்திடும் திருந்து தேசும்
அனலுறு தாலம் என்ன அயல்மனை அழித்த தீங்கும்
உனலுறும் ஊண் அ லாஊண் உறுதீங்கும் ஒழியும் அன்றே 424

(ஸ்) பரிசித்தோர்-தீண்டினோர். தாலம்-பனை.

இத்தீர்த்தத்தில் மூழ்கியவர்க்கு ஒளியுள்ள உடல் கிடைக்கும். தீப்பட்ட பனைபோல் அயல் மனையை நயந்த தீங்கும் ஊனல்லா ஊணை உண்ட தீங்கும் நீங்கும்.

(அக்கினி தீர்த்தம் முற்றும்)
(ஆகதீர்த்தம் 8) திரு விருத்தம் 29

ஐ. சீர்மெய்த் தீர்த்தம்

மாதவப் பயனால் தோன்றும் மத்தனை உபக ரித்துப்
பாதநீர்த் தங்கொ டுக்கப் பார்வதி மனத்தில் எண்ண
ஓதரும் தீர்த்தம் எல்லாம் ஒருவடி வாகித் தோன்றித்
தீதகற் றிடலால் சீர்மெய்த் தீர்த்தம்ஆ கியதுஅத் தீர்த்தம் 425

மத்தன்-சிவபெருமான். உபகரித்து-உதவி. ஓதரும்-கூறற்கரிய.

இத்தீர்த்தம் இப்பாடலில் சீர்மெய்த் தீர்த்தம் எனவும் வேறு சில நூல்களில் ஸ்ரீமத்தீர்த்தம் எனவும் ஸ்ரீமதி தீர்த்தம் எனவும் உள்ளது. இதில் ஸ்ரீமதி உமையைக் குறிக்கும்.

இப்புராணப் பாடல்களில் (427, 440) சீர்மெய்த் தீர்த்தம் என உள்ளது.

பயன்

புனைந்தசீர்த் தீர்த்தம் எல்லாம் பொருந்தும் அத்தீர்த்தம் தன்னை
மனந்தனில் நினைந்த போது வல்வினை அனைத்தும் நீங்கி
நினைந்தகா ரியங்கள் எல்லாம் நேர்படும் அந்நீ ராடில்
அனந்தத் தீர்த்தத் தில்ஆடும் அரும்பயன் உதவும் அன்றே 426

தீர்த்தத்தை மனத்தால் நினைத்தால் தீயவினைகள் எல்லாம் நீங்கும். எண்ணிய காரியங்கள் எல்லாம் நேர்படும். அந்நீரிலாடில் பலதீர்த்தங்களில் ஆடும் பயன் உதவும்.

(சீர்மெய்த் தீர்த்தம் முற்றும்)
(ஆக தீர்த்தம் 9) திருவிருத்தம் 30

நவதீர்த்தம் ஆடுகிற விதம்

வித்தகம் தருகும் இன்பம் வீடுஇவை நாடு வோர்கள்
உத்தர முந்தைத் திங்கள் உறைநிறை திங்கள் தன்னில்
நித்தநன் னியமம் எல்லாம் நிறைவேற்றிக் குறையா மேன்மை
முத்தர்சூழ் நவதீர்த் தத்தின் மூழ்குறு முறைமை சொல்வாம் 427

வித்தகம்-பேரறிவு. தருகுமின்பம்-தரும் இன்பம்.

தைமாத நிறைநிலா நாளில் நல்ல வழிபாடுகள் செய்தால் மேன்மை பெறுவர்.

30 கோட்டம் வகுத்தல்

கண்டக இடையூறு எல்லாம் கடிந்திடக் கயமு கன்தன்
புண்டரி கத்தாள் போற்றிப் புகழ்வயி ரவனை ஏத்திச்
சண்டவெண் கூற்றுஉ தைத்தோன் சன்னதி பயிலும் பைம்பொன்
மண்டபம் தனில்ஆறு ஐந்தாய் வகுத்த கோட்டங்கள் தன்னில்

கண்டகம்-காடு. இடையூறு-துன்பம். கயமுகன்-விநாயகன். புண்டரிகத்தாள்-தாமரை போலும் திருவடி. கூற்றுதைத்தோன்-மார்க்கண்டேயனுக்காக யமனை உதைத்த சிவபெருமான்.

இறைவன் முன்னுள்ள மண்டபத்தில் முப்பது கோட்டங்கள் அமைத்துத் தொழும் நிலை.

ஒன்பது மண், ஏழு துளிர் ஐந்து ஆன்பொருள் ஒன்பது பொருள்

வில்வம்ஆல் அரசு நாவல் வியன்நழாய் புளிநல் தேறுச்
சொல்இபம்பரிக்கால்மண் ணும்துளிர் ஏழொடுதொறு ஆன் ஐந்தும்
நல்கலால் இலிங்கம் எள்ளு நண்ணுகோ தும்பை வெல்லம்
நெல்லரு மணிபொன் ஆடை நெய்இவை நிறைய வைத்தே 429

ஒன்பது மண்: ஆல், அரசு, நாவல், துளசி, புளி இவற்றின் வேரிலுள்ள மண்ணும் பசு, யானை, குதிரை இவை கட்டும் இடத்திலுள்ள மண்ணும்.

ஏழு துளிர்: துளசி, புளி, நாவல், வில்வம், ஆல், அரசு, அறுகு.

ஐந்து ஆன் பொருள்: பால், தயிர், நெய், நீர், கோமயம்

நவதிரவியம்: சிவலிங்கம், எள், கோதுமை, வெல்லம், நெல், மணி, பொன், ஆடை, நெய்.

பிரம்ம தீர்த்தம் ஆடும் முறைமை

பிரமதீர்த் தம்த னக்குப் பெரும்தருச் சூதம் ஆகும்
தருமம்ஆர் முனிநால் வேதன் சங்கர நாதன் தெய்வம்
கருமைசேர் புட்வ வந்தன் கணநாதன் இவரைப் போற்றித்
திருமரு வியநீர் ஆடிச் செய்வது திலத்தின் தானம் 430

மரம்-மாமரம் (சூதம்) முனிவன்-பிரமன். தெய்வம்-சங்கர நாதன். கணநாதன்-புட்வவந்தன். தானம்-எள் (திலம்).

சூரிய தீர்த்தம் ஆடும் முறைமை

சூரிய தீர்த்தம் சேரும் துங்கமார் தருவே வில்வம்
பெரிய இரவி தெய்வம் பிருகுவே முனிவன் ஆகும்
ஆரிய அம்ப ரீடன் அருங்கண நாதன் ஆகும்
வாரியின் இடத்தின் மூழ்கி மாமணி கொடுப்பது ஆமே 431

மரம்-வில்வம். தெய்வம் - சூரியன். முனிவன்-பிருகு. கணநாதன்-அம்பரீடன். தானம்-மணிகள்.

இராமதீர்த்தம் ஆடும் முறைமை

தருதிறல் இராம தீர்த்தத் தடம்பயில் மரம்இ லுப்பை
கருதுமா முனிஇ ராமன் கரியமா லயனே தெய்வம்
விருதுறு கணநா தன்தான் வீரபத் திரனே ஆகும்
பெரிதுசென்று ஆடி நல்கல் பெறுவது குணமது ஆமே 432

மரம்-இலுப்பை. முனிவன்-இராமன்.
(ஏட்டில் கரிமாலய்யன் என உளது)

தெய்வம்-கரியமாலயன். கணநாதன்-வீரபத்திரன். தானம்-கண்ணாடி (ஆடி).

சந்திர தீர்த்தம் ஆடும் முறைமை

தேமலர்ச் சந்தி ரன்தன் தீர்த்தத்தின் தருவே புன்னை
மாமுனி சந்திரன்தான் வருதெய்வம் புடவி சாக்கன்
காமுறு குமுதம் என்பான் கணநாதன் கவிவண் டார்க்கும்
தாமரைப் புனலின் மூழ்கித் தருவது கனக தானம் 433

மரம்-புன்னை. முனிவன்-சந்திரன். தெய்வம்-புடவி காக்கன். கணநாதர்-குமுதம். தானம்-பொன்.

செம்பு தீர்த்தம் ஆடும் முறைமை

செம்புதீர்த் தம்த னக்குத் திருநாவல் தருவது ஆகும்
நம்புமா முனிவ சிட்டன் நலந்தரு மகேசன் தெய்வம்
வெம்பகை அடர்சு னந்தன் வியன்கண நாதன் ஆகும்
அம்புனல் தன்னில் மூழ்கி அளிப்பது கோதி தானம் 434

மரம்-நாவல். முனிவன்-வசிட்டன். தெய்வம்-மகேசன். கணநாதன்-சுனந்தன். தானம்-கோதுமை (கோதி)

அகத்திய தீர்த்தம் ஆடும் முறைமை

செகத்திலெண் அகத்தி யன்தன் தீர்த்தத் தின்தரு பலாவாம்
அகத்திய முனிவன் ஆகும் அகிலாண்ட அம்மை தெய்வம்
சுகத்தினில் காக்க வல்ல சுனகியே கணேசன் ஆகும்
வகுத்தஅப் புனலில்ஆடி வத்திரம் கொடுப்பது ஆமே 435

மரம்-பலா. முனிவன்-அகத்தியன். தெய்வம்-அகிலாண்ட அம்மை. கணநாதன்-சுனகி. தானம்-ஆடை. (வத்திரம்).

இந்திர தீர்த்தம் ஆடும் முறைமை

இந்திர தீர்த்தத் தின்பால் இசைதரு நாளி கேரம்
மந்திர முனிவன் மிக்க வாசவன் தெய்வம் ஆகும்
அந்தரக் கணநா தன்தான் அரும்கும் போதரனே ஆகும்
தந்திரப் படியின் மூழ்கித் தருவது நெய்யின் தானம் 436

மரம்-தென்னை (நாளிகேரம்). முனிவன்-மந்திரமுனிவன். தெய்வம்-இந்திரன். கணநாதன்-கும்போதரன். தானம்-நெய்.

அக்கினி தீர்த்தத்தில் ஆடும் முறைமை

சித்தியா அங்கி தீர்த்தம் செறிதரு புளியது ஆகும்
அத்திரி முனிவன் மிக்க அதிதெய்வம் அங்கி ஆகும்
கைத்திறல் கணநா தன்தான் கபத்திஆங்கு அதனில் மூழ்கிக்
குத்திர வினைகள் நீங்கக் கொடுப்பது செந்நெல் தானம் 437

அங்கி தீர்த்தம்-அக்கினி தீர்த்தம். மரம்-புளி- முனிவன்-அத்திரி. தெய்வம்-அக்கினி. கணிநாதன்-கபத்தி. குத்திர-இழிந்த. தானம்-செந்நெல்.

சீர்மெய்த் தீர்த்தத்தில் ஆடும் முறைமை

ஆர்க்குஞ்சீர் மெய்த்தீர்த் தத்துக்கு அருந்தரு திருவெண் ணாவல்
கார்க்கிய முனிவன் தெய்வம் கருதும்அவ் அமுதலிங்கம்
மூர்க்கமாம் கணநா தன்தான் முதிர்ந்திடும் சுகந்தன் ஆகும்
தீர்க்கநீர் ஏத்து மூழ்கிச் செய்வதும் இலிங்க தானம் 438

மரம்-வெண்ணாவல். முனிவன் கார்க்கியமுனி. தெய்வம்.-அமுதலிங்கம். கணநாதன்-சுகந்தன். தானம்-இலிங்கம். இது சீர்மகத் தீர்த்தம் என்றும் உளது.

மூழ்கும் முறை

திதமுறு தருக்கள் தன்னைத் தீண்டியே கணங்கள் தெய்வம்
இதமுடன் வணங்கிப் போற்றி இருடிகள் தனைநினைந்து
விதமுறு திரவி யங்கள் மெய்யுறப் பூசி மிக்க
முதன்மைசேர் நவதீர்த் தங்கள் மூழ்குதல் முறைமை ஆமே 439

(ஸ்) திதம் - நிலை. திரவியங்கள் - நீராடற்குரிய வாசனைப் பொருள்கள். மரம், கணம், தெய்வம், முனிவர், ஆகியோரை நினைந்து சுண்ண முதலிய பூசி ஆடுதல் முறைமை. இது பற்றிய பெயர் வரிசை முன்னர்க் காண்க.

நீர்கடன், கொடை

இவ்வகை புனலில்ஆடி இருடிகள் தென்புலத்தோர்
தெய்வமா னவர்த மக்குச் செய்துநல் தருப்ப ணங்கள்
மெய்வகை விளம்பு தானம் வேதியர்க்கு அளிப்பார் ஆகில்
அவ்வகைத் தீர்த்தத்து உள்ள அரும்பயன் பெறுவது ஆமே 440

இருடிகள்-முனிவர். தென்புலத்தோர்-முன்னோர். இறந்தபின் தென் திசையில் இருப்போர்.

விளம்பு-கூறும்.

நீர்க்கடன் கழித்து வேதியர்க்குத்தானம் அளிப்பது தீர்த்தத்துள்ள பயன் பெறுவது.

மேன்மை பெறல்

சென்றுஎதிர் செம்புநாதன் சேர்வைபெற் றிடலும் நாவில்
ஒன்றிய அஞ்செ ழுத்தை உரைப்பதும் உரைக்க ஒண்ணா
தன்துயர் தடிந்து மேன்மை தருநவதீர்த்தம் தானும்
அன்றியில் வேறும் உண்டோ அருங்கதி அடையும் ஆறே 441

செம்புநாதனை வணங்கி அஞ்செழுத்துரைத்துப் பெறும் பயன் தடிந்து-நீக்கி. அன்றியில்-அல்லாமல். ஆறு-வழி.

பயன்

கஞ்சமார் நவதீர்த் தங்கள் கலந்தாடும் பலம்தான் எல்லா
நெஞ்சமோடு அரன்த னக்கு நிவேதித்துப் பணிந்து போற்றி
அஞ்செழுத்து அதனை நூற்றெட்டு அடைவிலுச் சிக்க வல்லோர்
பஞ்சபா தகமும் நீங்கிப் பரகதி அடைவர் அன்றே 442

கஞ்சமார்-தாமரை நிறைந்த.

மனம், வாக்கு, காயம் முதலியவற்றைச் சிவனுக்குப் படைத்துப் பணிந்து போற்றி ஐந்தெழுத்தை நூற்றெட்டு முறை செபித்தால் (உச்சித்தால்) பஞ்சபாதகம் நீங்கி மேலான கதிபெறுவர்.

பஞ்சபாதகம்-கொலை, பொய், களவு, கள்ளுண்ணல், குருநிந்தை-இவற்றைக் களவு, பொய், காமம், கோபம், கொலை என்பர் சேக்கிழார். காதல், கவறாடல் கள்ளுண்டல், பொய்ம்மொழிதல், ஈதல் மறுத்தல் என்பர் புகழேந்தியார்.

நல்வள சங்கு லாவு நவதீர்த்தம் மூழ்கப் பெற்றோர்
வல்வினை பிணிகள் நீங்கி வாழ்நாளும் புகழும் எய்திச்
செல்வநற் புதல்வர் இன்பம் சிவஞானம் தருமம் மேன்மை
கல்வியே முதலாம் இட்ட காமியம் பெற்று வாழ்வார் 443

சங்கு உலாவும் நவதீர்த்தங்களில் மூழ்கினால் தீவினைகள், பிணிகள் நீங்கும். நீண்ட வாழ்நாள், புகழ், செல்வம், மக்கள், இன்பம், சிவஞானம், தருமம், மேன்மை, கல்வி முதலாகிய விரும்பும் பொருள்களைப் பெற்று வாழ்வர்.

நவதீர்த்தம் ஆடுகிற திருமார்க்கம் முற்றும்.

நவதீர்த்தச் சருக்கம் உட்பட, திருவிருத்தம் 47

ஆகச்சருக்கம் 11

திருவிருத்தம் (1+) 442

திருச்சிற்றம்பலம்

ஆரம் பூண்ட சருக்கம்

சோழனின் மங்கை காவிரியிலாடும் போது வீழ்ந்த ஆரத்தை இத்தல இறைவன் பூண்ட நிகழ்ச்சியை இச்சருக்கம் கூறும்,

சோழமன்னன் ஆட்சியில் உயிரினங்கள் பகை நீங்கி வாழ்ந்தன. நாகர்கோமான் தன் கன்னியையும் மணியாரம் ஒன்றையும் சோழனுக் களித்தான். அவ்வாரத்தைக் கண்டு அதிசயித்து இது அமுதேசனுக்காம் என்று சோழன் கூற அம் மங்கை அதற்கு இசையவில்லை.

ஒருநாள் சோழன் மடந்தை தன் சேடியருடன் காவிரியில் புது நீராடச் சென்றாள்.

இங்குக் காவிரித் தீர்த்தம் பற்றி விரிவாக இந்நூல் கூறும்.

காவிரியில் வேதமறையவர் ஆடுவர். கரைகளில் சங்கம் நிறையும். அவ்வரிய தீர்த்தம் சோழநாட்டில் உலவிவரும், அன்னம் பெருக வளமளிக்கும். கரைகளில் மேதிகள் பயிலும், மரங் களில் மந்திகள் அமர்ந்திருக்கும். பறவைகள் ஆற்றின் இரு கரைகளிலும் தங்கும்.

வாழை, செருந்தி, சண்பகம் போன்ற மரங்கள் வளரும். கரையோர வயல்களில் நெல் செழிக்கும். மலர்கள் பல இந்நீரில் மலர, மங்கையராடுவர். காவிரி அரசுபோல் விளங்கும். மிதந்து வரும் பலபொருள்களால் பொன்னி ஆறு பெண் போல் தோன்றும். இருபக்கமுள்ள சாலைகள் நீர் பருகிய மேகம்போல் இருக்கும். நன்செய், புன்செய் நிலங்கள் பொன்னி நீரால் வளம்பெருகும்.

இதன் நீரைத் தெளிப்பின் ஞானம், தவம், நீதி, அன்பு, சீலம் ஆகியவை விளையும். கங்கை, யமுனையைக் காட்டிலும் வினைகளை இது விரைந்து தீர்க்கும். இதன் கரையிலுள்ள பல புண்ணிய தலங்களைக் கூறித் 'தந்திவனம்' இருப்பதையும் இச் சருக்கத்தில் காணலாம். கங்கை முதலிய கன்னியர்களும் இதில் வந்தாடுவர்.

பொன்னிவளம் கண்டு அவ்வாற்றில் சோழனின் மங்கை ஆடினாள். அப்போது அவள் அணிந்திருந்த ஆரம் பொன்னி நீரில் வீழ்ந்தது. அதனை அவள் சோழனிடம் கூற அவன் அவ்வாரம் செம்பு நாதற்காக வேண்டுமென எண்ணினான். பொன்னி நீரில் சென்று இறைவற்கு அபிடேக நீரெடுத்த குடத்தில் அவ்வாரம் புகுந்தது. இலிங்கத்தின் மீது அபிடேகம் செய்யும் போது இறைவனுக்கு அணி ஆயிற்று. பொன்னி நீர் புரிந்த இச்செயலால் தருமம் இலாபமடைந்தது. ஆரம் அணிந்த இறைவனுக்கு 'நிறைபணியாளன்' எனவும் ஆரம் 'பூண்டவன்' எனவும் பெயர் அமைந்தது.

12. ஆரம் பூண்ட சருக்கம்

எழுந்திரைப் புனலில் ஆடும் யாவர்க்கும் நவதீர்த் தம்தான்
அழுந்துவல் வினைத விர்ப்பது அறைந்தனன் அமுதே சன்தான்
செழுந்திரைப் பொன்னி தன்னில் சென்னிதன் மங்கை ஆட
விழுந்திடும் ஆரம் பூண்ட மேன்மையை விரித்து வைப்பாம். 444

நவ தீர்த்தத்தில் ஆடுவோர்க்கு வினை தவிரும் என அமுதேசன் கூறினான்.

சென்னி - சோழ மன்னன்.

அரசனின் மங்கை பொன்னியில் நீராடும்போது ஆரம் விழ அதனை இறைவன் பூண்ட செய்தி.

சோழன் செங்கோல்

திண்புய வீரம் பெற்ற சென்னியாய் மன்ன வன்தான்
ஒண்புலி யொடுபுல் வாய்ஒ ருதுறை நீர்அ ருந்த
நண்புடன் அறத்தின் செங்கோல் நடத்தியே நலமே குன்றா
வண் [illegible] மாலை பூண்டு வையகம் புரக்கும் நாளில் 445

புல்வாய் - மான்

சோழ மன்னன் காலத்தில் புலியும் மானும் ஒருதுறையில் நீருந்திய நட்புக்குக் காரணம் அவனது செங்கோல்.

இது மாந்தாதாவின் செயல் என்பர் ஒட்டக்கூத்தர் (விக்கிரம சோழனுலா 5. குலோத்துங்க சோழனுலா. 7. இராசராச சோழனுலா. 5.)

ஆரம் கிடைத்தல்

சென்னிமா மணிக்கி ரீடச் சென்னியர் மன்ன வன்பால்
கன்னிமா மணியை முன்னம் கையுறக் கொடுத்த தன்பின்
துன்னிமா மணிசிறந்த சுடர்முடி உரகர்கோமான்
உன்னிமா மணிசேர் ஆரம் ஒன்றைஆங் அவட்கு அணித்தான்

கிரீடம் - முடி. கன்னிமாமணி - நாகசென்னி. உரகர் கோமான் - பாம்புகளின் அரசன். உன்னி - நினைந்து.

ஆரத்தைச் சிவனுக்களிக்க நினைத்தல்

தெருளுற அதனைக் கண்டு சிந்தையில் அதிச யித்தே
அருளுறு மன்ன வன்தான் அமுதேசன் தனக்காம் என்ன
இருளுறு மங்கை உள்ளத்து இசைந்திடாது இருந்தாள் ஆர்க்கும்
பொருளினை அறத்தில் ஈயப் பொருந்துவது எளிதோ அன்றே

தெருளுற - ஞானம் வாய்ப்ப. அமுதேசன் - தலமூர்த்தி. இருள் - மயக்கம்

சிவனுக்கும் ஒரு பொருளை அறத்தால் ஈவதும் அரிது.

மன்னன் மங்கை நீராடப்போதல்

சென்னியன் மடந்தை தானும் சேடியர் திரள்தற் காக்க
மன்னிய அரசன் தந்த மாமணி ஆரம் பூண்டு
துன்னிய கவரி வீசச் சுடர்மணிச் சிவிகை ஏறிப்
பொன்னிநன் னதிஇடத்தில் போந்தனள் புதுநீர் ஆட 448

சேடியர் - தோழிமார். மன்னிய - நிலைபெற்ற. துன்னிய- நெருங்கிய. சிவிகை - பல்லக்கு

பொன்னி வளமை

அன்புடன் ஆடு வோர்தம் மாசினைத் தவிர்ப்பது அல்லால்
முன்புறத் தெரிசித் தோர்தம் மோகவல் வினையும் நீக்கித்
தென்புவி தன்னில் எல்லாத் தீர்த்தமும் இறைஞ்சப் பெற்றே
இன்புறு புனல்கா வேரி எனுநதி வளமை சொல்வாம் 449

மாசு - குற்றம், பாவம். மோகவல்வினை - காமம் முதலிய கொடுவினைகள். தென்புவி - தென்னாடு.

அந்தணர் ஆடல்

வேறு

அங்கமே குளிர்ந்திட ஆர ணங்களாறு
அங்கமே வல்லவர் ஆட வெண்ணிறச்
சங்கமே தவழ்ந்திடத் தாள மாமணிச்
சங்கமே இருபுறம் தன்னில் துன்றுமால் 450

அங்கம் - உறுப்புகள். ஆரணங்கள் - வேதங்கள். ஆறங்கம் - சிட்சை, வியாகரணம், சந்தசு, நிருத்தம், சோதிடம், கற்பம். வெண்ணிறச் சங்கம் - வெள்ளைச் சங்குகள். தாளம் - முத்து. மணிச்சங்கம் - அழகிய சிப்பிகள். துன்றும் - நெருங்கும். ஆல் - ஈற்றசை.

தெளிக்க நன்னெறி

அன்னிய மம்பெறு அவர்கள் அன்றியே
அன்னியர் ஆடுதற்கு அருமை ஆகியே
சென்னியில் யாவரும் தெளிக்க நன்னெறிச்
சென்னிநன் நாட்டினில் சென்றுஉ லாவுமால் 451

நியமம் - வழிபாட்டு முறை. அன்னியமம் என எதுகை நோக்கித் திரிதல். அன்னியர் - அவ்வழிபாட்டு முறைக்கு வேறானவர். சென்னி - தலை. சென்னிநாடு - சோழநாடு ஆல் - ஈற்றசை.

வளமும் மேன்மையும்

அன்னமே பயின்றிடும் அரம்பு ரிந்திடும்
அன்னமே செழித்திட அளிக்கும் சாலியை
இன்னமே தினிஉளோர் எவரும் கூறினும்
இன்னமேன் மையதுஎன இயம்பொ ணாததே 452

அன்னம் வாழும். சோறு (அன்னம்) பெருக நெல் அளிக்கும் உலகோர் இதன் பெயர் கூறின் எவ்வளவு மேன்மை தரும் என்பதைக் கூற இயலாது.

விலங்குகள்

பாலுறு மேதிகள் பயில ஆங்கிரு
பாலுறு மேதினி பயில்வ புற்றிரள்
மாலுறும் அங்கமே வளைந்து மந்திகள்
மாலுறு மரங்களே வவ்விச் செல்லுமால் 453

மேதிகள் - எருமைகள். ஆங்கு இருபாலுறு மேதினி - இருபக்கமுள்ள நிலம். மால் - பெருமை, விருப்பம் அரங்கம் - ஆற்றிடைக்குறை. வவ்வி - விரும்பி, ஆல் - ஈற்றசை.

பறவைகள்

கரையுறு உயர்மணல் கலந்த குன்றுகள்
கரையுற இருபுறம் காதி மோதியே
இரையுற நாடியே இனத்துடன் செறிந்து
இரையுற இருபுறம் இசைவ புட்களே 454

காதி - பிரிந்து

இரைநாடிப் பெற்றுத் தன்னினத்துடன் கூடிக் காவிரியின் இருபுறமும் பறவைகள் விரும்பி இருக்கும்.

புனல் வீசல்

அம்புதான் நின்பகைக்கு ஆகச் சீதள
அம்புதான் அந்தணர்க்கு ஆக நல்கியே
செம்புநல் வாழைபூஞ் செருந்தி செண்பகம்
செம்புனல் வாரியே சென்று வீசுமால் 455

அம்பு - வில்லம்பு. சீதள அம்பு - குளிர்ந்த நீர். தானம் நல்கும் போது நீர் வார்த்தல். செம்பு - நாவல். செம்புனல் - செழுநீர். ஆல் - ஈற்றசை.

அலைகள்

உரைத்திடு சொல்லமுது உதவும் மங்கையர்
உரைத்திடு அரிசனம் உடன்க வர்ந் துநீன்
திரைத்தடம் கரங்களால் தெளித்து அன் னாரொடு
திரைத்தடம் கரமணிச் செந்நெல் வாருமால் 456

சொல் அமுதமாக உருவகிக்கப் படுகிறது.
அரிசனம் - மஞ்சள். திரைத் தடம்கரம் - அலைகளாம் பெருமைமிக்க கரம்.

அலைகள் சுண்ணப்பொடி தெளித்துச் செந்நெல் வாரும்.

சங்கு, குவளை

கவலையத் தலமங் கையர்கரம் கொள்சங்
கவலையம் இசைதரக் கருதி ஆடவே
குவலையம் அம்புயம் குலவு தெண்புனல்
குவலையம் எங்கணும் குளிர வீசுமால் 457

கவலை - பலநெறி. சங்கவலையம் - சங்கு, வளை. குவலையம் - குவளை. குவலையம் - உலகம்.

ஆற்றின் அரசு

வேறு

கரைசெறி கமுகம் பாளை கவரிவெண் கமலம் என்னும்
விரைசெறி கவிகை காசை வெண்மலர்ப் பதாகை பாயும்
திரைசெறி புரவி புள்ளின் சேனையாம் நதிகட்கெல்லாம்
அரைசென அரசின் சின்னம் அனைத்தையும் படைக்கும் ஆமால்

கமுகின் பாளை - கவரி. வெண்டாமரை - குடை காசை - நாணல். நாணல் மலர் - அரசர் கொடி. பறவைகள் - குதிரைகள். நதி அரசு என அரசின் சின்னம் படைத்துள்ள உருவகம். ஆல் - ஈற்றசை.

ஆறு-மங்கை

வேறு

சைவல மலைகயல் தரளம் செந்துகிர்
மெய்வலம் புரிஅல்குல் விரும்பு புட்சுழி
அவ்வல வன்வரால் ஆமை பங்கயச்
செவ்வலர் பொருந்தியே தெரிவை போலுமால் 459

சைவலம் - பாசி. செந்துகிர் - செம்பவளம். அலவன் நண்டு. தெரிவை - பெண். ஆல் - ஈற்றசை. பாசி - கூந்தல். மலை - முலை. கயல் - கண். தரளம் - பல். பவளம் - இதழ், வலம்புரிச்சங்கு - கழுத்து. சுழி - உந்தி. நண்டு - முழங்கால் சிப்பி. வரால் - கால். ஆமை - கால்பகுதி. தாமரை மலர் - கால் அடிப்பகுதி.

இவ்வாறு ஆற்றில் வரும் பொருள்களால் காவிரி, பெண்ணுக்கு ஒப்புமை.

இருபுறச் சாலைகள்

பெருகிய தண்புனல் பிறங்கு பொன்னியின்
அருகுற இருபுறத்து அமைந்த சாலைகள்
பருகிய புனலினைப் படிந்தெ ழுந்திடாக்
கருகிய முகில்நிரைக் காட்சி போலுமால் 460

பிறங்கு - விளங்கு. ஆல் - ஈற்றசை. பொன்னியின் இரு கரையிலுள்ள சாலைகள் நீர் பருகி எழுந்திடாது நிலத்தில் கிடக்கும் கருமுகில் போலும்.

விளைநிலை

விஞ்சையும் செல்வமும் விளைக்கும் கண்ணையும்
நெஞ்சையும் கவரும் அந்நீர்முந் நீர்தரு
நஞ்சைஉண் டவன்முடி நண்ணி நஞ்சையும்
புஞ்சையும் விளைப்பது புகல வேண்டுமோ 462

விஞ்சை - கல்வி. முந்நீர் - கடல். நஞ்சு - ஆலகாலவிடம் நஞ்சை - நன்செய், புஞ்சை - புன்செய். போலி.

விளைச்சல்

வேறு

எறிதிரைப் புனலைச் சென்னி இறைத்திடில் பைங்கூழ் என்ன
அறிவது தன்னில் ஞானம் அங்குரம் ஆகும் மிக்க
நெறிதரும் தவமும் குன்றா நீதியும் தழைக்கும் அன்பும்
செறிதரு கல்வி தானும் சீலமும் விளையும் அன்றே 461

பொன்னி நீரைத் தெளித்துக் கொண்டால் பசிய பயிரினைப் போல ஞான முளையை அறியலாம். தவம், நீதி, அன்பு, கல்வி, சீலம் விளையும். ஞானமுளையில் இவ்வளவும் விளையும் என்பது.

விரைந்து வினை நீக்கல்

வேறு

எழுநாள் யமுனையின் இடத்தில் வைகிடல்
வாழுமக் கங்கையின் வைகல் மூன்றுநாள்
ஆழிநீர்ப் பொன்னி சென்றடை இலக்கணம்
சூழும்வல் வினையெலாம் தொலைத்தல் திண்ணமே. 463

யமுனையில் ஏழுநாளும், கங்கையில் மூன்றுநாளும் தங்கில் பாவம் நீங்கும். பொன்னியினை அடைந்த அக் கணமே வல்வினை தொலையும்.

காவிரிக் கரையிலுள்ள தலங்கள்

வேறு

கொடுமுடியே திருக்கருவூர் திருமாணிக் கக்குன்றுஈங்
 கோய்மலை திருமுக்கூ டல்வானம்
தொடும்எயில் சூழ்திருவய லூர்திருக் கடம்பந்துறை
 திருச்செந்துறை பாராய்த்துறைபஞ்ஞ்ஞலிவட
குடிகற்குடி திருபாச்சி லாச்சிராமம் தந்திவனஞ்
 சிராப்பள்ளி உறையூர் மணியரங்கம்
கடுவெளியே வடகரை மாந்துறை எறும்பூர்
 கடவுள்மங் கலக்காட்டுப்பள்ளி மூதூர் 464

காவிரிக் கரையிலுள்ள தலப் பெயர்களுள் தந்திவனம் என்ற பெயர் வருதல்.

கொடுமுடி, கருவூர், திருமாணிக்கக் குன்று, ஈங்கோய் மலை, திருமுக்கூடல், திருவயலூர், திருக்கடம்பந்துறை, திருச்செந்துறை, பாராய்த்துறை, பைஞ்ஞ்ஞலி (பஞ்ஞ்ஞலி) வடகுடி, கற்குடி, திருப்பாச்சிலாச்சிராமம், தந்திவனம், சிராப்பள்ளி, உறையூர், திருவரங்கம், வடகரை, மாந்துறை, எறும்பூர், மங்கலம், காட்டுப்பள்ளி என்பன.

தருப்பயிலும் பாற்றுறையே மழவைமூதூர் தவத்துறை
 ஆலந்துறை யேசந்திர ரேகை
திருப்பழனம் வேதிக்குடி பூந்துருத்தி சீர்சோற்றுத்
 துறைமாத் தூர்திருவை யாறு
மருப்பயிலும் கண்டியூர் திருநெய்த்தா னம்வளர்
 தஞ்சைஆடு துறைஆவூர் நல்லூர்
விருப்புறு சக்கரப் பள்ளிகும்ப கோணம்மிக்க
 திருவலஞ் சுழியேமேற் காவேரி 465

பாற்றுறை, மழவை, தவத்துறை, ஆலந்துறை சந்திர ரேகை, திருப்பழனம், வேதிக்குடி, பூந்துருத்தி, சோற்றுத் துறை, மாத்தூர், திருவையாறு, கண்டியூர், திருநெய்த்தானம் தஞ்சை, ஆடுதுறை, ஆவூர், நல்லூர், சக்கரப்பள்ளி, கும்பகோணம் திருவலஞ்சுழி, மேற் காவேரி.

திருப்புவனம் இடைமருதூர். திருநாகே சுரம்திருக்
கோடிக்கா வழுவூர்திருக் குற்றாலம்
மருவும்ஆ வடுதுறையே செம்பொன் பள்ளி
மயிலாடு துறைகடவூர் கோழிம்பம்
தருசேர்புகழ் புள்ளிருக்கும் வேளூர் காழி
சாய்க்காடு திருவழுந்தூர் திருவெண் காடு
பொருவில் சிதம்பர முதலாம் பதிகள்எல்லாம்
புறம்இரண்டும் பயின்று இலகும் பொன்னியாறே. 466

திருப்புவனம், இடைமருதூர், திருநாகேசுரம், திருக்கோடிக்கா, வழுவூர், திருக்குற்றாலம், ஆவடுதுறை, செம்பொன்பள்ளி, மயிலாடு துறை, கடவூர் கோழிம்பம், புள்ளிருக்கும் வேளூர், காழி, சாய்க்காடு, திருவழுந்தூர், திருவெண்காடு, சிதம்பரம் ஆகிய தலங்கள் பொன்னியின் கரையில் இலங்கும்.

பொன்னி வள அருமை

வேறு

கன்னிநன் னதிசெழும் கங்கை தன்னுடன்
கன்னியர் கலந்துநின்று ஆடக் காட்சிசேர்
பொன்னியில் முத்திரு புறம்கொ ழித்திடும்
பொன்னியில் வளம்எவர் புகல வல்லரே. 467

கங்கை முதலிய பல கன்னியரும் கலந்தாடுவர். இருபுறம் முத்துக் கொழித்திடும். இத்தகைய பொன்னி வளம் எவர் புகல வல்லார்?

வாளையின் செயல்

துன்னிய இருமருங்கில் சூழ்பலாச் சுளைகள் சிந்தி
இன்னியல் அரம்பை மோதி இளங்கமுகு ஒடியச் சாடி
உன்னிவால் எறிந்து மென்மேல் உகந்துஇள வாளை தாவும்
மன்னிய பொன்னி ஆற்றின் வளமை கண்டுஉளம் மகிழ்ந்தார் 468

துன்னிய -நெருங்கிய. அரம்பை - வாழை. சாடி-குதித்து. உகந்து - மகிழ்ந்து.

பொன்னி ஆடல்

இளகுபொன் மேனிஆட இணைக்கை யின்வளைகள் ஆடத்
துளகுமென் மருங்குல்ஆடச் சுடர்மணிப் பணிகள் ஆடப்
புளகமா முலைகள் ஆடப் புனைந்தபூ மாலை ஆட
அளகமா முகில்கள் ஆட ஆடினள் பொன்னி யாற்றில் 469

நீராடல் சிறப்பு. மணிப்பணிகள் - மணிகள் பதித்த நகைகள். புளகம் - மகிழ்ச்சி. அளகம் - கூந்தல்.

அணி நீரில் வீழ்தல்

சாற்றெழில் மணிப்பூண் மங்கை தன் அழகு என்னும் பூணால்
தோற்றிடும் துயரம் தன்னால் தோன்றிடாது இருத்தல் வேண்டி
ஆற்றினில் வீழ்வது என்ன அங்கவள் ஆகம் நீங்கிப்
போற்றி நின்று ஆடும் பொன்னிப் புனலிடம் புகுந்தது அன்றே

தங்கையின் அழகுக்குத் தோற்ற பூண், துயர் மிகுந்து மறுபடியும் உலகில் வெளிப்படாதிருத்தல் வேண்டி ஆற்றில் வீழ்ந்து தற்கொலை புரிதல் போல் அவள் உடம்பிலிருந்து பொன்னி நீரில் வீழ்ந்தது.

அணி வீழ்ந்ததற்குக் காரணம் கற்பித்தல்.

சோழன் எண்ணம்

துன்றிய பூணி மூழ்ந்ததோகைசென்று ஓதக்கேட்டுஆங்கு
ஒன்றிய மனத்தின் முன்னம் முன்னியது உன்னி நன்னீர்
சென்றிடும் இந்த ஆரம் செம்புநா தனுக்கே ஆக
என்றனன் மன்னர் சென்னி இசைந்திடும் கழல்கால் சென்னி

அரசனிடம் சென்று அப்பெண் சொல்லச் சோழன் ஒன்றிய மனத்தால் முன்னம் நினைத்தபடியே நீரில் சென்ற இந்த ஆரம் செம்புநாதற்கு ஆக வேண்டும் என எண்ணினான்.

அபிடேகக்குடத்தில் அவ்வணி போதல்

துடியிடைப் பணிதான் அண்ணல் சூடும்அப் பணியே போல
நெடிதுறு பொன்னி யாற்றின் நீருடன் விரைந்து போந்தே
அடியவர் எம்பி ரானுக்கு அபிடேகம் புரிவ தற்கே
கடிபுனல் மொள்ளும் அம்பொற் குடத்திடைப் போந்தது அன்றே

துடியிடை - அரசி. பணி - நகை. அண்ணல் சூடும் அப்பணி - சிவன் அணிந்த அப்பாம்பு. கடிபுனல் - மணமிக்க நீர். அம்பொற்கடம் - அழகிய பொற்குடம்.

ஆரம் சிவனுக்காதல்

ஆற்றினில் போந்த ஆரம் அபிடேக வேளை தன்னில்
ஊற்றுபொற் கலசம் தன்னில் உறுபுன லுடன்போய் வீழ்ந்து
சாற்றியே செம்புநாதன் தனக்கணி ஆனது என்றால்
போற்றியே சிவனுக்கு என்ற பொருள்அவம் போவது அன்றே

நீர் அபிடேகம் செய்யும் போது அவ்வாரம் செம்புநாதன் மேல் வீழ்ந்து அவனுக்குரிய தாயிற்று. அதனால் சிவனுக் கென்று குறித்த பொருள் வீண் போவதன்று.

அறத்தின் ஊதியம்

பொருந்தவக் கண்அ ணிந்த பொன்னரம் பொன்னி என்னும்
திருந்துநீர் இடைவி ழுந்து சேதமே புரிவது அல்லால்
தருந்திறல் செம்பு நாதன் தனக்குஅணி ஆகப் பெற்ற
இருந்தரு மத்தின் அன்றோ இலாபமே விளைத்தது அன்றே 474

அக்கண் - அவ்விடத்தில். சேதம் - கேடு.

செம்புநாதன் அணியாகப் பெற்றதால் பெருந் தருமத்தில் இலாபம் விளைந்தது.

சிவனுக்கு ஆரப் பூண்டான் என்ற பெயரமைதல்

வீரம்பூண்டு ஓங்கு மன்னன் மெல்லியல் விடுத்த ஆரம்
வாரம் பூண்டு உனக்கே என்ன வந்து அணிந் திடுத லாலே
நீரம்பூண் டிடும்எம் மானை நிறைபணி யாளன் என்னும்
ஆரம்பூண் டவன்தான் என்றும் அறைவர்இவ் அவனியோரே 475

மங்கை தொலைத்த ஆரத்தை அரசன் இறைவன் மேல் அன்பு பூண்டு உனக்கு அது அமைவதாக என எண்ணினான். அது அபிடேக நீரில் வந்து அமைந்தது. இதனால் ஆரம் அணிந்த சிவனை 'நிறைபணியாளன் எனவும் 'ஆரம் பூண்டவன்' எனவும் உலகோர் கூறுவர்.

பணியாளன் - நகை அணிந்தவன் என்ற பொருளுடன் பாம்புகளை அணிந்தவன் எனவும் இயற்கைப் பொருள்களை ஏவல் கொள்பவன் எனவும் இத்தொடர் பொருள் தருகிறது. அதனால் மங்கையணிந்த அணி நீரில் வீழவும் நீரில் வீழ்ந்த ஆரம் மஞ்சனநீரில் புகுந்து தன்மேல் வீழவும் ஏவற் பணி கொள்பவன் எனவும் கூறலாம்.

ஆரம் பூண்ட சருக்கம் முற்றும்

ஆகச் சருக்கம் 12

திருவிருத்தம்(1+) 474

திருச்சிற்றம்பலம்

பின்னிரக்கம் செய்த சருக்கம்

இச்சருக்கம் இறைவனை நிருதி வேண்டப் பின்னிரக்கம் செய்திடும் கதை கூறும்.

தேவசபையில் இந்திரன் முன் அரிச்சந்திரன் பொய் கூறான் என்று வசிட்டன் கூற அதனைக் கௌசிகன் மறுத்திட்டான். அரிச்சந்திரன் பொய் கூறின் இழிந்த பானத்தைப் பருகுவேன் என்று வசிட்டன் மொழியக் கௌசிகன் அரிச்சந்திரனைப் பொய் கூறச் செய்யாவிடின் பழிச்சொல் ஏற்பதாகச் சொன்னான். பல வழிகளில் கௌசிகன் முயன்றும் அரிச்சந்திரன் பொய் புகலாததால் தகாதபானம் அருந்திக் கௌசிகன் பழி எய்தினான்.

தன் மானத்தை அழித்த வசிட்டனை மாய்க்க, அவன் காட்டில் யாகம் செய்து அதில் எழுந்த அரக்கனை ஏவினான். அவ்வரக்கன் வசிட்டன் ஆசிரமம் சென்று அங்கு வசிட்டன் இல்லாததால் அவன் மகனைக் கொன்று வந்தான். மகன் மறைவினை ஆற்றாது வருந்தினான் வசிட்டன். அவன் முன் பிரமன் தோன்றி ஆற்றுவித்து வசிட்டனின் மகனுக்குப் பிறக்கும் குழந்தையால் அவன் குறை தீரும் என அருளினான். அவ்வாறே குழந்தை பிறந்ததும் அதற்குப் பராசரன் என்ற பெயரிட்டு அதற்குரிய கல்வியும் ஊட்டினான் வசிட்டன்.

வளர்ந்த குழந்தை தன் தந்தை, சுற்றத்தார் யார் எனக் கேட்கத் தாய் பழைய நிகழ்ச்சியைக் கூறி அரக்கனால் மடிந்ததைச் சொன்னாள். அது கேட்ட பராசரன் சினந்து அரக்கரைத் தீக்கிரையாக்கக் கருதி செம்பு தீர்த்தத்தில் மூழ்கிக் கடன்கள் செய்ய அவன் தந்தை அதனால் சிவபதம் சேர்ந்தான்.

பராசரன் யாகம் செய்ய அதில் அரக்கர் கூட்டம் வந்து வீழ்ந்தது. அப்போது நிருதியின் வாகனமாம் பேயையும் பராசரனின் மந்திர ஆற்றல் இழுத்துவர அதுகண்டு பொறாத நிருதி இறைவனிடம் முறையிட்டான்.

அவனுக்கு அருள் புரிந்த சிவன் அபயமளித்து வான்மொழியாகப் பராசரனிடம் யாகபிரேதத்தைப் பிச்சை கேட்டான். பராசரன் வேள்வி தருமப்படி அங்ஙனமே ஈந்திட நிருதியைச் சிவன் இரந்து பெற்றான். முன்னர்த் தேவரை ஆலகாலவிடத்திலிருந்து காக்க நஞ்சுண்ட பெருமான் அரக்கர் வாழ்வுக்கும் அருள் புரிந்தான்.

இறுதியில் சிவன் வேண்டுதற்கேற்பப் பராசரன் வேள்வியை விடுத்தான். இதனால் இத்தல இறைவற்குப் பின்னிரக்கஞ் செயும் பெருமான் என்ற பெயர் உண்டாயிற்று.

13. பின்னிரக்கம் செய்த சருக்கம்

மெய்திகழ் சோழன் தேவி விடுத்திட அடுத்த பொன்னி
எய்திடும் ஆரம் பூண்ட இயல்பினை இசைத்தோம் இப்பால்
மைதிகழ் நிருதி வந்து வணங்கிடப் பின்னி ரக்கம்
செய்திடு புராணம் தன்னில் செய்தியைச் செப்பு வோமே 476

ஆரம் பூண்ட செய்தியைக் கூறிப் பின் சொல்லப் போகும் இப்புராணம் கூறல்.

நிருதி - எட்டுத்திக்குப் பாலர்களில் தென்மேற்குத்திசைக் காவலன். புராணம் - பழங்கதை.

வசிட்டன்-கௌசிகன் மாறுபடல்

மெத்திய மனோக ரஞ்சேர் விண்ணவர் சபைஇ டத்தில்
புத்திகூர் முனிவ சிட்டன் புகழ்அரிச் சந்தி ரன்தான்
சத்திய மொழிவ றாதான் சகத்தினில் எனம றுத்தே
இத்திறம் உரைத்தல் பொய்என்று இசைத்தனன் கௌசி கன்தான்

மெத்திய - நிரம்பிய. மனோகரம் - அழகு. அரிச்சந்திரன் கதைக் குறிப்பு.

மொழிபெயர்ந்து அந்த மன்னன் மொழிவனேல் மொழிஞாத
இழியுறு பானம் செய்வன் யானென வசிட்டன் கூற
அழிவுற அதனைச் செய்யேன் ஆகில்நீ தான்உரைத்த
பழிமொழி யேற்கக் என்று பகர்ந்தனன் கவுசிகன்தான் 478

அரிச்சந்திரன் பொய்மொழியின் இழிந்த பானத்தைப் பருகுவேன் என வசிட்டன் கூறக் கௌசிகன் அதனைச் செய்யாவிடில் பழிச்சொல் தனக்கென்றான.

கௌசிகன் முயற்சி

பொய்தனை அந்த மன்னன் புகன்றிட வெகுளி தாம்சேர்
கைதவ மார்க்கம் எல்லாம் கருதிச்சங் கற்ப சித்தி
எய்திடு மாறு தன்னால் இயன்றிடு முயற்சி எல்லாம்
செய்தனன் கவுசி கன்தான் சிந்தையில் அழுக்கா று எய்தி 479

கைதவம் - சிறுமை. சங்கற்பசித்தி-நினைத்தது முடிதல். அழுக்காறு - பொறாமை.

அரிச்சந்திரன் வாய்மை

இகலறு நாடுஇ ழந்தும் ஈட்டிய பொருள்இ ழந்தும்
மகவினை விற்றும் கொண்ட மங்கையை விற்றும் சற்றும்
தகவிலாப் புலைய னுக்குத் தானும்சென் று அடிமை ஆயும்
புகழ்அரிச் சந்தி ரன்தான் புகன்றிலன் பொய்மை தானே. 480

இகல் - பகை. நாடு, பொருளிழந்து மகன் மனைவியை விற்றுத் தன்னை அடிமைப் படுத்தியும் பொய் சொல்ல வில்லை அரிச்சந்திரன்.

கௌசிகன் பழி எய்தல்

எய்திய மாயம் எல்லாம் இயற்றவும் இயற்கை ஆன
மெய்தரு மொழியை மன்னன் விடுத்திடாது இருத்த லாலே
கைதவ நெறிப யின்ற கவுசிகன் தகாத பானம்
செய்தனன் அதனைக் கண்டே சிரித்தனர் உலகில் உள்ளோர் 481

மெய்ம்மைப்பண்பு அரிச்சந்திரனிடம் இயற்கையாக இருப்பதை 'இயற்கையான மெய்' எனக் குறிப்பர். தகாத பானம் குடித்ததால் பழி எய்தினான் கவுசிகன்.

ஆபிசார வேள்வி புரிதல்

ஈனமாம் மதுஅ ருந்த இவ்வண்ணம் தன்னை இங்கு
மானபங் கம்பு ரிந்த வசிட்டன்ஆர் உயிரை வாங்கக்
கானக மீதில் போந்து கௌசிக முனிவன் தானும்
ஊனமில் ஆபி சாரம் உறுவேள்வி புரியல் உற்றான் 482

தன் மானத்தை அழித்த வசிட்டனை மாய்க்கக் காட்டில் கௌசிகன் ஆபிசார யாகம் செய்தான்.

ஆபிசாரம் - பிறர்க்குத் தீங்கு செய்ய மந்திரத்தைப் பயன் படுத்தல்.

வசிட்டனைக் கொல்ல அரக்கனை ஏவல்

ஆன்றிடும் ஓம குண்டத்து அனலினில் அனற்க ணங்கள்
கான்றிடு கனல்க ளும்செங் கரம்பெறு வாளும் ஆகித்
தோன்றிடும் அரக்கன் தன்னைச் சுருதிமந் திரத்தி னாலே
ஊன்றிடு நரவ சிட்டன் உயிர்ப்பலி கொளவி டுத்தான் 483

ஆன்றிடும் - மாட்சிமைப்பட்ட. கான்றிடும் - வெளியிடும். கண்ணில் தீயும் கையில் வாளுமாய் அரக்கன் தோன்றல். சுருதி - வேதம். நரவசிட்டன் - மனிதனாம் வசிட்டன்.

வசிட்டனின் மகனைக் கொல்லல்

நினைந்தெழும் அரக்கன் தானும் நெறிகொள்ஆச் சிரமம் ஆன
வனந்தனில் சென்று தேடி வசிட்டனைக் காணான் ஆகி
அனந்தல்கூர் அவன்தன் மைந்த னவன்வடிவு ஆகை யாலே
சினந்தனில் வதைத்தான் ஆவைச் சீறுவெம் புலியது என்ன 484

ஆசிரமம் சென்று அரக்கன் தேடி வசிட்டனைக் காணான். அங்கு உறங்கும் (வசிட்டனின்) மைந்தனை அவனெனக் கருதிக் கொன்றான்.

அனந்தல் - தூக்கம். பசுவைக் கொல்லவந்த புலிபோல் கொன்றான். சினவேகம், பசுவைக் காணாது கன்றைக் கொன்றது போல எனக் கொள்ளலாம்.

வசிட்டன் புலம்பல்

அவ்விடத் தினில்தன் மைந்தன் ஆவிபோய்க் கிடத்தல் கண்டே
இவ்விடத்து இதுவி ளைந்தது ஏதுஎன வசிட்டன் ஏங்கிக்
கைவிதிர்த்தது அலறி மார்பில் கண்கள்நீர் சொரிய வீழ்ந்து
மெய்விதிர்த்து அயர்ந்துஅ னேக விதம்தனில் புலம்பல் உற்றான்

மகன் இறந்ததைக் கண்ட வசிட்டன் காரணம் அறியாது வருந்திப் புலம்பினான்.

ஏங்குதல், கைவிதிர்த்தல், அலறுதல், கண்ணீர்விடல், மெய்விதிர்த்தல், அயர்தல், புலம்பல் ஆகிய செயல்கள் அடுக்கி வந்துள்ளன.

உன்னையே நம்பு கின்ற ஒண்தொடி கருப்பங் கண்டு
முன்னையோர் செயும்ச டங்கின் முறைமையின் நிறைவேற் றாமல்
தன்னைநேர் சத்தி யேநின் தாய்தமர் தன்னை அல்லாது
என்னையும் மறந்து நீதான் ஏகுதி எங்கே என்றான் 486

சத்தி - வசிட்டன் மகன். ஏகுதி - செல்வாய்.

சத்தியின் மனைவி கருப்பமுற்ற செய்தி முதலடியில் தெரிகிறது. மகன் தன்னை ஏன் மறந்தான் எனத் தந்தை உள்ளம் வருந்துகிறது.

மித்திரர் மாதர் மைந்தர் வியம்கிளைச் செல்வம் அற்று
மத்திரம் என்று நாடும் மகவுள வசிட்டன் தானும்
குத்திர அரக்கன் கொன்ற குமரனுக்கு இரங்கி நின்றான்
புத்திர சோகம் யார்க்கும் போக்குதற்கு எளியது அன்றே 487

மித்திரர் - நண்பர். வியங்கிளை - ஏவுதற்குரிய சுற்றத்தார். மத்திரம் - மகிழ்ச்சி. குத்திரம் - வஞ்சகம்.

பிரமன் கூற்று

மங்குமா சறுவ சிட்டன் வருந்திட மலரோன் தோன்றிப்
புங்கவ! வருந்தேல் உன்தன் புதல்வனில் அறிவு மிக்கான்
இங்குநின் சத்தி மங்கை இசைந்த் கெற்பத்து உதிப்பன்
அங்குஅவன் தன்னால் நீயும் ஆற்றுதி துயரம் என்றான் 488

மங்குமாசற - புகழ் குறையாத. மலரோன் - பிரமன். புங்கவ - முனிவனே! ஆற்றுதி - மனக்குறை பொறுப்பாயாக. சத்தியின் மனைவியிடத்தில் பிறப்பவன் வசிட்டனின் குறைதீர்ப்பான் எனப் பிரமன் கூறுதல்.

குழந்தை பிறத்தல்

படர்ந்திடும் அம்பு ராசி பருகஓர் முனிவன் வந்து
கடந்தனில் உதித்தல் போலக் கார்உடல் அரக்கன் சுற்றம்
தடர்ந்திட அரக்க னால்முன் ஆருயிர் இழந்த வன்தன்
மடந்தைதன் வயிற்றில்இங்கோர்மைந்தன்வந்துஉதயம்செய்தான்

அம்புராசி - கடல். கடம் - குடம்.
கடலைக் குடிக்க அகத்தியன் குடத்தில் தோன்றியது போல் இக்குழந்தை பிறத்தல்.

வசிட்டன் கற்பித்தல்

தெரிந்திடும் சாத கன்மம் செய்தபின் சிந்தை தன்னில்
பரிந்தரு மைந்த னுக்குப் பராசரன் என்று நாமம்
புரிந்தபின் வசிட்டன் தானும் புத்திர சோகம் நீங்கி
விரிந்திடும் அங்கம் ஆறும் வேதமும் ஓது வித்தான் 490

சாதகன்மம் - பிறந்த குழந்தைக்குச் செய்யும் சடங்குகள். குழந்தைக்குப் பராசரன் எனப் பெயரிட்டு வேதமும் ஆறங்கமும் கற்பித்தல்.

ஆறங்கம் - சிட்சை, வியாகரணம், சந்தசு, நிருத்தம், சோதிடம், கற்பம்.

பராசரன் வேள்வி

நாளிணை மதியம் என்ன நலம்தரு பருவம் தன்னில்
தோளிணை துணை இழந்து துயருறும் அன்னை தன்னைத்
தாளிணை உறவ ணங்கித் தந்தையார் தமிய னேற்குக்
கேளிர்ஆர் எனஇவ் வாறு கேட்டனன் கேள்வி மிக்கான் 491

கேளிர் - சுற்றம். கேள்வி - வேதம். முழுமதிபோல் வளர்ந்த பருவத்தில் கணவனை இழந்து துயருறும் தன் தாயின் அடிவணங்கி தந்தை யார்? சுற்றத்தார் யார்? எனக் கேட்டான்.

தாயின் விடை

முந்தைநன் னெறிவ சிட்டன் மூதாதை ஆம்அ வன்தன்
மைந்தனாம் சத்தி என்னும் மாமுனி ஈங்குஉ னக்குத்
தந்தைஅங்கு அவன்தான் கோபம் தன்னில் கௌசிகன் விடுத்த
அந்தஓர் அரக்கன் தன்னால் ஆருயிர் இழந்தான் என்றாள் 492

மூதாதை வசிட்டன், தந்தை சத்தி என்றும் தாய் பராசரற்குக் கூறினாள். பின் கௌசிகன் விடுத்த அரக்கன் சத்தியைக் கொன்றதையும் கூறினாள்.

பராசரன் எண்ணம்

அருகுற இவ்வாறு ஓதும் அன்னையை வசிட்டன் தன்னைப்
பெருகும்அன் புடன்வ ணங்கிப் பெருந்திறல் பராச ரன்தான்
பொருபடை அரக்கர் தம்மைப் பொங்கழற்கு இரையது ஆக்கி
வருகுவேன் என்றுஉ ரைத்து மண்ணிடை வந்துஇ ழிந்தான் 493

ஓதும் - கூறும். பொருபடை – போர்புரியும் படை.

அரக்கரைத் தீயிற்குஇரை ஆக்குவேன் எனக் கூறினான் பராசரன்.

பராசரன் ஆனைக்கா அடைதல்

நலம்பயில் பராச ரன்தான் நானிலம் தன்னில் உள்ள
தலம்பல திரிந்துஉ ழன்று தலைமையா னவையே நாடி
நிலம்பெறு புகழ்சேர் பொன்னி நெடுந்தடம் தன்னில் எய்தி
அலம்பெறு தெண்ணீர் ஆடி அடைந்தனன் ஆனைக் காவில் 494

நானிலம் - உலகம். பராசரன் பல இடங்களிலும் சென்று தலைமையானவற்றையே விரும்பினான். நெடுந்தடம் - பெருமைமிக்க நீர்த்துறை. அலம்பெறு-பொங்கித் ததும்புகிற. தெண்ணீர் - தெளிந்த நீர்.

தந்தைக்குக் கடன் கழித்தல்

நிறைதரு செம்பு தீர்த்த நெடுந்தடம் தன்னில் மூழ்கி
மறையவர் அனுச்சை பெற்று வழிநெறி வழுவா வண்ணம்
குறைவறப் பிதாவி னுக்குக் குமாரன்தான் செய்யத்தக்க
முறைதரு கடன்கள் எல்லாம் முடித்தனன் முதுநூல் வல்லான் 495

செம்பு தீர்த்தத்தில் பராசரன் மூழ்குதல். அனுச்சை - அனுமதி. தந்தைக்கு மகன் செய்யும் கடன்களெல்லாம் வேதத்தில் வல்ல பராசரன் செய்து முடித்தான்.

பராசரன் தந்தை சிவபதம் அடைதல்

எந்தைஈடு ஏற வேண்டும் எனமுயல் பராச ரன்பால்
தந்தையும் ஏறு பூண்ட தமனிய விமானத்து எய்தி
நிந்தைகூர் துன்பம் எல்லாம் நீங்கினன் நின்னால் என்றே
சிந்தைகூர் மகிழ்ச்சி ஓங்கச் சிவபதம் தன்னில் சேர்ந்தான் 496

ஏறு - சிங்கம், எருதுமாம். தமனியம் - பொன். கூர் - மிகுதி. சிவபதம் - சிவபக்தர்கள் தத்தம் நிலைக்கேற்ப அடையும் தானாளுலகில் இருத்தல், தன்பாலிருத்தல், தானாம்பதம் பெறல், தானாகுதல் ஆகிய நால்வகைச் சிவபதவி.

பராசரன் தலஇறைவனையும் இறைவியையும் வணங்கல்

அன்னியம் அறவி ளங்கும் அகிலாண்ட மாதி னோடு
நன்னிலவு அணிந்த செம்பு நாதனை வணங்கிப் போற்றி
முன்னிய கருமம் முற்றும் முடிப்பதற்கு அனுச்சை பெற்றே
சன்னிதி அமைந்த யாக சாலையில் வந்து சேர்ந்தான் 497

அன்னியம் அற - வேறுபடாமல் ஒன்றாக, நன்னிலவு அணிந்த-நல்ல பிறைமதி சூடிய. அனுச்சை - இறைஅனுமதி.

பராசரன் வேள்வி புரிதல்

இழிவினால் தந்தை தன்னை இராக்கதன் ஒருவன் கொன்ற
பழியினை முடிப்ப தற்கே பராசர முனிவன் என்பான்
அழிவுறாக் கழுதுஅ ரக்கன் அறுபதமது அங்கம் என்ன
ஒழியவே கருத்தில் உன்னி ஒருவேள்வி புரியல் உற்றான் 498

தந்தையைஅரக்கன் கொன்ற பழியை முடிக்க எண்ணல். கழுது - பேய். அறுபதம்-வண்டு. அங்கம் - உறுப்பு, கூட்டம்.

நிருதியின் பேயைப் பராசரன் மந்திரம் இழுத்தல்

வேறு

விரித்திடும்அவ் அரக்கர் எல்லாம் வேள்விஅழல்
இடை வந்து வீழ்ந்தே மிக்க
குருதிதசை அளவடிவுகுன் றநெடும்
குன்றுஎனவே குவியும் போதில்
நிருதிஅடல் வாகனமாம் நெட்ட லகைதனைக்
கடிது நெடிதில் சென்றே
வருதிஎனப் பராசரன் தன் மந்திரம்தான்
கடிதுஇழுத்து வந்தது அன்றே 499

பராசரன் வேள்வியில் அரக்கர் கூட்டம் வந்து வீழ்ந்து இரத்தம் தசை குன்றிக்குன்றெனக் குவியும்போது நிருதியின் வாகனமான பேயைச் சென்று பராசரன் மந்திரம் இழுத்து வந்தது.

நிருதி சிவனை அடைதல்

வேறு

உடைக்கலம் எனத்தன் ஊர்தி உறும்கனல் தன்னில் என்றே
படைக்கலம் எவையும் நீத்துப் பாதவித்து அரக்கர் கோமான்
சடைக்கலர்க் கொன்றை வைத்த சம்புவே செம்பு நாதா
அடைக்கலம் ஐயா என்றே அலறிவந்து அடியில் வீழ்ந்தான் 500

தன்வாகனம் நெருப்பில் விழப் பரதவித்து அரக்கர். கோமான் சம்புநாதனிடம் அடைக்கலம் புகுந்தான்.

அபயவுரை

அயர்வுசெய் புரமெ ரித்த ஐயனே! அபயம் சிந்தை
மயல்செய் மதனை வென்ற மத்தனே! அபயம் நால்வர்க்கு
இயலுடன் தமிழ்உ ரைத்த ஈசனே! அபயம் நெற்றி
நயனனே அபயம் செம்பு நாதனே! அபயம் என்றான் 501

அயர்வு - மயக்கம். புரம் - திரிபுரம். மதன் - மன்மதன். மத்தன் - சிவன். நால்வர்க்குத் தமிழ் உரைத்த பெருமை சுட்டப்படுதல். நயனனே - கண்ணை உடைய சிவனே.

முறையீடு

வேறு

கைதவமாய வசிட்ட முனிதன்னைக் கொல்லக்
கருதியிடு வேள்விநெடும் கனவில் தோன்றும்
மைதிகழும் அரக்கனைத் தான்வர விடுத்த
மாமுனிதான் இருக்க அவன்வழிச் செல்லாமல்
எய்தவரை நோகாமல் அம்பை நொந்தே
இராக்கதர்தான் வீணிலே இறக்க வேள்வி
செய்ததும்இங்கு இதுநடுவோ தேவ ரீர்க்குத்
திருவுளமோ முறையோ என் செய்கேன் என்றான் 502

கைதவம் - வஞ்சகம். மை - கருமை. எய்தவரை நோகாமல் அம்பை நோவதுபோல் விடுத்த கௌசிகனை ஒன்றும் செய்யாமல் அவன் ஏவிய அரக்கனையும் அவன் குலத்தையும் கொல்வது நீதியா எனக் கேட்கிறான்.

சிவன் அருள் புரிதல்

வேறு

படைத்திடும் உலகம் எல்லாம் பாதுகாத் தலும் அனைத்தும்
துடைத்தலும் என்னும் மும்மைத் தொழில்புரி செம்பு நாதன்
கடைத்தலை வந்தோன் தன்னைக் காத்திடத் திருவுள்ளத்தில்
அடைத்தனர் அடைந்தோர் துன்பம் தரிப்பரோ அருளின்மிக்கார்

முத்தொழிலாம் படைத்தல், காத்தல், அழித்தல் எல்லாம் சம்புநாதனாம் சிவனின் தொழில் எனல்.

கடைத்தலை - தலைக்கடை. அரக்கனைக் காக்க மனத்தில் எண்ணினான் சிவன். அருள் மிகுந்தவர் தம்மை அபயமாக அடைந்தவர் துன்பத்தைப் பொறார் என்ற உண்மை கூறல்.

சிவன் கூற்று

வெயிலுறும் அனற்கண் அந்த வெயிலினும் கொடி-தாம் எம்மைப்
பயில்பவர் எம்மின் மிக்க பான்மையர் ஆத லாலே
செயலும்அச் செயல்கள் நம்தம் செயலாகும் அவர்மு னிந்தால்
எயில்எனக் காப்பதற்கு இங்கு யாவர்க்கும் எளியது அன்றே 504

சிவன் கூற்று : வெப்பமிக்க தீ வெயிலைவிடக் கொடிது. அதுபோல எம்மைவிட எம்மை விரும்புவோர் உயர்வுடையவர் ஆதலால் அவர் செயல்கள் நம் செயலாகும். அவர் கோபித்தால் கோட்டைபோல் காப்பதற்கு யாராலும் முடியாது எனல்.

பேயெனும் ஊர்தி சுற்றம் பிழைத்திட வேண்டும் என்றே
நீயும்என் சரணம் என்று நின்தனை நம்பால் வந்தே
தீயினும் கொடுந்த வத்தோன் செப்புமந் திரமோ தப்பாது
ஆயினும் அஞ்சல் செய்வோம் என்றனன் அகண்ட நாதன் 505

ஊர்தி-வாகனம். நீயோ சரணம் என்று என்னிடம் வந்து நின்றாய் தவத்தோன் மந்திரமோ தப்பாது. எனினும் காப்பேன் என்றான் சிவன்.

சிவன் பிச்சை கேட்டல்

வேறு

முந்துபெரும் கருணையினான் முக்கண்ணான் மீண்டும்அந்த
முனிவன் தன்பால்
வந்திலகும் வானகத்தில் வசீகரிக்கும் அசரீர வசன மாக
பிந்திவரும் இங்கொக்கு பிரேதத்தை எமக்குஇன்று பிச்சையாகத்
தந்திடுதல் வேண்டுமெனச் சாற்றுமொழி தனைக்கேட்டான்
தவத்தின் மிக்கான் 506

சிவன் வான்மொழியாகப் பிரேதத்தைத் தமக்குப் பிச்சையாகக் கேட்டான். அதனைப் பராசரன் அறிந்தான்.

பராசரன் கொடுத்தல்

அவ்வகைஆம் அசரீரி ஆனமொழி செவிப்புலன்
சென்றுஅடைய ஆங்கே
உய்வகைதான் இராக்கதர்செய் உபாயம்சொல் ஈதுஎன
வே உரைக்க மற்றோர்
எவ்வகையும்வேள்வியில்வந்துஏற்பவர்க்கு இங்குஇல்லை என்கை
இயல்போ அன்றே
சைவமுனி பராசரன்அச் சவம்தனைஇங்கு உனக்குநான்
தந்தேன் என்றான் 507

அசரீரி செவியில்பட அரக்கர் உபாயம் இது என்றனர் மற்றோர். எனினும் வேள்வியில் ஏற்பவர்க்கு இல்லை எனல் கூடாதெனப் பராசரமுனி 'சவத்தை உனக்குத் தந்தேன்' என்றான்.

சிவனடியார் பெருமை

வேறு

உரிமையாம் நிருதி ஏறும் ஊர்தியைப் பராச ரன்பால்
அருமையால் ஐயம் ஏற்றான் அரியஅயற்கு அரியோன் என்றால்
இருமையும் உதவு கின்ற எம்பிரான் அடியார் தங்கள்
பெருமையை உலகு தன்னில் யாவரே பேச வல்லார் 508

நிருதி ஏறும் ஊர்தியைச் சிவன் பிச்சையாக ஏற்றான் எனில் இறைவன் அடியார் பெருமையை யார் சொல்ல வல்லார்?

அரக்கன் வேண்டல்

நொந்துஇரப் பதற்குஇரங்கி நுடங்கிடா இடம்க வர்ந்தே
இந்திராதிக்கு அமுதுஅ ளித்த எந்தையே செம்பு நாதா
தந்திரப் பராச ரன்தான் சங்கார வேள்வி செய்யும்
மந்திரக் கொடுமை தன்னை மாற்றிடல் வேண்டும் என்றான் 509

தேவர்கள் வருந்தி இரந்ததால் சிவன் நஞ்சுண்டு இந்திரர் முதலியவர்க்கு அமுதளித்த கருணையை அரக்கன் சுட்டுதல் தனக்கும் தன்னினத்தார்க்கும் சங்கார வேள்வி மந்திரத்திலிருந்து தப்புதற்கு அருள் வேண்டியதாம்.

சிவன் வேள்வியைத் தடுத்தல்

சலமுடன் கொலைவி ளக்கும் தறுகாண்மை அரக்கர் தங்கள்
குலமெலாம் கவளம் ஆகக் கொள்ளுநின் வேள்வி தன்னில்
சிலர்ஒழிந்து அரக்கர் ஆவி சிதைந்தனர் செற்றம் செய்தல்
அலம் அலம் என்றுஉ ரைத்தான் அருட்கடல் ஆகும் எங்கோன்

சலம் - வஞ்சனை. தறுகாண்மை - கொடுமை. அரக்கர் குலத்தைக் கவளமாகக்கொண்டு வேள்வி உண்டது. அலம் அலம் - போதும் போதும் இது சிவன்கூற்று.

பராசரன் வேள்வி தவிர்த்தல்

கலகமாம் மதவேள் ஆகம் கனல்எழக் கணத்தில் செற்ற
திலதமார் விழியோன் கூறும் திருவார்த்தை தனைமேற் கொண்டே
வலல்உறும் அரக்கர் தம்மேல் வைத்திடு வைரம் தானும்
சலம்உறு வேள்வி தானும் தவிர்ந்தனன் தவத்தின் மிக்கான் 511

கலகமாம் - மக்கள் மனத்தில் கலகமாய் விளங்கும். மதவேள்ஆகம் - மன்மதனின் உடல். திலதம் - நெற்றிப் பொட்டு. வைரம் - பழிவாங்கும் பகை.

சிவன் சொல்கேட்டுப் பராசரன் வேள்வியை விடுத்தான்.

பின்னிரக்கம் செயும் பெருமான் என்ற பெயர்பெறல்

வேறு

ஏர்பெற்ற பராசரன்தான் இராக்கதரைக்
கொல்வேள்விக்கு இசைந்திருந்தும்
பேர்பெற்ற நிருதிதொழப் பின்னிரக்கம்
செய்தருளும் பெற்றியாலே
வேர்பெற்ற வெண்ணாவல் விரிநிழலில்
இனிதுஇருக்கும் விமலனார்க்குச்
சீர்பெற்ற பின்னிரக்கம் செயும்பெருமான்
எனும் நாமம் சிறந்தது அன்றே 512

ஏர் - பெருமை. பெற்றி - தன்மை. விமலன் - சிவன்.

பின்னிரக்கம் செய்த சருக்கம் முற்றும்

ஆகச் சருக்கம் 13 திருவிருத்தம் (3+) 511

சிவன்செயல் திருச்சிற்றம்பலம்.

சிலந்தி முடின சருக்கம்

இச்சருக்கம் சிலந்தியைக் கோச்செங்கட் சோழ அரசனாக ஆக்கி முடிசூட்டிய செய்தி கூறும்.

கயிலாயத்தில் புட்பவந்தன் மாலியவான் எனும் இரு சிவகணங்கள் இறைவற்குப் பூசை செய்வதில் பொறாமை கொண்டு ஒருவர் பறித்த பூவை மற்றவர் கவர்ந்தனர். கோபமுற்ற மாலியவான், புட்பவந்தனை யானை ஆகுமாறு சபித்தான். அது பொறாத புட்பவந்தன் மாலியவானை சிலந்தியாய்ச் சபித்தான். இருவரும் சாபத்திலிருந்து விடுதலை பெறச் செம்புவனம் சென்று பூசை செய்யுமாறு இறைவன் அருளினான்.

செம்புவனத்தில் புட்பவந்தன் வெள்ளானையாய்த் தோன்றிச் சந்திர தீர்த்தத்தில் மூழ்கிச் செம்புவன இறைவனை அருச்சனை செய்து வணங்கி வந்தான். இச்சருக்கத்தில் யானை செய்த பூசை மிகச் சிறப்பாகக் கூறப்பெற்றுள்ளது.

மாலியவான் வெண்ணாவலில் சிலந்தியாய்த் தோன்றி இறைவன் மீது இலைச் சருகு படாவண்ணம் தன் வாய் நூலால் பந்தரிட்டான். யானை மலர் சாத்தும்போது அவ்வலையை நீக்கிப் பூசை புரிந்தது. பந்தர் சிதைந்தது கண்ட சிலந்தி சினந்து மறுபடியும் பந்தரிட்டது. நாளும் அது போல் தன் வலை சிதைவது கண்டு சிதைப்போரை அழிக்கக் காத்திருந்தது. மறுநாள் வந்த யானை வலையைச் சிதைத்தல் கண்டு சினம் கொண்ட சிலந்தி யானையின் புழைக்கை வழியே புகுந்து அதனைக் கடிக்க யானை வீழ்ந்திறந்தது. அத்துடன் சிலந்தியும் இறந்தது. இறைவனருள் யானைக்குக் கிட்டச் சிவ பதவி பெற்றதுடன்

இத்தலம் 'ஆனைக்கா' என்ற பெயரும் பெற்றது. மாலியவானாம் சிலந்தி மன்னனாய்ப் பிறந்து பணிசெய்யச் சிவனை வேண்டியது. அவ்வாறே அதனைச் செங்கணான் ஆகுமாறு இறைவன் அருள் புரிந்தான்.

தில்லையில் ஆண்ட சுபதேவன் கமலவதி என்பார்க்கு மைந்தனாகப் பிறந்தான். அப்போது நல்ல நேரத்தில் குழந்தை பிறத்தற்காகத் தாயின் காலைத் தூக்கிக் கட்டியதால் கண் சிவந்து குழந்தை பிறந்தது. எனவே அதற்குச்செங்கணான் எனப் பெயர் இட்டனர். அவன் அரசனாகி முடிசூடினான். அரசுப் பேற்றைவிட இறைவன் பணியே சிறந்ததென ஆனைக்காவில் கோவில் கட்டினான். சாலகம் அமைத்ததால் இறைவனுக்குத் திருச்சாலகத் தொளிரும் பிரான் என்ற பெயர் அமைந்தது. அதன் வழியே இறைவனை வணங்கினோர் ஒன்பது தீர்த்தங்களில் ஆடிய பயனை அடைவர். செங்கணான் பல கோபுரங்கள் எடுத்தான், நாட்டிய சாலை அமைத்தான். மண்டபங்களை மகர தோரணங்களுடன் கட்டித் தன் பெயர்பெற்ற இலிங்கத்தைத் தாபித்தான். விழாவும், மகா பூசையும் நடைபெறச் செய்து, பதினெட்டு மடம் கட்டினான். தன் செல்வம் யாவும் செம்பு நாதனுக் களித்தான். மேலும் பல தலங்களில் 78 களிறேறாக் கோயில்கள் கட்டினான். இறுதியில் தில்லையில் இறைவனடி சேர்ந்தான்.

இவ்வாறு சூதமுனிகூற முனிவர்கள் கேட்டு இத்தலம் நோக்கி வணங்கினர். தலம், அம்மை, ஆதரித்தவள்ளல், இறைவன் ஆகியோரை வாழ்த்தி இப்புராணம் முடிகிறது.

14. சிலந்தி மூடின சருக்கம்

புலம்பல் கண்டிரங்கி ஏறும் புரவியாம் அலகை தன்னை
நலம்பெற நிருதிக்கு எங்கோன் நல்கியது உரைத்தோம் இப்பால்
குலம்பெறு செங்கணானாம் கொற்றவன் ஆவ தற்கே
சிலந்தியை மவுலிசூட்டும் செய்தியின் சிறப்பு உரைப்பாம் 513

பின்னிரக்கம் செய்த கதை கூறிப்பின் சிலந்தியை அரசனாக்கும் செய்தி கூறுதல்.

எங்கோன் - சிவபெருமான். மவுலி-முடி.

புட்பவந்தன் மாலியவான் மலர்வனம் புகுதல்

வணங்குறா வடிவு பெற்ற அடல்புட்ப வந்தன் தானும்
மணங்கமழ் தொடையல் உற்ற மாலிய வானும் என்னும்
கணங்கள்தாம் இருவர் தாமும் கயிலைவாழ் பரமன் பூசைக்கு
இணங்குமென் மலர்கள் கொய்ய இமையவர் வனத்தில் போந்தார் 514

புட்பவந்தன் மாலியவான் என்போர் இறைவன் கணங்கள். பரமன் பூசைக்கென மலர்கொய்யத் தேவர் தம் வனத்தில் சென்றனர்.

மாலியவாசன் சாபமீடல்

விதத்துநன் மலர்மா றாடி இயம்பிய புட்ப வந்தன்
இதத்தசொல் மொழியான் ஆகி இகல்மா லியவான் நோக்கி
மதத்தில்என் மலர்க வர்ந்தாய் மதவேழ மாகி மிக்க
கதத்துடன் உழல்வாய் என்றே உரைத்தனன் கடிய சாபம்

பூசைக்கு எடுத்த மலர்களைக் கவர்ந்ததால் மாலியவான் புட்பவந்தனை யானை ஆகுமாறு சாபமிடல்.

இதம் - இனிமை. வேழம் - யானை. கதம் - கோபம்.

புட்பவந்தன் சாபமிடல்

வாக்கது கேட்ட புட்ப வந்தன்மா லியவான் தன்னை
நோக்கியே மலருக் காக நுவன்றனை கொடிய சாபம்
ஆக்கமாய் அரனைச் சாத்தும் மலரினைப் பழுது செய்யும்
திக்குணம் மருவு கின்ற சிலந்தியாய்ப் பிறப்பாய் என்றான்

புட்பவந்தன் அதுகேட்டு மாலியவானைச் சிலந்தியாகுமாறு சபித்தல்.

நுவன்றனை-சொன்னாய். மருவுகின்ற-பொருந்துகின்ற.

இருவரும் கயிலை செல்லல்

வீறிய மலர்கள் கொய்தே வெவ்வேறு அங்கு அமைத்த தன்பின்
மாறிஅவ் இருவர் தம்மில் மலர்தனைக் கவர்த லாலே
கூறிய சாபத் தோடு கொடியவெஞ் சினமும் கொண்டே
ஏறினர் கயிலை வாழும் இறைவன்முன் இருவர் தாமும் 517

மலர்களைக் கவர்ந்த வினையுடன் சாபமும் சினமும், கொண்டு கயிலைக்குச் சென்றனர் இருவரும். வீறிய - சிறப்புள்ள.

சிவன் கூற்று

ஈசனும் அவர்கள் தாம்வந்து இயம்பிடு மொழியைக் கேட்டே
நேசமோடு அவரை நோக்கி நீங்கிடாச் சாபம் நீங்க
வாசமது உலவும் செம்பு வனந்தனில் சென்று நம்மைப்
பூசனை புரிந்து சாபம் போக்குமின் எனப்பு கன்றான் 518

ஈசன் இருவரையும் செம்புவனம் சென்று தன்னைப் பூசனை செய்து சாபம் போக்கக் கூறினான்.

புட்பவந்தன் யானையாய்ப் பிறத்தல்

வளங்குல வியநீள் செம்பு வனத்தின் உத்தர திசைக்கண்
விளங்குவெள் வரையின் மற்றோர் வெள்வரை என்னச் சிந்தை
துளங்கிய புட்ப வந்தன் தொன்மையில் சாபம் தன்னால
உளங்கொள் வெள்ளானை ஆய்வந்து உதித்தனன் உலகம் எண்ண 519

செம்புவனத்தின் வடதிசையிலுள்ள வெண்குன்றுபோல் புட்பவந்தன் வெள்ளானையாய்த் தோன்றினான்.

வெள்வரையின் - வெள்ளைக் குன்றுபோல். துளங்கிய - விளங்கிய.

யானை செம்புவனம் சேர்தல்

இந்திரன் வேழம் என்ன இகல்பெறும் அந்த வேழம்
சந்திர தீர்த்தம் தன்னில் தாழ்ந்துறப் படிந்து மூழ்கிச்
சுந்தர அமுத லிங்கம் தொழுதுஅருச் சிக்க வேண்டி
மந்திர முழங்கும் செம்பு வனம்தனில் சேர்ந்தது அன்றே 520

இந்திரன் வேழம் - ஐராவதயானை. இகல் - பகை. சந்திர தீர்த்தத்தில் இந்த யானை மூழ்கி அமுதலிங்கத்தை அருச்சிக்கச் செம்புவனம் சென்றது.

யானையின் செயல்

தருவடி நிழல் வாழும் செம்புவின் ஆலயத்தைப்
பருவடி அதனால் பைம்புல் பற்றையை எற்றிச் சுற்றும்
திருவடி வாரம் இட்டுத் திருவலத இட்டு வாலான்
மருவடி மைத்திறத்தான் மதங்கொடு தெளிக்கும் அன்றே.

தரு - நாவல் மரம்.

பரிய காலால் புல்லை எற்றிச் சுற்றும் கரையிடும் வாலால் கூட்டி, மதநீரால் தெளித்து நிற்கும்.

திருமுழுக்கு

பெருகுறும் இறால்எடுத்துப் பிழிந்த செந்தேனினாலும்
திருகுறு கன்னல் தண்ணீர்த் தெளிந்துஉந சாற்றினாலும்
பருகுறு துதிக்கை கொண்டு பாரிக்கும் தெண்ணீராலும்
அருகுறும் அமுத லிங்கத்து அபிடேகம் புரிந்தது அன்றே. 522

இறால்-தேனடை. கன்னல் தண்ணீர். கரும்பின்குளிர்ந்த சாறு பாரிக்கும் - பரப்பும்.

அமுதலிங்கத்திற்குத் தேன், கரும்புச்சாறு, தெளிந்த நீர் ஆகியவற்றை யானை அபிடேகம் செய்தல்.

திருவமுது

குறித்திடு தடாக மேவும் கோகன கங்க ளோடே
முறித்திடும் தழைப யின்ற மொய்ம்மலர்க் குவையும் சாத்திச்
செறித்தபல் கனியின் நைவேத் தியமுடன் திருகி எட்டிப்
பறித்திடு நாளி கேரம் பானியம் உதவும் அன்றே 523

கோகனகம் - தாமரை. குவை - குவியல். செறித்த - நெருங்கிய. நாளிகேரம் - தென்னை. பானியம் - பானம் (தீர்த்தம்). இறைவனுக்கு நைவேத்தியம் படைத்த நிலை.

பூசனை

பரவிய கானல் தீயில் பற்றிய அகிலி டத்து
விரவிய புகையே நாளும் விரைநறும் தூப மாக
விரவுஎரி மரமே மீதில் ஏந்திய தீப மாகப்
புரைவுஅற எம்பி ரானைப் பூசனை புரிந்தது அன்றே 524

கானல் - காடு. அகில் புகை தூபமாயிற்று. எரிமரம் - தீபமரம். இம்மரம் விளக்காயிற்று. புரைவற - குற்றமின்றி. தூப தீபம் காட்டிய நிலை.

கண்ணாடி, குடை, கவரி

தீமரு உறாத சிந்தை சிறந்தகண்ணாடி ஆக்கிப்
பூமரு வியதடத்துப் பொங்குநீள் காம்பு பெற்ற
தாமரை இலையே அம்பொன் சத்திரம் ஆக்கிப் பூகக்
காமரு வியவெண் பாளை கவரியாய் இரட்டும் அன்றே 525

சத்திரம் - குடை. பூகம் - கமுகு. நற்சிந்தை கண்ணாடியாகவும் தாமரையிலை பொற் குடையாகவும், கமுகின் பூ கவரியாகவும் கொண்டு வெள் யானை பூசனை செய்தது,

ஆலவட்டம், செபவடம், அருச்சனை

விரிந்திடும் ஆல வட்டம் வீசுதன் செவியா நல்கிப்
பொருந்திய மதசலத்தால் புடைமுரல் அளிஒ ழுங்கின்
